தனுஷ்கோடி.

[புண்ய பாரத பூமியில் விளங்கும் எண்ணிறந்த தீர்த்தங்களுள் முக்கியமானவை கங்கையும், தனுஷ்கோடியும் ஆகும். எந்த தீர்த்தத்தின் மஹிமையைச் சொன்னாலும், அதை கங்காஸ்னானத்திற்கு ஒப்பிடுவது மரபு. கங்கையில் ஸ்நாநம் செய்து, அந்த தீர்த்தத்தால், ஸேதுவில் ஸ்ரீ ராமநாத ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்வது பக்தர்களின் வழக்கம். ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் மேற்கண்ட கீர்த்தனத்தில் மற்றொரு விசேஷ தீர்த்தமொன்றை ஞாபகப்படுத்துகிறார்.]

ராகம்: தோடி.] பல்லவி. [தாளம்: ஆதி.

கோடி நதுலு தனுஷ்கோடி லோனுண்டக
ஏடிகி திரிகேவே ஓ மனஸா.

அனுபல்லவி.

ஸூடிக ச்யாம ஸுந்தர மூர்த்தினி
மாடிமாடிகி ஜூசே மஹா ராஜுலகு. (கோடி)

பொருள்— கோடி நதிகள் தனுஷ்கோடியில் இருக்க மனமே (பல இடங்களில் நீ) திரிவானேன்? அதுபோல கருத்துடன் நீலமேக ச்யாமளனை ஸுந்தர (ராம) மூர்த்தியை தியானம் செய்து (ஹ்ருதயகமலத்தில்) காணப் பெற்ற மஹாராஜர்களுக்கு (பாக்யசாலிகளுக்கு) இதர தேவதைகளின் உபாஸனை எதற்கு?

சரணம்.

கங்க நூபுரம்புனனு ஜனிஞ் செனு
ரங்குனி கனி காவேரி ராஜில்லெனு
பொங்குசு ஸ்ரீரகு நாதுனி ப்ரேமதோ
பொகடே தியாக ராஜு மனவி வினவே. (கோடி)

கையில் கடியாரம் கட்டிக்கொள்ளுதல்

பொருள்— கங்கை விஷ்ணுவின் பாதத்தில் தோன்றினுள். ஸ்ரீரங்கநாதனே தரிசித்து காவேரி ப்ரகாசிக்கிருள். அன்புகனிந்த பக்தியுடன் ஸ்ரீரகுநாதனே (ஆனந்தம்) பொங்கித் ததும்பத் துதிக்கும் (இந்த) தியாகராஜனின் விண்ணப்பத்தை (செவிசாய்த்துக்) கேட்கவும்.

தாத்பர்யம்:—ராமனே பரமாத்மா. அவனுடைய தியானமே ஸகல தேவதைகளின் தியானமாகும். அப்பரமனின் பாதத்தைக் கங்கை பற்றிப் புனிதமடைந்தாள். திருமுகத்தைக் காவேரி தரிசித்துப் பொங்கினுள். ஆனல் அவனே 'தனுஷ்கோடியில்' விளங்குபவன். தனுஷ்கோடி என்பதற்கு இங்கு ஸ்ரீ ராமபிரான் கையில் விளங்கும் தனுஸ்ஸின் (கோதண்டத்தின்) இரு முனைகள், எனப் பொருள்.

"தனுஸே ப்ரணவம்; அதன் லக்ஷ்யமே ப்ரும்மானந்தம்; பாணமே ஜீவாத்மா" என்ற ப்ரமாணவாக்யப் படி, கோதண்டம் தரித்து ஸாதுக்களை ரக்ஷிக்கவும், துஷ்டர்களுக்கு (பாப ஜன்மத்தால் அழிந்தவர்களுக்கு) சிக்ஷை என்ற நியமனத்தால், ஜன்ம ஸாபல்யம் அளிக்கவும், அயோத்தி நீங்கி அடவி வந்தனனன்றே ரகுநந்தனன். கோதண்டத்தின் ஒரு முடிவில் பாதகமலம் விளங்குகிறது. கங்கை ஜனித்தது.

கோதண்டத்தின் மேல்முடிவில் அவன் முகமண்டலம் விளங்குகிறது. (காவேரி களிக்கக் கண்டது). யோகிகள் ப்ரணவ தியானத்தினுல் ப்ரணவ சிரஸில் விளங்கும் ப்ரும்மானந்தத்தை அடைகிருர்கள். அந்த ஆனந்தமே ராமனுன பரப்ரும்மம்.

ப்ரணவமே ப்ரும்மத்தின் சக்தி. கோதண்டம் எனும் தனுஸே ப்ரணவம். கோதண்ட தீக்ஷா குருவாக (அந்த தனுஸ்ஸின் கோடியில்) விளங்குபவனே ப்ரும்ம ஸ்வரூபி. "தனுஷ்கோடி" என்பதால் ராம தியானமே! அறியப்படுகிறது. ஆதலின் ராமனே ஸேவித்தவர்களுக்கு ஸகலமும் கை கூடுமன்றே!

உடல் தெரிய மெல்லிய வஸ்த்ர மணிதல்

தெய்வம் எங்கே?

[ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.]

["தெய்வம் என்று வாஸ்தவமாகவே ஒன்று இருக்கிறதா? என்று என்னை அந்தரங்கமாக ஓர் ஆஸ்தீக நண்பர் வினவினார். தன்வாழ்வில் பலதுன்பங்களை அனுபவித்து அலுத்துப்போனவர் அவர். யார் கண்டார்கள்" என்றேன் நான். ஏமாற்றமும் கோபமும் அடைந்த அவர் "பக்தி பக்தி என்று பிறர்க்குச் சொல்லிக் கொண்டிருக்கிறீரே, உம்முடைய விஷயம் இதுதானா!" என்றார். "வாஸ்தவம், தெய்வத்தை நான் கண்டிருந்தால் உம்மிடம் ஏன் இப்படிப் பேசவருகிறேன்" என்றேன் நான். அவரோ சமாதானம் அடையாமல் சென்றார். அப்பொழுது ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் கீழ்க்கண்ட கீர்த்தனம் ஞாபகம் வந்தது.]

ராகம்: தோடி.] பல்லவி. [தாளம்: ஆதி.

கத்தனு வாரிகி கத்து கத்தனி மொரலனிடு
பெத்தல மாடலு நேடபத்த மௌனோ.

பொருள் - (தெய்வம்) உண்டு என்று சொல்பவர்களுக்கு உண்டு; உண்டென்று முறையிடும் பெரியோர்களின் வாக்யங்கள் இன்று பொய்யாகிவிடுமா? (உண்டு என்றால் ஏன் எளிதில் கண்ணில் படுவதில்லை, நான் பார்க்க விரும்புவது, அந்த தெய்வத்தின் அழகிய தோற்றத்தைத் தானே.)

அனுபல்லவி.

அத்தம்பு செக்கிள்ளசே முத்துகாரு மோமுகூட
புத்திகல் கினட்டி மாவத்த ராவதே மிரா — (கத்)

பொருள் — கண்ணாடிபோல் மின்னும் கன்னங்களுடன் ஒளிமிகுந்த அவன் முகத்தைக் காண புத்திகொண்டு ஏங்கும் எங்கள்முன் வராமல் இருப்பானேன்?

(ஸர்வேச்வரனின் அகண்ட ஸச்சிதானந்த ஸ்வரூப அதிசயத்தைக் காண இயலாதவனாயினும், ராம, கிருஷ்ணாதி அவதாரங்களில் அவன் ஏற்ற ஸகுணாகார ஸகுண ஸ்வரூப தர்சனமாவது எனக்குக் கிடைக்காதா?)

முதலில் இவைகளை எல்லாம் ஒரே ஜாதியாக்கட்டுமே

சரணம்.

நித்துர நிராகரிஞ்சி முத்துகா தம்புரபட்டி
சுத்தமைன மனஸுசே ஸுஸ்வரமுதோ
பத்துதப்பக பஜிஞ்சே பக்த பாலனமுஸேயு
தத்தய சாலிவி நீவு த்யாகராஜ ஸன்னுத (சுத்)

பொருள் — தூக்கத்தை விட்டு, நன்ருகத் தம்புராவை ச்ருதி சேர்த்து அமைத்து, சுத்தமான மனதுடன் ஸுஸ்வரமாக, ஸம்ப்ரதாயப்படி பஜனை செய்தால், அவ்வாறு தன்னை பஜிப்பவர்களை பாதுகாக்கும் மஹாதயவுள்ள மூர்த்தி, நிச்சயம் தரிசனம் அளிப்பான் என்பது பெரியோர்களின் வாக்கன்ருே. தியாகராஜனுல் இந்த அனுபவம் கண்டு கொண்டாடப் படுகிற ஸ்ரீ ராமமூர்த்தி நிச்சயம் "உளன்" என்பவர்க்கு உளன்.

தாத்பர்யம் — எப்பொழுதும் விழிப்பு கொள், தமோ குணம் சேராமல் நிறைந்த ஸத்வ குணத்தை விருத்தி செய். ஏகாக்ர சித்தமுடன் (தம்புரா ஶ்ருதி சேர்ப்பது, மீட்டுவது, தானே மீட்டிக்கொண்டே ஒரு கை தாளம் போடப் பாடுவது ஏகாக்ர சித்தத்திற்கு ஒரு ஸாதகம்.) அலைகிற மனத்தை அடக்கி நிர்மலமாக்கி அவன் திருவடி தியானத்திலேயே நிறுத்து. பெரியோர்கள் காட்டிய வழிகளையே பின்பற்றி (உன் சுய புத்தியின் குயுக்தி வழிகளைக் கைக்கொள்ளாமல்) பகவானை ச்ரவண மனன கீர்த்தன பூர்வமாக அர்ச்சித்தால் அவன் தர்சனம் கிடைக்கும். உன்னிடம் குறைகள் இருந்தாலும், அவன் மிகுந்த கருணை கொண்டவன், ஆதலின் அருள் செய்வதற்கு ஐயமில்லை.

அவனை உண்மை உள்ளத்துடன் நினைந்து தேடினுல் கிடைப்பான். அவன் இருக்கிருன் அருள்புரிவான் என்ற பூர்ண ச்ரத்தையுடன் பஜிப்பவர்க்கு தவருது தன்னைத் தோற்றுவிக்கிருன்.

மாஸ விசேஷமும் வ்ருதங்களும்.

தைமாதம் தேவர்களது பகற்காலமாகும். தைமுதல் வைகாசி வரை வஸந்த ருதுபோலாகும். 25௳ மஹோதய புண்யகாலம். அன்றுமுதல் சாந்த்ரமாந ரீதியாக மாகஸ்நாந ஆரம்பம்.

நல்ல ஜாதி நாயைக் கலப்பின்றி ரக்ஷிக்கின்றனர்

தெய்வம் எங்கே?

[ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.]

"திருப்பதியில் விளங்கும் ஸ்வாமி யார்" என்று உமக்குத் தெரியுமா?

"ஸ்ரீனிவாஸன்!"

இல்லை! "ஸுப்ரம்மண்யன்!"

"சரி!"

"ஸ்ரீனிவாஸன் என்றீர்! ஸுப்ரம்மண்யன் என்றால் சரி என்கிறீரே! ஏன்? இன்னும் வேங்கடராமன், வேங்கடகிருஷ்ணன், வேங்கட நரஸிம்மன், வேங்கடேச்வரன் என்றெல்லாம் அழைக்கிறோமே! அது சரி இல்லையா?"

மேல் கண்ட ஸம்பாஷணைகள்போல் பல உண்டு. இஷ்ட தைவத்தினிடம் உள்ள பற்றுதலால், இவ்வாறு பேசுபவர்களிடம் சிலசமயம் கருத்து வேறுபாடுகளுடன் சிறு சண்டைகளும் விளைகின்றதைப் பார்த்திருக்கிறோம். ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் சக்தி நிறைந்த தெய்வங்களிடை ஏற்படுகின்ற இந்த ஸந்தேகமே, பிறகு அமைதியுடன் நன்கு சிந்திக்கப்படின், உறுதிகொண்ட தெய்வ பக்தியே காரணமாகும் என்பது புலனாகும்! இதுபற்றி ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் கீர்த்தனை ஒன்று ப்ரஸித்தமானது. இக்கீர்த்தனை கானத்திற்கு உகந்தது என்று அறிவோம்! கருத்துக்கும் சிந்தனைக்கும் உகந்தது என்பதை இங்கு சிறிது பார்ப்போம்!

ராகம்: கல்யாணி] **பல்லவி.** **[தாளம்: ஆதி.**

ஏ தாவுனரா நிலகடநீகு
யெஞ்சி ஜூட நகபடவு — (ஏ)

அனுபல்லவி.

ஸீதா கௌரீ வாகீச்வரீ யனு
ஸ்ரீ ரூபமுலந்தா கோவிந்தா — (ஏ)

சரணம்.

பூ கமலார்க்க நில நபமந்து
லோக கோடுலந்தா
ஸ்ரீ கருடகு தியாகராஜ கரார்ச்சித
சிவ மாதவ ப்ரம்மாதுல யந்தா. (ஏ)

பொருள் — "ஹே ராமா! நீர் எந்த இடத்தில் இருக்கிறீர்? உமது வாஸம் எங்கே? விரும்பித் தேடியும் என்னால் அறியமுடியவில்லையே! ஸீதை, கௌரீ, வாகீச்வரீ போன்ற ஸ்த்ரீ ரூபங்களில் காணப்படுகிறீரா? பூமி, சூரியன், கமலம் (ஜலம்), காற்று, ஆகாசம் மற்றும் அகில ஜீவகோடிகளுள் திகழும் அந்தர்யாமியா? சிவன், மாதவன், ப்ரும்மா என்ற மும்மூர்த்தி ஸ்வரூபங்கள் உம்முடையதா? அறிய ஆவல்கொண்டுள்ளேன். (நான் அறிந்தது ஒன்றுண்டு.) எந்த இடத்தில் எப்படி நீர் விளங்கினாலும், உம்மை ஆச்ரயித்தவர்களுக்கு அருள் செய்பவர் என்பதுவே. இது ஒன்றே போதும்.

கருத்து -- வீணான சமய சர்ச்சையில் பொழுதைப் போக்காமல், எந்த தெய்வத்தை உபாஸிக்கிறாயோ, அதில் நீங்காத சிரத்தையும், பக்தியும்கொண்டு வழிபட்டால் நன்மை உண்டு. எல்லாம் பரப்ரும்மத்தின் ஸ்வரூபமே! உயர்வு, தாழ்வு என்ற புத்தி நீங்கினால் நல்லதொரு ஞானம் பிறக்கும்.

நூல் அறிமுகம்.

18 புராணங்கள்: [5 வால்யம், 1400 பக்கம், குருகுல வெளியீடு, விலை 18 ரூபாய், தபால் ரிஜிஸ்டர் செலவு சுமார் 2 ரூபாய், ஸ்வல்ப காபிகளே கைவசமிருக்கின்றன.] இதற்கு மதிப்புரை ஹிந்து, எக்ஸ்பிரஸ் முதலிய பத்ரிகைகள் பத்தி பத்தியாக எழுதின. இதுவரை எவரும் வெளியிடாத, அருமையான நூல்! 4 லக்ஷம் சுலோகங்களைப் பிழிந்தெடுத்து ஸாரமாக அமைக்கப்பட்டது! வேதத்தின் ஸாரம்! தர்ம பொக்கிஷம்! அறிவுக் களஞ்ஜியம்! ஆச்சர்ய நிலையம்! பாரதநாட்டின் பண்பாட்டிற்குக் கோயில்! ஸகல கலைகளும் நிறைந்த ஸரஸ்வதீ ஸ்வரூபம்! ஸ்ரீ ஜகத்குரு ஆசீர்வாதம், படம், அந்தந்த தேவதா படம் உள்ளது! எளிய தமிழ் நடை! உயர்ந்த கருத்து! உத்தம தர்மம்! சிறந்த தத்வம்! கோடிமுறை ஸ்ரீ ராமாயண ச்ரவணபலனைத் தருவது! பலமுறை படித்தாலும் தெகட்டாதது! ஹாஸ்யரஸமும் நிறைந்தது!

ஸாதுக்கள் வந்து கால் அலம்ப வேண்டும்.

12-9-41

நல்வழி.

தியாகோபநிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி
T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி.

மனிதன் தன் குழந்தைப் பருவத்தில், தன் மழலைச் சொல்லால் புரியாத பாஷையில் நாக்கை வளைத்துத் தன் உறவினர் களிக்கப் பேச ஆரம்பித்ததிலிருந்து, தன் அந்திய காலத்தில், கண் மூடுகிற சமயத்தில், நாக்கிழுக்க, உறவினர் கூடிக் கதற, அதேபோல் புரியாத பாஷையில் பேசி முடிக்கும்வரை, இடையே எத்தனை பேச்சுக்கள் இவன் பேசி இருக்கிறான் என்று சிந்தித்திருப்பானா! அல்லது குறிப்புதான் வைத்துக்கொண்டிருப்பானா! அந்தப் பேச்சில் உபயோகமுள்ளவை எத்தனை? அன்பு கனியப் பேசினவை எப்பொழுது? அதிகமானவை ப்ய னில்லாத சொற்களாகவே வெளிவந்திருக்கும். இவன் பேச்சே, இவனுக்குத் துன்பமாக விளைவதும் உண்டு. [புத்தியின் சக்தி எண்ணங்களை வேகமாகத் தள்ளுகிறது. எண்ணங்களின் எழுச்சியினால், காரியத்தில் சக்தி தூண்டப் படுகிறது. புத்தி சக்திக்கும் காரிய சக்திக்கும் இடையே பேச்சு உதயமாகிறது.] தன் ஜன்மாவில் ஒருவன் பேசா மலே இருந்துவிடலாம் என்றால் முடிகிறதில்லை. அப்படிப் பேசாமலிருக்கப்பழகினாலும், புத்தியின் சக்தியால் அதன் விளைவான காரிய சக்தியை அடக்கி ஆள முடியவில்லை. அனுஷ்டிக்க வேண்டியதை விட்டுவிட்டும், விடவேண்டிதை அனுஷ்டித்தும் திண்டாடுகிறான். இதற்கு ஒரு பழக்கம் ஆதியில் ஏற்படுத்திக்கொண்டால் நமக்கு நல்லது என்று ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகள் அபிப்பிராயங் கொண்டு கீழ்க்கண்ட கீர்த்தனத்தின் மூலம் விளக்குகிறார்.

ராகம்: அடாணா] **பல்லவி** [தாளம்: ஆதி

செடே புத்தி மானுரா — (செ)

அனுபல்லவி

இடே பாத்ர மெவரோ சூடரா — (செ)

சரணம்

பூ வாஸிகி தகு பலமு கலுகுனனி
புதுலு பல்க வினலேதா மனஸா

ஸத்குருவை அடைந்து உபதேசம் பெறு.

ஸ்ரீ வாஸுதேவ ஸர்வ மனுசுனு
சிந்திஞ்சர தியாகராஜ வினுதுனி — (செ)

பொருள்—வீணன விஷயங்களில் புத்தியை (செலவிட) வேண்டாமடா! பாத்திர மறிந்து கொடுக்கத் தகுந்தவர்கள் யாரோ அவர்களைப்பார்த்துக் கொடுப்பாயடா.

பூலோகத்தில் வஸிக்கப் பிறந்தவனுக்கு அவன் செய்த வினைப் பயன்படி (தானே எல்லாம்) கிடைக்கும் என்று வித்வான்கள் சொல்லக் கேட்கவில்லையா? (ஆதலின்) ஏ மனமே! ஸ்ரீ வாஸுதேவனே எல்லாம் என்ற அறிவுபெற்று, அவனை சிந்தித்துத் துதித்துக்கொண்டிரு.

கருத்து — ஏ மனமே! ஒரு பொருளை ஒருவனுக்குத் தானம் செய்யும்பொழுது எப்படி அவன் தகுதியைக் கருதிச் செய்வாயோ, அதேபோல் உன் புத்தியையும் அறிந்து செலவிடு. (அற்ப விஷயங்களில் பழக்கம், புத்தியை மாசடையச் செய்து பிறகும் தவறான வழிகளிலேயே இழுத்துச் செல்லும்.) எல்லாம் அவனவன் கர்மாவின்படி நடக்கும் என்று யாரும் பேசாமலிருப்பதில்லை. புத்தியை மனத்தின் போக்கில் இழுத்துவிட்டு இன்னும் அதிக துன்பம் சுமக்கச் செய்கிறான். [அதற்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன். கற்றுத் தெளிந்தவர்கள் கண்ட உபாயம் அது.] எல்லாம் ஆண்டவன் மயமாகப் பார்க்கிறவன் எவனோ, அவனுக்கு (அவன் ஞானி, முழு மௌனி) எல்லாம் இன்பமே! என்றும் இன்பமே! அந்த மஹாத்மா மிகவும் துர்லபன். அவனைப்போல் நாமிருக்க நினைத்தால் எளிதல்ல. முதிர்ச்சியும், பரிபக்குவமும் அடையாமல் 'எல்லாம் வாஸுதேவ மயம்' என்று சொல்லிக் கொண்டிருப்பவர்க்கு விபரீத ஞானம் விளைவு.

முதல்படி; உன் பேச்சை அடக்கி அளவாகச் செலவிடு. (அதற்காக உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதே.) எண்ணங்களை குறைத்துக்கொள்; அதிக ஆசைகளுக்கு இடம் கொடாதே. உன் செய்கைகள், நல்லமுறையில் (விதிக்கப்பட்டவைகளே செய்வதாக) அமையட்டும்.

இரண்டாவதாக; பகவான் யார் என்று தெரிந்து கொள்ள அவனுடைய குணமயமான, இனிய கதைகளை

---

* அவர் கூறியபடி பிரணவாதி உபாஸனை செய்.

விச்வாஸத்துடன் கேள். அவனுடைய திருநாமங்களை சொல்லி நாக்கையும் மனத்தையும் சுத்தப் படுத்திக் கொள். எதை நினைத்தாலும், அப் பரம் பொருளின் நினைவே முதன்மையாக நிற்கட்டும். எந்த நற்செய்கையிலும் அப்பெருமானே முன்னிற்கட்டும்.

மூன்ருவதாக; பெரியோர்களை அணுகி, உன் சிற்றறிவைப் பெருக்கி, பரமனின் அருள்பெற வழிதேடு. இந்த ஜன்மா வீண்போகாது.

ஆனிமாத கோசாரப் பலன்.

ஜோதிஷப் பகுதி.

ஜோதிஷபானு E. S. K. ஸ்வாமி, பாரத் கிரஹ ஸஞ்சார ஆசிரியர்.

மேஷ ராசி

அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

இம் மாதம் 8உ வரை குரு அஷ்டமத்திலும், பின் வக்ரமாய் ஸப்தமத்திலும் இருக்கிருர். சனி பாக்யத்தில் வக்ரம். ராகு ஆறிலும், கேது விரயத்திலும் இருக்கிருர்கள். சூரியன் மூன்றில் இருக்கிருர். இதனுல் தன நடப்பில் சிக்கல் ஏற்பட்டு நீங்கும். தொழிலில் சிலருக்கு புதிய முன்னேற்றம் உண்டாகும். வெளியூர் போய்வர நேரும். சிலபொருள்கள் விற்கும்படியாகும். உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் உண்டாகும். சுபவிஷயமாய் செலவுகளும் ஏற்படுவதாகும். சுப்ரமண்யருக்கு அஷ்டோத்திரம் செய்வது நன்மையாகும்.

ரிஷப ராசி

கிருத். 2ம் பாதம் முதல் ரோகிணி மிருகசீரிஷம் 2ம் பாதம் முடிய

குரு ஸப்தமத்தில் 8உவரை இருந்து பின் ஆறுமிடம் வருகிருர். சனி அஷ்டத்திலும், ராகு பஞ்சமத்திலும், கேது லாபத்திலுமிருக்கிருர்கள். சூரியன் தனத்தில் இருக்கிருர். தன நடப்பில் பிறர் சகாயத்தை எதிர்பார்க்கும்படியாகும். புதிய முயற்சிகளுக்குத் தடையுண்டாகும். உத்தியோகத்தில் திருப்தியான போக்கு இராது. செய்தொழிலில் சில சிக்கல் ஏற்பட்டுவரும். சில்லரைக் கடன்களால் நச்சரிப்பு உண்டாகும். சுபஸம்பந்தமான சிலவுகளுண்டாகும். ஆரோக்ய ஸம்பந்தமாய் வேலேயும் ஏற்படும். பிரதி வெள்ளிக்கிழமையும் லலிதாஷ்டோத்திரம் செய்வது நலம்.

மிதுன ராசி

மிருக. 3ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வசு 3ம் பாதம் முடிய

குரு ஆறில் 8உவரை இருந்து பின் பஞ்சமத்திற்கு வருகிருர். சனி ஏழிலும் ராகு நான்கிலும், கேது பத்திலுமிருக்கிருர்கள். சூரியன் ராசியில் இருக்கிருர். தொழில் முன்னேற்றத்திற்குச் சில தடங்கல்கள் ஏற்பட்டு பின் கூடும். குடும்ப நடப்பில் சுகக்குறைவு ஏற்பட்டு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் ஆதரவு உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல சேதி கேள்விப்படும்படியாகும். சிலருக்குப் பந்து விரோதம் ஏற்படும். மேலோர் சினேகம் உண்டாகும். மஹா விஷ்ணுவை அபிஷேக அர்ச்சனைகளால் திருப்திசெய்வது நன்மையாகும்.

உலகப் பற்றைக் குறை! ஆத்ம பற்றை வளர்.

கடக ராசி

புனர்வசு 4ம் பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய

குரு 8உவரை பஞ்சமத்திலும் பின் நாலிலும் வருகிறார். சனி ஆறிலும், ராகு மூன்றிலும், கேது பாக்கியத்திலுமிருக்கிறார்கள். சூரியன் விரயத்தி லிருக்கிறார். இதனால் செய் தொழிலிலும் உத்தியோக வகையிலும் சிலசிக்கல்களும், மனவேதனையும் உண்டாகும். ஆரோக்யக் குறைவு ஏற்படும். தன நடப்பில் சிறிது சௌகரியக் குறைவும், வீண் செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சிகள் கூடிவரும். குடும்ப நடப்பில் சௌக்கியமும், சிலர் விரோதமும் ஏற்பட்டுவருவதாகும். துர்க்கைக்கு ஜபம் செய்து வருதல் நன்மை.

சிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய

குரு 8உவரை நான்கிலிருந்து பின் மூன்றுமிடம் வருகிறார். சனி பஞ்சமத்திலும், ராகு தனத்திலும், கேது அஷ்டமத்திலும் இருக்கிறார்கள். சூரியன் லாபத்திலிருக்கிறார். இதனால் அலைச்சலும், வெளியூர் பிரயாணமும் ஏற்படும். புதிய வருமானம் தடைப்படும். குடும்பச் செலவுகள் அதிகமாகும். தொழிலில் நிதானமும், உத்தியோகத்தில் ஸம நிலையும் ஏற்பட்டுவரும். சிலர் பிறர் சகாயத்தை எதிர்பார்க்க நேரும். பந்துக்களால் கவலையும் ஏற்படுவதாகும். ஆதித்ய ஹிருதயம் பாராயணம் செய்துவர நன்மை.

கன்னியா ராசி

உத்திரம் 2ம் பாதம் முதல் ஹஸ்தம் சித்திரை 2ம் பாதம் முடிய

குரு 8உவரை மூன்றிலிருந்து பின் தனத்திற்கு வருகிறார். சனி நான்கிலும் ராகு ராசியிலும், கேது ஏழிலுமிருக்கிறார்கள். இதனால் பழைய சிக்கல்கள் சில தீர்ந்து வரும். வரவேண்டிய பணம் தடைப்பட்டு வரும். ஆரோக்ய ஸம்பந்தமாய் கவலை ஏற்பட்டு வரும். குடும்ப செலவுகள் அதிகமாகும். சிலர் பகை உண்டாகும். சில்லரைக் கடன்கள் நீங்கிவரும். சினேகிதரால் நன்மை ஏற்பட்டு வரும். சில பொருள் வாங்கும்படி யாகும். பிறர் சகாயம் உண்டாகும். விஷ்ணு ஸஹஸ்திர நாம பாராயணம் செய்வது நன்மை.

துலா ராசி

சித். 3ம் பாதம் முதல் சுவாதி விசாகம் 3ம் பாதம் முடிய

குரு 8உவரை தனத்திலிருந்து பின் ராசிக்கு வருகிறார். சனி மூன்றிலும் ராகு விரயத்திலும், கேது ஆறிலுமிருக்கிறார்கள். சூரியன் பாக்கியத்திலிருக்கிறார். இதனால்; முயற்சிகள் கைகூடும். சிலருக்கு இருப்பிடம் மாறும்படியாகும். வெளியூர் பிரயாணமும் ஏற்படும். அலைச்சல் காரியங்களில் ஈடுபடும்படியாகும். சுபவிஷயமாய்ச் செலவுகள் ஏற்படும். பிறர் உதவியை எதிர்பார்க்கும்படியாகும். உத்தியோகத்தில் மாற்றமுண்டாகும். சிலருடன் விரோதப்படவும் நேரும். லக்ஷிமீ பூஜை பிரதிவாரமும் செய்ய நலம்.

விருச்சிக ராசி

விசாகம் 4ம் பாதம் முதல் அனுஷம் கேட்டை முடிய

குரு 8உவரை ராசியிலிருந்து பின் விரயத்திற்கு வருகிறார். சனி இரண்டிலும், ராகு லாபத்திலும், கேது பஞ்சமத்திலுமிருக்கிறார்கள். சூரியன் அஷ்டமத்தில் இருக்கிறார். இதனால்; சுபகாரியங்களில் செலவுகள் உண்டாகும். வீண் விவாதங்களில் கவலை உண்டாகும். செய் தொழிலில் திருப்திக் குறைவும்,

---

ஸ்ரீரங்க பஞ்சரத்னம். — 1

"தியாக கான லோல" ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்திரிகள்.

ஸ்ரீ ஸத்குரு ஸ்ரீ தியாக பிரும்மம் தனது க்ஷேத்ர யாத்திரைகளில் விசேஷமாக ஸ்ரீ ரங்கநாதனின் திவ்ய ஸ்தலமான ஸ்ரீ ரங்கக்ஷேத்திரத்திற்கு அடிக்கடி வந்துதரிசனம் செய்வதுண்டு. அப்பெருமானின் மீது ஐந்துகிருதிகளைப்பாடியருள செய்திருக்கிறார். அக் கீர்த்தனைகளின் தொடர்ச்சியை இதுமுதல் எழுதலாமென்று நினைக்கிறேன்.

அவர் பாடியது ஐந்து கீர்த்தனங்களேயாயினும் அதற்குள் ஸ்ரீ ரங்கராஜனின் ஏகாந்த வைபோகத்தை அனுபவித்ததும், அந்த ஆனந்தத்தை நமக்கு எடுத்துச் சொல்லுவதும் ஆக, நம்மிரு கண்களின் முன்னே ஸ்ரீ ரங்கனை எழுந்தருளப் பண்ணுகிறார். நமது செவிப்புலன் வழியே செல்லும் அவரது ஸாஹித்யமும் ஸங்கீதமும், நமக்கு கண்களுக்கு விருந்தைத் தேடித்தருகின்றன. ஸ்ரீ ரங்கநாதனின் பெருமைகளைச் சொல்லுவது என்பது எளிதல்ல. பக்தர்கள், ஆழ்வார்கள், பற்பல சமயத்தவர்கள் எல்லோராலும் சேர்ந்து பாடிப் பரவசம் எய்திய ஸந்நிதி. அதில் ஸ்ரீ தியாகய்யரின் உள்ளம் கனிந்த எளிய நடை, பாமரர்களுடன், அவன் மஹிமையைப் பாடும் பரவசத்தைக் காட்டுவதே யாகும். ஆகிலும், அவைகளுக்குள் அப்பெருமானின் திவ்ய தேச வரலாற்றையும், புராதனமான அமைப்பையும், பெருமைகளையும் காட்டி வருவதையும் காணலாம்.

ராகம் — காம்போதி.] பல்லவி. [தாளம்—ஆதி

ஓ ஓ ரங்க சாயீ பிலசிதே
ஓ ஓ யனுசு ரா ரா தா — (ஓ)

அனுபல்லவி.

ஸாரங்க தருடு சூசி கைலாஸா
திபுடு காலேதா — (ஓ)

சரணம்.

பூலோக வைகுண்ட மிதியனி
நீலோன நீவே யுப் பொங்கி
ஸ்ரீ லோலுடை யுண்டே மா
சிந்த தீரே தென்னடோ —
மேலோர் வலேனி ஜனுலலோ
நேமிகுல நோகிலி திவ்ய ரூபமுனு
முத்யால ஸருல யுரமுனு கான
வச்சிதி த்யாகராஜ ஹ்ருத்பூஷண— (ஓ)

இக்கீர்த்தனையில் ஸ்ரீரங்கநாதனின் முத்தங்கி ஸேவையை வர்ணிக்கிறார்.

பல்லவி. ஓ! ரங்கசாயீ! என்று அழைத்தால், ஓ என்று (ஓடி வராததேனோ—

அனுபல்லவி. மானைப்பிடித்திருக்கும் சிவபெருமா(ன் இந்த முத்தங்கி சேவையை தரிசனம் செய்து கொண்டு, ஸ்வயம் ஆனந்த ரூபியாகி) கைலாஸத்தின் அதிபதியாக விளங்கவில்லையா?

சரணம். பூலோக வைகுண்டம் இது என்று, நீயே உனக்குள் பொங்கி ஆனந்தமடைந்து, ஸ்ரீ லோலனாக (ஸ்ரீ காந்தனாக) இருந்து விட்டால், என் கவலை தீருவது எப்பொழுதோ — என் பெருமைகளைப் பொறுக்காத ஜனங்களின் நடுவில் நான் மிகவும் துன்பம் அடைந்து, உன் திவ்யரூபத்தையும், முத்தங்கி ஸேவை (முத்துமாலை மார்பில் தவழும் அழகை) காண வந்தேன். என் ஹ்ருதயத்திற்கு நீயே பூஷணன்

கருத்து :- உன் திவ்யாலங்கார தரிசனத்தைப் பெறும் பொழுது எனக்குள் எழும் எந்த சிந்தாகுலமும் தீர்ந்துவிடும் என்பதை விளக்குவதுடன், அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமிகளின் மனத்தில் உளையும் வேதனையும் அதைத் தீர தான் வந்துற்றதையும் விண்ணப்பித்துக் கொள்வதையும், நாம் ஒருவாறு அறிகிறோம்.

12 70

ஸ்ரீ ராமாவதாரம்.

தியாகோப நிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி.

ஸ்ரீ ராமாவதாரம் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று என நாம் அறிவோம். மற்றும், ஸ்ரீ ராமன் சிவஸ்வரூபி, என்பவரும்; ஸ்ரீ ராமனை ஈச்வரியும், ஸீதையாக ஈச்வரனும் வந்துதித்தனர் என்பவரும் உண்டு. இன்னும் 'ராம' தாரக மந்த்ர ஸ்வரூபி இவரே என்று ஜபிப்பவரும், ராமனை உத்தம மனுஷ்யனைக் கொண்டாடுபவரும், பற்பலவிதமாக ஸ்ரீ ராமபக்தியை வளர்க்கின்றனர். இங்கு ஒரு ஸாது ராமபக்தியில் திளைத்தவர் 'ராமா! நீ யார்?' என்று ராமனையே கேட்டு அதற்கு விடையும் அவன் முன்னிலையில் ஸமர்ப்பித்தார்.

ராகம்: தர்பார்] பல்லவி [த்ரிபுடதாளம்

எந்துண்டி வெடலிதிவோ
ஏ ஊரோ நே தெலிய, இபுடைன தெலுபவைய ஸ்ரீ ராம (எந்)

அநுபல்லவி

அந்த சந்தமு வேறே நடதலெல்ல த்ரிகு
ணாதீ தமை யுன்னதே கானி ஸ்ரீ ராமா நீவு (எந்)

பொருள் — ஸ்ரீ ராம! நீ எங்கிருந்து வந்தாயோ? உனக்கு எந்த ஊரோ? எனக்குத் தெரியவில்லை. இப்பொழுதாவது தெரிவிக்கவேண்டும் ஐயா!

சிருங்காரம் நிறைந்த உன் அழகு ஒரு பக்கம் இருக்கட்டும். உன் காரியங்களைக் கவனிக்கும்பொழுது அவைகளெல்லாம் மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறதே! (அதனால் நீர் யார்? எந்த ஊர்? என்று தெரியவில்லை.)

சரணம்

1. சிடுகண்டென பராத சய முல தகிலிஞ்சே
சிவலோக மு காது

ஆனால், ஸாதுஸங்கத்தில் ஆசை வை.

2. வடுரூபுடை பலினி வஞ்சிஞ்சி யணத் ஸுவானி
வைகுண்ட மு காது

3. விடவசன முலாடி சிரமு த்ரும்ப பட்ட
விதிலோக மு காது

4. திடவு தர்மமு ஸத்யமு ம்ருது பாஷலு கல்கு
திவ்யரூப த்யாக ராஜநுத நீவு (எந்)

பொருள்—1. ஒரு சிறு பொழுதுக்குள் அபராதங்கள் வந்துவிடுமோ என்று பயப்படும் சிவலோகத்தைச் சேர்ந்தவரல்ல.

2. மாணவ வடிவத்தில் (வாமனனுகை வந்து) மஹா பலியை ஏமாற்றி அடக்கிய விஷ்ணு வஸிக்கும் வைகுண்டமும் உம்மிருப்பிடம் அல்ல.

3. பொய் சொல்லி தலை அறுபட்ட ப்ரும்மா வஸிக்கும் ஸத்ய லோகமும் (நிச்சயமாக) உம்மிருப்பிடமில்லை. [அபராதம் பண்ணினவர்களுக்கு மன்னிப்பே அளித்திருக்கிறுய். அதை நினைக்கவும் மாட்டாய். உபகாரமே செய்திருக்கிறுய். ஏமாற்றுகிற பேச்சு உன்னிடம் காணவில்லை. ஒரே சொல், ஒரே பாணம், ஒரே பத்னி, கபடநாடகம் உனக்குத் தெரியாது. (ஸத்யமே உருவான உன் உறுதிமொழிகளை) உன் தம்பி பரதனுக்கு சித்ர கூடத்தில் நீர் செய்த உபதேசம் கேட்டுளேன்.]

4. தைர்யம், தர்மம், ஸத்யம், இனிய பேச்சு இவைகளெல்லாம் திவ்ய ரூபத்துடன் ராமனென்று வந்தது என்கிறேன். சரிதானு ! தெரிவிக்கவேண்டும் ஐயா !

கருத்து — முக்குணங்களுக்கு அப்பாற்பட்ட, மும்மூர்த்திகளுக்கும் மேலான, ப்ரப்ரும்மமே, தர்மம், ஸத்யம் இவைகளைக் கடைபிடித்துக் காட்ட, தைர்யம், வீர்யம், சௌர்யம், கருணை இவைகளுடன் மதுரமான மொழி பயிலும் இயல்புடன் அழகு நிறைந்த வடிவமுடன் தனிப் பெருமைகொண்ட 'ராமன்' என்று தேன் இனிக்கும் பெயருடன் அவதரித்ததாம்.

ஆசை ஸம்ஸார பீஜம், ஸத்ஸங்கம் முத்தி விதை.

பக்தி பரீக்ஷை.

தியாகோப நிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி.

"'பக்த விஜயம்' படித்திருக்கிறீர்களா" என்றார் நண்பர். "ஏதோ கொஞ்சம் தெரியும்" என்றேன். என் நண்பர் ஆரம்பித்தார்.

"அதில் ஒரு ஸ்வாரஸ்யம் பாருங்கள். எல்லா கதைகளும் ஒரேமாதிரியாகவே இருக்கின்றன. வருகிறகஷ்டம், சோதனைகள் எல்லாம் பக்தனுக்கே. ஆனால் கடைசியில் பகவான் அருளால் எல்லாம் நன்மையாகவே முடிகிறது. ஏன் ஐயா! இந்த பகவான் பக்தனைக் கஷ்டப்படுத்தாமல் காப்பாற்ற முடியாதா?"

"கஷ்டம் இருந்தால் தானே காப்பாற்ற முடியும் அய்யா. வியாதியிருந்தால் தானே வைத்தியமும் வேண்டும்."

"சரி, அப்பொழுது பகவான் கஷ்டங்களை பக்தனுக்கே ஏன் கொடுக்கவேண்டும். இந்த பக்தனை இம்ஸிக்கிறவன் கூட கஷ்டப்படாமல் கவலையற்றிருக்க, இவனுக்கு மாத்திரம் ஏன் இந்த மனக்கலக்கம்."

"படித்தவனுக்குத்தானே பரீக்ஷை. படிக்காதவனைப் பரீக்ஷைக்குப் பணம் கட்டக்கூட அனுமதிப்பதில்லையே." எப்பொழுது இவன் பகவானை நினைக்க ஆரம்பிக்கிறானே, அப்பொழுதே அந்தக் கடவுளும் இவனை நினைக்க முற்படுகிறார். இவனிடத்திலே அவருக்குக் கருத்தும் கிருபையும் ஏற்பட்டு விட்டால், இவன் தன்னையன்றி வேறொன்றை நினையாதிருக்க பல சூழ் நிலையில் உள்ள அவனுக்கு பரீக்ஷைகள் வைத்துத் தன் அருளால் நீங்காத இன்பம் அளிக்கிறார்.

இதனால் பக்தன் கலங்குகிறதில்லை. அவன் கதறுவது ஆண்டவன் அருள்பெறவே. மறுபக்கமுள்ள இந்த கீர்த்தனையைப் பார்ப்போம்.

சந்தாவை உயர்த்தவில்லை! சில பக்கங்கள் அதிகமாகும்

ராகம்: மார்க்க ஹிந்தோளம்] பல்லவி. [தாளம் - ஆதி.

த்ஸல மேலரா ஸாகேத ராம (த்ஸல)

அனுபல்லவி.

வலசி பக்தி மார்க்கமு தோனு நின்னு
வர்ணிஞ்சு சுன்ன நாபை — (த்ஸல)

சரணம்.

எந்து போது நேநேமி ஜேயுதுனு
எத்ஸோட மொர பெட்டு துனு
தந்த நலதோ ப்ரொத்து போவலேனு
தாள ஜாலரா த்யாக ராஜவினுத — (த்ஸல)

பொருள் :– ஸாகேதபட்டணம் என்ற அயோத்தியில் அவதரித்த ராம! என்மீது கோபம் (தயவில்லாதது) ஏன்?

உன்னிடம் ஆசை நிறைந்து, பக்தி மார்க்கத்தில் சொன்னபடி (உன் சரித்ரம், கேட்டும், படித்தும், பாடியும், அர்ச்சித்தும், வந்தனை செய்தும் இப்படி ஒன்பது விதமாக) உன்னை வர்ணித்துக் கொண்டிருக்கும் என்னிடம் கோபமேன்.

எங்கே நான் போவேன்? என்ன செய்வேன்? யாரிடத்தில் முறையிடுவேன். (எப்பொழுது நான் உன்னால் ஏற்றுக்கொள்ளப் படவில்லையோ) என் செயல்கள் வேஷம் போட்டுக் காலம் கழிப்பவனைப் போலாக வேண்டுமா? என்னால் இனி பொறுக்கமுடியாது. இந்த தியாக ராஜனைக் காப்பாற்று.

கருத்து :— ஶுத்தமான ஒரு பக்தனுக்கு உதாரணம் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். அவர் தன் உள்ளத்தால் பகவானிடம் உருகி உருகி வேண்டுவது இதுதான். " நீ தான் அப்பா எனக்கு எல்லாம். வேறு யாருமில்லை எனக்கு. இங்கு என்னால் வேறு செய்வதொன்றில்லை. நான் விரும்புவதும் வேறொன்றுமில்லை.'' இதுதான் பக்தனின் நிலை. இதைக்காணவே பகவான் அவனுக்குப் பரீக்ஷைகள் வைத்து தேறவும் செய்விக்கிறார்.

சந்தாவை நினைவூட்ட தனிகடிதமெழுதினால் வீண்செலவே

12-12-59

பிணி பொறுத்தல்.

தியாகோப நிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி.

"அரிசி விலை ஏறிக்கொண்டே போகிறதாம்! முன்னைப்போல் ஸுமுகமாக அக்ஷதை போடுகிறவர்கள் இல்லை" என்று ஏங்கினார் உபாதானம் வாங்கி ஜீவிக்கும் ஓர் ஏழை பிரும்மணர்.

"அரிசி ஒன்றுதானா விலை ஏறி இருக்கிறது? 'ராமா, ராமா' என்றிருக்கிற உமக்கு இந்தக் கஷ்டம் எங்கே ஐயா தெரியப்போகிறது?" என்றார் ஒரு குடும்பி.

"மற்றது எப்படிப் போனால் என்ன ஸ்வாமி? என்போன்ற ஏழைக்கு ஒருவேளை வெற்று சோற்றுக்குக் கூட கஷ்டம் வந்தால் எப்படிக் காலம் தள்ளுவது?" என்றார் பாகவதர்.

"அந்த ராமனையே கேளுமே! கேட்டு பசிக்காதவரம் உமக்கும் எனக்கும் சேர்த்து வாங்கிக்கொள்ளும்" என்றார் அந்தக்குறும்புக்கார குடும்பி. கீழ்வரும் கீர்த்தனையைப் பார்ப்போம்.

ராகம் - பவப்ரியா] பல்லவி. [தாளம் - தேசாதி.

ஸ்ரீ காந்த நீயெட பலாதி பல
செல கங்க லேதா வாதா — (ஸ்ரீ)

அனுபல்லவி.

பாகாரி நுத நீ வாரி பலா
பலமுன தெலிய லேதா — (ஸ்ரீ)

சரணம்.

காக தைத்யு நேக சரமுன னேய
கஞ்ஜ ஜாஸ்த்ரமை பரக³ லேதா
ஸ்ரீகர த்விஜுலை த³ாரி நெறுக லேனி
சிந்த நீகு தோச தேமி த்யாக ராஜ நுத — (ஸ்ரீ)

பொருள்:—லக்ஷ்மி நாயகனான ஸ்ரீராமா! உம்மிடத்தில் பலை, அதிபலை என்ற இரு மந்திரங்கள் பிரகாசிக்க

இதில் காருண்ய பித்ருக்களும் வருகின்றனர்.

வில்லையா ? (பாகாரி) தேவேந்திரனால் கொண்டாடப் பட்ட தங்களுக்கு, தங்களைச் சேர்ந்தவர்களுடைய பல மும், பலமின்மையும் தெரியாமல் போனதா ?

காகாஸுரன் மீது ஒரே பாணம் விட, அது (கஞ்ஜஜ) பிரும்மாவின் அஸ்த்ரமாக மாறவில்லையா ? (இக்கலியில்) பிரும்மணர்கள் வழி அறியாமல் இருக்கிறார்கள் என்ற கவலை தங்களுக்கு ஏன் தோன்றவில்லை ? தியாகராஜனால் துதிக்கப்படும் ஸ்ரீகர ! தங்களுக்கு இது விஷயத்தில் என்ன தடை ?

தாத்பர்யம்:– பலாதிபலா:– கௌசிக முனிவர், ஸ்ரீராம லக்ஷ்மணர்களை தம் வேள்வியைக் காக்க ஸித்தாச்ரமம் அழைத்துச் செல்லும்பொழுது, சிறுவர்களுக்கு வழியில் பசி தாகம் சோர்வு முதலியவை ஏற்படாமலிருக்கநினைத்து 'பலை, அதிபலை' என்ற இரு மந்திரங்களை உபதேசித்தார். இருவரும் அதை சிரத்தையுடன் ஏற்று அப்யஸித்தார்கள். இக் காட்சியை மனதில் கொண்ட ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் அதை விசேஷித்து 'பலாதிபல செல கங்க லேதா' என்று தெரிவிக்கிறார்: அதாவது, 'பலை, அதி பலை' உம்மிடம் பிரகாசித்தன அல்லவா ! ராமா, "நீர் பரமாத்மா ! உமக்குப் பசி, தாகம், களைப்பு இவைகள் ஏது ? மனுஷ்யனாக நடிக்க வந்திருக்கிறீர் ! இதை அறிந்த கௌசிகரும் உமக்குத் தயங்காமல் இவைகளை உபதே சிக்கக் கடமைப்பட்டார். நீரும் வினயமுடன் ஸாமான் யரைப்போல ஏற்றீர். உம்மை இன்னார் என்றறிந்து அந்த மந்த்ர தேவதைகள் உம்மால் அழைக்கப்பட்டு, உம்மிடம் சேர்தலால் இன்னும் அதிகமாக ப்ரகாசித்தன" என்றார்.

மேலும் 'பலாதிபலா' என்றதில் மற்றொரு பொரு ளும் ஏற்கத் தகும். "ஸ்ரீ ராமா உம்மிடம் (அப்ரமேய பௌருஷ) பலமும், (தர்ம ஸத்ய வ்ரத) அதிபலமும் காணப்படுகின்றன. அதில் க்ஷத்ரியர்களுக்கு மேலான தர்மமான 'ஆந்ரு ஶம்ஸ்யம்' என்ற கருணைகூர் மன்னிப்பு உம்மிடமுள்ள அதிபல ரஹஸ்யமாகப் பிரகாசிக்கிறது."

"இவ்வாறிருக்க, உம்மை நினைந்திருப்பவர்களின் ('ராமா' என்ற நாமஸ்மரணம் அன்றி வேறொன்றும்

அமாவாஸ்யையில் பித்ரு மாதாமஹ வர்க்கங்களை.

செய்ய அறியாதவர்களின்) பலமும், பலமின்மையும் உமக்குத் தெரியாமல் போனதா ?''

''முன்பு காக்கை ரூபத்தில் வந்தான் அஸுரகுணத்துடன் இந்திர குமாரன். ஸீதாதேவியைத் துன்புறுத்தினன். அதைக்கண்ட தாங்கள் அடங்காத சினம்கொண்டீர். அந்த அற்பன் மீது ஒரு புல்லை ஏவினீர். அது ப்ரும்மாஸ்தர மாகியது. உம்மை அண்டியிருக்கும் தேவியைத் துயரப்படுத்தின இந்த துஷ்டன் காக்கைதானே என்றிராமல் அவனுக்குப் பிரும்மாஸ்திரம் பிரயோகம் செய்தீர். பயந்து ஓடின அந்தக் காக்கையைக் காப்பவர் மூவுலகிலும் இல்லாததால், அது உம்மையே முடிவில் சரண் அடைந்தது. தயவும் இரக்கமும் உமக்கு அதனிடம் உடனே பிறந்தது. அதை மன்னித்து உயிர்ப் பிச்சை அளித்தீர். உம்மிடம் தோன்றின அடல்சினமும், அதன் விளைவான அதிபலமும், ஸஹஜமான உம் கருணை வெள்ளத்தாலே சாந்தமடைந்து அதி கிருபையாக மலர்ந்தது. இதுவொன்றே எங்களுக்குப் போதுமான சான்று.''

''இப்பொழுதும் உம்மை ஒன்று கேட்கிறேன். ஒரு பக்ஷிக்காக (த்விஜம்) இரங்கிய தாங்கள் இக் கலியில் த்விஜர்கள் (இருபிறப்பாளர்கள்) ஸன்மார்க்கம் பிசகி மயங்குகிறார்கள். அவர்களை வழிமறுத்து எதிர்க்க ஆறு (ஊர்மிகள்) அலைகள் எப்பொழுதும் பலமாக அடிக்கின்றன. பசி, தாகம், சோகம், மோகம், ஜனனம், மரணம் என்பவை அந்த ஆறு அலைகள். உம்மை உபாஸிக்க வேறு வழிகள் தெரியாதவர்களேயாயினும் 'ராமா, ராமா' என்று அறிந்தோ அறியாமலோ சொல்லுகிறார்கள். இவர்களை ஸன்மார்க்கத்தில் செலுத்தி, உமது திருவுளத்திற்கு உசிதம்போல் ரக்ஷிக்க வேண்டாமா? இதில் ஏதேனும் ஆக்ஷேபம் உண்டா'' ?

[இக் கீர்த்தனத்தின் மூலம் தியாகராஜஸ்வாமிகள் தன்னையே பகவானுக்கு அறிவிக்கிறார் என்பது பாவம். அக்காலத்தில் பிருமமணர்களில் சிலர் பாஷண்டர்களாக இருந்ததை ஸ்வாமிகள் அறிந்து வருந்தி ஸ்ரீராமபிரானிடம் முறையிட்டார் என்றும் கொள்வார்.]

கயை பிண்டம்போல் எல்லோருக்கு மிங்கு தர்ப்பணம்.

மாதர் பகுதி.

குமதி ஸுமதி ஸம்வாதம்.

குமதி : நாம் இருபதாம் நூற்றாண்டில் இருக்கின்றோம். நீ, க்ருத யுகத்து ஸ்த்ரீபோல் தர்மங்களைக் கொண்டாட வேண்டும் என்கின்றாய், அது இக்காலத்திற்கு ஏற்றதா?

ஸுமதி : முற்கால தர்மத்தை எல்லாவற்றையும் கைக்கொள்ளவும் முடியாது. எல்லாவற்றையும் விடவும் முடியாது. அதே போல் இக்காலத்தில் தோன்றும் எல்லாவற்றையும் அடியோடு கொள்ளவும் முடியாது. தள்ளவும் முடியாது.

கு : இப்பொழுது நீ சொல்வது ரொம்ப ந்யாயமாக இருக்கிறது! ஒன்று கேட்கிறேன். முக்காலம்போல் நாம் பதினெட்டு முழம் புடவை கட்டவேண்டுமா? அதிலும் தென்னாட்டவர் போல் கச்சம்வைத்து (மடிசார் புடவையாக) கட்டவேண்டியது அவச்யம்தானா?

ஸு : அது ரொம்ப அவச்யம்தான்! வைதிக கர்மாக்கள் செய்ய அப்படித்தான் இருக்கவேண்டும்.

கு : தென் தேசத்தில் உள்ள சில வகுப்பு ஸ்த்ரீகளைத் தவிர ஆந்திரர் முதலிய வடதேச வைதிக ஸ்த்ரீகளும் இப்படிக் கட்டுவதில்லையே?

ஸு ; இதுதான் தேசாசாரம்! ஜாத்யாசாரம்! எனப்படுவது. அந்தந்த தேசத்திலிருந்த ரிஷிகள் அந்தந்த ஜாதிக்கு ஏற்ற ஆசாரங்களைக் கற்பித்தனர். அதையதை அவரவர்கள் கைப்பற்றுதல் வேண்டும்.

கு : ஒரு தேசத்தில் ஒருவரால் ஆசாரம் எனக் கொள்ளப்படுவதை மற்றவர் ஏன் அதை ஆசாரமாகக் கொள்ளலாகாது?

ஸு : அந்தந்த தேசத்தில் கூறியது அந்தந்த தேசத்திற்கே ஏற்றது. வடதேசத்து ஸ்த்ரீகளைப்போல் நம் தேசத்து ஸுமங்கலிகள் தலையில் முக்காடு போட்டுக்கொள்வது போன்ற ஆசாரத்தை ஏற்கலாகாது. நம்மைப்போன்ற (மடிசார்ப் புடவை) அவர்களுக்குக் கூடாதுதான்.

கு : கூடாது என்பது ஒரு சட்டம்போல் கூறுகிறாயே! ஏன் கூடாது? என்ற கேள்விக்குக் கோபித்துக்கொள்ளாமல் சாந்தமாகப் பதில் கூறு, கேட்போம்.

ஸகல தர்பணங்களையும் விளக்குவது 10 அ. தபால் த. 2 அ.

ஸ்வா : ப்ரத்யக்ஷமாகத் தெரியாததும், நமது புத்திக்கு எட்டாதது மான விஷயத்தில் பெரியோர்கள் கூறுவது நமது நன்மைக்காகத்தான் எனக் கருதவேண்டும். அதில் ஏதே னும் தத்வம் இருக்கும் என நம்பித்தான் அதை அனுஷ் டிக்க வேண்டும். மத்வர், ராமானுஜர், ஶங்கரர் என்ற மூன்று மத ஆசார்யர்களும் தோன்றியது தென்னாடு. இம் மூன்று மத ஸ்த்ரீகள் சிறிது மாறுதல் இருந்தாலும் கச்சத் துடனேயே கட்டுகின்றார்கள். இங்கிருந்து ஆந்த்ரதேசம் சென்ற புதூர் திராவிடர் என்ற ஆந்திரர்களும் விவாஹம் ச்ராத்தம் முதலிய காலங்களில் கச்சம் அணிகிறார்கள்.

கு : அப்படியானால், நாமும் வைதிக கார்யத்தில் மாத்திரம் கச்சம் கட்டிக்கொண்டு மற்ற ஸமயத்தில் மாம்பழப் புடவை கட்டலாமே?

ஸ்வா : கச்சம் கட்டுவதில் என்ன உனக்கு அவ்வளவு கஷ்டம்?

கு : 18 முழத்தைத் தூக்கிக் கட்டிச் சுமக்கவேண்டும்! அதைக் கட்ட ரொம்ப நேரமுமாகிறது!

ஸ்வா : 10 முழம் புடவை கட்டுபவரும், 8 முழம் உள்ளே ஒரு பாவாடையாகக் கட்டவில்லையா? சுமக்க முடியவில்லை என்பது வீணான வாதம்! ட்ரஸ் பண்ணிக்கிறது என எத்தனை நாழி வீணாகக் கழிக்கப்படுகிறது?

கு : இருக்கட்டும், அதென்ன 18 முழம் விசேஷம்?

ஸ்வா : அது தெரியாதா? 18 என்பது சுபத்தை அளிக்கும் எண்! ஜய எண் 18-க்குப் பெயர்! பாஷை 18, ஜாதி 18, வாத் யம் 18, பாரதப் பர்வா 18, பாரத யுத்தம் 18 நாள், 18 அக்ஷௌஹிணி சேனை, 18 அத்யாயம் கீதை, 18 வித்யை 18 ஸ்மிருதி, 18 புராணம், 18 ஆகமம், 18படி ஐயப்பன், 18 வாத்திமக்ரமம். இப்படி அதன்விசேஷத்தை யறிந்து தான் 18, 18 ஆக ஏற்படுத்தினர் முன்னோர்!

கு : புருஷாளுக் கில்லையோ அந்த 18 முழம்? நமக்குத்தானா?

ஸ்வா : எதற்கு எடுத்தாலும் புருஷாளுடன் போட்டியா? அவர் களுக்கும் 12 + 6 = 18 முழம் தாராளமாக உண்டு! அது 9 + 5 ஆனது! எப்போதும் அவர்களுக்கும் கச்சமுண்டு! கச்சமில்லாமல் செய்யும் ஸகல கர்மாவும் வீணாகும்! யார் செய்தாலும் தப்பு தப்புதான்!

நவராத்ரியில் அன்னையை ஆதரவுடன் பூஜை செய்.

கு: சில வைதிகர் மாத்ரம்தானே பஞ்சகச்சம் கட்டுகின்றனர்! மற்றவர் தட்டாடை, ஸூட் தரிக்கிறார்களே

ஸா: சொன்னால் உனக்குக் கோபம் வருகிறது! வெளியிலே வேலைக்குப் போகிற புருஷாள் அந்தந்த அதிகாரிகளைப் பார்த்துவர உத்யோக நிமித்தம் ஸூட் போடுகிறார்கள்! அதிலும் எத்தனையோபேர் கச்சமணிகின்றனர்! அதற்காக, ஸ்த்ரீகளும் ஸூட் போடுவதா?

கு: ஸமயம் வந்தால் எல்லாம்தான் வேண்டும்! மிலிடிரியில் சேர்ந்தால் மடிசார் உதவுமா?

ஸா: பேஷ்! காலில் நிஜார், பூட்ஸ், தலையில் தொப்பியா?

கு: நாய் வேஷம் போட்டால் குலைக்கத்தானே வேண்டும்?

ஸா: உத்யோக நிமித்தந்தானே வேஷம்! அந்த வேஷத்தைத் தரித்து புருஷாள் ஆடிப்பாடித்தேடிப்போட்டால் நன்றாக நிழலில் உட்கார்ந்து சாப்பிடுவதை விட்டு எதற்கு நமக்கு இந்த வீண் துன்பம்?

கு: என்ன இருந்தாலும் உத்யோகம் புருஷலக்ஷணமில்லையா?

ஸா: புருஷ லக்ஷணந்தானே? ஸ்த்ரீ லக்ஷணமில்லையே? ஸம்பாதித்துத்தான் சாப்பிடவேண்டுமென்று தலை எழுத்திருந்தால்கூட உட்கார்ந்த இடத்திலிருந்தே தையல், ஸங்கீதம், வைத்யம், கவர் ஒட்டுவதுபோன்ற வேலை இருக்கே!

கு: உனக்கென்ன அத்தனை பிடிவாதம்? பெண்கள் உத்யோகத்திற்குப் போகக் கூடாதென்று!

ஸா: பிடிவாதமென்ன? கஷ்டம் என்றுதான் கூறுகிறேன்! மெல்லிய உடல், 18 முழம் புடவை கட்டி, உடலை மூடி— உடலை, கற்பை, தேசத்தை, குலத்தை, குழந்தைகளைக்—காக்கவேண்டுமென்றுதான் சொல்கிறேன்!

கு: திரௌபதி, கார்க்கி, மைத்ரேயீ போன்றவர் எவ்வளவு படித்து புருஷர்களுக்குமேல் வாதம் செய்தனர்?

ஸா: நீயும் அந்த மாதிரி படிப்பு படி! வாதம் பண்ண திரௌபதி போன்ற நிலை உனக்கு வேண்டாம்! இவ்வளவு ஸ்த்ரீ ரத்னங்களைக் கூறினாயே! இதில் யாராவது எங்காவது உத்யோகம் செய்ததாகக் காணப்படுகிறதா? மத்தியஸ்தமாக (ஜட்ஜாக) வைத்த உபயபாரதி கூட ஸபைக்கு வாாமலே தீர்ப்பு சொன்னாள்.

துர்கையாகி துக்கத்தை அகற்றுகிறாள் அன்னை.

பொருள்:—திருப்பதி வேங்கடரமண! என்னுள்ளே இருக்கும் மாத்ஸர்யம் என்ற திரையை விலக்கலாகாதா? ஹே பரம புருஷ! தர்மம், அர்த்தம், மோக்ஷம் இவைகளை (இந்த மாத்ஸர்யம்) தூரத்திலே விரட்டுகிறதே!

சரணங்கள்:—1. மீன் தன் பசிக்கு தூண்டில் முள்ளை நாடி (அறியாமல் மயங்கி) அழிவடைவதுபோல உள்ளது என்நிலைமை. நிர்மலமான தீபப்ரகாசத்தைப் பரவமுடியாதபடி நடுவிலே (மாத்ஸர்யம்) வந்து மறைக்கிறது.

2. இரையை (ஆகாரத்தை) நன்கு புசிக்கும் தருணத்தில் ஈ தொண்டைக்குள் சிக்கினது போல் இருக்கிறது என் நிலை. ஹரியை த்யானம் செய்யும்பொழுது, என் சித்தமானது (போகத் தகாத இடங்களுக்கு) புலைச்சேரியில் போய் உட்கார்ந்திருக்கிறது.

3. வலை வீசியுள்ளதை அறியாமல் மிருகக் கூட்டங்கள் அதில் வந்து சிக்கிக்கொள்ளுவதுபோல என் நிலைமை இருக்கிறது. உன்னை வேண்டுகிறேன்! (தியாகராஜ நுத); உன் அருள்பெறும் கருத்தில் நிற்கிறேன்! மதம், மாத்ஸர்யம் என்னும் திரைகளை விலக்கலாகாதா?

கருத்து:—புத்தியை மயக்கி மருளச்செய்வது மாத்ஸர்யம். காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் இவைகளில் மாத்ஸர்யமே அழுத்தமான திரை என்கிருர். மற்றவைகளை ஜயித்தாலும், இதற்கு வசப்பட வேண்டியவனே. பரமபுருஷன் அருள் இல்லாவிடில் தப்ப முடியாது. தூண்டிலில் அகப்பட்ட மீன், வலையில் சிக்கிய விலங்குகள் இதற்கு உபமானமாகச் சொன்னுர். அறியாது வரும் இடையூறுகளுக்கு ஈ தொண்டையில் சிக்கினதைச் சொன்னுர். மனம் விபரீத வேகமுடன் அலைகிறது என்பதற்கு, மற்றொரு (ஹாஸ்யமான) உபமானம். பஜனைசெய்துகொண்டிருக்கும் வேளையில் இவன் சித்தம் புலைச்சேரிக்குப் போனது விநோதம்தானே?

"இத்தனையும் பார்த்திருக்கிருய்! நானே உன்னைநாடி வந்துகொண்டிருக்கிறேன்! உன் பக்தன்! எனக்கு ஏன் இந்த மறைவு? உன்னை நன்கு அறிந்துகொள்ள 'மாத்ஸர்யம்' என்ற திரையை விலக்கலாகாதா?" என்ருர். திரையும் விலகியது.

தோபகர்ணம்—புராணக் கதை பரிபாஷை.

விழவே விழாது!

பிறந்த மண்ணைப் பற்றி பெருமை பேசிக்கொள்வது மனித இனத்தின் மரபு போலும்! அதுவும் பக்கத்து ஊரைத் தாழ்த்திப்பேசி அதனாலே தன் ஊருக்கு ஏற்றம் கொடுத்து விட்டதாக எண்ணும் இயல்பு ஆங்கில இலக்கிய மேதை ஜான்ஸன் அவர்களுக்கே இருந்ததாம்! ஆங்கில அகராதியின் ஆதி கர்த்தாவாகத் திகழ்ந்த ஜான்ஸன் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். அருகிலிருக்கும் நாடான ஸ்காட்லாந்தைப் பற்றி எப்போழுதுமே அவருக்குத் தாழ்வான அபிப்ராயம். தன் பேச்சுகளிலும் எழுத்துக்களிலும் ஸமயம் நேரும் போதெல்லாம் அந்த நாட்டவர்களை நையாண்டி செய்த வண்ணம் இருப்பார். அதில் ஒரு அதிசயம் என்ன வென்றால் அவருடைய அந்தரங்க சிஷ்யரும் அவரிடம் தன் உயிரையே வைத்திருந்தவருமான பாஸ்வல் என்பவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர். தன் நாட்டைப் பற்றித் தன் குருநாதர் கொண்டிருக்கும் தப்பான எண்ணத்தை மாற்றிவிட வேண்டுமென்று பாஸ்வல் அரும்பாடு பட்டார். இதற்காக ஒரு ஸமயம் ஜான்ஸனைத் தன் நாட்டில் ஒரு சுற்றுப்பிரயாணம் செய்யும்படி அழைத்துப் போனார். பல இடங்களைக் காண்பித்தார். பிரயாணம் முடியும் ஸமயம், ஜான்ஸன் இது வரை வாயே திறக்கவில்லை. ஒரு வேளை தன் நாட்டைப் பற்றிய தப்பான எண்ணம் மாறிவிட்டதோ என்ற ஆசை உள்ளூற இருந்தது பாஸ்வலுக்கு.

கடைசியாக ஒரு கிராமத்தை அடைந்தார்கள். அங்கு காணப்பட்ட ஒரு பெரிய பள்ளத்தைச் சுட்டிக் காட்டி பாஸ்வல், "இந்த இடத்தில் புராதனமான ஒரு சுவர் இருந்தது; அந்தச் சுவர் எங்கள் நாட்டைச்சேர்ந்த ஒரு அறிவாளியின்மேல் விழப்போகிறது என்று பரம்பரையாக ஒருகதை சொல்லி வந்தார்கள்!" என்று விளக்கினார்.

ஜான்ஸன் :— "இப்போது அந்தச் சுவர் எங்கே?"

பாஸ்வல் :— "ஸமீப காலத்தில் தான் ஏதோ ஒரு காரணத்திற்காக அரசாங்கத்தாரே அதை இடித்துத்தள்ளி விட்டார்கள்"

ஜான்ஸன் :— "பேஷ்! உங்கள் அரசாங்கத்திற்குத் தெரியும் அந்தச் சுவர் விழவே விழாது என்று!!"

இதைக்கேட்ட பாஸ்வலின் முகம் எப்படியிருக்கும்!

ஶரீர சுத்தி சுத்தி அல்ல. கடனில்லாததே சுத்தி.

ஸாமர்த்யசாலி.

தியாகோபநிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

ஒருவர்: உங்க பிள்ளையை காலேஜில் சேர்த்துவிட்டீராமே! எப்படி இடம் கிடைத்தது ?

மற்றவர்: காலேஜில் Philosophy (தத்வசாஸ்த்ரம்) பாடத்திற்குத்தான் இடமிருந்தது. வேறு வழியில்லை பிள்ளையை அதையே எடுத்துக்கொள்ளச் சொன்னேன். இடம் கிடைத்துவிட்டது.

ஒ : ஆமாம்! உமக்கும், உமது பையனுக்கும், Philosophyக்கும் வெகு தூரமாயிற்றே !

ம : அப்படிச் சொல்லாதேயும் ! அதெல்லாம் முன்பு! உமக்குத் தெரியாதா ! நானே காலையிலும் மாலையிலும் வேதாந்த பாடம் கேட்கப் போகிறேனே !

ஒ : பேஷ் ! பேஷ் !! ஆமாம் உமக்கு வேதாந்தம் ஏதாவது புரிகிறதா ?

ம : என்ன ஓய் அப்படிக் கேட்கிறீர் ? நீரே வந்து கேட்டுப் பாரும் ! எங்கள் குரு என்ன அத்புதமாக உபன்யாஸம்செய்கிறார் ? ஒவ்வொன்றையும் எப்படி இனிமையாக விளக்குகிறார்? பொழுது போவதே தெரிகிறதில்லை. அது போகட்டும், உம்மைப் பார்த்தேனே இப்போது ! அவசரமாக ஒருவீசை காப்பிக்கொட்டை வாங்கிக் கொடுப்பீரா? எங்கள் குரு சொல்லியனுப்பினார். ரொம்ப சிரமமாக இருக்கிறதாம். என்னையே நம்பியிருக்கிறாராம் !

ஒ : அவர் உம்மை நம்பியிருக்கிறார். நீர் என்னை நம்புகிறீர். உங்களிருவரையும் வேதாந்தம் நம்பியிருக்கிறதாகத் தெரியவில்லை.

ம: வேதாந்தம் என்றால் என்ன என்பது இருக்கட்டும். நமக்கு அவசியமா ? அவசியமில்லையா ? என்பதுபற்றியும் பேச்சு வேண்டாம். ஒன்று சொல்லுகிறேன். நாம் எண்ணியபடி சில கார்யங்கள் நடக்காதபோது, வேதாந்தம் தெரிந்துகொண்டால் கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது !

ஒ : தன்னம்பிக்கை யில்லாதவன்தான் வேதாந்தம், வேதாந்தம் என்பான் ! சோம்பேறியாக உம்மை ஆக்கிக்கொள்வது தவறு இல்லையா ?

இந்த சம்பாஷணை முழுதும் கற்பனையல்ல. இதில் கருத்தும் சிறிது காணக்கிடக்கிறது. இது தருணம் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் கீழ்க்கண்ட கீர்த்தனம் கருத்தில் பதிந்தது.

சட்டம் இடமளித்தாலும் வாங்கியதைத் தந்துவிடு.

ராகம்—வர்த்தனி] பல்லவி. [தாளம்—ரூபகம்

மனஸா மன ஸாமர்த்ய மேமி ஓ (ம)

அநுபல்லவி.

வினு ஸாகேத ராஜு விச்வமனே ரதமுனெக்கி
தன ஸாமர்த்யமுசே தானே நடிபிஞ் செனே (ம)

சரணம்.

அலநாடு வஸிஷ்டாதுலு பட்டமு கட்டெடு பனு
குலவினி வேகமே பூஷணமுல னொஸகின கைகனு
பலுமாறு ஜகம்புலு கல்லலனின ரவி ஜுனி மாய
வலவேஸி த்யாக ராஜ வரதுடு தா ஜனக லேதா— (ம)

பொருள்:—

பல்: ஓ மனமே! நம்முடைய திறமை என்னவாகும்?

அநு: (மனமே) கேள்! ஸாகேத ராஜனை ஸ்ரீ ராமச்சந்த்ரமூர்த்தி அகில உலகமெனும் ரதத்திலேறித் தன்னுடைய ஸாமர்த்யத்தால் தானே செலுத்தினர் (அன்றோ!)

சர: அன்று ஒருநாள் வஸிஷ்டர் முதலியவர்கள் ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யத் தீர்மானித்ததை (மந்தரை என்ற கூனியின்) வார்த்தையால் கேட்டு, உடனே (மகிழ்ச்சி பொங்க) திவ்ய முத்துமாலையைக் கொடுத்த கைகேயி (பிறகு என்னவானள்)? பலவிதமாக உலகம் பொய் என்று பேசின சுக்ரீவன் (பிறகு என்ன ஆனன்)? இவர்களே, ஸ்ரீ ராமா! உம்முடைய மாய வலே வீசி அவர்கள் சொன்னதற்கு முற்றிலும் மாறானவகையில் நடத்திவிட்டீரல்லவா? இந்த தியாகராஜனுக்கு உம்முடைய அநுக்ரஹம் எப்பொழுதுமிருக்கிறது (அதனல், ஏ மனமே! நீ அடங்கிக்கிட, உன் ஸாமர்த்யம் என்ன செய்யும்)?

கருத்து:— ஸர்வேச்வரனுக்கு இந்த அகில ப்ரபஞ்சமும் ரதம்போல; அதில் ஸாரதியாக அவரே அமர்ந்திருக்கிறர். அனைவருடைய புத்தி, மனம், சித்தம் என்ற கடிவாளங்களைப் பிடித்து, காலம் எனும் குதிரைகளைத் தன் வழி செலுத்துகிறர்.

அந்த ஸர்வேச்வரனே ஸ்ரீ ராமன். அவரே இந்த தேகமெனும் ரதத்தில் வீற்றிருக்கிறர். என் புத்தி சித்தத்தை அடக்கி ஆண்டு, செலுத்துபவர் அவரே! நானல்ல!

கைகேயி ஸ்ரீ ராமன் முடி சூடுவான் என்று கேட்டு பெரு மகிழ்ச்சி அடைந்தாள். அடுத்த நிமிஷம் பெரும்

கோபம் கொண்டு ராமனை வனம்புகச் செய்தாள். இது ஈச்வர ஸங்கல்பம் என்றனர்.

வாலி வதம் அடைந்து விழுந்ததைக்கண்டு பொறுமல் ஸுக்ரீவன் துக்கித்து ப்ரலாபித்தான். ''தமையனைக் கொன்றேன், நான் பாவி! எனக்கு உலகில் எதுவுமில்லை! உலகமே அநித்யம்!'' என்றெல்லாம் சில வேதாந்த மொழிகள் பேசினான். அதன்படி நடந்தானா? அடுத்த நாளே கிஷ்கிந்தைக்குச் சென்று, முடிசூட்டிக்கொண்டு, தன் இரு மனைவிகளுடன் சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடந்தான். இதை ஈச்வர மாயை என்றனர்.

ஸ்ரீ ராமா! உலகத்தில் நீர் ஒருவர்தான் ஸாமர்த்திய சாலி! உம்மைப்போல் எங்களால் திறமையுடன் ஸுக துக்கங்களைத் தாண்ட முடியாது! நீரே ஈச்வரன் என்பதால் அது உம்மால் முடிந்தது. நீரே ஆள்கிறவர். நாங்கள் ஆளப்பட வேண்டியவர்கள்.

உம் ஸங்கல்பம் எதுவோ அதை யாரும் அறிய முடியாது! என் திறமை என்று நான் தனியாக நினைத்துக்கொண்டால் அது வீண் பேச்சு! எனக்குள்ள சொற்ப சக்திகளை உம் அடியில் ஸமர்ப்பித்துவிட்டு, உம்வசமாக என்னை எப்பொழுதும் நினைத்து, உலக காரியங்களைச் செய்துகொண்டு போகிறேன். இனி எனக்கு என்னைப் பற்றி கவலையில்லை. வரதனாக இருந்து, என்னுடைய பயத்தைப் போக்கி, நல்வழியில் செலுத்திவிடுவீரல்லவா?

ஸ்ரீ பைரவ அஷ்டோத்தர மூலச்லோகம்.

[கக்குவான் இருமல் என்ற தொத்துநோய் குழந்தைகளை மிகக் கஷ்டப்படுத்தும்போது இதைப் பாராயணம் செய்தால் அனுகூலமாகும். (பைரவாஷ்டமீ அன்று இதைப்பாராயணம் செய்தால் விசேஷம்) பைரவருக்கு வடமாலை சாத்தலாம்.]

த்யானம் :- रक्तज्वाल जटाधरं सुविमलं रक्ताङ्ग तेजोमयम् ।
धृत्वा शूलकपाल पाश डमरून् लोकस्य रक्षाकरम् ।
निर्वाणं शुनवाहनं त्रिणयनं आनन्त कोलाहलं ।
वन्दे सर्व पिशाच नाथ वटुकं क्षेत्रस्य पालं शिवम् ॥

ரக்தஜ்வால ஜடாதரம் ஸுவிமலம் ரக்தாங்க தேஜோமயம்
த்ருத்வா சூல கபால பாச டமரூன் லோகஸ்ய ரக்ஷாகரம்
நிர்வாணம் சுனவாஹனம் த்ரிணயனம் ஆனந்தகோலாஹலம்
வந்தே ஸர்வ பிசாச நாத வடுகம் க்ஷேத்ரஸ்ய பாலம் சிவம் ॥

கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான்

பக்தியும் பரிவும்.

தியாகோப நிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

நமக்கு வேண்டியவர்கள் நாம் தனியே இருக்கிற பொழுது எவ்வளவு நிந்தித்தாலும், கஷ்டப்படுத்தினாலும் பொறுத்துக்கொள்ளுகிறோம். நாலுபேர் முன்னிலையில் நம்மை அவமானப்படுத்தியோ, மட்டந்தட்டியோ பேசினால், யாருக்கும் பொறுப்பதில்லை. இது விஷயத்தில் தந்தையிடத்திலும் தனயனும் மனம் நொந்துகொள்ளுகிறான். தியாகராஜ ஸ்வாமிகளுக்குத் தந்தையும் தாயும் ராமனே. அந்த ராமபிரானே தனக்கு இதைச் செய்துவிட்டானே என்று கதறுகிறார்.

ஸ்வாமிகளுக்கு ஒரு தமையன் உண்டு. அவருக்கு பக்தியும், வித்தையும் இல்லை. ஆனால் லௌகீக புத்தி நிறைய இருந்தது. தன் தம்பி நாளெல்லாம் வீணைகப் பாடிப்பாடி பஜனை செய்வது அவருக்குப் பொறுக்கவில்லை. அதற்குப் பரிகாரமாக, ஒருவருக்கும் தெரியாமல், ஸ்வாமிகள் பூஜித்திருக்கும் ராம விக்ரஹத்தையே காவேரியில் வீசி எரிந்துவிட்டார். விக்ரஹத்தைக் காணாமல் வாடின ஸ்வாமிகள், இது தன்னுடைய தமையனின் காரியம் என்று அறிந்தும் அவரை நோகாமல் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியையே கோபித்துக் கொள்ளுகிறார்.

ராகம்–பைரவம்] பல்லவி. [தாளம்–ஆதி

மரியாத காதய்யா மனு பவதே மய்ய

அனுபல்லவி.

ஸரிவா ரலலோ நன்னு ஸௌகஸே யுடெல்ல
ஹரிஹரி நீவண்டி கருணா நிதிகி— (ம)

சரணம்.

தனவார லன்யுலனே தார தம்யமு முனு
கனுடைன தாசரதிகே கலதனி கீர்த்தி கதா

நின்னு பாயநேரனி நன்னு ப்ரோவ குண்டேதி
தனதஸ குடகு த்யாகராஜ பூஜித— (ம)

பொருள்:—

பல்லவி: உனக்கு நல்லதா, தருமமா, முறையா, உனக்கேற்றதுதானா? (மரியாத காதய்யா—என்ற பத ப்ரயோகத்தின் அழகும், அதைப் பாடும்பொழுது ஸ்வாமிகளின் ஹ்ருதய அர்த்த பாவம் வெளிப்படுகிறது என்பதும் அறியவேண்டியது). என்னை ஏன் (இப்படிச் செய்துவிட்டாய்?) காப்பாற்றாமல் விட்டுவிட்டாய்?

அனுபல்லவி: சரி நிகரானவர்களிடத்தில் (என்னைப் போன்றவர்கள் முன்னிலையில்) என்னைப் புறக்கணித்து விட்டாயே! உன் போன்ற கருணாநிதிக்கு இது அழகல்ல.

சரணம்: தன்னைச் சேர்ந்தவன், அன்னியன் என்ற வித்தியாசம் இல்லையா? தசரதன் பிள்ளை சீமானான உனக்கு (ஓர் ஏழை தியாகராஜன் என்ன ஜோடி என்ற) எண்ணமுண்டா? உன்னைப் பிரிந்தே அறியாத என்னைத் தவிக்கச் செய்வது முறையல்ல.

கருத்து: உன் பக்தனான என்னை நீர் பிரிந்து இருப்பதே எனக்கு மீளாத் துயரம். பிறர் முன்னிலையில் அவமானம். காப்பாற்றுவது உன் உரிய கடமை.

நூல் அறிமுகம்.

சிவராத்ரி பூஜையும், கதையும். சிவராத்ரி பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டிய அபூர்வமான விஷயங்கள். தர்மம், பூஜா பத்ததி, சிவநாம அஷ்டோத்ரம், ருசிகரமான வேடன் கதை முதலியன நிறைந்தது. மாம்பலம் குருகுல வெளியீடு. நடுவில் அகப்படாமலிருந்து ஸ்வல்ப காபிகளே வந்துள்ளன. 33 ந. பைசா ஸ்டாம்பு அனுப்பி மாம்பலம் குருகுலத்தில் பெறலாம்.

காரடை நோம்பு, ஸ்ரீராமநவமி, சித்ரகுப்த பூஜை ஆகிய கல்பத்ரயம் உள்ளது. 33 ந. பை. ஸ்டாம்பு அனுப்பி மாம்பலம் குருகுலத்தில் பெறலாம். பூஜை செய்பவர்களுக்கு பொருள் விளக்கவும் குற்றமற கூறவும் இது மிக அவச்யமானது. நமது புத்தகமானதால் அதிகம் எழுதமுடியவில்லை. அரிய அபூர்வ விஷயம்! நல்ல பேப்பர்! மலிவானது! மிகச்ரமத்துடன் லோகோபகாரத்திற்கென எழுதப்பட்டது.

உன் கதிக்கு நல்லதை முதலில் தேடிக் கொள்.

தியாகோப
நிஷத்.

கிரஹ பலன்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்

[எல்லோருடைய கவனத்தையும் எளிதில் கவரக்கூடிய யோசனை ஒன்று வெகு காலத்திற்கு முன்பு ஒருவர் சொன்னாராம். "கொஞ்சமாவது ஜோஸ்யம் சொல்லக் கற்றுக்கொள். உன்னைப் பத்துபேர் எப்பொழுதும் சுற்றிக்கொண்டே யிருப்பர்" என்றாராம் அவர். ஜோதிஷம் எல்லோரையும் மயக்குகிறது. நம்பிக்கை இல்லை என்று சொல்லிக்கொண்டிருப்பவன் கூட ஒரு சமயம் அதற்குத் தலை அசைக்கவேண்டியவனாகிறான். பௌதீக அறிவு முதிர்ந்த நாகரீக மேல் நாடுகளில்தான் நம்மைவிட அதிக ஜோதிடப் பித்து இருக்கிறது என்கிறார்கள்.

இது விஷயமாக ஜோதிஷ சாஸ்திர வித்பன்னரான மஹான் தியாகராஜஸ்வாமிகளின் வாக்யம் என்ன என்பதைப் பார்ப்போம்.]

ராகம்–ரேவகுப்தி] [தாளம்–தேசாதி

பல்லவி.

க்ரஹ பலமேமி ஸ்ரீ ராமா னுக்ரஹ பலமே பலமு— (க்ர)

அனுபல்லவி.

க்ரஹ பலமேமி தேஜோ மயவி
க்ரஹமுனு த்யானிம்சு வாரிகி நவ— (க்ர)

சரணம்.

க்ரஹபீடல பஞ்ச பாபமுல நா
க்ரஹமுலு கல காமாதி ரிபுல நி
க்ரஹமு ஜேயு ஹரிநி பஜிம்சு
த்யாக ராஜுனிகி ரஸிகாக் ரேஸருலகு— (க்ர)

பொருள்:—

பல்லவி: நவக்ரஹங்களின் பலனைத் தெரிந்துகொள்வதனால் என்ன பயன் அடையப் போகிறாய்? (வருவது வந்தே தீரும்). ஸ்ரீ ராமனுடைய அனுக்ரஹத்தைப் பெறுவதையே நல்ல பலனாக நினை.

அனுபல்லவி: ஒளி மிகுந்த திவ்ய ஸ்வரூபனான ஸ்ரீ ராமமூர்த்தியை இடைவிடாமல் தியானம் செய்கிற

நாம் நன்றாக வாழ வழி தேட வேண்டாமா?

வர்கள் நவக்ரஹங்களைப் பற்றியும் அவைகளின் பலா பலன்களைப்பற்றியும் எண்ணுவார்களோ?

சரணம்: உன்னிடத்தில் உள்ள, காமம் க்ரோதம் போன்ற ஆறு பகைவர்கள் உன்னைத் தூண்டி, பாபச் செயல்கள் பலவற்றிலும் உன்னைப் புகுத்தி வேதனை அடையச் செய்கின்றனர். இதைவிடப் பெரிதல்ல கிரஹங்களாலுண்டாகும் வேதனைகள். ஸ்ரீ ராமனை என்றும் நினைத்திருப்பவர்களுக்கு, இந்த ஆறு பகைவர்களின் சேஷ்டை ஒடுங்கிப்போகாதோ? இந்த மேலான வழியையே (ஜோதிஷ சாஸ்திரம் நன்கு கற்றுத் தெளிந்த) இந்த தியாகராஜன் அறிந்து கொண்டேன். என்னைப் போல் பகவானை பக்தியுடன் பஜிப்பவர்களும் இதைத் தெரிந்துகொண்டுள்ளார்கள். இவர்களுக்கு நவக்ரஹங்களின் பலாபலன்களைப் பற்றித் தெரிந்து என்ன ஆக வேண்டும்.

கருத்து: நவக்ரஹங்கள் பகவானுடைய ஆணைக்குட்பட்டே ஸஞ்சரிக்கின்றன. தங்களுடைய கதிகளால் அதற்குட்பட்ட ஜீவராசிகளுக்கு ஸுக துக்கத்தை பலவழிகளில் உண்டாக்குகின்றன. பகவானையே தியானம் செய்து அவருடைய கிருபையைப் பெற்றவனை, இவைகள் என்ன செய்யும்?

கிரஹ பலன்களைத் தெரிந்துகொண்டு அதன்படி புத்தியைச் செலுத்துவது பொதுவான காரியம். பகவானையே நம்பி அவனிடத்தில் அசையாத நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பது சிறந்த காரியம்.

மேலும் பகவத்யானத்தில் மூழ்கியிருப்பவன் ஞானியின் நிலையை விரைவில் அடைகிறான். அந்த நிலையில் அவன் காமாதி சத்ருக்களை வென்றவன். காம க்ரோதங்கள்தான் உலகில் ஒருவனுடைய இன்பதுன்பத்திற்குக் காரணம். அதையே அவன் புறக்கணித்துவிட்டு, பகவத் ஸேவையையே பெரிதெனக் கொண்டிருப்பதால், உலகில் இன்ப துன்பங்களைக் காட்டும் நவக்ரஹங்கள் எது செய்தாலென்ன? செய்யாமல் விட்டால் என்ன? இதனால் அந்த பக்தனுக்கு ஆவதொன்றும் இல்லை அல்லவா!

★ **ஸ்ரீ ராமாவதாரம்.** தியாகோபநிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்

[ஸ்ரீராமபிரானுடைய அவதார தினத்தை நாடெங்கும் இந்த வாரம் கொண்டாடுகிறது. 'ராம்' எனும் திவ்ய நாமம் எல்லோருடைய செவியிலும், மனத்திலும் நிலை பெற்று வருகிறது. அந்தப் பரமனின் திரு அவதாரத்தையும், திவ்ய சரிதமாகிய ஸ்ரீமத் ராமாயண காவியத்தையும் படித்தும் கேட்டும் பேரின்பம் அடைகிறோம். ஸ்ரீ ராம பிரானின் அவதார தத்துவத்தை சுருக்கமாக, நம் மனதில் பதிய வைக்கும்படி கீழ்க்கண்ட கீர்த்தனம் அமைந்துளது.]

ராகம்–ஹரிகாம்போதி] [தாளம்–ரூபகம்

பல்லவி.

உண்டேதி ராமுடொகடு
ஊரக செடி போகு மனஸா — (உ)

அனுபல்லவி.

மூண்ட மார்த்தாண்ட மத்ய
மண்டலமுன செலங்கு சுனு — (உ)

சரணம்.

தாமஸாதி குண ரஹிதுடு
தர்மாத்முடு ~~ஸத்ய ஸந்துடு~~
க்ஷேமகருடு தியாகராஜ
சித்த ஹிதுடு ஜகமுனுண்டி — (உ)

பொருள்:—

பல்லவி: ராமன் என்ற பெயர்கொண்ட ஒருவன் இருக்கையில் வீணாக அலைந்திருக்கவேண்டாம் மனமே.

அனுபல்லவி: பிரகாசமான ஸூர்ய மண்டலத்தின் மத்தியில் விளங்கும் சைதன்ய ஸ்வரூபியான பர பிரும்மமே ஸ்ரீ ராமன். (பிரசித்தமான ஸூர்ய வம்சத்தின் மத்தியில், அந்த வம்சத்தை விளங்கச்செய்பவன் எங்கள் ஸ்ரீராமன்.)

சரணம்: தாமஸ குணங்கள் அற்ற சுத்த ஸத்வ குண ஸம்பன். தர்மமும், ஸத்யமுமே அவனுடைய

கிராம, ஆலய, குளங்களை சீர்திருத்துங்கள்.

ஆத்மா. உலகில் யாவர்க்கும் சுகவாழ்வு அளிப்பவன். தன்னை என்றென்றும் நினைப்பவர்களுக்கு (ஸ்ரீ தியாகராஜர் போன்றவர்களுக்கு) எப்பொழுதும் ஹிதமே செய்பவன்.

கருத்து: இந்த எளிய கீர்த்தனத்தின் சரணத்தில், அவதார புருஷனை ஸ்ரீ ராமனையும், ஸர்வ சைதன்ய ஸ்வரூபியான ப்ரும்மத்தையும் சேர்த்துக் காட்டியிருக்கிறார். தருமமும் ஸத்யமும் முடிவில் ஆனந்தத்தில் நிலைபெறும். அவ்வானந்தமே பிரும்மத்தின் இயல்பு. அந்த ப்ரும்மமே, தேஜோ மண்டலத்தின் சைதன்யமாக விளங்குகிறது. அந்த சைதன்ய சக்தியே, உலகத்தின் க்ஷேமாபிவிருத்திக்கு அவசியமாகும்.

நிதமும் ஸந்த்யோபாஸனை செய்யும் தியாகராஜ ஸ்வாமிகளுக்கு, அந்த ஸந்த்யோபாஸனையிலும், ஸ்ரீ தாரக ப்ரும்மமான தன் இஷ்ட தெய்வத்தைக் கண்டு ஆனந்திக்கிறார்.

தார்மிகச் செய்திகள்.

ஸ்ரீ ராம நவமி உத்ஸவம்: டில்லி, கல்கத்தா, தஞ்சை, வேலூர், பழைய மாம்பலம் முதலிய இடங்களிலிருந்து ஷை உத்ஸவம் நடப்பதாக பத்ரிகைகள் வந்தன. நமது ஆசிரியர் பலவிடங்களில் பங்கெடுத்துக்கொண்டார். சென்னை ஸ்ரீ பூர்ணாநந்தநாத வித்யா பீடத்தில் வாஸந்த நவராத்ரி சிறப்பாக நடந்தது.

அகிலபாரத சங்கர ஸேவா ஸமாஜம்: 4-4-60ல் ஸ்ரீ C. P. ராமஸ்வாமி அய்யர் தலைமையில் சென்னை T. நகர் சிவ விஷ்ணு ஆலயத்தில் 3 நாள் மகாஸம்மேளநம் நடத்திற்று. பற்பல பண்டிதர்கள் ஸ்ரீ சங்கர வேதாந்தம் தர்மம் பக்தி கர்ம முதலியனபற்றி பேசினார்கள். பண்டித ஸன்மாநம் நடந்தது. நிரந்தரமாக மாஜி ஜட்ஜ் ஸ்ரீ K. சங்கரநாராயணய்யர் பஸுல்லா ரோட் T. நகரில் ஷை ஸமாஜம் அமைக்கப்பட்டுளது.

சார்வரி வருஷத்திய அதிபதிகள்.

ராஜா - சந்திரன், மந்திரி - புதன், ஸேனாதிபதி-செவ்வாய், சஸ்யாதிபதி-சனி, தான்யாதிபதி - குரு, அர்காதிபதி - செவ்வாய், மேகாதிபதி - செவ்வாய், ரஸாதிபதி - சந்திரன், நீரஸாதிபதி - சுக்கிரன். பொதுவாக இவ்வாண்டு ஸுபிக்ஷமாக இருக்கும்.

கோவின் ஸம்ரக்ஷணம் மிக முக்ய தர்மம்.

ஸத்ய வ்ரதன்.

தியாகோப நிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

[ஸூர்யமண்டலத்தின் மத்தியில் விளங்கும் பரமாத்மாவின் ஸ்வரூபமே ஸ்ரீ ராமனாக அவதரித்தது என்பதை முன் வந்துள்ள கீர்த்தனத்தில் கண்டோம். ஸத்ய தர்மானுஷ்டானம் இவைகளைத் தானே கடைபிடித்து எல்லோர்க்கும் க்ஷேமத்தைச் செய்த ஸ்ரீ ராமனின் திரு அவதாரத்தை முன் கண்ட கீர்த்தனத்தில் விளக்கியுள்ளார். ''தர்மாத்முடு ஸர்வசமுடு'' என்பதனால், தர்மஸ்வரூபியான பரமன், எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியவன், தானும் அடங்கியவன், ஜிதேந்த்ரியன் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

கீழ்க்கண்ட கீர்த்தனத்தில் அந்த தர்மானுஷ்டானம், எதை அனுசரித்து முக்கியத்வம் பெற்றுள்ளது என்பதைக்காட்டி, ஸ்ரீ ராமபிரானின் கல்யாண குணங்களின் மிகச் சிறந்த அம்சங்களைப் பாடித் துதிக்கிறார்.]

ராகம்—ஹரிகாம்போதி] பல்லவி. [தாளம்—ரூபகம்.

ஒகமாட ஒக பாணமு
ஒகபத்னீ வ்ரதுடே மனஸா — (ஒ)

அனுபல்லவி.

ஒக சித்தமு கலவாடே
ஒக நாடுனு மறவகுவே — (ஒ)

சரணம்.

சிரஜீவித்வமு நிர்ஜர வர
ஸௌக்ய மொஸங்குனே
த⁴ர பரகெடி தேவுடே
தியாகராஜ வினுதுடே — (ஒ)

பொருள் :—

பல்லவி, அனுபல்லவி : *ஏ மனமே! ஒரே வார்த்தை, ஒரே பாணம், ஒரேபத்னி இவைகளை விரதமாகக்கொண்டவன் ஸ்ரீ ராமச்சந்த்ரமூர்த்தி அன்றோ! (மாறுபடாத)*

பாரகமளிப்பது மிக மிக விசேஷம்

ஒரே சித்தம் கொண்டவன். இவனை ஒரு நாளும் மறக்காதே (ஏ மனமே!)

சரணம்: வெகுகாலம், மூப்பில்லாத சுக வாழ்வை அளிப்பவனான ஸ்ரீ ராமன், இப்புவியில் யாரும் நன்கறிந்த தெய்வமே.

கருத்து: 'ஒகமாட' என்பதால் ஸத்யமும், 'ஒக பாணமு' என்பதால் மஹா பௌருஷமும், 'ஒக பத்னீ' என்பதால் ஜிதேந்திரியத்வமும் 'ஒக சித்தமு' என்பதால் சரணாகதவத்ஸலனின் 'ஆந்ருஶம்ஸ்யம்' என்ற காருண்யமும் சொல்லப்பட்டது.

மூப்பற்ற வெகுகால ஸுக வாழ்வு என்பது ஸ்வர்க்க போகம். இம்மையில் சுகம் என்பதும் அதனுள் அடக்கம்.

பிழை திருத்தம்: *சென்ற மாத கீர்த்தனத்தில், அநு பல்லவியில் 'மண்ட மார்த்தாண்ட' என்பதை 'சண்ட மார்த்தாண்ட' எனவும், சரணத்தின் இரண்டாவது அடியில் 'தர்மாத்முடு ஸத்ய ஸந்துடு' என்பதை 'தர்மாத்முடு ஸர்வ சமுடு' என்றும் படிக்கவும்.*

ஸ்ரீ காஞ்சி ஆசார்யாளின் அமிருத மொழி.

நமது மதத்தைக்காக்க ஜபம் அநுஷ்டாந மிவைகளே கத்தி, துப்பாக்கி போலாம். இப்படிப்பட்ட தனிப் பெரியவாள் மூலமே நம் மதம் நின்றிருக்கிறது. கபீர் முதலிய அன்ய மதத்தினர் தானே நம் மதத்தில் வந்து பக்தியால் நற்கதி பெற்றனர். கலியுகம் ஒருவகையில் சிறந்தது. விரைவில் புண்ய பலனைத் தருகிறது. இதில் பெண்களும் நான்காம் வர்ணத்தாரும் பக்தி செய்வோருக்கு உதவி புரிந்து சுலபமாகப் பலனைப் பெறுகின்றனர். பத்துமுறையாவது பகவன் நாமாவை எவனாவது ஜபிக்கிறானா? என பகவான் காத்துக்கொண்டிருக்கிறார் பலந்தர. தலைவன் ஒழுங்காக இருந்தால் குடும்பம் க்ஷேமமாக இருக்கும். பிராம்மணன் ஒழுங்காக இருந்தால் பாரததேசம் பழைய சுபிக்ஷ நிலை பெறும்.

பி. சுப்ரமண்ய அய்யர்,
கடகம்.

ஒரு விசிறி தானம் செய்.

சிறந்தது மனோவேகம்! ஆனால் அதைக் காட்டிலும் வேகமாக அல்லவோ வந்திருக்கிறார் பகவான்! இந்த வேகத்திற்கு ஒரு பெயர் வேண்டாமா! கருணைக்கும் இதில் ஒரு இடம்வேண்டாமா? ஆகவே இதைக் ''காருண்ய வேகம்'' (கருணையின் வேகம்) என்றுபெருமிதத்தோடு சொல்லிவிட்டார் ஸ்ரீ பட்டத்ரி! இப்போது திரும்பிப் பாருங்கள் அந்த ஸ்லோகத்தை!

ஶ்ருத்வா ஸ்தோத்ரம் நிர்கு³ணஸ்த²ம் ஸமஸ்தம்
ப்ரும்மே ஶாத்³யைர் நாஹமித்ய ப்ரயாதே ।
ஸர்வாத்மா த்வம் பூ⁴ரி காருண்ய வேக³ாத்
தார்ஷ்யாரூட⁴: ப்ரேக்ஷிதோ பூ⁴: புரஸ்தாத் ॥

• • • • •

★ ★ ★ தியாகோபநிஷத்.

ஸ்ரீ ராமாவதார காரணம்

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

[முன்பு வந்துள்ள இரு கீர்த்தனங்களிலும், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஸ்ரீ ராமபரப்ரும்மத்தின் நிஷ்கல, ஸகல ஸ்வரூபதத்துவத்தை மனத்தில் கண்டுகொண்டு போற்றி மகிழ்ந்தார். இப்பொழுது அக் கருணை வடிவின் அவதார ப்ரயோசனத்தை, உலகனைத்தும் உய்யத் தோன்றின அதிசயத்தை பக்திப் பெருக்கினால் அந்த ப்ரபுவையே அணுகி அந்தரங்கமாக விசாரிக்கிறார். இந்த கீர்த்தனத்தின் ராக பா³வ அமைப்பை நோக்கும்பொழுது, ஸ்ரீ ஸ்வாமிகளின் உள் நோக்கு ஒன்று புலப்படுகிறது. வேதங்களாலும் விளக்க இயலாத ஓர் தனி முதல்வன், ஸ்ரீ ராமனாக அவதாரம் பண்ண வந்த காரண காரியங்களை, புத்தி வ்யூஹங்களாலும், பாண்டித்யத்தாலும் தலைகட்ட முற்படுவது என்னே பேதமை? அவனன்றி இதன் கருத்தை

அறிந்தவர் யாருமிலர் என்ற த்வனி ஏற்பட இக்கீர்த்தனத்தின் இசையும்பொருளும் அமைந்திருக்கிறது.]

ராகம்—முகாரி] பல்லவி. [தாளம்—ஆதி.

ஏலாவதார மெத்து கொண்டிவோ
ஏமி காரணமோ ஸ்ரீ ராமுடை— (ஏ)

அனுபல்லவி.

ஆலமேப் புடகா அயோத்யா
பாலனசேஸே டெந்துகா ஸ்ரீ ராமா— (ஏ)

சரணம்.

யோகுல ப்ரோசே டந்துகா பவ
ரோகுல ப்ரோசே டந்துகா சத
ராக ரத்ன மாலிகனு ரசிஞ்சின
தியாக ராஜுனிகி வரமொஸ குடகா— (ஏ)

பொருள்:—

பல்லவி: ஸ்ரீ ராமா நீ எதற்காக ஸ்ரீ ராமன் என்ற இந்த அவதாரம் எடுத்து வந்தாய்? என்ன காரணமோ—

அனுபல்லவி: பசுக்களை மேய்க்கவா? அயோத்தியில் இருந்து அரச பரிபாலனம் செய்யவா?

சரணம்: யோகிகளைப் பராமரிப்பதற்கா? பிறவி எடுத்துத் துன்புற்றலையும் மூட சேதனர்களைக் கரை சேர்க்கவா? (இவை யாவரும் அறிந்த நியாயம்). இந்த தியாகராஜன் நூற்றுக்கணக்கான ராகங்களால் (அன்பினாலும்) ரத்னமாலைகள் தொடுத்துப் போடுவதை அணிந்து அருள்செய்து அவன் புத்தியை உருக்கி ஏற்றுக் கொண்ட ஓர் தெய்வமாகத் திகழவா?

ஸ்ரீ ராமன் அளித்த ஸுகம்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

[ஸ்ரீ ராமபிரான் அவதரித்ததற்கு உகந்த காரணம் ஒன்று முன்வந்த கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் காட்டினுர். "ஸ்ரீராமா! நீர் அவதரித்தது என் போன்றவர்களுக்காகவே. நீர் அவதரிக்காவிடில் இந்த தியாகராஜனுக்கு எது கதி? உம்முடைய ஸச்சரித்ரம் உலகில் கேட்கப்படாவிடில் என் மன மெய் மொழிகளுக்கு இன்பத் தேனூறும் இனிய கீதம் எது, கீதப் பொருள் எது? உன்னை விட்டுப் பிரியமுடிகிறதா? இது எனக்கு மட்டுமா - உலகில் எத்தனை எத்தனை பிறவிகளில் தோன்றியவர்களுக்கும் உன்னைக்கண்டு கொண்ட மாத்திரத்தில் திகட்டாத திவ்ய அம்ருத ரஸத்திலன்றோ ஆழ்த்திவிடுகிறீர்! உம்மைத் தனியே இருக்க யாரும் விடப்போவதில்லை. அன்றும் இல்லை. அது இன்றும் இல்லை. அரசன் என்றுலே, அவனுக்குத் தனிமை பறிபோய்விட்டது. நீர் ப்ரும்மம். அரசனுக வந்தீர். உம்முடைய தனிமையும் இனி எங்கே? உம்மைப் பார்க்கிறபொழுது சுற்றம் சூழ நின்று காட்சி அளிக்கிறீர். ஒரு பக்கம் என் தாயார் ஸீதையம்மை உம்மை நினைந்தவண்ணம் கடைக்கண் பார்வையால் கனிவு காட்டுகிருள். அருகே தம்பிகளும், கீழே ஆஞ்சநேயனும், இவர்கள் உம்மைச் சிறிதும் தனியாக விடமாட்டார்களா? ஏன் விடுவார்கள்? காரணம் இல்லாமலா உம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிருர்கள்?"]

ராகம் – அஸாவேரி.] [தாளம்—ஆதி.

பல்லவி.

லேகனு நின்னு சூட்டு கொன்னுரு
ஏக ஹ்ருதயுலை நித்யானந்தமு — (லே)

அனுபல்லவி.

ஸ்ரீ கர கருணு ஸாகர நிருபம
சின்மயாச்ரித சிந்தாமணி நீ ஏட — (லே)

ஒரே மண் பல பாத்திரங்களாக ஆகின்றது.

சரணம்.

1. ஸௌந்தர்யமுலலோ ஸுகமு ஸீதம்மகு
ஸௌமித்ரிகி கனுல ஜாடல ஸுகமு (லே)

2. ஸுந்தர முகமுன ஸுகமு பரதுனிகி
ஸுஞான ரூபமுன ஸுகமு ரிபுக்னுநிகி (லே)

3. சரணயுகமுநந்து ஸுகமு ஆஞ்ஜனேயுநிகி
வரகுண த்யாகராஜ வரதானந்தமு — (லே)

பொருள் :—

பல்லவி: காரணம் இல்லாமலா உன்னை இவர்கள் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரே விதமான (ஏகரஸம்) நித்தியானந்தம் அல்லவா அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

சாதாரணமாக உலகில் ஒருவன் மற்றொருவனைச் சுற்றிக்கொண்டிருந்தால் அவனிடம் ஏதோ பொருளோ, பயனோ பெறத்தான் என்று நாம் நினைக்கிறோம். நீரோ,

அனுபல்லவி: ஸ்ரீகர ! லக்ஷ்மியுடன் கூடினவர் - செல்வச் சீமான் - (செல்வச் சீமானா? லக்ஷ்மியான அரசையும், லக்ஷ்மியான என் தாயையும் விட்டுப் பிரிந்தீரே) கருணா ஸாகர - கருணைக்கடல் அல்லவா நீர், (கருணைக்கடல் என்றால், பரதனைக் கதறவைத்தீர். லக்ஷ்மணனுக்குப் பரீக்ஷைகள் வைத்தீர். சத்ருக்கனனுடன் ஒரு வார்த்தைதான் பேசியிருப்பீரா? ஸுக்ரீவனைப் பலதரம் கலங்கவைத்தீர். வாலியை மறைந்து அடித்தீர். சூர்ப்பனகை என்ற மூட ராக்ஷஸியை சின்னாபின்னமாக்கினீர். ராக்ஷஸர்கள் அத்தனை பேரையும் மலைமலையாகக் கொன்று குவித்தீர். பிறகு என் தாயாரைக் கதறவிட்டுப் பொருத்திருந்தீர். இன்னும் உம்மை தயாநிதி என்கிறார்களோ?)

நிருபம சின்மய - காரணம் தெரிகிறது. நீர் பெரிய ஞானி ஐயா! ஒப்புயர்வில்லாத ஞானி ஐயா நீர். இருந்தாலும், உம்மை விடாது பிடித்துக்கொள்ள வைப்பது உம்மிடம் உள்ள வசீகரம். நீர் ஆச்ரித சிந்தாமணி - தன்னைவந்து அடைந்தவர்களுக்கு அவர்கள் அரியாமலே அபீஷ்டங்களை ஈடேற்றி வைக்கும் தன்மை உம்மிடம்

ஒரே ஸுவர்ணம் பல ஆபரணங்களாகின்றது.

இருக்கிறது. அது தெரியாமலா எல்லோரும் உம்மைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

சரணம்: 1 என் அன்னை ஜானகி உம்மிடம் என்ன கேட்டாள்? எதுவும் அவளுக்குத் தேவையில்லை. நிகரற்ற உமது திவ்யத் திருமேனியைத் தனக்கு என்றே உரிமையுடன் அடைந்தவள். அதில் நித்யானந்த ஸுகத்தைக் காண்கிறாள்.

ஸுமித்ரை என்ற ஞானியான தாய்க்குப் பிறந்த லக்ஷ்மணன் தன் வாழ்நாளில் ஸ்ரீ ராகவன் திருத்தொண்டு ஒன்று தவிர வேறேதும் உய்யும் வகையில்லை என்று உறுதிகொண்டு எந்த சமயமும் உமது கடைக்கண் பார்வையில் இடும் கட்டளைக்கு சிரம் சாய்த்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு உம்முடைய ஸேவா கைங்கர்யத்தில் நித்யானந்த ஸுகம் லபிக்கிறது. இல்லையா!

2 உம்முடைய திருமுக தரிசனம் தனக்குக் கிடைத்தாலன்றி அன்னபானம் அருந்தாமல் அல்லும் பகலும் தவம் கிடந்த இந்த பரதன் என்ற உமது தம்பி, உம்மைப் பதினான்கு வருஷத்தின் முடிவில் அயோத்தியில் நீர் ப்ரவேசிக்கக்கண்டதும், அவனடைந்த ஸுகம் நிருபம நித்யானந்த ஸுகமல்லவா! அடுத்த தம்பி சத்ருக்னன். அவனை அறியப்போவதே கடினம். அவனுக்குப் பெயர் வைத்தார்களே! என்ன நினைத்து 'சத்ருக்னன்' சத்ருக்களை வதம் செய்பவன் என்று நாமகரணம் இட்டார்கள்? இவன் எந்த சத்ருவோடு யுத்தம் பண்ணினான்? உமக்கல்லவோ, அல்லது லக்ஷ்மணனுக்காவது அந்தப் பெயர் சூட்டியிருக்கலாம்.

இந்தப் பிள்ளை, பரதன் பின்னேயே போனான், வந்தான், இருந்தான், படுத்தான். பரதன் தன் மாமா வீடு போனான். இவனும் அவன் பின்னே சென்றான். இவனை சத்ருக்னன் என்றார்களே! ஆனால் இவன் செய்த காரியத்தை மற்றவர்கள் யாரும் செய்யத் துணியவில்லை. இயலவும் இயலாது. உலகமெல்லாம் "ராமா ராமா" என்று உமது திருமுகத்தைக் காணநிற்க, இவன் பரதன்பால் பட்டது விசித்திரம். இவனை நீர் இழுக்கவில்லையா? அல்லது இவன்தான் உம்முடைய கவர்ச்சியைத் தனக்கு

இடையூராக நினைத்து, அதை ஜயித்து, பரதனுக்கே ஊழியக்காரனானை?

அதுவும் சரி, இவனும் அந்த ஞானியான ஸுமித்ரை பெற்ற ஒரு பிள்ளைதானே! ஸ்ரீ ராமா! இவன் உம்மைப் பாராமல் பரதனைப் பார்த்தான் என்பது சரியல்ல. உம்மைப் பரதனிடம் பார்த்தான். உம்மிடத்தில் பரதனைப் பார்த்தான், இது ஞானியினுடையவும், உத்தம பக்தனுடையவும் லக்ஷணமாகும். அந்த அனுபவத்தால் இவனும் உம்மைச் சுற்றிக்கொண்டு நிற்கிறான். நீர் இருந்த இடத்தில் பரதன் இருக்கிறான். பரதன் இருந்த இடத்தில் இவனும் இருக்கவேண்டியவனாகிறான். பூரண திருப்தி இவனுக்கு.

3 யாரை விட்டாலும் விடுவீர். இந்த ஆஞ்ஜனேயனை விடமாட்டீர். ஏன் தெரியுமா? இவன்தான் உம்முடைய காலைப் பிடித்துக்கொண்டுவிட்டானே! அவன் விட்டால் அல்லவோ, அவனை நீர் விட்டுப் புறப்படுவதற்கு! இந்த ஆஞ்ஜனேயனுக்கும் தகுந்த பரிசு அளிக்க வேண்டும் என்று நீரும், ஸீதாதேவியும் அடிக்கடி நினைத்தீர்கள். சொல்லவும் சொன்னீர்கள். கொடுத்தீர்களா? இவரோ பிறவியில் வானரம். அதற்கேற்ப பிறர் தானாகக் கொடுக்காததை, தனக்குப்பிடித்தமானதைத் தானே தட்டிப்பறித்து எதிரிலேயே அனுபவிக்கிறவர் அல்லவா? அதிலும் மஹா புத்திமானான வானரம் எதுவும் ஈடாகாத உம்முடைய பாதஸேவையைத் தானே தேடிக்கொண்டு ஸுகத்தில் ஆழ்ந்துவிட்டார். இத்தனை சொன்னேனே ஸ்ரீ ராகவா! எனக்கென்ன கிடைத்தது என்பாயோ? இத்தனை பேரும் உம்மை விடாமல் அருகிருந்து ஸேவிக்கும் பெருமைகளையும், அவர்களுக்கு நீர் அருள்பாலிக்கும் வைபவத்தையும் பாடப் பிறந்தேனே, என் பாக்யம் எவருக்குண்டு ராமா? இந்த நித்யானந்த அனுபவம் இல்லாமலா உன்னை உலகம் என்றென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறது?

ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமச்சந்திரனை எவ்வாறு ஸ்வாமிகள் பக்தி மணம் கமழ இக்கீர்த்தனத்தின் மூலம் எதிரே வைத்து பூஜித்துவிட்டார். அதுவும் ஸ்ரீ ராகவன் அவருக்களித்த நலனே.

ஒரே பரமாத்மா பல தேவதா ரூபி ஆகிறார்.

430-432

தாரக நாம — பிறவிக் கடலிலிருந்து கைதூக்கிக் காப்பாற்றும் பரிசுத்தத் திருநாமம் உடைய ஸ்ரீராமா

ஸ்ரீதியாகராஜார்ச்சித— உன்னைத் துதித்திருக்கும் இந்த தியாகராஜன், அப்பேற்பட்டவர்களுக்கு உன் மஹிமைகளை உபதேசிப்பதால் பயன் எதுவும் காணவில்லை.

கருத்து: ஸ்ரீ ஸ்வாமிகள் இருந்த காலத்தில், சில வேஷதாரிகள் இவருடைய ஏகாந்த பக்தியைக்கண்டு பொருமையால் தூற்றிவந்தனர். அதை எண்ணி, தன் உறுதியை ஸ்ரீ ராமபிரானிடம் இந்தக் கீர்த்தனம் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிருர்.

எத்தனை வித்தைகள் ஒருவன் கற்றிருந்தாலும், ஆத்ம வித்தை என்று கருதப்படும் இந்த ஈச்வர சிந்தனை, ஈச்வர பக்தி, அவரவர்களுடைய சிரத்தை, சீலம், குரு பக்தி இவைகளாலேயே தேடி அடையத் தக்கது. ஸ்வயமான பரிபாகமும், ஞானமும், பற்றற்ற தன்மையும் இவைகளுடன் இன்றியமையாத யோக்கியதாம்சமாகும். இவைகளை நன்கு பரீக்ஷித்தே ஒரு ஞான குரு ஈச்வரனின் பிரதிநிதியாக இருந்து உபதேசிக்க மனமிரங்குகிருர். அன்றி அவசரமோ, பொழுது போக்குக்கான நேரமோ, புத்திக்கும் படித்த படிப்புக்கும் விருந்தாவதோ இவைகளுக்கு நிமித்தமல்ல. காளை மாட்டிற்கு நல்ல பசி எடுத்தபோது உயர்ந்த பக்ஷ்யங்களின் வகைகளையும் அதில் கண்டுள்ள ருசியையும் பற்றிப் பேசி என்ன பயன்? நல்லதொரு முயற்சியில்லாத அபாத்ரனுக்கு ஈச்வர தத்துவங்களைச் சொல்லாதே என்பது சுருதிகளின் மூலம் ஈச்வரனின் உத்தரவு. அவ்வாறெனில், ஸ்ரீ ராமபிரானின் நாம ஸ்மரணம் ஒன்றுதான் ஸகல தத்துவங்களின் மேலான ஸாரம் என்பதை எப்படி இவர்கள் தெரிந்து கொள்ளப்போகிருர்கள். இவர்களுக்கு உபதேசிப்பதில் என்ன பயன் காணமுடியும்.

இடையூராக நினைத்து, அதை ஜயித்து, பரதனுக்கே ஊழியக்காரனானான்?

அதுவும் சரி, இவனும் அந்த ஞானியான ஸுமித்ரை பெற்ற ஒரு பிள்ளைதானே! ஸ்ரீ ராமா! இவன் உம்மைப் பாராமல் பரதனைப் பார்த்தான் என்பது சரியல்ல. உம்மைப் பரதனிடம் பார்த்தான். உம்மிடத்தில் பரதனைப் பார்த்தான். இது ஞானியினுடையவும், உத்தம பக்தனுடையவும் லக்ஷணமாகும். அந்த அனுபவத்தால் இவனும் உம்மைச் சுற்றிக்கொண்டு நிற்கிறான். நீர் இருந்த இடத்தில் பரதன் இருக்கிறான். பரதன் இருந்த இடத்தில் இவனும் இருக்கவேண்டியவனாகிறான். பூரண திருப்தி இவனுக்கு.

3 யாரை விட்டாலும் விடுவீர். இந்த ஆஞ்ஜனேயனை விடமாட்டீர். ஏன் தெரியுமா? இவன்தான் உம்முடைய காலைப் பிடித்துக்கொண்டுவிட்டானே! அவன் விட்டால் அல்லவோ, அவனை நீர் விட்டுப் புறப்படுவதற்கு! இந்த ஆஞ்ஜனேயனுக்கும் தகுந்த பரிசு அளிக்க வேண்டும் என்று நீரும், ஸீதாதேவியும் அடிக்கடி நினைத்தீர்கள். சொல்லவும் சொன்னீர்கள். கொடுத்தீர்களா? இவரோ பிறவியில் வானரம். அதற்கேற்ப பிறர் தானாகக் கொடுக்காததை, தனக்குப்பிடித்தமானதைத் தானே தட்டிப்பறித்து எதிரிலேயே அனுபவிக்கிறவர் அல்லவா? அதிலும் மஹா புத்திமானான வானரம் எதுவும் ஈடாகாத உம்முடைய பாதஸேவையைத் தானே தேடிக்கொண்டு ஸுகத்தில் ஆழ்ந்துவிட்டார். இத்தனை சொன்னேனே ஸ்ரீ ராகவா! எனக்கென்ன கிடைத்தது என்பாயோ? இத்தனை பேரும் உம்மை விடாமல் அருகிருந்து ஸேவிக்கும் பெருமைகளையும், அவர்களுக்கு நீர் அருள்பாலிக்கும் வைபவத்தையும் பாடப் பிறந்தேனே, என் பாக்யம் எவருக்குண்டு ராமா? இந்த நித்யானந்த அனுபவம் இல்லாமலா உன்னை உலகம் என்றென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறது?

ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமச்சந்திரனை எவ்வாறு ஸ்வாமிகள் பக்தி மணம் கமழ இக்கீர்த்தனத்தின் மூலம் எதிரே வைத்து பூஜித்துவிட்டார். அதுவும் ஸ்ரீ ராகவன் அவருக்களித்த நலனே.

ஒரே பரமாத்மா பல தேவதா ரூபி ஆகிறார்.

430-432

யாருக்கு உபதேசம்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

"நம்முடைய வேதங்களின் தாத்பர்யங்களையோ, வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களையோ, அவைகளின் உள்ளடங்கிய அரிய கருத்துக்களையோ, எல்லோருக்கும் சரிசமமாக உபதேசிக்கும் அனுமதி நம்முடைய முன்னோர்களுக்கு இருந்ததில்லை. அதன் விளைவினால் நம்முடைய மதத்தின் மேன்மை நன்கு விளங்காமலே போய் விட்டது" என்று இப்பொழுது பலரும் வருந்துகிறார்கள். "பிற நாட்டவர்களும், மற்றவர்களும் துணிந்து, அவைகளைத் தாமே படித்துத் தம்முடைய மேதையால், தாம் தாம் அறிந்த வகையில் அவைகளுக்கு விளக்கங்கள் கூறிப் பல புஸ்தகங்களும் எழுதி நமக்கு உதவியிருக்கின்றனர். இவர்களின் உபகாரத்தால் நாமும் ஏதோ நம்முடைய மதத்தைப்பற்றி சிறிதளவாவது தெரிந்து கொள்ள முடிகிறது" என்றும் நினைக்கிறார்கள். ஆனாலும் பரம்பரை பரம்பரையாக வந்து, குரு சிஷ்ய கிரமத்தில் உதிர்ந்த வேதத்தின் உட்பொருள்கள் இன்னும் சிலருக்கே உரித்தாகி, புதைப்பொருள்களாகவே போய்விட்டன எனவும் வருந்துகின்றனர். இதன் நன்மை தீமைகளைப்பற்றி ஆராய்வதை விடுத்து, சாஸ்திரக் கோட்பாடுகளுடன் அவைகளுக்கு ஸமாதானம் சொல்லுவதையும்தவிர்த்து, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் இந்த கீர்த்தனத்தில் லயித்து, அவருடைய அபிப்பிராயத்தில் கலந்துகொண்டு பார்ப்போம்.

ராகம் – குந்தலவராளி.] பல்லவி. [தாளம் – ஆதி.

கலிநருலகு மஹிமலு தெலிபேமி
பலமன லேதா — (க)

அனுபல்லவி.

இலனு வெலயு வர விருஷ ராஜுலகடு
குலருசி தெலியு சந்தமு கானி — (க)

சரணம்.

தாரஸுதுலகை தனமுனகை ஊரு
பேருலகை பஹு பெத்த தனமுகை
ஸாரெகு பக்த வேஷமு கொனுவாரிகி
தாரக நாம ஸ்ரீ தியாகராஜார்ச்சித — (க)

பொருள் :—

கலிநருலகு — இந்தக் கலியுகத்து மனிதர்களுக்கு
மஹிமலு தெலிபேமி — ஈச்வரனின் மஹிமைகளைச் சொல்லி என்ன
பலமனலேதா — பயன் என்று (ஸ்ரீராமா) தாங்கள் சொல்லவில்லையா
இலனு வெலயு — இங்கே திரிந்து கொண்டிருக்கும்
வர விருஷ ராஜுலகு — உயர்ந்த காளைமாட்டிற்கு
அடுகுல ருசி — அவல் (அதுபோன்ற நன்கு பாகம் பண்ணப்பட்ட வஸ்துக்களின்) ருசியை
தெலியு சந்தமு கானி — அறிவிப்பது போலல்லவோ இருக்கிறது
தார ஸுதுலகை — மனைவி, மக்களுக்காகவும்
தனமுனகை — பொருள் தேடுவதிலும்
ஊரு பேருலகை — ஊர், பெயர் (பதவி, புகழ்)இவைகளைக் குறித்தும்
பெத்த தனமுகை — பெருஞ் செல்வத்தை நாடியும்
ஸாரெகு பக்த வேஷமு — இதற்கிடையில் பக்தனைப்போல்
கொனுவாரிகி (கபடமாக ஈச்வர தத்வ விசாரத்தில் ஈடுபட்ட) வேஷம் போடுகிறவர்களுக்கு

தாரக நாம — பிறவிக் கடலிலிருந்து கைதூக்கிக் காப்பாற்றும் பரிசுத்தத் திருநாமம் உடைய ஸ்ரீராமா

ஸ்ரீதியாகராஜார்ச்சித— உன்னைத் துதித்திருக்கும் இந்த தியாகராஜன், அப்பேற்பட்டவர்களுக்கு உன் மஹிமைகளை உபதேசிப்பதால் பயன் எதுவும் காணவில்லை.

கருத்து: ஸ்ரீ ஸ்வாமிகள் இருந்த காலத்தில், சில வேஷதாரிகள் இவருடைய ஏகாந்த பக்தியைக்கண்டு பொறாமையால் தூற்றிவந்தனர். அதை எண்ணி, தன் உறுதியை ஸ்ரீ ராமபிரானிடம் இந்தக் கீர்த்தனம் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

எத்தனை வித்தைகள் ஒருவன் கற்றிருந்தாலும், ஆத்ம வித்தை என்று கருதப்படும் இந்த ஈச்வர சிந்தனை, ஈச்வர பக்தி, அவரவர்களுடைய சிரத்தை, சீலம், குரு பக்தி இவைகளாலேயே தேடி அடையத் தக்கது. ஸ்வயமான பரிபாகமும், ஞானமும், பற்றற்ற தன்மையும் இவைகளுடன் இன்றியமையாத யோக்கியதாம்சமாகும். இவைகளை நன்கு பரீக்ஷித்தே ஒரு ஞான குரு ஈச்வரனின் பிரதிநிதியாக இருந்து உபதேசிக்க மனமிரங்குகிறார். அன்றி அவசரமோ, பொழுது போக்குக்கான நேரமோ, புத்திக்கும் படித்த படிப்புக்கும் விருந்தாவதோ இவைகளுக்கு நிமித்தமல்ல. காளை மாட்டிற்கு நல்ல பசி எடுத்தபோது உயர்ந்த பக்ஷயங்களின் வகைகளையும் அதில் கண்டுள்ள ருசியையும் பற்றிப் பேசி என்ன பயன்? நல்லதொரு முயற்சியில்லாத அபாத்ரனுக்கு ஈச்வர தத்துவங்களைச் சொல்லாதே என்பது சுருதிகளின் மூலம் ஈச்வரனின் உத்தரவு. அவ்வாறெனில், ஸ்ரீ ராமபிரானின் நாம ஸ்மரணம் ஒன்றுதான் ஸகல தத்துவங்களின் மேலான ஸாரம் என்பதை எப்படி இவர்கள் தெரிந்து கொள்ளப்போகிறார்கள். இவர்களுக்கு உபதேசிப்பதில் என்ன பயன் காணமுடியும்.

வெட்கமில்லாத குலஸ்திரீ தாஸிபோல் அழிவாள்.

தெலுஸுனு	— என்று தெரியும்
ஜகமுலு	— உலகமெல்லாம்
மாயாமயமு அனி	— மாயை நிறைந்தது என
தெலுஸுனு	— தெரியும்
துர்க்குண காயஜாதி	— துஷ்ட குணங்களான காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற
ஷட்ரிபுல	— ஆறு சத்ருக்களை
ஜயிஞ்சே கார்யமு	— ஜயிக்கும் கார்யமும்
தெலுஸுனு	— தெரியும்.

கருத்து: வேதாந்த தத்துவ ஞானமே உயர்ந்த ஞானம் என்பது நம்முடைய பெரியோர்களின் மதம். அப்படியிருக்க, சுகமாகப் பாடிக்கொண்டு காலம்போக்குகிறவனுக்கு என்ன தெரியும்? புத்தியை மயக்கச் செய்யும் இந்த ஸங்கீதம், நிச்சயம் கெட்ட வழிகளில் மனம் போனபடி இழுத்துவிடும் என்பதும் சிலமுள்ள பெரியோர்கள் பலரின் முடிவு. வெறும் பாட்டும் கூத்தும் நடக்கும் இடத்தில் எந்தப் பெரியோர்களையும் காண முடியாது. இதைத்தான் வற்புறுத்தி, ஸங்கிதத்தைக் கண்டு யாரும் பயப்படவேண்டாம். அதே சமயம், ஸங்கிதத்தை வீணே பயன்படுத்தவும் வேண்டாம் என்று இங்கு காட்டுகிறார். பிருங்கி, நந்தி முதலானவர்கள் தாள வாத்யம் வாசித்து சிவனைக் களிப்பித்தார்கள். சிவபெருமானே நடன ஸுந்தரனாகி, நிருத்ய சாஸ்திரத்தை உதிக்கச் செய்தான். மாருதியோ வீணையில் நாரதரையும் வென்றவர். நாரதர், மதங்கர், அக்ஸ்த்யர் இவர்கள் கான சாஸ்திர விற்பன்னர்கள். உயர்ந்த காயகர்கள். இவர்கள் இந்த ஸங்கீத சாஸ்திரத்தைக் கொண்டு, தெய்வத்துடன் ஒன்றாகி வாழ்கிறார்கள். ஆகையால் எது செய்யத் தகுந்தது எது செய்யத் தகாதது என்ற சாஸ்திர ஞானம் ஸித்திக்க வழி எது? நித்யம் எது அநித்யம் எது, மாயை நிறைந்த உலகில், மாயை அகல வழி எது, காம க்ரோதங்களான ஆறு சத்ருக்களை ஜயிக்கும் உபாயம் எது? பகவத் பக்தியே தான். அது ஸித்திக்க ஸுலபமான உபாயம் எது? ஸங்கீத ஞானமே தான். முடிவாக பக்திபெற வேண்டியே ஸங்கீதம் பாடு. நன்மை உண்டு.

ரூபத்தில் லக்ஷ்மிபோலும் பொறுமையில் பூமிபோலும்

தாரக நாம — பிறவிக் கடலிலிருந்து கைதூக்கிக் காப்பாற்றும் பரிசுத்தத் திருநாமம் உடைய ஸ்ரீராமா

ஸ்ரீதியாகராஜார்ச்சித— உன்னைத் துதித்திருக்கும் இந்த தியாகராஜன், அப்பேற்பட்டவர்களுக்கு உன் மஹிமைகளை உபதேசிப்பதால் பயன் எதுவும் காணவில்லை.

கருத்து: ஸ்ரீ ஸ்வாமிகள் இருந்த காலத்தில், சில வேஷதாரிகள் இவருடைய ஏகாந்த பக்தியைக்கண்டு பொருமையால் தூற்றிவந்தனர். அதை எண்ணி, தன் உறுதியை ஸ்ரீ ராமபிரானிடம் இந்தக் கீர்த்தனம் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிருர்.

எத்தனை வித்தைகள் ஒருவன் கற்றிருந்தாலும், ஆத்ம வித்தை என்று கருதப்படும் இந்த ஈச்வர சிந்தனை, ஈச்வர பக்தி, அவரவர்களுடைய சிரத்தை, சீலம், குரு பக்தி இவைகளாலேயே தேடி அடையத் தக்கது. ஸ்வயமான பரிபாகமும், ஞானமும், பற்றற்ற தன்மையும் இவைகளுடன் இன்றியமையாத யோக்கியதாம்சமாகும். இவைகளை நன்கு பரீக்ஷித்தே ஒரு ஞான குரு ஈச்வரனின் பிரதிநிதியாக இருந்து உபதேசிக்க மனமிரங்குகிருர். அன்றி அவ்சரமோ, பொழுது போக்குக்கான நேரமோ, புத்திக்கும் படித்த படிப்புக்கும் விருந்தாவதோ இவைகளுக்கு நிமித்தமல்ல. காளை மாட்டிற்கு நல்ல பசி எடுத்தபோது உயர்ந்த பக்ஷ்யங்களின் வகைகளையும் அதில் கண்டுள்ள ருசியையும் பற்றிப் பேசி என்ன பயன்? நல்லதொரு முயற்சியில்லாத அபாத்ரனுக்கு ஈச்வர தத்துவங்களைச் சொல்லாதே என்பது சுருதிகளின் மூலம் ஈச்வரனின் உத்தரவு. அவ்வாறெனில், ஸ்ரீ ராமபிரானின் நாம ஸ்மரணம் ஒன்றுதான் ஸகல தத்துவங்களின் மேலான ஸாரம் என்பதை எப்படி இவர்கள் தெரிந்து கொள்ளப்போகிருர்கள். இவர்களுக்கு உபதேசிப்பதில் என்ன பயன் காணமுடியும்.

வெட்கமில்லாத குலஸ்திரீ தாஸிபோல் அழிவாள்.

தி
யா
கோ
ப
நி
ஷ
த்.

ஸங்கீத ஞானம்.

ஸத்கதாம்ருத கலாநிதி,
ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரிகள்.

சமீபத்தில் ஒரு பிரமுகருடன் பேசுகையில் "நம்நாட்டு ஆலயங்களை நாம் பாதுகாக்க வேண்டியது மிகுந்த அவசியம். ஏனெனில் அங்குதான் நம்முடைய பண்டைய சிற்பங்களும் கலாசாரமும் பொதிந்து கிடக்கிறது" என்று தெரிவித்தார். முற்றிலும் உண்மையே. நம்முடைய தென்னாட்டிலேயே, எந்த ஒரு சிறிய கோயிலை எடுத்துக்கொண்டாலும் அங்கு பிரமிக்கத்தக்க வகையில் அமைந்த பல சிற்பங்களைக் காண்கிறோம். ஆனால் சிற்பங்களையும், அதில் தன் கலைத் திறமையையும் காட்டுவதற்காகத்தான் கோவில்கள் கட்டப்பட்டன என்று யாரும் நினைக்கமாட்டார்கள். பக்ஷணக் கடையில் வைத்திருக்கும் பலதரப்பட்ட வர்ண மிட்டாய்கள் நம் கண்ணைக் கவருகிறது. அதில் எதை நாம் வாங்கி சுவைத்தாலும், எல்லாம் முடிவில் சக்கரையால் செய்ததுதான் என்று கொள்ளுகிறோம். கலைகள் ஸாதனம். கலையின் ஞானம் தெய்வீக ஞானத்தைப் பெறப் பல படிகளுள் ஒன்று. ஸங்கீதத்தைக் கலையென்றும் பயிலும் மாந்தர்களுக்கு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி ஓர் எச்சரிக்கை விடுகிறார்.

ராகம்–தன்யாஸி] [தாளம்–ஆதி.

பல்லவி.

ஸங்கீத ஞானமு பக்திவினா
ஸன் மார்க்கமு கலதே ஓ மனஸா — (ஸ)

வேலை செய்யும்போது வேலைக்காரி போலும்

அனுபல்லவி.

பிருங்கி நடேச ஸமீரஜ கடஜம
தங்க நாரதாது லுபாஸிஞ்சே — (ஸ)

சரணம்.

ந்யாயா ந்யாயமு தெலுஸுனு; ஜகமுலு
மாயா மயமனி தெலுஸுனு; துர்க்குண
காய ஜாதி ஷட்ரிபுல ஜயிஞ்சே
கார்யமு தெலுஸுனு; த்யாக ராஜுனிகி — (ஸ)

பதவுரை :—

பல்லவி.

ஓ மனஸா	— ஓ மனமே (நீ சொல்)
ஸங்கீத ஞானமு	— ஸங்கீத (கீதம், ந்ருத்யம், வாத்யம்) ஞானம்
பக்தி வினு	— பக்தியில்லாமல்
ஸன் மார்க்கமு கலதே	— நல்வழியாகுமா (ஸன் மார்க்கத்தில் செலுத்துமா? செலுத்தாது) ஏனெனில் இந்த ஸங்கீத ஞானம் எவர் வழியாக உலகில் வந்தது என்று நினைத்துப்பார்

அனுபல்லவி.

பிருங்கி	— பிருங்கி எனும் ரிஷி
நடேச	— நடராஜப்பெருமான்
ஸமீரஜ	— ஆஞ்ஜனேயர்
கடஜ	— அகஸ்த்யர்
மதங்க	— மதங்கர் என்ற ரிஷி
நாரதாதுலு	— நாரதமுனி போன்றவர்கள்
உபாஸிஞ்சே	— உபாஸித்தது அன்றோ!

சரணம்.

த்யாக ராஜுனிகி	— இந்த தியாகராஜனுக்கு
ந்யாயா ந்யாயமுலு	— எது நியாயம் எது அநியாயம்

விஷயத்தை யோசிக்கும் போது மந்திரி போலும்

தெலுஸுனு — என்று தெரியும்
ஜகமுலு — உலகமெல்லாம்
மாயாமயமு அனி — மாயை நிறைந்தது என
தெலுஸுனு — தெரியும்
துர்க்குண காயஜாதி — துஷ்ட குணங்களான காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற
ஷட்ரிபுல — ஆறு சத்ருக்களை
ஜயிஞ்சே கார்யமு — ஜயிக்கும் கார்யமும்
தெலுஸுனு — தெரியும்.

கருத்து: வேதாந்த தத்துவ ஞானமே உயர்ந்த ஞானம் என்பது நம்முடைய பெரியோர்களின் மதம். அப்படியிருக்க, சுகமாகப் பாடிக்கொண்டு காலம்போக்குகிறவனுக்கு என்ன தெரியும்? புத்தியை மயக்கச் செய்யும் இந்த ஸங்கீதம், நிச்சயம் கெட்ட வழிகளில் மனம் போனபடி இழுத்துவிடும் என்பதும் சீலமுள்ள பெரியோர்கள் பலரின் முடிவு. வெறும் பாட்டும் கூத்தும் நடக்கும் இடத்தில் எந்தப் பெரியோர்களையும் காண முடியாது. இதைத்தான் வற்புறுத்தி, ஸங்கீதத்தைக் கண்டு யாரும் பயப்படவேண்டாம். அதே சமயம், ஸங்கீதத்தை வீணே பயன்படுத்தவும் வேண்டாம் என்று இங்கு காட்டுகிறார். பிருங்கி, நந்தி முதலானவர்கள் தாள வாத்யம் வாசித்து சிவனைக் களிப்பித்தார்கள். சிவபெருமானே நடன ஸுந்தரனாகி, நிருத்ய சாஸ்திரத்தை உதிக்கச் செய்தான். மாருதியோ வீணையில் நாரதரையும் வென்றவர். நாரதர், மதங்கர், அகஸ்த்யர் இவர்கள் கான சாஸ்திர விற்பன்னர்கள். உயர்ந்த காயகர்கள். இவர்கள் இந்த ஸங்கீத சாஸ்திரத்தைக் கொண்டு, தெய்வத்துடன் ஒன்றாகி வாழ்கிறார்கள். ஆகையால் எது செய்யத் தகுந்தது எது செய்யத் தகாதது என்ற சாஸ்திர ஞானம் ஸித்திக்க வழி எது? நித்யம் எது அநித்யம் எது, மாயை நிறைந்த உலகில், மாயை அகல வழி எது, காம க்ரோதங்களான ஆறு சத்ருக்களை ஜயிக்கும் உபாயம் எது? பகவத் பக்தியே தான். அது ஸித்திக்க ஸுலபமான உபாயம் எது? ஸங்கீத ஞானமே தான். முடிவாக பக்திபெற வேண்டியே ஸங்கீதம் பாடு. நன்மை உண்டு.

ரூபத்தில் லக்ஷ்மிபோலும் பொறுமையில் பூமிபோலும்

எல்லோர்க்கும் இனியவன்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரிகள்.

ஒருவனுடைய தயவு நமக்கு வேண்டுமென்றால் சில கார்யங்களை நமக்குப் பிடித்தமோ பிடித்தமில்லையோ செய்கிறோம். அடிக்கடி அவனைப் பார்க்கிறபோது, புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு வந்தனம் தெரிவிக்கிறோம். அவனுடைய க்ஷேமலாபங்களை அக்கரை உள்ளவர்போல விசாரிக்கிறோம். அவனுக்குண்டான சில கஷ்டங்களைக் குறிப்பாகக் கேட்டு நம்மாலான வாய்மொழி ஆறுதல் ஏதோ சொல்லித் தேற்றுகிறோம். அவனை நம் வீட்டுக்கு போஜனம் செய்ய அழைக்கிறோம். அவன் அழைத்தாலோ, அழைக்கா விட்டாலும் கூட, உரிமை பேசிக்கொண்டு தவறாமல் செல்லுகிறோம். அடிக்கடி அவனுடைய குணங்களை அவன் காதில் படும்படி பிறர் முன்னிலையில் பேசி அவனை மகிழ்விக்கிறோம். இதற்கெல்லாம் சில சமயம் நம்மிடத்தில் நடிப்புத்திறமையும் தேவைப்படுகிறது. அந்தரங்க சுத்தமுடன் ஒருவனிடம் பேசிப்பழகுவது மிகவும் துர்லபம். எளிதில் இவ்வுலகத்தில் பயன் தருவதுமில்லை.

உண்மை மனத்துடன் எல்லோரிடமும் இனிமையாகப் பேசுகிறவனுக்கே வெற்றி என்பது பழைய வார்த்தை. தன் உள்ளத்தை ஒளிக்காமல், அதே சமயம் இனிமையும் கனிவும் கலந்து பேசுவதும் பழகுவதும், ஸத்யமும் தருமமும் பிசகாதபடி நடத்தலும் மிகவும் ஆச்சர்யமான தெய்வ குணம். அதிலும், எல்லோரிடத்திலும் ஒரே விதமாக, இந்த உன்னத இயல்புடன் பழகுவது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம். இந்த மஹோன்னதமான குணம் ஸ்ரீராமபிரானிடம் விளங்கிவந்தது என்று வால்மீகி பகவான் அயோத்யா காண்டத்தில் பலமுறை காட்டியிருக்கிறார். அதைக் கருத்தில் கொண்ட ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளும் "இது எவ்வாறு ஸாத்தியமாயிற்று? ராமா? இதை நான் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே" என்ற வியப்பும் ஏக்கமும் த்வனிக்க ஸ்ரீ ராமபிரானையே கேட்கிறார்.

ராகம்–தோடி] பல்லவி. [தாளம்–ஆதி.

ஏமனி மாட்லாடி திவோ ராம
எவரிமனஸு கேவிதமோ தெலிஸி — (ஏ)

அனுபல்லவி.

மாம மறது லனுஜுலு தல்லி தண்ட்ருலு
பாமலு பரிஜனுலு ஸ்வவசமௌட — (கே)

சரணம்.

ராஜுலு முனுலு ஸுராஸுருலு வரதிக்
ராஜுலு மறி சூருலு சசிதர தின
ராஜுலு லோபடி நடுவனு தியாக
ராஜ வினுத நய பயமுல முத்துக — (ஏ)

திதி 2 நாளுமிருந்தால் அபரான்ன வ்யாபியில் செய்.

பொருள் :

ராம, ஏமனி	— எப்படி என்று
மாட்லாடிதிவோ	— பேசினுயோ
எவரிமனஸுகு ஏவிதமோ தெலிஸி	— எவரெவர்களுடைய மனத்திற்கு ஏற்றபடி, எந்த எந்த விதமாக வெல்லாம் தெரிந்து(பேசினுயோ)
மாம மறதுலு	— மாமன் மைத்துனர்கள்
அனுஜுலு	— தம்பியர்கள்
தல்லிதண்ட்ருலு	— தாயார், தகப்பனுர் முதலியோர்கள்
பாமலு	— ஸ்த்ரீகள்
பரிஜனலு	— வேலைக்காரர்கள்
ஸ்வவசமௌடகு	— உன்னிடம் வசப்படும்படி (எப்படி எல்லாம் பேசினுயோ)
ராஜுலு முனுலு	— ராஜர்களும் முனிவர்களும்
வரதிக் ராஜுலு	— அஷ்டதிக்கைப் பரிபாலிக்கும் தேவர்கள்
மறி சூருலு	— மற்றும் சூரர்கள், வீரர்கள்
சசிதர தின ராஜுலு	— சிவனும், சூரிய சந்திரர்களும்
நய பய முலன்	— வினயமும், பயமும் கொண்டு
முத்துகன்	— அன்புடனும்
லோபடி	— அடங்கி
நடுவனு	— நடக்கும்படி (எப்படி எல்லாம் பேசினுயோ)

கருத்துரை :-

நமக்குவரும் விசனங்களில் பல, நம் உறவினர்களிடம் நல்லபடிப் பேசிப் பழகாததால், தானே, அப்படியே பேசினுலும் பழகினுலும், விசனங்கள் விட்டுவிடுவதில்லை. உறவினர்கள் ஒருவரிடத்தில் பேசுவது போல் மற்றெருவரிடத்தில் பேச முடிவதில்லை. பேசினுல் அவர்கள் மகிழ்வதும் இல்லை. ஸ்ரீ ராமா! எல்லா உறவினர்களும் ஒன்றுபட்டு உன்னிடம் பிரியம் வைக்க நீ என்னதான் அவர்களிடம் பேசினுய்? போகட்டும், பெண்கள் எல்லாம் உன்னையே நினைத்துருக அவர்களை மயக்கும் பேச்சுதான் என்னவோ? இதென்ன விந்தை எந்தெந்தப் பெண்களுடன் நீர் பேசிப் பழகினீர்? வேலைக்காரர்களை திருப்தி படுத்துவதற்கு என்னென்ன அவர்களுக்கு செய்தீர், எந்த வேலைக்காரன் ஐயா உமக்கு முரணுக நடந்து கொண்டான். எல்லாம் உம்முடைய முகராசி. இதுவன்றி மற்றும் எல்லா அரசர்களும் முனிவர்களும், தேவர்கள், அஸுரர்கள், திக்பாலர்கள், சூரியன், சந்திரன், பரமசிவன் எல்லோரும் உனக்கு உட்பட்டு உண்மையுடனும் அன்புடனும் நீ சொன்னபடி எல்லாம் செய்யக் காத்திருக்கிருர்களாமே.

இந்த அதிசயம் தான் என்ன? உம்முடைய பேச்சுத்திறமையாலே இவர்களை வசப்படுத்திவிட்டீரா? எல்லோருடைய உள்ளத்திலும் பரவி நிற்கும் உம்மொருவரால்தான் இது முடியும். ஸத்யமும், தர்மமும், தியாகமும் சேர்த்து வழி நடத்தத் தோன்றினதல்லவா தங்களது திருவுருவம். உம்மிடமிருந்து உதிரும் முத்து மொழிகள் வேதப்பழத்தில் கனிந்தெடுத்த சுரிதி அமுதம் அல்லவா? அதில் மோகித்திருப்பது நிஜமான ஆத்ம ஸுகம் அல்லவா? அதை ஜீவ ராசிகள் அனைவருக்கும் தடையின்றி அளிக்கத் தோன்றிய திரு அவதாரம் அன்றோ தாங்கள்.

---

2 நாளுமப்படி இருந்தால் அதில் அதிகமுள்ள நாள் திதி.

கட்டுப்பட்டவன் கதை.

தியாகோபநிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரிகள்.

ஒருசமயம் லீலாசுகர் என்ற கிருஷ்ணபக்தர் வனத்திலுள்ள தபஸ்விகளையும், முனிவர்களையும் பார்த்து விளையாட்டாகச் சொன்னாராம். 'ஏன் நீங்கள் இப்படி கற்ற வித்தையை வைத்துக்கொண்டு திணறிக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் வேதத்தின் உட்பொருளை அறிய ஆவல்கொண்டால் என்னுடன் வாருங்கள் காட்டுகிறேன். யசோதையின் வீட்டில் உரலில் அந்த உபனிஷதங்களின் அர்த்தம் கட்டுப்பட்டிருக்கிறதைக் காண்பீர்கள்' என்றுராம். உரலில் எம்பெருமான் கட்டுப்பட்டது அவராக ஆக்கிக்கொண்ட விளையாட்டு. நம்முடையதோ, திமிற முடியாமல் இறுக்கிக் கொண்ட கர்மவினையின் பெருங் கட்டு. இந்த நம்முடைய கட்டுத் தளர கட்டுண்டவனை நினையுங்கள் என்று இந்த கீர்த்தனத்தில் தெரிவிக்கிறார் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள்.

ராகம்–தோடி] பல்லவி. [தாளம்–ஆதி

கடதேர ராதா மனஸா — (கட)

அனுபல்லவி.

எடலேக பஜனசேஸி நீ
எடகல்கு நிஜமு தப்பரல தெலிஸி — (கட)

சரணம்.

கலசித்த லௌகிகமனு ச்ருங்
கலமந்து தகலகயே யுலூ
கல பத்துநிகி நிஜ தாஸுடை
வெலஸில்லு த்யாகராஜு மாடவினி — (கட)

கடதேர ராதா — கடைத்தேறக் கூடாதா (நல் வழிப் படலாகாதா)
மனஸா — ஏ மனமே
எடலேக பஜன சேஸி — இடைவெளியில்லாமல் (அனவ்ரதமும்)
பஜன சேஸி — பஜனை செய்து (ஸேவித்து)

மணி ஓசை, திலகம் ச்ராத்த காலத்தில் கூடாது.

நிஜமு தப்பரலனு	—	நிஜம் எது தப்பு எது என்று
தெலிஸி	—	தெரிந்து
கடதேர ராதா	—	நல்வழிப் படலாகாதா.
கலசித்த லௌகிக மனு	—	துஷ்ட சித்தம் கொண்டவர்களுடைய வழியைப் பின்பற்றி
ச்ருங்கல மந்துன்	—	(அந்த வழியே உனக்கு) சங்கிலிபோல
தகல கயே	—	ஏற்படாமல் இருக்க
உலூகல பத்துனிகி	—	உரலுடன் கட்டுப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு
நிஜ தாஸுடை	—	உண்மையான தாசனுகி
கடதேர ராதா	—	கடைத்தேறக் கூடாதா
வெலஸில்லு தியாகராஜு மாட	—	பக்கி விளங்கும் இந்தத் தியாக ராஜன் மொழிகளை
வினி	—	ஏ மனமே! கேட்டு கடைத் தேறக் கூடாதா?

கருத்து: மனம்போன வழியிலேதான் நாம் போகிறோம். மனம் நம்மை இழுத்துப் போகிற வழி சரியில்லை என்று புத்திசொல்லுகிறது. அதற்கு சித்தமும் தலையசைக்கிறது. இவ்விரண்டும் மனத்தை ரொம்பவும் கெஞ்சிக் கேட்கின்றன. "ஏ மனமே! உனக்கு நல்லது உண்டாகும். கண்ட இடங்களில் திரிந்து அகப்பட்டுக் கொள்ளாதே. உன்னால் நாங்களும் கெடுகிறோம்" என்கின்றன. அதற்கு மனம் சொல்லுகிறது, "என்னால் போகாமல் இருக்க முடியாது. அலைந்து கொண்டுதான் இருப்பது என்னுடைய இயல்பு. நான் அலையாமலிருக்க நீங்கள் தான் வழி சொல்லுங்களேன்" என்கிறது. அதற்கும் சித்தமும் புத்தியும் சொல்லுகின்றன. "அலையாதிருக்க ஒரு வழி சொல்லுகிறோம் கேள். உரலுடன் கட்டுப்பட்டானே ஒருவன் அவனிடத்திலேயே போய் இருந்துவிடு. உன்னாட்டம் நின்றுபோகும். உனக்கு விடுதலையும் கிடைக்கும். அவன் கட்டுப்பட்டானாயினும், அவன் யாவர்க்கும் காண முடியாதவன். அகப்படாதவன். அப்பேற்பட்ட பரமாத்மா கண்ணன் நமக்கு நன்கு அகப்படுவதற்காக இன்றைக்குக் கட்டை ஏற்றுக்கொண்டிருக்கிறான். இப்பொழுதே அவனை சிக்கெனப் பிடித்துவிடலாம்" என்று புத்தியும் சித்தமும் அழைக்கின்றன.

நல்ல சிநேகிதன்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

ஸ்ரீராமபிரான் அவதரித்த புண்ணிய தினத்தை இந்த மாஸம் நாடெங்கும் கொண்டாடி வழிபடுகிறோம். ஸ்ரீராம சந்திரமூர்த்தியின் திவ்ய சரித்திரமான ஸ்ரீமத் ராமாயணத்தைப்பாராயணம்செய்தும், அவனுடைய புண்ணிய நாமத்தை உச்சரித்தும், அவருடைய பிம்பத்தை அலங்கரித்துப் பூஜித்தும், அவருடைய குண கீர்த்தனங்களைப் பாடியும் அகமகிழ்வடைகிறோம். ஸ்ரீ ராமபிரானை நம்முடைய சித்தத்தில் வைத்துக்கொள்ள, நாம் சித்த சுத்தியை அவனிடம் பிரார்த்திக்கும் தினம் இதுவே. சித்த சுத்தி இன்றி நாம் கடைத்தேற முடியாது. ஆசாபாசங்களால் மனம் போன வழியில் பிணைக்கப்பட்ட நமக்கு ஆண்டுதோறும் ஒரு நாளாவது பரிசுத்தம் அடைய இதுவே உபாயம் ஆகும். இதையே ஸத்குரு ஸ்வாமிகள் இந்தக் கீர்த்தனையின் மூலம் பிரார்த்தித்துக் கொள்ளுகிறார்.

ராகம்–மலயமாருதம்] பல்லவி. [தாளம்–ரூபகம்.

மனஸா எடுலோர்த்துனு நா
மனவி சே கொனவே — (ம)

அனுபல்லவி.

தினகர குலபூஷணுனி தீனுடவை பஜன சேஸி
தினமு கடுபுமனின நீவு வினவவேல குணவிஹீன– (ம)

சரணம்.

கலிலோ ராஜஸ தாமஸ குணமுலு கலவாரி செலிமி
கலஸி மெலஸி திருகுத்ஸு மரிகாலமு கடபகனே
ஸுலபமுகா கடதேரனு ஸூசனலனு தெலிய சேயு
இலனு தியாக ராஜுமாட வினவதேல குண விஹீன— (ம)

பொருள்: நல்லகுணமே இல்லாத ஏ மனமே ஏன்கேட்க மாட்டேன் என்கிறாய். (உன்னுடன் படும்) கஷ்டத்தை

நான் எப்படி தாங்குவேன். ஸூர்ய வம்சத்திற்கு ஆபரணம்போல் அவதரித்த ஸ்ரீ ராமனை தைன்யத்துடன் (எளிமையும், வினயமும் கூட) பஜனைசெய்து, நாளைக் கழித்துக் கொண்டிரு. இந்த என் சொல்லை மனமே நீ கேட்டு நடக்கக் கூடாதா?

இந்த கலியுகத்தில் ராஜஸமும் தாமஸமும் நிறைந்த ஜனங்களுடன் ஸ்நேகம் செய்துகொண்டு, நன்றாக அவர்களுடன் பழகிப்பழகித் திரிந்துகொண்டு காலம் (வீணாக) கழிக்கிறாய். அதைவிட்டு ஸுலபமாக எல்லோரும் இங்கு கடைத்தேறும் உபாயங்கள் இந்த தியாகராஜன் சொல்லுகிறேன். ராமனையே பஜித்திடு என்றிரு. அதைக்கேட்டு நல்வழிப்படலாகாதா?

விளக்கம்: இது தன் மனத்தையே அழைத்து உபதேசிக்கும் எத்தனையோ கீர்த்தனங்களில் ஒன்று. சொல்லுகிறவர் யார்? யாருக்குச் சொல்லுகிறார்? மனத்திற்குச் சொல்லுகிறார் என்றால் தான் வேறாகி அல்லவோ சொல்லவேண்டும். மனத்தைத் தன்னிடமிருந்து பிரித்துச் சொல்லுகிறவர்க்கு மனம் என்ன கேடு விளைவிக்கப் போகிறது? மனத்தை ஒரு நல்ல ஸ்நேகிதனாகவும், தன்னை ராம கைங்கர்யத்தில் மூழ்கிய ஒரு பக்தனாகவும் ஆக்கிக் கொண்டு பேசுகிறார். மனமே, உன் வழியில் என்னை இழுக்காதே. என் வழியில் நீ வா. மனமே, உனக்கு எத்தனையோ ராஜஸமும் தாமஸமும் நிறைந்த இடங்களில் செல்ல ஆசை உண்டு. அங்கு செல்லாமல், என்னுடனே இரு. எனக்கு அந்த பரமாத்மா அளித்த திருவருளில் நீயும் லயித்து விடு. அது இருவருக்கும் க்ஷேமமாகும். மனத்தையும் ஒன்று சேர்த்து, வாக்கினாலும், காயத்தாலும், ஸ்ரீ ராமனை பஜனை செய்வதே நாம் கடைத்தேற ஒரு வழி என்று காட்டுகிறார். வாக்கும், காயமும் அநேகமாக, ஸ்ரீ ராமனுடைய உத்ஸவாதி காரியங்களில், புண்ணிய தினங்களில் ஈடுபடும். ஆனால் மனம் தன் வழியே போய்க்கொண்டிருக்கும். மனம் செவ்வைப் படாத போனால், கர்மாவிலும், பக்தியிலும் நிறைவுகாண முடியாது. அதனால்தான் மனத்தை வற்புறுத்தித் தன்னுடன் சேர்ந்துகொள்ள அழைக்கிறார்.

ஆதித்ய ஸ்வரூப ப்ரபிதாமஹர்

உடல் பெற்ற இன்பம்.

தியாகோபநிஷத்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

இந்த உடலில் உள்ள ஒவ்வொரு அவயவமும் மிகுந்த அவசியமாக இருக்கிறது. கண், காது, நாக்கு, மூக்கு, கை, கால்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் உலகில் காணும் இன்பத்தையும், அதனுல் இந்த உடலை வளர்க்கவும் பயன் படுகின்றது. இவைகளில் ஏதேனும் ஒன்று பழுதாய்ப் போனலும், மனிதன் வீணுகுவதில்லை. பழுதடைந்த அவயவத்தால் காணும் இன்பத்தை மற்றதொன்றின் வளர்ச்சியால் அடைய முற்படுகிருன். கண்ணிழந்தவன் காதாலும், வாயிழந்தவன் கண்ணுலும் கண், காது, வாய் இவைகள் அடைத்துப் போனலும். ஸ்பரிசத்தாலும், உலகைப் புரிந்துகொண்டு காலம் தள்ளுகிருன். அதற்கு முக்ய உறுப்பான புத்தி பழுதடையாமல் இருப்பதே காரணமாகும். புத்தி பிசகினவனுக்கு இதில் எந்த உறுப்பும் உதவாது. அதனுல் புத்தியின் பலத்தைக் கொண்டே ஒருவன் உலகில் விழாமல் தன்னைத் தாங்கிக் கொள்ளமுடிகிறது.

மனிதனின் புத்தியும் சிந்தனையும் வளர வளர, அதிசயிக்கக் கூடிய பேராற்றல் விளைகிறது. இங்கே ஒன்று தெரிவிக்கிருர். எவ்வளவுதான் சிந்தனை செய்து பார்த்தாலும் உன்புத்திக்கே புலப்படாத ஒன்று எல்லாவற்றையும் கடந்து இருக்கிறது. எத்தனையோ கால காலங்களில் சிந்தித்துப் பார்த்தும் கண்டுகொள்ள முடியவில்லை. அந்த முடிவான ஒன்றைக் கண்டுக்கொள்ளத்தான் இந்த உடலை உனக்கு அளித்திருக்கிறது என்று இந்தக் கீர்த்தனத்தில் வலியுறுத்துகிருர். இதை நீ உணர்ந்து கொள்ளாவிடில் ஒரு புத்தி பிசகினவன் கண்டகாட்சிக் கொப்பாகும் நீ இந்த உலகைக் காண்பது என்கிருர்.

ராகம்–நீலாம்புரி] [தாளம்–ஆதி.

(1) என்னகா மனஸுகு ரானி
பன்னக சாயி ஸொகஸு
பன்னுகா கனு கொனனி கன்னுலேலே
கன்னுலேலே கண்டி மின்னுலேலே

(2) மோஹமுதோ நீலவாரி
வாஹ காந்தி நிகேரின
ஸ்ரீ ஹரினி கட்டு கொனனி தேஹமேலே
தேஹமேலே ஈ கேஹமேலே

(3) ஸரஸிஜ மல்லெ துலஸி
விருவாஜி பாரி ஜாதபு
விருலசே பூஜிஞ்சனி கரமுலேலே
கரமுலேலே ஈ காபுரமுலேலே

(4) மாலிமிதோ த்யாகராஜு
நேலின ராமமூர்த்தினி
லாலிஞ்சி பொகடனி நாலிகேலே
நாலிகேலே ஸுத்ர மாலிகேலே.

பொருள்: *(1)* எவ்வளவுதான் யோசித்துப் பார்த்தும், மனஸுக்கு எட்டாத (ஒரு பொருளை) ஆதிசேஷன் மீது சயனித்திருக்கும் பகவானுடைய திவ்ய ஸௌந்தர்யத்தை நன்றாகக் கண்டு களிப்படையாத மனிதனுடைய கண்கள் இருந்து என்னபயன்? அந்தக் கண்களில் பார்வையிருந்தும் என்ன பயன்?

பகவான் எட்டாதவனாயினும், எல்லோருக்கும் தன்னை காணும் பொருட்டு அழகிய பள்ளி கொண்ட திருக்கோலத்துடன் காட்சி அளிக்க வில்லையா?

(2) கரிய மேகம் போன்ற காந்திபடைத்த என் கண்ணனை ஆசையுடன் கட்டி அணைக்காத தேஹம் எதற்கு? ஏன்? கட்டி அணைப்பதற்குத்தான் இந்த வீட்டில் எத்தனையோ இருக்கிறதே? மனை, மனைவி, மக்கள் ஆகியவை. வாஸ்தவம், இவைகளைக் கட்டி அணைப்பதால் உன் தேஹம் களைத்து கழன்று விடும். எவனைக் கட்டி அணைத்தால், உன்னை யறியாமல் உனக்கு இடப்பட்ட கட்டுக் கழன்றுவிடுமோ, அவனையே கட்டிக்கொள்ள ஆசைப்படு. அவன் கிடைப்பானோ? அவனுடைய சம்பந்தம் பெற்ற துளஸி ஹாரம், புண்ட்ரங்கள் பாகவத

பாததூளி, அவனுடைய நிர்மால்யங்கள் உன் தேகத்தில் இருந்து சுகப்படுத்தட்டும்.

(3) தாமரை, மல்லி, துளஸி, இருவாக்ஷி, பாரிஜாதம் போன்ற புஷ்பங்களால் பகவானை அர்ச்சிக்காத கைகள் எதற்கு? அவ்வாறு உதவாத கைகளைச் சுமக்கும் இந்த ஜன்மம்தான் எதற்கு ?

இந்தக் கைகளால் ஸேவை (நமக்கே யாவது அல்லது பிறர்க்காகவாவது) செய்கிறோம். ஸேவகமும் செய்கிறோம். பிறரை ஆட்டியும் படைக்கிறோம். நீ எத்தனை அதிசயங்கள் புனைந்தாலும் கைகளால் உனக்கும் உன் பிறவிக்கும் மணம் ஏற்படப் போவதில்லை. உடலுக்குத்தான் இந்தக் கைகள் உதவுகின்றன. மென்மையான மணம் நிறைந்த புஷ்பங்களைக் கையில் எடு! உன் கை பட்டவுடன் அவை தாங்காமல் வாடிவிடுகின்றன. நாடாத மலர் நாடி நாள்தோறும் நாரணன்தன் வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்ற உத்தம கைங்கரியத்திற்கானவை உன் கைகள்! அவைகளைக் கொண்டு உன் ஜன்மத்தை பாரமாக்காதே! ஜன்மபாரத்தை நீக்கிவிடு.

(4) அன்புகூர்ந்து, இந்த தியாகராஜனைக் காப்பாற்றின ஸ்ரீ ராமமூர்த்தியை லாலனை செய்து பாடாத நாக்கு எதற்கு? கையில் சுற்றிக்கொண்டிருக்கும் ஜபக் கயிறு தான் எதற்கு? நாக்கு எவ்வளவோ பேசுகிறது! அந்தரங்க சுத்தத்துடன் பேசுவது எவ்வளவு? மிகவும் சொற்பம். உள்ளன்பு நெகிழ ஸ்ரீ ராமனைப் பாடினால், உன் நா அடையும் சுவை அறியமுடியாது. அந்தரங்க பக்தி யில்லாமல், வெறும் வறட்டுக் கூச்சலிட்டுப் பாடிக் கொண்டிருந்தால் என்னபயன்? அதுஎது போல? ஒருவர் ஜபம் செய்துகொண்டிருந்தார். ஒரு கையில் துளஸிமாலை உருட்டிக்கொண்டிருக்கிறார். இன்னொரு கையில், இவர் ஜபம்பண்ணின கணக்குத் தெரியும்படி, கயிற்றை விரலில் சுற்றிக்கொண் டிருக்கிறார். இவர் மனமோ, எங்கேயோ லௌகீக கார்யத்தை எண்ணிக்கொண்டிருக்கிறது. இதனால் சுவை உண்டா? பயன் உண்டா?

பலரூபாய் செலவில் பிரயாணம் செய்து வந்து

ஸீதைக்கு பித்ருதேவ தர்சனம்.

காட்டிலே ஸ்ரீ ராமர் தசரதருக்கு விதிப்படி சிராத்தம்செய்தார். ஸீதாதேவி பிராம்மணர்களுக்குப் பரிமாறினுள். பிராம்மணர் பாதம் மிக ப்ரகாசமாய் தசரதர் கால்போலிருந்தது. நிமிர்ந்து பார்த்தாள். தசரதருடன் மற்றுமிரு சக்ரவர்த்திகள் அமர்ந்திருக்கக் கண்டாள். அவர் மாமனுர். அவர் எதிரில் மர உறிவி அணிந்து வர வெட்கப் பட்டாள். உடனே பரிமாறுவதை நிறுத்தி வெளியில்சென்று பதுங்கி இருந்தாள் ஸீதை.

பெண்ணல்லவா ஸீதை? ஒரு ஸமயம் வீட்டைவிட்டு விலகும் ஸமயமாக இருக்கலாம் என எண்ணி லக்ஷ்மணன் பரிமாற சிராத்தம் பூர்த்தியானது. பித்ருக்களை வழிகொண்டுவிட்டு ராமர் திரும்பினுர். ஸீதையும் உள்ளே நுழைந்தாள். நீ தீட்டில்லையா? ஏன் பரிமாரு மல் வெளியில் சென்ருய்? என்று ராமர் வினவினுர். என் மாமனு ரும், மற்றும் இரு சக்ரவர்த்திகளும் இலையில் அமர்ந்திருந்தனரே! நல்ல உடையில்லாமல் அவர்கள் எதிரில் எப்படி வருவது? ஆதலால் மறைந்திருந்தேன். அவர்கள் யார்? என்று தேவி வினவினுள். தந்தைக்கு ச்ராத்தமாயினும், பிதா, பிதாமஹர், பிரபிதாமஹர் என் பவர்களைச் சேர்த்து மூவருக்கும் ஹோமம் ஆராதனம் செய்கிருேம். ஆதலால் தசரதர், அவரது தந்தையான அஜர், அவரது தந்தை யான ரகு என்ற மூவரும் வந்திருந்தனர். நாம் அவர்களை ஒரு பிராம்மணரிடமே பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹான் பவத்ஸு ஆவாஹ யாமி என வரிக்கிருேம். உடனே அவர்கள் பிராம்மணரிடம் வரு கின்றனர். அது எல்லோருக்கும் கண்ணுக்குப் புலப்படாது.

ஸீதே! நீ புண்யவதி. மாமனுருக்கு நன்கு பணிவிடை செய்தாய். ஆதலால் உன் கண்ணுக்கு அவர்கள் புலப்பட்டார்கள் என்ருர் ராமர்.

எனக்கு பாக்ய மில்லையே?

என் தந்தையைத் தர்சிக்க எனக்கு பாக்யமில்லையே என்று வருந்தி ராமர் மேலே பிண்ட ப்ரதானம் செய்தார். அச்சமயம் தசரத சக்ர வர்த்தி தனது கையை நீட்டி பிண்டத்தைக் கையில்கொடு என்ருர். உள்ளம் குளிர்ந்த ராமன், அரிய தந்தையே! ஸந்தோஷம்! எனக்கும் தர்சனமளித்து, பேசி, கையையும் நீட்டினீர்!

சாஸ்த்ரமல்லவா ப்ரமாணம்!

பூமியில் பிண்டத்தை வைக்கும்படி அல்லவா சாஸ்த்ரம் கூறு கிறது! அன்பினுல் கேட்கிறீர்! நானும் தருகிறேன்! ஆனுல் சாஸ்த்ர விதியை யான் மீறலாமா? ஆதலின் பூமியில் வைக்கிறேன். தாங்க ளும் சாஸ்த்ரத்தைத் தழுவி பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்ருர்.

ஸீதைபோல் ராமர் போல் நாமும் சாஸ்த்ரம் தவருமல் ஸத்கர்மா செய்தால் பித்ருக்களைத் தர்சிக்கலாம்.

ஸஹோதரருடன் சிராத்தம் செய்கின்றனர் சிலர்

ஸீதா வல்லபன்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

பகவானின் அளவிடமுடியாத அனுக்ரஹ சக்தி, மறைந்திருப்பதாலேயே உலகில் அறியப் படுகிறது. தன்னை மறைத்து மானிட வடிவத்தில், இவ்வுலகில் நம் முன்னே நமக்காக யுகங்கள்தோறும் அவதரித்து வருகிறான். இந்த அவதாரங்களில் விசேஷமானது ஸ்ரீ ராமாவதாரம். அதில் தான் மறைந்திருந்ததுபோல, தன் சக்தியான ஸீதாதேவியையும் மறைத்து வைத்து இருவருமாக உலகை வாழ்வித்திருக்கிறார்கள். தன் தேவியின் துணை கொண்டு, அவளுடைய கற்பின் சக்தியாலே தன் அவதார லீலையை நடப்பித்துக் கொண்டார். இதுபோல வேறு எந்த அவதாரத்திலும் காணப்படுவதில்லை. இதையே தியாகராஜஸ்வாமிகளும் கருத்தில் வைத்து கானம் செய்கிறார்.

ராகம் – சங்கராபரணம்.] பல்லவி. [தாளம்–ரூபகம்.

வல்லகா தனக, ஸீதா வல்லப ! ப்ரோவ-நா — (வ)

அனுபல்லவி.

வல்ல நாடி பக்த சரித மெல்ல வ்ராயனேலரா — (வ)

சரணம்.

ஸ்தம்பமுனனு தருமருகுன டிம்புடையசோத ஒடினி
டம்புடைன முசுகுந்துனி டாஸி மருகுத்ஸ
ஸம்பவிஞ்சி யுக யுகமுன ஸரஸ தியாகராஜ விநுத
கும்பக ரேசக விதுலனு கோரிப்ரோசினவு நா — (வ)

பொருள்–*பல்லவி*:- ஸீதா வல்லப, உன்னைக் காப்பாற்ற என்னால் முடியாது என்று சொல்லிவிடாதே.

நாந்தி செய்தவர் மூன்று மாதம்வரை தர்மம்

அனுபல்லவி :- உன்னால் காப்பாற்றப்பட்ட பக்தர்களின் சரித்திரங்களை எல்லாம் என்னால் எழுத முடியாது. எதற்காக நான் எழுதவேண்டும் ?

சரணம் :- தூணில், மரத்தின் பின்னே, யசோதையின் மடியில் பாலகனாய், டம்பம் நிறைந்த முசுகுந்த சக்கரவர்த்தியை அணுகிச் சென்று மறைந்தும், ஒவ்வொரு யுகத்திலும் அவதரித்துக் காப்பாற்றினாய். (உன்னை அறிந்தவர்கள்) கும்பகம் ரேசகம் என்ற யோக வழி அறிந்தவர்கள். தங்கள் உள் நோக்கால் உட்பறமாய் மறைந்த ஹ்ருதய கமல வாஸனை உன்னை சரணம் அடைந்தவர்கள்.

இந்த கீர்த்தனத்தில், ப்ரஹ்லாதனுக்காக தூணில் மறைந்து வெளிப்பட்டதையும், ஸுக்ரீவனுக்காக மரத்தில் மறைந்து வாலியின்மேல் பாணம் செலுத்தியதையும், யசோதையிடம் அவள் பெற்ற பிள்ளை என்ற பாசம் பிறக்க பாலனாய் நடித்ததையும், காலயவனனைக் கொல்லுகிற காரணமாக, வெகு காலமாக குகையில் படுத்துத் தூங்கிக்கிடந்த முசுகுந்த சக்ரவர்த்தியை எழுப்பி தரிசனம் கொடுத்ததையும் குறிப்பிட்டார். ஸ்ரீ ராமா! இந்தச் செய்கைகள் எல்லாம் உம்முடைய பக்தர்கள் கோரிக்கையை மெய்ப்பிக்கவே எடுத்துக் கொள்ளப்பட்டன. இதைத்தவிர "ஆக்கையின் உள்ளும் புறத்தும், உன்னை நோக்கி நோக்கிக் காண்பான் ஆவலினால்." தவத்தில் கிடந்து பலகாலம் மெலிந்த அந்த தண்டகாரண்ய வாஸிகளுக்கு அன்று முன்னே நின்றீர். அவர்களுக்கு அபயம் அளித்தீர். தங்களுடைய ஜோதி வடிவை தங்கள் உள்ளுக்குள்ளே கண்டு ஆனந்தித்த அவர்கள், புறத்திலே, ஸீதா ஸமேதனாக எதிரே நின்று காக்ஷி கொடுத்ததை மறவாதவராகி புளகாங்கிதமடைந்தனர். அவர்கள் கோரிக்கையை ஈடேற்றிவைக்க, 'ராவண வதம்' முதலிய செய்ய எங்கள் தாயார் ஸீதையையும் கூட அழைத்து வந்துவிட்டீர். எங்கள் தாயார் ஸீதை இல்லாவிடில் உங்களுக்கு "ராவணாரி" என்ற கீர்த்திதான் ஏது? இவ்வளவு ஈடேற்றிக்கொடுத்தத் தாங்கள் இந்த சிறியேன் விஷயத்தில் சிரமமே படவேண்டாம். ரொம்பவும் ஸரஸமாக முடித்துவிடலாம். என்னால் முடியாது என்று மாத்திரம் சொன்னால் நான் ஏற்கமாட்டேன்.

ஸங்க்ரமணம் மன்வாதி யுகாதி ஆகியவைகளில்

14 (12) - P 428-430

காந்தர்வ வேதம்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரிகள்.

ஸங்கீதம் என்பதே யோக சாஸ்திரம். இதை முறையாகக் ற்று ஈச்வரார்ப்பணம் செய்கிறவனுக்கு ஸ்வானுபவ ஆனந்த ம் மோக்ஷமும் ஸித்திக்கும் என்பது ஸித்தாந்தம். இதையே ாதோபாஸனு மார்க்கம் என்றும் அழைக்கிருர்கள்.

எங்கும் பரவி நிற்கும் ஆத்ம ஸ்வரூபம், அதனுல் அறியப் பறும் ப்ரும்ம ஸ்வரூபத்திற்கு அமைந்த இடம் வெட்டவெளி ன்ற ஆகாசமே.

அந்த ஆகாசத்தில் தோன்றியது காற்றும், கனலும், பிறகு லமும், ஜலத்தினின்று பூமியும், பொருள்களும். ஆதலின் ூத்ம ஸ்வரூபத்தின் தூண்டுதலால் நாதத்தின் உற்பத்தி ஏற் ட்டது. ஆகாசத்தில் இயங்கும் காற்றும், அக்னியும் நாதத்தை ண்டாக்கின. செவிக்கு மதுரமாயும், ஹ்ருதயத்திற்கும் ின்பம் தரும் ஓசையை ஒலி என்றும் நாதம் என்றும் ழைக்கிருேம்.

ாதம்: * * * *

இந்த நாதம் எங்கும் பரவியிருக்கிறது. உள்ளும் புறமும் கட்கத் தகுந்தது. ஆனுல் செவி எனும் உருப்பின் சக்திக் குட் ட்டே இந்த நாதம் அறியப்படுகிறது. ஒவ்வொரு சரீரத்திற் ள்ளும் இந்த ஆத்ம நாதம் இயங்கி வருகிறது. அதை பாகிகள் இடைவிடாத தியானத்தால், புலனடக்கத்தாலும், மாதி நிலேயிலிருந்தும், அந்த உள்ளியங்கும் நாதத்தை றிந்து ஆனந்தத்தில் லயித்து ப்ரும்ம ஸாக்ஷாத்காரம் பெறு ருர்கள். இதற்கு அநாஹத நாதம் என்று பெயர். இந்த ன்பம் எல்லோருக்கும் கிட்டுவதல்ல. ஆயினும் இந்த இன்ப னுபவத்தை, எல்லோரும் அடையவும், அதன் மூலம் சிறிது றிதாக காலக் கிரமத்தில் மோக்ஷ இன்பம் பெறவும் வழிகாட்டி ள்ளனர் நம்முடைய முன்னேர்களான மஹரிஷிகள். இதை ஹத நாதமாக்கி வெளியே வழிந்தோடச் செய்து மதுரப்ரவாகம்

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

காட்டினர் அந்த கருணமூர்த்திகள். பூமிக் கடியில் ஆழத்தில் இருக்கும் தெளிந்த நீரை அனைவரும் பருகிப் பயனடைய சாதனைகளால் வெளிக் கொண்டுவருவது போலாகும் இந்த உபகாரம்.

இந்த உபாயத்தைத்தான் ஸங்கீதம் என்று சொல்லிக் கொள்ளுகிறோம். ஸங்கீதம் என்பது கீதம், வாத்யம், நிருத்தம் இவைகளுடன் பாவ, பக்தி, ராக, தாள கதிகளுடன் அமையும்.

ஸங்கீதம்: * * * *

பூமியில் தோன்றிய பிராணிகளுக்கும், முக்கியமாக மனிதர்கள் யாவருக்கும் குரலோசை உண்டு. இந்தக் குரல் ஒலி குழைந்து, உள்ளம் ஈடுபடப் பாடுவது கீதம் என்பதாகும். ஒரு விஷயத்தை சொல்லளவில் கேட்டால் சப்தமாகிறது. அதையே நீட்டியும், குறுக்கியும் பேசினால், இசைப்பதாகிறது. அந்த இசைத்தல், காதுக்கு இனிமைகாண வருமாகின் கீதம் ஆகிறது. அந்த கீதம் உள்ளத்தைத் தொட்டு, உயர்ந்த வஸ்துவான பரமனை நினைக்க உதவினால் நாதமாகிறது. கீதம் ஒழுங்கான ஒரு கோட்பாட்டிற்குள் அடங்கி சாஸ்திரீய முறையில் பாடப்படவேண்டியவை "நிபத்த ஸங்கீதம்" என்பார்கள். இதற்கு மதங்கர் முதலான மஹான்கள் ஆலாபம் என்றும் மார்ககீ என்றும் பெயரிட்டார்கள். "அநிபத்த ஸங்கீதம்" என்பது எந்த கட்டுக்கும் அடங்காமல் மனோநிலையில் ஸ்வேச்சையாக ஒரு சந்தோஷத்தையோ துக்கத்தையோ வெளிக்காட்ட இசைத்துப் பாடுவதாகும். இதை தேசி என்ற பெயரால் பிற்காலத்தில் அழைத்தார்கள். உதாரணமாக, குழந்தைகள் மெய்ம் மறந்து பாடுகின்றன. நாடோடி ஸ்த்ரீகள் சந்தோஷத்தில் பாடுகிறார்கள். ஆயர்களின் பாட்டு இவைகள் எல்லாம் தேசி என்ற வழியில் வருகிறது.

மார்க்கம்: * * * *

முன்பு சொன்ன 'மார்க்கம்' என்ற நிபத்த ஸங்கீதத்தை ஒரு சமயம் பரமசிவன் ஸந்நிதியில் பரதர் என்ற மஹரிஷி கேட்டார். அங்கு கந்தர்வர்கள் பாடினார்கள். அப்ஸரஸ்

ஸ்த்ரீகள் 'நிருத்தம்' என்ற அங்க அசைவுகளால், பாவங்களை விளக்கி நடனம் செய்தார்கள். நந்தி, ப்ருங்கி போன்றவர்கள் தாளம் போட்டார்கள். பாணாஸுரன், நாரதர், தும்புரு போன்றவர்கள் வாத்தியம் வாசித்தார்கள். ஒரே நாதப்ரவாகம் எடுத்து ஓடியது. அதில் நடராஜப்பெருமான் தானும் கலந்து நர்த்தனமாட எல்லையற்ற ப்ரும்மானந்தத்தை அனைவருக்கும் அளித்தார். அங்கிருந்து லயித்துப்போனவர்களில் பரதரிஷியும் ஒருவர். அவர் இந்த ஆனந்தத்தை உலகெங்கும் அடைய எண்ணி ப்ரும்மாவிடம் உபதேசம் பெற்று மார்க்கம் என்ற ஸங்கீதத்திற்கு ப்ரயோகம் செய்தார். ஆனால் பரதர் ஏற்படுத்தின மார்க்க ஸங்கீதம் வெகுகாலம் முன்பு மறைந்து விட்டதாகத் தெரிகிறது. 'தேசி' என்ற வழியே பிற்காலத்தில் பிரஸித்தமடைந்ததாகத் தெரிகிறது. இந்த 'தேசி' என்ற ஸங்கீதத்தை ஸங்கீத நிபுணர்கள் லக்ஷணங்களுடன் அமைத்து சாஸ்திரீய ஸங்கீதமாக ஆக்கினார்கள்.

<u>த்ருவபதம்:</u> * * * *

ஸாமகானத்தின் "ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதீஹாரம், நிதனம்" என்ற நான்கு பாகங்களுக்கு ஸமமான, "அஸ்தாயீ, அந்தர, அயோக, ஸஞ்சார" என்ற நான்கு வழிகளில் பாடப்படுகிற கதிதான் த்ருவபத மார்க்கம் என்று மஹா பாகவதோத்தமரான ஸ்ரீ ஹரிதாஸ ஸ்வாமிகளும், அவருடைய சிஷ்யரான தான்ஸேன் என்ற (அக்பர் காலத்திலிருந்த) மஹாவித்வானும், கண்டுகொண்டு பாடிவந்தார்கள் என்று ஒரு பெரியவர் முகமாகக் கேட்டிருக்கிறேன்.

இதையே ஸ்ரீமத் பாகவதம் தசம ஸ்கந்தத்தில் ராஸ லீலையின் பொழுது பகவான் கோபிகைகளுடன் கானம் பண்ணின அதிசயத்தை சுகர் சொல்லுகிறார்.

काचित्समं मुकुन्देन स्वरजातिरमिश्रिताः
उन्निन्ये पूजिता तेन प्रीयता साधु साध्विति
तदेव ध्रुवमुन्निन्ये तस्मै मानं च बह्वदात् ॥

ஒரு கோபிகை கிருஷ்ணபரமாத்மா பாடும்பொழுது அவர் பாடின ஸ்வரங்களையே, அவர் பாடின ஸ்வரங்களுடன் சேராமல் பாடிக் காட்டினுள். இதை பகவான் 'பேஷ்! பேஷ்!' என்று கொண்டாடினுர். அதனுல் இன்னும் உத்ஸாஹம் அடைந்த அந்த கோபிகை, முன்பு பாடின ஸ்வரங்களையே த்ருவம் என்ற கதியில் காட்டிப் பாடினுள். அதனுல் அவளுக்கு மிகுந்த வெகு மானம் கிடைத்தது, என்ருர்.

இதேபோல் ஸாமவேதத்தில் வரும் உத்கிருஷ்டம், ப்ரதமம், த்விதீயம், த்ரிதீயம், சதுர்த்தம், மண்டம் முதலிய ஆறு ஸ்வரங் களிலிருந்து ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், தைவதம் நிஷாதம் உண்டானது. பரமேச்வரனின் பஞ்சமுகத்திலிருந்து உண்டானது ஸப்த ஸ்வரங்களும்.

ரிஷபம், **கா**ந்தாரம், **ம**த்யமம், **தை**வதம், **நி**ஷாதம் என்ற ஐந்து ஸ்வரங்கள் ஈச்வரனின் முகத்தினின்று உண் டானவை என்றும், ஷட்ஜமம், பஞ்சமம் இவைகளை இட்டு ஏழு ஸ்வரங்களாக்கினுள் ஸ்ரீ பரமேச்வரி என்று ஸோமேச்வர மதம் சொல்லுகிறது.

* * * *

ஸ்வரங்கள்:

இந்த ஏழு ஸ்வரங்களில், ஷட்ஜமம், பஞ்சமம் மாருதது. மற்ற ஐந்து ஸ்வரங்களில் மத்யமம், சுத்தமத்யமம் என்றும் ப்ரதி மத்யமம் என்றும் இரண்டாகும். அதேபோல,ரிஷபம், காந்தாரம் தைவதம், நிஷாதம், ஒவ்வொன்றிலும் மூன்றுவகை.

(1) ஷட்ஜமம், (2) சுத்தரிஷபம், (3) சதுச்ருதி ரிஷபம், (4) ஷட்ச்ருதி ரிஷபம், (5) சுத்த காந்தாரம், (6) ஸாதாரண காந்தாரம், (7) அந்தர காந்தாரம், (8) சுத்த மத்யமும், (9) ப்ரதி மத்யமம், (10) பஞ்சமம், (11) சுத்த தைவதம், (12) சதுச்ருதி தைவதம், (13) ஷட்ச்ருதி தைவதம், (14) சுத்த நிஷாதம், (15) கைசிகீ நிஷாதம், (16) காகலீ நிஷாதம் ஆக இவை சேர்ந்துவருவது ''ஸ்தாயீ'' என்று சொல்லப்படுகிறது. இந்த பதினுறு ஸ்வரங்களும் 12 ஸ்வரங்களில் அடங்கும்.

(1) சதுச்ருதி ரிஷபமும், சுத்த காந்தாரமும், (2) ஷட்ச்ருதி ரிஷபமும் சாதாரண காந்தாரமும், (3) சதுச்ருதி தைவதமும், கைசிக நிஷாதமும், (4) ஷட்ச்ருதி தைவதமும் காகலிநிஷாத மும் ஒரே ஸ்தானங்கள் என்பதால் ஒரு ஸ்தாயியில் 12 ஸ்வரங் களே பேசுகின்றன. நாபி, ஹ்ருதயம் தொட்டுவரும் ஸ்தாயி மந்தர ஸ்தாயி. கண்டத்திலிருந்து வருவது மத்யம ஸ்தாயி. தாரஸ்தாயி சிரஸிலிருந்து உண்டாகிறது.

ராகம்:

ஸ்வரங்களை ஒழுங்காக மேலும் கீழும் பாடுவது மூர்ச்சனை என்றும் ஆலாபனம் என்றும் பெயர் பெறுகிறது. எல்லா மூர்ச்சனைகளையும் காட்டிப் பாடக் கூடியதை ஸம்பூர்ண கிரா மம் என்று அழைக்கிறார்கள். இந்த மூர்ச்சனைகளின் வழியில் அமைந்தது ராகம். ஸப்த ஸ்வரங்களைக் கீழிருந்து மேலும், மேலிருந்து கீழுமாகப்பாடுவது முறையே ஆரோஹணம் அவ ரோஹணம் ஆகும்.

இந்த ஸம்பூர்ண ஸ்வரக் கோவைகளை ஸம்பூர்ண மூர்ச் சனைகளுடன் அமைய 72 மேளகர்த்தா ராகங்களாகத் தொகுத் தவர் வேங்கடமகி என்பவர். அதற்கு முன்பே இவைகள் தொகுக்கப்பட்டு இருந்தாலும், இவர் காலத்திற்குப் பிறகே சாஸ்திர சங்கீதம் கர்நாடக ஸங்கீதம் என்ற வரையறை ஏற் பட்டது. ஏழு ஸ்வரங்கள் உள்ளவை ஸம்பூர்ண மேளகர்த்தா ராகம். ஆறு ஸ்வரங்கள் கொண்டவை 'ஷாடவம்,' ஐந்து ஸ்வரங்கள் கொண்டவை 'ஔடவம்.' இந்த மேளகர்த்தா ராகங்களிலிருந்து பல ஜன்யராகங்கள் தோன்றின.

இன்ன விதமான ஸ்வரங்களைப் பாடினதும் இந்த ராகம் என்று தெளிவாகத் தெரிய அமைந்திருப்பது வாதி ஸ்வரங்கள். ஒரு ராகத்தைப் பாடினதும் இன்னன்ன ஸ்வரங்கள் இந்த ராகத் திற்கு முக்கியம் என்று காட்டுவது ஸம்வாதி ஸ்வரங்கள். முக் கிய ஸ்வரத்துடன் அணைத்து ராக லக்ஷணத்தை அழகுபடுத்தும் அடுத்துவரும் ஸ்வரங்கள் அனுவாதி ஸ்வரங்கள். சிற்சில

ஸ்வரங்கள் இனிமைகொடாமல் வெறுப்பு அளிக்க அமைந்திருந் தால் 'விவாதி' எனப்படும். வாதி ஸ்வரங்கள் அரசன் போலவும், ஸம்வாதியை மந்திரியாகவும், அனுவாதியை வேலைக்காரனாக வும், விவாதியை சத்ருவாகவும் சொல்லுவார்கள். ராகங்களை கனம், நயம், தேச்யம் என்ற பிரிவில் பாவம் விளங்க அவை களுக்கு உகந்த காலங்களில் பாடினால் ரக்தியும், உருக்கமும் அதிகம் விளங்கும்.

கன ராகங்கள் — நாட்டை, ஆரபி, வராளி, கேதாரம், ரீதிகௌளை போன்றவை.

தேச்யம் — காபி, தர்பார், கானடா, கமாஸ், அமீர் கல்யாணி, ப்யாக் போன்றவை. மற்ற ராகங்கள் நய ராகங்கள்.

காலம்:

விடியற் காலை — பூபாளம், கௌளீ, மந்தாரி, தேவ க்ரியா, தேவகாந்தாரி, தன்யாஸி.

முற்பகல் — பிலஹரி, மலஹரி, முகாரி, பைரவம், குரஞ்சி.

மத்யான்னம் — சாரங்கா, மத்யமாவதி, ஸ்ரீ, நீலாம்பரி.

பிற்பகல் — மோகனம், கல்யாணி, சங்கரா பரணம், வஸந்தா.

மாலை — தோடி, பந்துவராளி, ஹிந்தோளம், சௌராஷ்ட்ரம்.

முன் ராத்ரி — காம்போதி, சாவேரி.

மத்திய ராத்ரி — நாட, புன்னாகவராளி, ஆஹிரி, அஸாவேரி, கேதாரம்.

பின் ராத்ரி — சுருட்டி, மஞ்ஜரி.

இந்த பரந்த ஸமுத்ரமான ஸங்கீத சாஸ்திரத்தை அறிந்து அனுபவித்து பயனடைய ஸ்ரீ தியாகப்ரும்மம் உபதேசித்துள்ள கீர்த்தனைகளை இதுமுதல் தொடர்ந்து எழுதிவருகிறேன்.

ராக ரஸாம்ருதம்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

ஒரு சமயம் திருவையாற்றிற்கு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளைப் பார்க்க நாரதப்ரும்மம் ஓர் யதிவேஷத்தில் வந்தார் என்றும், ஸ்ரீ ஸ்வாமிகளைப் பாடக்கேட்டு மெய்ம் மறந்து, 'ஸ்வரார்ணவம்" என்ற ஏட்டுச் சுவடியை அவர் இல்லத்தில் விட்டுச் சென்றதாகவும், அன்றிரவு தனது தரிசனத்தை அளித்து நாரதமஹரிஷி, தான் விட்டுச் சென்ற 'ஸ்வரார்ணவம்' என்ற நூலை நன்கு கற்று அதன் மூலம் ஸங்கீத லக்ஷணங்களை அறிந்துகொள்ளும்படி அருளியதாகவும் வரலாறு தெரிவிக்கிறது. அந்த ஸ்வ ரார்ணவம் என்ற நூலைப் படித்துப் படித்துப் புளகாங் கிதம் அடைந்த ஸ்ரீ ஸ்வாமிகள், தான் இதுவரை பாடி வரும் கீதம், உயர்ந்த யோக சாஸ்திரம் என்பதை உணர்ந்து பல கீர்த்தனங்கள் மூலம் தான் தெரிந்து கொண்டதை உலகுக்கு அறிவிக்கிறார்.

ராகம்–ஆந்தோளிகா] பல்லவி. [தாளம்–தேசாதி

ராக ஸுதாரஸ பானமு சேஸி
ராஜில்லவே ஓ மனஸா — (ரா)

அனுபல்லவி

யாக யோக தியாக
போக பல மொஸங்கு — (ரா)

சரணம்

ஸதா சிவ மயமகு நாதோங்கார ஸ்வர
விதுலு ஜீவன் முக்துலனி
தியாக ராஜு தெலியு — (ரா)

மனஸா — என்று தன்னையே அழைத்துக்கொள்ளு கிறார். தன்னுடைய சொந்த அனுபவமே பேசுகிறது.

பாத்தி கட்டி எருவு போட்டாலும் கூட

பொருள் :

பல்லவி: ராகங்களைப் பாடி, அந்த அமுதத்தைக் குடித்து இன்புறுவாய் மனமே.

அனுபல்லவி: யாகம் செய்வதாலோ, யோகநிலை பெறுவதாலோ, அல்லது துறவறத்தாலோ, அல்லது உலகின் போகங்களில் காணும் சிற்றின்பமாயினும் சரி, அனைத்தும் இதனுல் அடையலாம்.

சரணம்: நாதம் ஸதாசிவ மயமானது. நாதமே ப்ரணவம். அதுவே ஸப்த ஸ்வரங்களாகப் பெருகியது. இதை அறிந்துள்ள வித்வான்கள் ஜீவன் முக்தர்களாகின்றனர். இதை இந்த தியாகராஜன் தெரிந்து கொண்டேன்.

கருத்துரை :

நாதமே ஓங்காரத்தில் உண்டானது. ஓங்காரத்திலே முடிவடைகிறது. அதனுடைய பரிணுமமே (பெருக்கமே) ஏழு ஸ்வரங்கள். யாகத்தில் கானம் செய்யப்படும் எந்த ஸாமமோ அதுவும் ஓங்காரத்தில் உண்டாகியது. யோகிகளின் மௌன நிலையில் தியானத்தில் அடங்கி ஜபிக்கப்படுவதும் ப்ரணவமே. துறவிகளுக்குக் கதியாக காண்பதுவும் ப்ரணவமே. அந்த ப்ரணவ நாதமே ஸம்ஸாரிகளுக்கு ஸப்த ஸ்வரமாக ஸஞ்சரித்து மூர்ச்சனைகள் ஆலாபங்கள் மூலம்பெருகி, மனதிற்கும் புத்திக்கும் இன்பத்தை அளிக்கும் போக்ய (அனுபவிக்கப்படும்) வஸ்துவுமாகும்.

ராகம் எனும் அமிர்த ரஸத்தில் மூழ்கித் திளைப்பவன் ஸம்ஸாரியாயினும் யாகம், யோகம், தியாகம் இவைகளை அனுஷ்டித்தவர்கள் பெறும் பயனை அடைகிருன். தன்னை மறந்து நாத உபாஸனையில், ஓங்காரத்தில் இன்புறுகிருன் என்பதால் ஜீவன் முக்தனின் நிலையை அடைகிருனென்ருர்.

விதை விதைக்காவிடில் அவை பயன் தருமா ?

அழகர் எழுவர்.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ, ஸ்ரீ T.S. பாலகிருஷ்ண சாஸ்திரி.

உயர்ந்த சாஸ்திரீய ஸங்கீதத்தைக் கேட்கிறபொழுது, ஸங்கீத தேவதையே நேரே பிரத்யக்ஷமானது போன்ற ஒரு தெய்வீக உணர்ச்சி ஏற்படுகிறது. அதுவும் "நிபத்த ஸங்கீதம்" என்ற முறையில் ஸப்த ஸ்வரங்களை "கிராமம்" என்ற வழியில் வாதி, ஸம்வாதி ஸ்வரங்களுடன் கூட்டி, கமகங்களுடனும் பாவ பூர்த்தியுடனும் இசைப்பவர்கள் மூலம் ஒவ்வொரு ராகமும் தனித்தனி வடிவத்துடன் பேரெழில் பெற்று காட்சியளிக்கும் அனுபவம், அந்த கானத்தில் லயித்து விட்டவர்களுக்குச் சொந்தமானது. "தோடி எதிரே நிற்கிறது," "கல்யாணி கொஞ்சுகிறது" "காம்போதி கம்பீர நடைபோட்டது." "பைரவி பரவசப்படுத்தியது" "மோகனம் மயக்கியது," என்று சொல்லுபவர்கள் வெறும் உவமைக்காகச் சொல்லுவதல்ல; அவை ஆழ்ந்த ரஸானுபவமே. பல ஸ்வரங்கள் சேர்ந்து ஒரு ராகம் ஆகிறது. ராகத்திற்கு அழகானவடிவம் என்பது மட்டுமல்ல, ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகிய தேவதை. அவர்களை முறைப்படி ஸேவிப்பதே ஸங்கீதமாகும் என்று ஸத்குரு ஸ்ரீ ஸ்வாமிகள் தான் பெற்ற 'ஸ்வரார்ணவம்' என்ற கிரந்தத்திலிருந்து இந்த உபாஸனுமார்க்கத்தைத் தெளிவு படுத்துகிறுர்.

ராகம்–ஜகன் மோகினி.] பல்லவி. [தாளம் – ஆதி.

சோபில்லு ஸப்த ஸ்வர
ஸுந்தருலை பஜிம்பவே மனஸா — (சோ)

அனுபல்லவி.

நாபி ஹ்ருத் கண்ட ரஸன
நாஸாது லயந்து — (சோ)

சரணம்.

தர ரிக் ஸாமாது லலோ வர
காயத்ரி ஹ்ருதயமுன
ஸுரபூஸுர மானஸமுன
சுப தியாக ராஜாதுலலோ — (சோ)

பொருள்:

நன்றாக ப்ரகாசிக்கும் ஏழு ஸ்வரங்கள் என்ற சுந்தரர்களை பஜிப்பாய், மனமே.

நாபி, ஹ்ருதயம், கழுத்து, நாக்கு, மூக்கு இவைகளிலிருந்து விளங்கும் (அழகர்கள் அவர்கள்).

கர்ப்பம் பாதியில் கரைந்துவிடும்

ரிக்வேதத்திலும், ஸாமவேதத்திலும், காயத்ரீ மந்த்ரத்திலும் ஹ்ருதய ஸ்தானமானவர்கள். தேவர்கள், பிராம்மணர்கள் இவர்களின் மனத்திலும், அருள் பெற்ற இந்த தியாகராஜன் போன்றவர்களிடம் விளங்குபவர்கள் அந்த ஸுந்தர தேவதைகள்.

கருத்துரை :

ஸ்வரங்கள் ஏழு, அதில் ஷட்ஜம் சுருதியை ஒட்டி ஸ்தாயியைப் பெறுகிறது. ஆதார ஷட்ஜத்திலிருந்து உண்டாகும், ரிஷபம், காந்தாரம், மத்யமம், தைவதம், நிஷாதம் என்று ஐந்து ஸ்வரங்களும், தேகத்தின் முன்பு சொன்ன இடங்களிலிருந்து உண்டாகின்றன. பஞ்சமம் என்று ஷட்ஜத்திலிருந்து ஐந்தாவது ஸ்தானமும், ஷட்ஜமும், மந்தர, மத்திம, தாரஸ்தாயிகளில் நாபி, ஹ்ருதயம், கண்டம், சிரஸ் என்ற இடங்களைத் தொட்டு வெளிப்படுகின்றன. 'அ' கார, 'உ'கார, 'ம'காரமான ப்ரணவ சப்தமே, ரிக்வேதத்திலும், ஸாமவேதத்திலும், காயத்ரீ மஹாமந்திரத்திலும் அமைந்த மூல வித்தாகும். அதுவே ஹ்ருதய ஸ்தானமும் ஆகும். அந்த ஹ்ருதய ஸ்தானமே, ஸப்த ஸ்வரங்களுக்கும் உத்பத்தியும், வியாபகஸ்தானமுமாகும். ஆதலின் இந்த ஏழு சுந்தர ரூபர்கள் ப்ரணவத்தின் சிறு சிறு வடிவங்களே. இவைகளைச் சிதைக்காமல், குலைக்காமல் பாடிப் பயனடைவாய்.

* * * * ——— * * * *

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகள் அவர்களின் வர்தந்தி-ஜனன தின விழாவும் அவர்கள் பெயரால் ஏற்பட்ட வேத பாடசாலையின் ஆண்டு விழாவும் சென்னை அண்ணாமலை புரத்தில் 7—11—61 மாலை சீவ் ஜட்ஜ் தலைமையில் மிக அழகாகக் கொண்டாடப்பட்டது. காலையில் ருத்ர ஏகாதசினியும், மாலையில் பல பண்டிதர்களின் உபன்யாஸங்களும் நடந்தன. ஸ்ரீ வைத்தியசுப்ரமண்ய அய்யரின் தொண்டு மிகக் கொண்டாடத்தக்கது.

நல்ல தசையில் இறக்க நேரிடும்.

நல்ல பிழைப்பு.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாச, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்திரி

இப்பொழுதெல்லாம் நமக்கு உலகத்தில் நடக்கும் எந்த வியவகாரங்களேயும் எளிதில் விரைவில் தெரிந்து கொள்ளமுடிகிறது. பல நூறு மைல்களுக்கு அப்பால் நடக்கும் ஒவ்வொரு சம்பவமும், சில மணி நேரங்களுக்குள் நம்முடைய காதுக்கு எட்டிவிடுகிறது. தந்தி, டெலிவிஷன், ரேடியோ, பத்திரிகை, டெலிபோன் முதலியன செய்யும் உபகாரங்கள் இவை. அடுத்த தெருவில் நடக்கும் விஷயமும் பத்திரிகை வாயிலாகப் படிக்கும் பொழுது நம்பிக்கை பிறக்கிறது. அதனுல் உலக ஞானம், பொது அறிவு அவசியம் என்று பள்ளிக்கூடங்களிலும், அதையே அவசியமாகப் போதிக்கிருர்கள். நூறுவருஷங்களுக்கு முன்பெல்லாம், இவ்வளவு வேகம் ஏற்பட்டதாக தெரியவில்லே. நாட்டு நடப்பு, அரசியல் போன்ற துறைகளில் எல்லோருக்கும் இப்பொழுதுள்ள ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லே. 'ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன?' என்ற மனப்பான்மை அப்பொழுது அதிகம் இருந்திருக்கலாமோ என்னவோ, இப்பொழுது ஆட்சிமுறை வழிகள் ஒவ்வொரு வீட்டிலும் நன்ருகத் தெரிந்திருக்கிறது. ஆனுல் எது நன்மை நிறைந்தது? எது கொண்டாடத் தக்கது? எது பின்பற்ற வேண்டியது? என்று எத்தனே பேர் அதன் ரஹஸ்யத்தை உண்மையுடன் அறிந்திருப்பார்களோ நாம் அறியோம்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் வாழ்ந்துவந்த காலத்தில், உலகத்தின் பொது இயல் அறிவு அவ்வளவு வேகமாக எல்லோருக்கும் எட்டும்படியில்லே. அவரவர்கள் தங்கள் பிழைப்புண்டு, தாங்கள் உண்டு என்று இருப்பவர்கள். ஈச்வர பக்தி, அநுஷ்டானம், ஸ்வதர்மத்திற்குகந்த வித்யா

அப்யாஸம் இவைகளிலேயே பொழுது சரியாகப் போய் விடும். பணம் சம்பாதிப்பது, பெரும் வசதிகளுடன் வாழ வழி தேடுவது. இவைகள் அதிகம் இல்லாத காலம் ஆனால் ஸ்ரீ ஸ்வாமிகளோ தனக்கு உலக ஞானம் உண்டு. எல்லாரஹஸ்யங்களும் தனக்குத்தெரிந்திருக்கிறது என்று பெருமைப் படுகிறார். அவர் அதை எப்படிப் பெற்றார் என்பதைக் கீழ்க்கண்ட கீர்த்தனம் தெரிவிக்கிறது.

ராகம்-நாயகி] பல்லவி [தாளம்-ஜம்பை

தயலேனி ப்ரது கேமி
தாசரதீ ராம – நீ— (தய)

அனுபல்லவி

வயஸு நூறைன ஈ
வஸுதனே லின கானி— (தய)

சரணம்

ராஜாதி ராஜ ரதிராஜ சதலாவண்ய
பூஜ ஜபமுலவேள பொந்துகா நெதுட
ராஜில்லி லோகாந்தரங்க மர்மமு தெலிபி
ராஜிலேயனி தியாகராஜ ஸன்னுத நீது— (தய)

பொருள்:—

பல்லவி: ஹே தாசரதீ ராம, உன்னுடைய தயவு பெறாத வாழ்க்கை என்ன பயன் உள்ளது ?

அனுபல்லவி: நூறு வயது இந்த உலகில் ஆண்டு (அனுபவித்தாலும்)—ராம உன்னுடைய தயவு இல்லாத வாழ்வு என்ன வாழ்வு !

சரணம்: ராஜர்களுக்கு ராஜனே, ரதி ராஜனை மன்மதனின் நூறுபங்கு அழகுள்ளவனே ! ராமா ! நான் செய்யும் பூஜாகாலத்தின் பொழுதும், நான் உன்னை ஜபித்திருக்கும் வேளைகளிலும், அழகாக என்னெதிரில்

வந்து பிரகாசித்துக்கொண்டு, உலகத்தின் அந்தரங்கங்களேயும், அங்குள்ள மர்மங்களேயும் எனக்கு அப்பொழுதப்பொழுது சொல்லி என்னே ஆறுதல் அடையச் செய்கிறீர்கள். இந்த உம்முடைய தயவு கிடைக்காதவர்களின் ஜன்மம் என்ன பிரயோஜனமாம்?

கருத்து:—ராமபக்தியே தனக்கு எல்லாம் என்று ராம கைங்கர்யத்திலேயே, பூஜை, ஜபம், தியானம, கானமிவைகளிலேயேத் தன் வாழ்க்கையை நடத்திவரும் இந்த உத்தமரை, அந்த காலத்தில் சிலர் பரிஹஸித்தார்களாம். "இவனுக்கு என்ன தெரியும்? உலக நடவடிக்கைகள் என்ன கண்டான்? வெறும் பாட்டும், பஜனேயும் எப்பொழுது பார்த்தாலும் வைத்துக்கொண்டு, பிழைப்பை வீணுக்கிக்கொள்ளுகிருன்" என்று கடிந்துகொண்டார்களாம். இந்த வார்த்தைகள் தன்காதில் விழவும், தனக்குத் தாயும் தந்தையுமான ஸ்ரீ ராமபிரானிடமே அதை முறையிட்டுக்கொண்டு, தனக்கு ஸ்ரீ ராமபிரான் செய்யும் உபகாரத்தை வேறு யாரும் அடையக்கூடியதில்லே. குருவாக வந்து, தத்துவோபதேசமும், நண்பனுக வந்து ஆறுதல் நிறைந்து அளவளாவுகிற முத்துமொழிகளும், தாயாக இருந்து தன் சரீரத்தையும், தந்தையாக இருந்து தன் குடும்பத்தையும் காத்து வருகிருன் என்றும் எண்ணி எண்ணி இது பெருதவர்களின் ஜன்மமே வீணுக்கின் ஜன்மம் என்றும் ஸமாதானம் அடைகிருர்.

ஈச்வர பக்தியும், ஈச்வர ஸேவா கைங்கர்யமுமே ஒருவனே எல்லாம் வல்லவனுக்கும் என்று இது மூலம் நிருபிக்கிருர்.

தான் செய்யும் பூஜைகளில் ஸ்ரீ ராமபிரான் நேரே அமர்ந்து ஏற்றுக் கொள்ளுவதுடன், தன்னுடன் ஸம்பாஷிக்கிறதாகவே சொல்லுகிருர். ஜபக் காலங்களில் இதே தோற்றம் தனக்குக் கிட்டுகிறதென்றும், தனக்கு

எதிரே தோன்றும் அந்த அழகை, நூறு மன்மத அழகுக்கு மேற்பட்டதென்றும், ஒரு சக்ரவர்த்தியின் திருக்கோலத்துடன் அமர்ந்து, விதம் விதமான போதனை களிடையே உலக ஞானத்தையும்; ஸகல லோகங் களின் தத்வ ரஹஸ்யங்களையும் வெளியிட்டு, ஜன்மம் எடுத்துப் பிரிந்து தவிக்கும் தன்னை ஆறுதல் சொல்லி, இகம் பரம் இரண்டும் எளிதில் அறிவிக்கிறார் என்று பெருமைகொள்ளுகிறார்.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் செய்யும் பூஜைகள் திரவ் யத்தில் அளவுகொண்டு இருந்தாலும், மனஸால் அளவு கடந்தது. ஜபத்திலோ, வேறு நினைவில்லாத ஏகாக்ர சிந்தை நிறைந்தது. அதனால், ஸ்ரீ ராம தரிசனம், ஸல் லாபம் போன்ற ஸாரூப்ய, ஸாலோக பாக்யங்களைப் பெற்றவர் இவரே என்பதில் ஐயமேது ?

* * *   * *   * * *   * * *   * *   * * *

நூல் விமர்சனம். (196-ம் பக்கத் தொடர்ச்சி)

7. அக்நிஹோத்ர ப்ரயோகம்: முற்றிலும் நாகராக்ஷரம், 64 பக்கம், விலை 1 ரூ. L. சேஷாத்ரி, களஞ்சேரி, தஞ்சை ஜில்லா. மிராசுதாரரும் குரு பக்தரும் அக்நிஹோத்ரியும் யாகம் செய்தவர்களுக்கேற்பட்ட மறு உலகில் வஸிப்ப வருமான ராஜமய்யர் புத்ரர், தந்தை நியாபகார்த்தமாக வெளியிட்டது. பரம்பரை அக்நிஹோத்ரியும் நமது பத்ரிகை அபிமானியுமான பக்ஷிதீர்த்தம் ஸ்ரீ யக்ஞ சுப்ரமண்ய தீக்ஷிதர் ஸம்ப்ரதாயப்படி சோதநம் செய்திருக்கிறார்.

ஆண்டுவிழாவிற்கு நன்கொடை அளித்தவர்கள்.

			ரூ.
8-1-62	ஸ்ரீ	K. S. அனந்தநாராயணய்யர், நுங்கம்பாக்கம்	2
	,,	T. R. ராமமூர்த்தி ஐயர், சிதம்பரம்	2
	,,	K. B. S. மணியம், பாம்பே-22	1
16-1-62	,,	M. p. கிருஷ்ணன், மதராஸ்-1	1
22-1-62	,,	P.S. துரைசாமிஐயர், கோயம்புத்தூர்	1
5-2-62	,,	S. சுப்ரமண்ய ஐயர், கோடம்பாக்கம்	1

நாயகியின் விருப்பம்.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாச, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்திரி

நவரஸங்களில் அதிக இன்பம் அளிப்பது சிருங்கார ரஸம் என்பர். அது பக்தியுடன் பரமனிடத்திலே சேர்க்கப்பட்டால் பேரின்பம் அளிக்க வல்லது. இதை அறிந்து ஆழ்வார்கள் தங்களை பகவானுக்கு நாயகிகளாக எப்பொழுதும் ஆக்கிக்கொண்டு இடைவிடாத பக்திப்பெருக்கில் ஆழ்ந்திருந்தனர். அவ்வாறே மாணிக்கவாசகஸ்வாமிகளும், சிவபக்தியில் நாயகியின் ஸ்தானத்தில் தன்னை வைத்து, நாயகனை பரமேச்வரனை அழைத்துப் பாடி பரவச மடைந்தார்கள். ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகளின் கீத கோவிந்தம் என்ற கிரந்தத்தில் ராதா மாதவ கேளீ விலாஸம் என்ற சிருங்கார ரஸம் அபரிமிதமாக வழங்கப் பட்டுள்ளது.

நம்முடைய மதங்களில் மாத்திரம் அன்றி பிற மதங்களிலும் இந்த ரஸமும், பக்திபாவமும் நிரம்பக் காணக் கிடக்கின்றது. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் தம்முடைய கீர்த்தனங்களில் இந்த ரஸத்தை வெகு அளவாகக் காட்டி வந்திருக்கிறார். தன்னையே நாயகியாக வைத்துப் பேசும் பொழுது, ஸ்வபாவமாக ஏற்படும் ஸங்கோசம் முதலியவை அந்த கிருதிகளில் காணும் அளவுடன்கூடி ப்ரயோகங்களில் ஸங்கீதாம்சம் நிறைந்தும் விளங்குகின்றது.

கீழ்வரும் கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் தன்னை மறந்த பரவச நிலையில் ஸ்ரீ ராமனைத் தேடி அழைக்கிற பாவம் நன்கு விளங்கும். அந்த கிருதியை சாந்தமாக, பாவ பக்தியுடன் பாடுகிறவர்களுக்கு, அந்த சிருங்கார ரஸத்தில் பக்தியெனும் அம்ருத ரஸம் திகட்டாத இன்பம் அளிக்கக் காண்பார்கள்.

கோடியில் ஒருவரே அதை ஜயித்தவர்

ராகம்-ஹரிகாம்போதி] பல்லவி [தாளம்-ஆதி

த்சனி தோடி தேவே ஓ மனஸா

அனுபல்லவி

கனிகர முதோ கனி கரமிடி
சிரகாலமு ஸுகமனுபவிம்ப வேகமே— (த்ச)

சரணம்

பதிதுல ப்ரோசே பட்டாதி காரினி
பரமார்த்த மத வஸிஷ்டானு ஸாரினி
த்யுதி நிர்ஜித சத சம்பராரினி
துரீண த்யாகராஜ ஹ்ருச்சாரினி— (த்ச)

பொருள் :-

த்ஸனி	– சென்று
தோடி தேவே	– அழைத்துவா
ஓ மனஸா	– ஓ மனமே (மனத்தை இங்கு அந்தரங்க ஸகியாகப் பாவிக்கிறுர்)
கனிகரமுதோ கனி	– அன்புகனிந்து என்னைநோக்கி
கரமிடி	– என் கரத்தைப் பற்றி
சிரகாலமு ஸுக மனுப விம்ப	நீடூழிகாலமும் ஸுகத்தை அனுபவிக்க
வேகமே (த்சனி)	– வேகமே (சென்று அழைத்துவா)
பதிதுல ப்ரோசே	– பதிதர்களையும் (பாவிகளை) காப்பாற்றும்
பட்டாதி காரினி	– விருது பெற்றவரும்
பரமார்த்த மத	– பரமார்த்த தத்வங்களை (ஞான பாகத்தை)
வஸிஷ்டானு ஸாரினி	– வஸிஷ்டரை அனுஸரித்துக் கேட்டுக்கொண்டிருப்ப வருமான,

த்யுதி நிர்ஜித	— அழகால் ஜயித்த
சத சம்பராரினி	— நூறுமன்மதன்களைக் கொண்டவரும்
துரீண	— முக்கியம் பெற்றுவிட்ட
த்யாகராஜ ஹ்ருத் சாரினி	இந்த தியாகராஜனின் ஹ்ருதயத்தில் ஸஞ்சரிப்பவருமான (அவரை)அழைத்துவா.

நாயகனின் பெயர் சொல்ல வெட்கப்படும் பாவை போல, இந்த கீர்த்தனத்தில், 'ராமா' என்ற பதம் எங்கும் காணப்படவில்லை. இது அவருடைய கீர்த்தனங்களில் வெகு அபூர்வம்.

நாயகிக்கு வேண்டியது நாயகனின் அழகுறு வடிவம். அதில்தான் முதலில் மையல் பட்டிருப்பதைச் சொல்லுகிறார். நூற்றுக் கணக்கான மன்மதனுடைய ரூபங்கள் சேர்த்தாலும் இவர் அழகுக்கு ஈடாகுமா? அடுத்தது அவருடைய குணம். பதிதர்களையும் பாதுகாக்கும் பரந்த குணம். அடுத்தது அவருடைய தயவு. இவரோ பரமாத்மா. என்போன்றவர்களின் ஹ்ருதயத்தில் வசிக்கின்றவர். இவர் எதற்கு வஸிஷ்டரிடம் வேதாந்தம் கேட்க உட்கார்ந்திருக்கிறார்? இவரேதான் வேதாந்த ஸ்வரூபி ஆயிற்றே! ஏன் அங்கே வீண் பொழுது போக்குகிறார்? இங்கே என்னிடம் வரச்சொல். என் கையைப் பிடித்து, என்னைக் கனிவுடன் நோக்கி, என் இதயத்துள் நீங்காமல் இருந்து, எனக்குப் பிரும்மானந்த ஸுகத்தைக் கொடுக்கச் சொல். ஏ மனமே! நீயே துணைசெய். அந்த ராமனிடம் சென்று அவனிடத்தில் நின்று என் அந்தரங்கத்தை அடிக்கடி அவனிடத்தில் ஸ்துதி, ப்ரணமாதிகளால் தெரிவித்து, அவனுடைய கிருபை எனக்குக் கிட்டும்படிச் செய்து எனக்கு 'ஏகாக்ரம்' என்ற ஸம்யோகம் ஸித்திக்கும்படிச் செய்வாய்! சீக்கிரமாகச் செல்வாய்!

குளிர்காய அவகாசமின்றி மாள்கிறோம்.

நவரஸம்.

"அக்ஷயபாணி"

உங்கள் வாக்குகள்!

சில மாதங்களாக ஒரு சில வார்த்தைகள் நம் செவிகளிலே அடிக்கடி ஒலித்துக் கொண்டிருந்தன அல்லவா? "அபேக்ஷகர், வேட்பாளர், சின்னம், முத்திரை, ஆதரியுங்கள் ....' – இத்யாதி! மேலும், 'வோட்டுகள்' என்பதற்குப் பதில் 'வாக்குகள்' என்று சொல்லி மக்கள் சபைக்காக ஒன்றும், சட்டசபைக்காக ஒன்றுமாக நமக்கெல்லாம் இரண்டு வாக்குகள் உண்டு என்றும் பேசி வந்தோம்" தேர்தல் நிலவரமே தெரியாத, 'வோட்டு' என்பதே அறியாத ஒரு கர்நாடகப் பேர்வழியிடம் இதைப் போய் சொல்லிப்பாருங்கள்! திகைத்து நின்று விடுவார். "ஒரே வாக்கு, ஒரே பாணம், ஒரே பத்தினி என்று ஸ்ரீ ராகவன் தோற்றுவித்த லட்சியங்களெல்லாம் பறந்து விட்டனவா? இப்பொழுது ஒரு பேச்சு, மற்றொரு வேளை வேறொரு பேச்சு என்பனவெல்லாம் தீய குணங்களாயிற்றே! என்ன தைரியமாய், எனக்கு இரண்டுவாக்குகள் உண்டு என்கிறாய்?" என்று பொங்குவார்! என்ன சமாதானம் சொன்னாலும் அவரை வெல்ல முடியாது! நாம் 'ஜாமீன் தொகை' இழக்க வேண்டியது தான்!

பாம்பும் கழியும்!

'சத்தியம்' என்ற சொல்லுக்கு நம் நாட்டில் அத்தனை கௌரவம் உண்டு. 'பேச்சு மாறுவது' என்பதை மிகவும் கேவலமான குணக்கேடாக மதித்து வந்தவர்கள் நாம்! நாம் கொடுத்த வார்த்தைக்கு, ஸத்யஸ்வரூபியான தெய்வம் சாக்ஷியாக நிற்கும் என்ற பயமும் நம்பிக்கையும் அடிப்படையாக நின்று, நெறி பிசகாத வாழ்க்கையை உரமிட்டு வளர்த்தன; தப்பித்தவறி ஒருசொந்தலாபத்தை

சத்தைப் பொருக்கும் போதே குளிர்காய்

தன் எளிமை.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாச, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரி

தன்னிடமுள்ள குணத்தையோ தோஷத்தையோ அதிகமாக சொல்லிக் கொள்ளுவது உத்தமரின் கொள்கையாகாது. குணத்தை அதிகப்படுத்திஞல் தற்புகழ்ச்சியாகும். தன்னைக் குறைத்துக் கொண்டால் என்னவாகும்? பின் சொன்ன ஸ்வபாவம் சில பெரியோர்களிடத்திலும் காணப்படும். உண்மையில் அவர்கள் தங்களை அவ்வாறு நினைக்கிறவர்கள் அல்ல. ஒருக்கால் தமக்கு அகந்தை வராமல் தடுக்க, அடிக்கடி தன்னிடமுள்ள தோஷங்களை நினைத்து வருந்தியும், பிரரிடம் சொல்லியும் ஒரு பழக்கம் ஏற்படுத்தியிருப்பார்களோ என்னவோ? ஆனல் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் தன்னை மிகவும் குறைத்துக் குறைத்து ஸ்ரீ ராமனிடம் கதறுவதைக் காண நமக்குத் தாங்கவொண்ணுத துயரம் ஏற்படுகிறது. இதுவும் ஒரு ரஸமாகக் கொண்டுதான் சில சமயம் அனுபவிக்கிறோம்.

ஆஹிரி ராகம்] [மிச்ரசாபு தாளம்

பல்லவி

எடுல காபாடுதுவோ – ஸ்ரீ ராமசந்திர

அனுபல்லவி.

மடுமாய ஸம்ஸாரமந்து தகிலின நன்று — (எ)

சரணம்.

1 அனுதினமுனு தார தனய வர்க்காதுலபா
லனமுஸேயு கொரகு தனமுலுகலிகின
மனுஜுல பொகடி ஆர்ஜிஞ்சின வைகமுல ஜூசி
தனகு ஸரிலேதனி பிகுவுன திரிகின நன்னு — (எ)

இது ஶாக்த மதம் எனப்படும்.

2 காயஜ ஜனக நா ப்ராயமுலெல்லனு
மாயாபூரிதுலைன தாயாதுலசேத
ஸாயபரியந்தமு காய கிலேசமு ஜெந்த
நாயெனுகானி மௌனி த்யேய
நின்னுதெலிய லேனி நன்னு — (எ)

3 சதமனி பாந்தவுல ஜதனு நம்மி மதிகி
ஹிதவுலேக யோ பதிதபாவன ஸம்
ததமு த்யாகராஜஹித ஸுர நிகரபூ
ஜித நின்னே சரணு ஜொச்சிதி கானி நன்னுராமா.
— (எ)

பொருள் :

பல்லவி
அனுபல்லவி } மாயை நிறைந்த இந்த ஸம்ஸார மெனும் சுழலில் அகப்பட்டுக் கொண்ட என்னை ஸ்ரீ ராமசந்திரா! எப்படி நீ காப்பாற்றுவாயோ?

சரணம் :

1 தினமும் மனைவிமக்களைக் காப்பாற்ற பணம் படைத்தவர்களைத் துதித்து ஸம்பாதித்த தனத்தைப் பெற்றுக்கொண்டு, எனக்கு ஈடு யாருமில்லை என்று கர்வம் தலைக்கேறித் திரியும் என்னை எப்படிக் காப்பாற்றுவாயோ?

2 மன்மதனுக்குத் தந்தையான மஹா விஷ்ணுவே, என்னுடைய நாளெல்லாம், மாயைகள் நிரம்பின பந்து வர்க்கங்களால் (மாலை வரை அவர்களுக்காக உழைத்து உழைத்து) உடல் இளைத்துக் களைத்துப் போனதைத் தவிர, உன்னைக்கண்டு கொள்ளவில்லை. மௌனிகளால் ஆராதிக்கப்பட்டவனே! என்னை எப்படிக் காப்பாற்றுவாயோ?

3 பந்து வர்க்கங்களையே நிலையாக எண்ணி, புத்திக்கு ஆறுதல் (சாந்தி) இல்லாமல் கிடந்தேனே. அத்துடன்

வெள்ளி பௌர்ணமி ஸங்க்ரமணம் முதலியன

பதிதர்களைப் பாவனம் செய்யும், இந்த தியாக ராஜனுக்கு நலம் செய்கிறவனல்லவா, ஹே ராம சந்திரா! தேவர்களும் உன்னை பூஜிக்கிறார்கள். உன்னை எப்பொழுதும் தஞ்சமென்று அடைந்த என்னை எப்படிக் காப்பாற்றுவாயோ?

முன் சரணங்களில் சொன்ன தோஷங்கள் சிறிதளவும் தியாகராஜ ஸ்வாமிகளுடைய ஜீவிய சரித்திரத்திலே காணப்படவில்லை. தான் சொன்னவைக்கு நேர்மாறாக வாழ்க்கை நடத்தினவர் அவர். பணத்திற்கும் பதவிக்கும் வாழ்ந்தவர் அல்ல. தனிகர்களை துதிசெய்து பணம் பெற்றவரல்ல. அவருடைய குடும்பமோ சிறியது. மனைவி அருந்ததிக்கு நிகரான உத்தமி. அவருக்கோ பெண் ஒருவள் தான் இருந்தாள். பகவன் நாமாவைத் தவிர வேறு ஜீவனமும் கைக்கொண்டதில்லை. பந்துக்கள் ஸகோதரர்கள் அவருடைய உபாஸனையை கொஞ்ச காலம் தெரிந்து கொள்ளவில்லை என்றாலும், பிறகு உலகமே கொண்டாடும் இந்த உத்தமரை அவர்கள் தங்கள் குலதிலகமாகவே போற்றி வந்தார்கள்.

அப்படிக்கிருக்க ஏன் இப்படி வருந்துகிறார். தான் செய்யாததை நினைத்து உருகுவானேன்? உலகத்தார்க்கு உபதேசமா? அல்லது கவியின் கற்பனைப் பாடலா? உலகத்துக்கு நேரிடையாக உபதேசிப்பவரல்லவே? தன் மனஸையே அழைத்து அழைத்துப் பேசுவாரே அன்றி தனி உபதேசகராக எங்கும் அவருடைய வாய்மொழிகளில் காணவில்லையே, பின்பு ஏன் இப்படி துக்கப் படுகிறார்.

அதற்கு ஒரு சமாதானம் தோன்றுகிறது. அதை அவரே மற்றொரு கீர்த்தனத்தில் காட்டியிருக்கிறார்.

நவாவரண பூஜைக்கு மிக சிறப்பான நாட்கள்

அக்னிஹோத்ர க்ரஹதானம்.

அக்நி ஹோத்ரம் என்பது கார்ஹ பத்தியம், ஆஹவனீயம், தக்ஷிணுக்நி என்ற மூன்று அக்னிகளையும் காலே, மாலேகளில் உபாஸிப்பதாம். வேதம், அக்னிஹோத்ரம் யக்ஞம் முதலியவைகளை விளக்கவே வந்தது. அக்னிஹோத்ர வீட்டில் கங்கா, யமுனே, ஸரஸ்வதிகளும், ப்ரும்மா, விஷ்ணு, ருத்ரர்களும் ஸகல தேவருடன் தினந்தோறும் காலே மாலேகளில் வருவதாக சாஸ்த்ரம். அக்னிஹோத்ரத்தினுல்தான் மழை பொழிந்து நாடு சுபிக்ஷமாக வாழும்.

அத்தகைய நித்திய அக்னிஹோத்ரத்தை மேல மாம்பலத்தில் செய்வதற்கு பக்ஷிதீர்த்தம் பிரம்மஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் இசைந்திருக்கிருர். அவருக்கு 5800 ரூபாயில் ஒரு வீடு அமைத்து தாநம்செய்வதாக உத்தேசித்திருக்கிரேம், கிரஹதானமே சிறந்த புண்ணியம். அதிலும் அக்னிஹோத்ரிக்கு அக்னிஹோத்ரம் செய்ய ஒரு க்ரஹதானம் செய்வது கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்வதுபோல் ஆகும். நமது நோய்கள் அகலவும், ஸந்ததி முதலியவைகள் விருத்தியாகவும் இந்த தானம் சாதனமாம். வைகாசி 3ந் தேதி (16—5—62) ஷை கிரஹதானமும், வைகாசி 6 ந்தேதி (19—5—62) அக்நி ஆராதனமும், மறுநாள் இஷ்டியும் நடக்கின்றது. இந்த தர்மத்தில் முக்யமாக மஹா புண்ணியத்திற்கு இடம் தருகிறேன் என்று ஸந்தோஷத்துடன் நன்கொடை அளிப்பவர்

அக்நி ஹோத்ரம், குருகுலம், 2 ஸ்டேஷன்ரோடு, W. மாம்பலம், சென்னே 33 என்ற விலாஸத்திற்கு நன்கொடை அளிக்கலாம். நன்கொடை அளிப்போர் பெயர் நமது பத்ரிகையில் வரும்.

	ரூ.	ந. பை.
ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா, W. மாம்பலம்	250	00
ஸ்ரீ கே. ராமசந்திரய்யர், ஜுவல்லர், தி. நகர்	250	00

இதில் ந்யாசம் முத்திரை தந்திரம் அதிகம்.

இருக்கிறார்களே! எப்பொழுது வெளியே போய்விடுவோம் என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கும். இது உண்மையில் தனிமை ஆகாது.

एकाकी यतचित्तात्मा
निराशीर परिग्रहः

என்று கீதையில் பகவான் உபதேசித்த ஏகாகியின் நிலை வேறு. आत्मानम् रहसि स्थितः தன்னை யாரும் அறிய வொண்ணாது எல்லாவற்றையும் எப்பொழுதும் ஒடுக்கிக்கொண்டு, இன்ப ரஸத்தில் தியானித்து, அத்துடன் உலக வாழ்க்கை என்னும் யந்திரமும் ஓடிக்கொண்டிருக்கச் செய்கிறவன் யோகியாகிறான்.

இந்த யோகநிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்தவர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். ஸ்ரீ ராமபிரானுடைய திருவடி ஸேவையே அவர் வாழ்ந்த தனி உலகம். மற்றவருடன், இருந்தும், பேசியும், பாடியும், உபதேசித்து வந்தாலும், அவர் சித்தமெல்லாம், ஸ்ரீ ராமனிடமே நிரந்தர நித்யவாஸம் செய்தது. அதனால்தான் அவரை ஒரு ஜீவன் முக்தர் என்று பெரியோர்கள் போற்றுகின்றனர்.

இந்த ஒரு கீர்த்தனத்தில், தான் அடைந்த ஏகாந்த அனுபவத்தை நமக்கும் சிறிது காண அவர் இசைவழியாக வந்த வாய்மொழி உதவுகிறது. அந்த ஏகாந்த ரஸத்தை நாமும் சிறிது பருகலாம் வாருங்கள்.

ராகம்-தன்யாஸி] [தாளம்-ஆதி.

பல்லவி.

ராமாபிராமா மனஸு ரஞ்ஜில்ல பல்கக ராதா— (ரா)

அனுபல்லவி.

ஈமஹினி வெலஸின தேல ஸதா நாதோ— (ரா)

ஸத்பாத்திர தானமே சிறந்த பயனைத்தரும்

சரணம்.

பங்காரு மேடி பான்புபை பாமாமணி ஜானகி
ச்ருங்கா ரிஞ்சு கொனி செலுவொந்த நின்னு கனி
பொங்குசு மல்லே விருல பூஜிஞ்சு வேள ஸ்ரீஹரி
ஸங்கீதமு பாடுமனி ஸ்வாமி தியாக ராஜுநுதோ— (ரா)

ஹராமா, அபிராமா	–	ஹே ராம, எல்லோர் மனத்தையும் வசப்படுத்தும் அபிராமா!
மஹினி வெலஸின தேல		இந்த உலகத்தில் அவதரித்தது எதற்காக?
தா நாதோ	–	எப்பொழுதும் என்னிடத்தில்
ன ஸு ரஞ்ஜில்ல	–	மனம் களிக்கும்படி
ல்கக ராதா	–	சொல்லக்கூடாதா? (என்னைப் போன்றவர்களுக்காகத்தான் தாங்கள் இந்த உலகில் அவதரித்தீர்களல்லவா! 'ஆமாம்' என்று சொல்லுங்களேன்.) என்னிடத்தில் பேசமாட்டீர்களா? இதோ என் தாயார் ஜானகி வருகிருள்!)
ங்காரு மேடி பான்புபை		தங்கத்தால் ஆன மஞ்சத்தில்
ாமாமணி ஜானகி	–	பெண்களின் திலகமான ஜானகி தேவி
ருங்காரிஞ்சு கொனி	–	தன்னை அலக்கரித்துக்கொண்டு
சலுவொந்து	–	மிகுந்த ப்ரகாசமுடன்
ஹரி நின்னுகனி	–	ஸ்ரீ ஹரியான தங்களை தரிசித்து
பாங்குசுன்	–	உள்ளம் பொங்கி வரும் ப்ரேமையுடன்

நீங்கள் க்ருஹ தானத்திற்கு உதவினீர்களா?

மல்லே விருலு	– மல்லிகை மலர்களால்
பூஜிஞ்சு வேள	– அர்ச்சித்து பூஜிக்கும் வேளையில் (தங்களிடம் ஒன்று சொல்லு கிறாள்)
ஸ்வாமி	– ஸ்ரீ ராமா
தியாகராஜுதோ	– இந்த தியாகராஜனிடம்
ஸங்கீதமு பாடுமு அனி	ஒரு பாட்டு பாடு என்று சொல்லக் கூடாதா ?

கருத்து :–ஸ்ரீராமபிரானை நிதமும் முறைப்படி பூஜை செய்து வருகிறவர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். புஷ்பார்ச்சனை நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் அவர் உள்ளம் தனித்து ஸ்ரீ ராமமூர்த்தியின் ஏகாந்த ஸன்னிதிக்குச் சென்றுவிட்டது. அங்கே அவர் கண்ட காக்ஷி இந்த கீர்த்தனம் மூலமாகத் தெரியவருகிறது.

"தங்கமயமான மஞ்சம், ஸ்வாமி ஸ்ரீ ராகவன் அதி ஸௌந்தர்யமுடன் வீற்றிருக்கிறார், தாயார் ஸீதாபிராட்டி மிக்க எழிலுடன் அங்கு வந்து மல்லிகை மலர்களால் அர்ச்சனை செய்கிறாள். நானும் அங்கு இருக்கிறேன். எழிலில் மயங்கிக் கிடந்த என்னைச் செயலில் ஈடுபடுத்தி, தனக்கு ஸேவை செய்யத் தூண்டுகிறாள் தாயார். என் கானமே அவருக்குகந்த ஏகாந்த ஸேவை."

* * *   * * *   * * *   * * *   * * *

அரிய கும்பாபிஷேகம்.

ஸ்ரீ V. ஸ்வாமிநாதய்யர், ரயில்வே உத்யோகஸ்தர், சென்னை. பெரம்பூருக்கருகே தன் பொருளைக்கொண்டு, சுந்தரராஜப்பெருமாள் கோவிலில் விஜய ஆஞ்ஜநேய ப்ரதிஷ்டையுடன் கும்பாபிஷேகம் செய்வித்தார். அரிய பல உபன்யாஸங்கள் நடந்தன.

மறவாமல் உடனே அனுப்புங்கள்.

★ ஆத்மா ராம ஸேவை. ★

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி

ஸ்ரீராமசந்திர மூர்த்தியை பரமாத்மா என்ற பாவனை யில் கொண்டு ஈடுபடுகிறவர்கள் நித்ய முக்தர்களாகத் திகழ்கின்றனர். மற்றும் பலர் அந்த பரமாத்மாவை நமக்கு ஸகல அபீஷ்டங்களையும் பூர்த்திபண்ணிவைக்கும் ஓர் கற்பகத் தருவாகவும் நினைத்து வழிபடுகின்றனர். அவர்களும் அப்படியே அவைகளை அடைந்து இன்புறு கின்றனர். ஆனால் இந்த இரண்டிற்கும் இடையே, "தன்னை உலகம் மெச்சிக் கொண்டாடவேண்டும், தனக்கு நிறைய பொருள் கிடைக்கவேண்டும்" என்ற அற்ப ஆசையுடன் சிலர் ராம பக்தர்கள் போல் வேஷம்போட்டுத் திரிகின்றனரே! இவர்களுடைய பிழைப்பிற்கும் ராமனே உதவுகிறனா? ஸ்னானாதி கர்மாக்களும், பூஜையும், ஜப மும் ஒருவனுக்குச் சித்தத்தைச் சுத்தப்படுத்தவல்லவோ ஏற்பட்டது. அதில் அஹங்காரம் என்ற களை படராமல் இருக்கவல்லவோ தரும சாஸ்திரங்கள் இவைகளை விதித் திருக்கின்றன. அதற்கு மாறாக இந்த அஹங்காரம் எனும் அழுக்கைச் சேர்த்துக்கொள்ளவே, இந்த நித்ய நைமித்திக கர்மாக்களை ஒருவன் செய்துகொண்டு போனால் இதைவிட பரிதாபம் வேறு உண்டோ?

இந்த பரிதாபத்தைக் கண்டு இரங்கி, தன் உள் ளத்தை ஸ்ரீ ராமனுடைய ஸந்நிதியில் முறையிடுகிறார் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். இந்த கீர்த்தனத்தின் ராக பாவமும், அது அமைந்துள்ள ஹம்ஸகதியும், அவருடைய தூய்மையான மனத்தை வெளிக் காட்டுகிறது.

ராகம்-கரஹரப்ரியா] பல்லவி. [தாளம்-ஆதி

நடசி நடசி ஜஹசே ரயோத்யா
நகரமு கானரே— (ந)

யாகம் செய்தவர் யஜமானன் எனப்படுவார்

அனுபல்லவி.

புடமி ஸுத ஸஹாயுடை செலங்கே
பூர்ணுனி ஆத்மா ராமுனி கூடியாட— (ந)

சரணம்.

அட்டெ கனுல கூர்ச்சி தெரசி ஸூத்ரமு
பட்டி வெலிகி வேஷ தாருலை
புட்டு சாவு லேனி தாவு தெலியக
பொகடேரு த்யாக ராஜநு துனி— (ந)

கருத்து :

பல்லவி:-முயன்று முயன்று பார்த்தாலும் அயோத்யா நகரத்தைக் காணமாட்டார்கள்.

அனுபல்லவி:-பூமியின் பெண்ணுன ஸீதா ஸமேதனுகத் திகழும் பரிபூர்ண ஸ்வரூபனுன, ஆத்மாநந்த மளிக்கும் ஸ்ரீ ராமனுடன் கலந்து கொண்டாட (முயன்று ....காணமாட்டார்கள்).

சரணம்:-அப்படியே கண்களை முடிக்கொண்டும், திறந்து கொண்டும், கையில் ஜபமாலை வைத்துக்கொண்டும், வெளி வேஷம் போட்டுக்கொண்டும், பிறப்பு-இறப்பு இவைகள் நீங்கின முக்தி மார்க்கத்தை அறியாமல் (ஏதேதோ) பேசிக்கொண்டும், இந்த தியாகராஜன் அறிந்து அனுபவிக்கும் என் ராமனை (முயன்று .... காணமாட்டார்கள்).

தார்மிகச் செய்திகள்.

● 14—8—62 இளையாத்தங்குடியில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளுக்கு நமதாசிரியர் நடத்தும் வார்ஷிகபிக்ஷை.

● இளையாத்தங்குடியில் வேதபாஷ்ய பரீக்ஷைகள் 20ௗ முதல் 28-8-62 வரையில் நடக்கிறது

● நமது சிஷ்யரான டாக்டர் அகஸ்திய சர்மா துறவியானுர்.

யஜமானன் தக்ஷிணை தந்து 4 ருத்துக்களை அமர்த்துவார்

மனதிற்கு உபதேசம்.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி

நமக்கு அந்தரங்கமான நண்பன் நம்முடைய மனமல்லவா? இது வைத்துக் கொண்டிருக்கிற நம்முடைய ரஹஸ்யங்களும் மர்மங்களும் வேறு எங்கும் அறிந்து கொள்ளமுடியுமா? மனத்திற்குள் மாசிலன் ஆதல் அனைத்தே அறம் என்ற போதனை இத்தனை ரஹஸ்யங்களையும் வைத்துக் கொண்டு திண்டாடும் மனத்திற்கு எப்படி எட்டும்? பிறர் பொருளைக் கொஞ்சம் நாட்கள் வைத்திருப்பவன் அதைச் சிறிதாவது அனுபவிக்க நினைக்காதிருப்பானு? இத்தனை எண்ணங்களையும் தேக்கி வைத்துக் கொண்டிருக்க இந்த மனமானது, கொஞ்சமாவது செயல் படுத்த ஆசைப்பட்டு அலைந்து கொண்டிருக்கிறது.

" இவ்வளவு மர்மங்களைத் தெரிந்து கொண்ட என் மனமே! உனக்கு இன்னொரு அதிசயம் சொல்லுகிறேன், அதையும் வாங்கிப் போட்டுக் கொள். இந்த அதிசய மர்மம் என்றாவது ஒரு நாள் உனக்கு உபயோகமாக இருக்கும். உன் வீண் அலைச்சலையாவது தவிர்க்கும் " என்று ஸ்ரீ ஸ்வாமிகள் இந்த நளினகாந்தி ராக கீர்த்தனையில் சொல்லிக்கொள்ளுகிறார்.

ராகம்–நளினகாந்தி] பல்லவி. [தாளம்–ஆதி

மனவியால கிம்ப ராதடே
மர்மமெல்ல தெல்பெ தனே மனஸா— (ம)

அனுபல்லவி.

கனுடைன ராம சந்த் ருனி
கருணாந்தரங் கமு தெலிஸின நா— (ம)

ஸ்வந்த என்பது மாறி சொந்தமாயிற்று

சரணம்.

கர்மகாண்ட மதா க்ருஷ்டுலை பவ
கஹன சாருலை காஸி ஜெந்தக
கனி மானவ அவதா ருடை
கனிபிஞ்சி நாடே நடத தியாக ராஜுநு— (ம)

பொருள்:—

மனஸா — ஏ மனமே,
மனவி — என் வேண்டுகோளை
ஆலகிம்பராது அடே — கேட்கக் கூடாதாடா ?
மர்ம மெல்ல — என் மர்மங்களை எல்லாம்
தெல்பெதனே — தெரிவிக்கிறேனே
கனுடைன — பெருமைகள் நிறைந்த
ராம சந்த்ருனீ — ராமசந்த்ரமூர்த்தியினுடைய
கருணாந்தரங்கமு — கருணை நிறைந்த அந்தரங்கத்தைப் (பெற்றிருக்கிற)
தெலிஸின — அறிந்திருக்கிற
நா மனவி ஆலகிம்பராது — என் வேண்டுகோளைக் கேட்கக் கூடாதா ?
கர்ம காண்ட மத — கரும காண்டத்தில் காட்டின வழிகளை
ஆக்ருஷ்டுலை — பற்றியவர்களையும்
பவ கஹன — ஸம்ஸாரம் எனும் காட்டில்
சாருலை — திரிந்து திரிந்து அலைகிறவர் [களையும்
கனி — கண்ணுேக்கி
மானவ அவதாருடை — மனிதனுக அவதரித்து
கனிபிஞ்சி நாடே — நடத்திக் காட்டினுனே.

கருத்து:—கருமாக்களை அனுஷ்டித்து வருகிற இந்த ஸம்ஸாரிகள் தாபம் அடைந்தால், அவர்கள் அதனின்று மீளலாம் என்று ஸ்ரீ ராமாவதாரத்தில் தானே நடத்திக் காட்டியுள்ளான். இதை மனமே, தெரிந்துகொண்டால் உனக்கு யாதொரு கவலையும் ஏற்படாது.

முடிவில் நல்ல பலனைத்தருவதே ஸ்வந்தம்

ரத்னமாலே.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்களைப் பாடுவது எக்காலத்திலும் எல்லாத் தன்மையினருக்கும் அருள் பாலிக்கக் கூடியவை. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைத் தினமும் பாராயணம் செய்பவர்களுக்கு என்னென்ன மஹிமைகள் பலன்கள் சொல்லியிருக்கின்றனரோ, அத்தனை மஹிமையும் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய கீர்த்தனங்களுக்குமுண்டு என்பது அனுபவ வாக்கியம். ஸ்ரீ ஸ்வாமிகளை வால்மீகியின் கலியுக அவதாரம் என்பர். அவருடைய கீர்த்தனங்கள் ஸ்ரீ ராம குண வர்ணனம் என்றும், ஸ்ரீமத் ராமாயணத்தை பக்தியையே ஸாரமாகக் கொண்டு பாடியுள்ளார் என்றும் சொல்லுவர். அதற்கு உகந்த காரணம் அவரே தெரிவிக்கிறார்.

ராகம்–ரீதி கௌளை] [தாளம்–ரூபகம்.

பல்லவி.

ராக ரத்ன மாலிக சே ரஞ்ஜில்லு நட ஹரி சத— (ராக)

அனுபல்லவி.

பாக ஸேவிஞ்சி ஸகல பாக்ய மந்துதாமு ராரே— (ராக)

சரணம்.

நைகம ஷட் சாஸ்த்ர புராணுகமார்த்த ஸஹிதமட
யோகி வருலு ஆனந்தமு நொந்தே ஸன்மார்க்கமட
பாகவ தோத்தமுலு கூடி பாடே கீர்த்தனமுலட
த்யாகராஜு கடதேர தாரகமனி சேஸின சத— (ராக)

ஸினிமா பாட்டுகளைப் பாடாதீர்கள்

பொருள் :—

பல்லவி : நூற்றுக் கணக்கான உத்தம ராகங்களைத் தேர்ந்தெடுத்து, அவைகளை வரிசை வரிசையாக உயர்ந்த பக்திமயமான ஸாஹித்யங்கள் என்ற நூலிழையில் மாலையாகத் தொடுத்து, பகவானுக்கு சாத்தி மகிழ்ந்தேன். அந்த பகவானும் ஸந்தோஷப்படுவாரன்றோ!

அனுபல்லவி : ராகத்தால் தொடுத்த பக்தி மாலையை அணிந்து கொண்டு பகவான் எவ்வளவு அழகாக ஸேவை சாதிக்கிறார். அதைக் கண் குளிரக் காண்போம். நாம் விரும்பும் ஸகல பாக்யங்களையும் அடைவோம் வாருங்கள்.

சரணம் : நான்கு வேதம், ஆறு சாஸ்த்ரங்கள், பதினெட்டு புராணங்கள், ஆகமங்கள் இவைகளில் காணாத அதிசயம், நீர்காட்டும் பகவத்ஸேவை என்பீரோ,

2 யோகிகள் காணும் ஆத்மானந்தமாகுமா நீர் சொல்லும் இந்தக் காட்சி அனுபவம் என்பீரோ.

3 பாகவதோத்தமர்கள் ஒருங்கு சேர்ந்து ஒரே மாதிரிப் பாடிப் பரவசமடையும் பகவன் நாம ஸங்கீர்த்தனத்துக்கு ஈடாகுமா என்பீரோ.

4 இதனால் உமக்கு வேண்டுமானால் ஸத்கதி ஏற்படலாம். மற்றவர்களை எப்படிப் பாதுகாக்கும் என்பீரோ.

இப்படித் தாமே ஒரு கேள்வியைப் பிறப்பித்துக் கொண்டு அதற்கு கேள்வியிலேயே ஸமாதானத்தையும் காட்டினார். சரணத்தின் ஒவ்வொரு அடிகளிலும் கேட்ட கேள்விகளுக்கு 'ஆமாம்' என்ற பதிலைச் சேர்த்துக் கொண்டு, பல்லவியின் அர்த்தத்துடன் பாருங்கள். பதில் கிடைக்கிறது. அது உறுதியுள்ள பதில். இது ஒன்றே வழி என்றும், ஈடு சொல்லமுடியாத வழி என்றும் தன் அனுபவத்தாலே, தாம் பெற்ற அனுபூதியின் சிறப்பாலே சந்தேகம் தெளியப் பேசுகிறார்.

மஹா காவ்யங்களில் ஆரம்பத்தில் மங்களா சரண மும், முடிவில் ஸமர்ப்பணமும் காணப்படுகிறது. அது போல் ஸ்ரீ ஸ்வாமிகள் தன்னுடைய நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை ஒரு மஹா சங்கீத ஸாஹித்ய, காவியமாக செய்தால், அதற்கு மங்களாசரணமும், ஸமர்ப்பணமும் இந்த கீர்த்தனமே அமையும். பலச்ருதியும் இதுவே.

கருத்து :— நான் ராமனைக் கண்ணாரக் கண்டு ஸேவித்த பாக்யவான். ஸ்ரீ ராமனுடன் தினமும் ஸம்பா ஷிக்கக் கொடுத்து வைத்தவன். நான் பேசும் பேச்சும், அந்த ரஸிக பிரபு அனுபவிக்கும் இந்தக் குழந்தையின் மழலையாகிற கானரஸம். என் ஒவ்வொரு அக்ஷரமும், சப்தமும், அசைவும், கதியும், கமகமும், அதில் உள்ள என் ஹ்ருதயப் பெருக்கின் பேரலைகள் என்ற பக்தி பாவமும், ஒவ்வொன்றும் ஸ்ரீ ராமபிரான் அங்கீகாரம் பெற்றது. 'தியாகராஜனுத' என்ற முத்திரை என் னுடையதல்ல. ஸ்ரீ ராம ஹ்ருதயவாஸியான என் முத்திரை என் ஹ்ருதய கமலவாஸனுகவும், என் ஸர்வ ஸ்வமும் கொண்ட ஸ்ரீ ராமபிரானுடைய முத்திரையே யாகும். உங்கள் அனைவரையும் காக்கும் ரக்ஷாபந்தன, தீக்ஷா நியமன முத்திரையாகும்.

என்னைக் கருவியாக்கித் தானே பேசிக் கொண்ட அந்த அயோத்யாபதியின் வாக்கில், வேத சாஸ்திரமும் புராணமும் ஆகமங்களும் பிரகாசியாமல் போகுமோ? யோகிகளை நடத்திச் செல்லும் தீப ஜ்வாலையான அந்த பரமாத்மாவே தான் இந்த கீர்த்தனங்களிலும் திகழ்ந்து கொண்டிருக்கிருன். பகவன் நாம ஸங்கீர்த்தனம் செய் யும் பாகவதோத்தமர்களே! அந்த பக்த வத்ஸலனை பஜிக்க அவனே என் மூலம் திவ்ய நாம கீர்த்தனங் களை இயற்றி விட்டான். இன்னும் என்ன! இந்தப் பாமரனைக் காப்பாற்றி இவனுக்கு மேலான கதி

கோபிகா கீதத்தை அர்த்தத்துடன் பாடுக.

கொடுத்து விட்டானே, அதைவிட வேறு திருஷ்டாந்தம் தேவையோ !

[இப்படி, இந்த கீர்த்தனம் இவருடைய மற்ற எல்லா கீர்த்தனங்களுக்கும் தக்கதொரு சிறப்புப் பாயிரமாகவும் அமைகிறது. "எல்லாம் ராமமயம்" என்று வாழ்ந்தவரின் உபதேசம், ராம பிரானின் அருள் கனிந்த உபதேசமே ஆகும் என்பதாலே, இவருடைய கீர்த்தனங்கள் நித்யமும் எல்லோராலும் எல்லா சமயங்களிலும் பாடிப் பெரும் பயன் அடைய வேண்டுவதல்லவா !

* * * * * * * *

தார்மிகச் செய்திகள்.

தென்னிந்திய பஜனை ஸமாஜம், கல்கத்தா : ஆசார்யாள் உத்தரவுப்படி வீடு வீடாகச் சென்று $1\frac{1}{2}$ வருஷமாக வேதபாராயணம் செய்கிறது.

கார்த்திகை மண்டல வேதபாராயணம் : ஸ்ரீ நடராஜய்யர் விடாமுயற்சியால் மாம்பலத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

ஸ்ரீ சங்கர பக்தஜன சபை : ஸ்ரீ வெங்கடேசய்யர் நன் முயற்சியால் பிரதி பானுவாரமும் மாம்பலம், ஸ்ரீ ஆச்சார்யாள் மடத்தில் நமது ஆசிரியரைக் கொண்டு ஆசார்ய க்ரந்த உபன்பாஸம் நடக்கிறது.

காயத்ரீ நிலயம் : 15, மங்கேஷ் தெரு, T. நகர் சென்னை—17ல் ஸ்ரீ சந்த்ரு எனும் ஜோஸ்யர் மிக நன்குக ஜோஸ்யம் கூறுகிறார். நேரே எழுதவும்.

பஜனைஸபை, மாம்பலம்: குருவாரந்தோறும் வைதிகர் ஆசார்ய மடத்தில் பஜனை செய்து பல உபன்யாசங்களைச் செய்வித்து வித்வத் ஸன்மானம், வைகுண்ட ஏகாதசியில் அகண்ட பஜனை அகண்ட வேதபாராயணம் நடத்தி துவாதசியில் 108 பிராம்மண போஜனம் விதிப்படி செய்தனர்.

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷித ஜயந்தி ; அவர் அவதரித்த அடயபலத்தில் வேதபாராயணத்துடன் நடந்தது.

ஸர்வ தத்துவமும் உள்ள நூல் பஜ கோவிந்தம்

ராம பாணம்.

கைத்கதாம்ருத கலா நிதி, பாலவியாஸ, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி

ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் நினைவாகவே கடந்த இரண்டு மாதங்களும் சென்றன. ஸ்ரீ ராமபிரானின் திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தியானம் செய்பவருக்கு, அவர் கோதண்ட பாணியாகவே காட்சி யளிக்கிறார். கோதண்டமே அவருடைய தத்வம். ப்ரணவநாதமே கோதண்ட வடிவில் விளங்குகிறது. அதன் அனுபவ ரஸமே ஸ்ரீராமனின் திருவுருவம்.

ப்ரும்மாநந்த சைதன்யத்தில் ஒளிபெறும் இவ்வுலகும், உயிரும் எல்லாப் பொருளும் இந்த நாத நிறைவில் சுவைபட அமைந்து கிடக்கிறது. அக் கோதண்ட ஒலியில் எதிரிட்டு அடங்கியவர்களும், எதிர்படாமல் மயங்கி வீழ்ந்தவர்களும், அதைக் கண்ணுற்று, அதன் மூல புருஷனுடன் கலந்து களித்தவர்களும் சொல்லும் அனுபவமே ராம கதையாகும்.

கரந்தனில் வில்லேந்தி பாணங்களைத் தொடுத்து சமர் புரியும் ஒரு வீரனுக்கு இவ்வளவு மஹிமையா? வில்லேற்ற வீரர்கள் அன்றும், பின்பும் இருக்கவில்லையா? ஆண் வலியும், அரக்கர் வலியும் அடங்காத் தவவலிமையும் கொண்டவர்களை வென்றவன் என்றதனால் இவ்வளவு சிறப்பா?

கௌசிகரிடம் அஸ்திரங்களை உபதேசம் ஏற்றுக் கொண்டதும், அகஸ்தியரிடம் பெரு வில்லொன்றைப் பெற்றுக்கொண்டதுவும், மனித உருவில் வந்தவன் என்று காட்டியதாகலாம். அதே தணிந்த மனித வீரன், ஸீதையைக் காணாது கலங்கி. "லக்ஷ்மணா! ஸீதையை ஒளித்து என்னைப் பரிஹஸிக்கும் இந்த பஞ்சபூதங்களையும் உலகையும் சுட்டெரிப்பேன்" என்று சீறி எழுந்தது

செல்வத்தால் செறுக்கு கொள்ளாதே

எதைக் காட்டியது. ஏழு ஆச்சா மரங்களைத் துளைக்க ஒரு பாணமும். கற்பாறை போன்ற வாலியின் மார்பைப் பிளக்க ஒன்றும் போதியதாகியது. நன்றி மறந்த ஸுக்ரீவனையும் குரங்கினத்தையும் வேர்பரித்திட சினந்து அதைச் செய்யாமல் அந்த நினைவே ஒழிந்ததும், சமுத்ரனைத் தண்டித்து, ஜலத்தை வற்றச்செய்ய அம்பு தொடுத்து, அடைக்கலம் என்று வந்தவனுக்கு அன்பு காட்டியதும் எதனால்? பெருங் கடலென வந்த மூலபலத்திற்குத் தன் மூலபலமே சிறந்தது எனக்கொண்டு தனிப் பெரும் சமர்செய்தது எதைக் குறிப்பது? ராவணனைக் கொல்ல மனம் வல்லையோ, தன் ஆற்றலைத் தானே உணர ஓர் ஆதித்ய ஹ்ருதயம் தேவைப்பட்டதோ? மற்றவரால் தீண்டமுடியாத பரம சாம்பவனாகவும், பூர்வம் பரம வைஷ்ணவனாகவும் தன்னிடம் தவிர வேறு புகலிடம் இல்லை என்று தேடிவந்த தசமுகன் ராவணனைத் தேடிச் சென்று தொட்டுத் தொட்டு முளைக்கும் சிரங்களைத் தொடராமல் நிறுத்தி அவனை நற்பாலுக்கு உய்வித்ததும் எந்த பாணத்தின் வல்லமை யாகும்? நீக்கமின்றிப் பாய்ந்தோடும் பரமனின் அபார சக்தியின் கிருபா விலாஸமன்றோ!

இவ்வண்ணப் பேரதிசயத் திருவிளையாடல்களை மனத்துள் கொண்டு. நினைந்து நினைந்து நெக்குருகிப் பேசின வாகம்ருதமான இந்தக் கீர்த்தனையில் அமைந்த ராகபாவத்தில் ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகளின் பரவச அனுபவம் நன்கு தெரியவரும்.

ராகம்—கைகவசி] **பல்லவி** **[தாளம் – ஆதி.**

வாசாம கோசரமே மனஸா
வர்ணிம்ப தரமா ராம மஹிம **(வா)**

அனுபல்லவி.

ரேசாரி மாரீசுனி படக கொட்டி
ரெண்டோவானி சிகிகி ஒஸகனே **(வா)**

சரணம்.

மானவதி மதி எரிங்கி

சாமரமௌட காஸ்த்ரமு நேயகனி

மானம்புகை மெட தாஸக

மாதவுண்டு கனி கரகி வேகமே

தீனார்த்தி பஞ்ஜனுடை ப்ராண

தானம் பொஸகி முனு சனின

பாணம் புனடு செதர ஸேய லேதா

கானலோல தியாக ராஜநுத மஹிம (வா)

பல்லவி:-வாக்குக்கு எட்டாது மனமே. ராமனின் மஹிமையை வர்ணிக்க இயலாது.

அனுபல்லவி :- (ரேசாரி) இராத்திரியில் திரியும் ராக்ஷஸனான மாரீசனை விழ அடித்து (ரெண்டோ வானி) மற்றொருவனான ஸுபாஹுவை (சிகிகி) நெருப்பில் ஒஸகனே) இட்டதே.

சரணம் :- மானவதியான ஸீதா தேவியின் (மதி எரிங்கி) எண்ணமறிந்து (சாமர மௌட காஸ்த்ரமு நேய கனி) ப்ரும்மாஸ்திரத்தை ப்ரயோகம் செய்ய அதைக் கண்டு (மானம் புகை) பயந்து தன் அவச் செயலுக்காக வெட்கப்பட்டு (மெட தாஸக) சரணமடைய (மாதவுண்டு) மாதவனான தாங்கள் (கனி கரகிவேகமே) அதைக்கண்டு மனமிரங்கி வேகமாக தீனர்களின் ஆர்த்தியைப் போக்குபவராகி ப்ராண தானம் செய்து (முனு சனின) முன்பு எய்த அந்த மஹாஸ்த்ரத்தை (செதர ஸேய லேதா) சிதறடித்துவிட்டீர்கள் அல்லவா? அதாவது முன்பு ப்ரயோகம் செய்தது ப்ரும்மாஸ்த்ரம் ஆனாலும் அதன் சக்தியை வெகு அலட்சியமாக அடக்கி விட்டீர்கள். (கான லோல) இந்த இணையற்ற தங்கள் கீர்த்தி எப்பொழுதும்

இதைப் பின்பற்றுவது சிறிது கடினமே

பக்தர்களால் பாடப்படும். இந்த தியாகராஜன் அளவற்ற இந்த மஹிமையை எவ்வாறு சொல்ல இயலும்.

கருத்து :- இந்த கீர்த்தனையில் ஸ்ரீ ஸத்குரு, ஸ்ரீ ராமனின் அளவற்ற மஹிமையை வர்ணிக்க வந்தவர், ஸ்ரீ ராம பாணத்தின் தனிச்சிறப்பில் சிக்கி அங்கே நின்றுவிட்டார் போலும் !

அது சரி, சொல்ல நினைந்தது ராம பாணத்தின் தனிச் சிறப்பைத் தானே, ஆனால் 'பாணம்' என்ற பதமே எங்கும் காணுமே, ''வர்ணிம்ப தரமா ராம மஹிமா'' என்று மறுபடியும் ராம மஹிமை என்றே பாணத்தின் மஹிமையைச் சொல்லிவிட்டார். வாஸ்த்வம், அவர்தான் ''வாசாம கோசரம்'' என்று முன்பே தெரிவித்து விட்டாரே !

ஸ்ரீ ராம பாணத்தில் காணப்படும் நிக்ரஹானுக்ரஹ சக்தி இரண்டும் எப்பொழுதும் சேர்ந்தே ஸ்ரீ ராம மஹிமையை விளக்குவதாகும். சிக்ஷையே ரக்ஷை. ரக்ஷையே சிக்ஷிப்பதனால் என்று மாரீச விஷயத்தில் காட்டினார். மாரீசனை ஒரே பாணத்தால் அடித்து, அவனைத் திருத்தி, அவனை உயிருடன் விட்டு வைத்தார். ஸுபாஹுவுக்கு உடனே நற்கதி. உண்மை நெறி அறியாதவர்களை உய்விக்க, மாரீசனைக் கொண்டே உணர்த்திவிட்டார். ஒரே விதமான பாணத்தில் இருவிதமான சிக்ஷாரக்ஷை ப்ரயோகம். அடுத்துச் சொன்னது காகாஸுர வ்ருத்தாந்தம். இது யாவரும் அறிந்ததே. காக்கையின் மீது ப்ரும்மாஸ்த்ர ப்ரயோகம் பண்ணவேண்டுமென்றால், எத்துணை கோபம் உண்டாகியிருந்தது? அதனிடம் அடுத்த க்ஷணம், அதை அறவே மறந்து மனமிரக்கங்கொண்டு, காப்பாற்றி அருளியது. இது பாணத்தின் மஹிமையா, ராம மஹிமையா ?

ஸாது விளையாட்டாகக் கூறினாலும்

தியாகோபநிஷத்.

பற்றற்ற பக்தி.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி

விதிக்கு வணங்கிப் போகிறவன் ஸாது. விதியை மதியால் வெல்லலாம் என்ற பொன்மொழி ஒருவனுக்கு உளேயா முயற்சியைக் கடைப்பிடித்திருக்க ஏற்பட்டிருக்கும் நன்மொழியே. விதியையும், அதன் வலிமையையும், வினைப்பயனையும் கருதித் தன் குற்றத்தை நன்ருக உணர்ந்து, தன்னைத் திருத்திக்கொண்டு, பிறரைப்பற்றி அவதூறு பேசாமல், நல்லோர் துணையை எப்பொழுதும் நாடி நின்று, பகவானை என்றும் நினைந்து நினைந்து அவன் கிருபையையே தனக்குப் பெருஞ் செல்வமாக இசைந்து வாழ்பவர் உண்மையில் பெரும் தபோதனர்களாவார். ஸ்ரீ ஸத்குரு தியாகப்ரும்மம் அப்பேர்பட்ட ஸாதுக்களில் தலைசிறந்தவராவர். நம் காலத்தில் வாழ்ந்து, நமக்கு தைரியம் ஊட்டி, ராம பக்தியைப் பரவச் செய்தவர். அவருக்கு உலகில் தனி விருப்பம் எதுவும் இல்லை. மாசு இல்லா வாழ்வு வகுத்துக்கொண்டவர். எத்தனையோ தூர்த்தர்கள் நிறைந்த இந்த உலகத்தில் வாழ்வதனல், தன்னையும் அவர்களுடைய இயல்பில் சேர்த்துக்கொண்டு ஸ்ரீ ராமபிரானின் தயவுக்காக ஏங்குகிருர். தான் படும் துயரத்திற்கு தான் இன்ரோ, முற்பிறவியிலோ செய்த தவறுகள்தான் காரணம் என்று தன்னைத் தாழ்த்திப் பேசுகிருர். ரொம்பவும் அபிமானம் கொண்டவர்களிடம் அங்கலாய்க்கும் த்வனியில் கீழ்வரும் கீர்த்தனம் அமைந்திருக்கிறது. வராளி ராகத்தின் ஸ்வரூபம், ஸ்ரீ ஸ்வாமிகளின் ஹ்ருதயதாபம், ஸ்ரீ ராமபிரானின் ஸமீபத்தில் இருக்கும் ரக்ஷிக்கும் ஸுசீலம் இவைகள் சேர்ந்து இந்தக் கீர்த்தனத்தைப் பாடுபவர்களையும் பரவசப்படுத்தக்கூடியது.

நம் சொல் சரியா என பலமுறை யோசி

வராளி ராகம்] பல்லவி. [ஆதிதாளம்.

நோரேமி ஸ்ரீ ராம நின்னுட (நோ)

அனுபல்லவி.

ஸாரே ஸாரேகுனு பாப கர்மமுலு
ஸல்புசுநுண்டு நாவண்டி வானிகி (நோ)

சரணம்

பாபுலே குருவச்யுலுகாக
பண்ட்ளிகிலிந்த்ஸு
ஸுதருணுலகை ஸீதாபதி
நீ நிஜ பக்தியு தெலியனி
த்யாகராஜுனிகி யொருலகைன (நோ)

பொருள்:—

நோரேமி நின்னுட — வாய் ஏது உன்னைக் (குற்றம்) சொல்ல
ஸ்ரீ ராம — ஸ்ரீ ராமசந்த்ர
ஸாரே ஸாரேகுனு — அடிக்கடி
பாபகர்மமுலு — பாபகர்மாக்களை
ஸல்புசுனுண்டு — செய்துக்கொண்டிருக்கும்
நாவண்டி வானிகி — என்போன்றவர்களுக்கு (குற்றம் சொல்ல வாயேது)
பாபுலே — பாவிகளாகி
குரு அச்யுலுகாக — பெரியோர்களுக்குக் கீழ்ப்படியாமல்
ஸுதருணுலகை — யௌவன ஸ்த்ரீகளிடம்
பண்ட்ளிகிலிந்த்ஸு — பல்லை இளித்தவண்ணம்
ஸீதாபதி நீநிஜ — ஸீதாபதி உன்னிடம் உண்மை உள்ள

அடக்கத்துடன் நிதானமாக எதிரியை ஜயி

பக்தியு தெலியனி — பக்தியை தெரிந்துக் கொள்ளாமல்

த்யாகராஜுனிகி — இந்த தியாகராஜனுக்கும்

ஒருலகைன — மற்று (இவன் போன்றவர்களுக்கும்)

நோரேமி நின்னுட— உன்னைச்சொல்ல வாயேது.

ருத்து:—

ஸ்ரீராமன் என்னைக் காப்பாற்றவில்லை என்று உன்
ிடம் குறைப்பட்டுக் கொள்ளும் மனிதர்கள் எந்தவிதத்
ில் உன்னால் பாதுகாக்கத் தகுதி கொண்டவர்கள்.
ன்னை நினைப்பவர்கள், பொன்னையும் பெண்ணையும்
ண்டு பல்லைக்காட்டி நின்றானென்றால், உன்னைவிட
வர்களுக்கு இது வன்றோ மேற்பட்டதாகிறது. உண்
மயாக உன்னிடம் பக்தி கொண்டவன் வேறெதையும்
னைக்கக் கூடியவனு! உன்னை அடைவதே அவனுடைய
பரும் பிறவிப் பயனன்றோ? உலகையும், உலகின்
பாருள்களை வேண்டிக்கிடக்கிறவன் உன்னையும் சேர்த்து
வண்டிக் கொண்டால், அது உண்மையான பக்தி ஆகுமா!
ற்றில்லாத பக்தியே எனக்கு வேண்டும்! என்னை நீ
கவிட்டாலும் உன்னை நான் விடாமல் பற்றிக்கொள்ள
வண்டும். வேறு என்ன என்னால் சொல்லமுடியும்.

தார்மிகச் செய்திகள்.

லால்குடியில் வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன ஸபை
ழக்கப்படி மிக விமர்சையாக 24-5-63 முதல் 3-நாள்
டைபெற்றது.

ஸோமயாகம்: சேங்காலிபுரம் ஸ்ரீ நடராஜதீக்ஷிதரால்
துரையில் ராமேச்வர தேவஸ்தாந காலேஜில் 6-6-63
ுதல் 1 வாரம் நடைபெறும்.

அதிகமாகப் பேசாதே! வீண் வாதம் செய்யாதே

நூல் விமர்சனம்.

சாரீரக மீமாம்ஸா தர்சநம் காயத்ர யர்த்தம்: 14 பக்கம். முற்றிலும் ஸம்ஸ்கிருதம். உமயாள்புரம் ஸ்ரீ V. S. ராமநாத தீக்ஷிதர், ஆசிரியர். விலை 50 பைசா. P. G. பால் & கோ., சென்னை-1 கிடைக்குமிடம்.

நன்கு படித்து அநுஷ்டாநமுமுள்ள ஆசிரியர் காயத்ரியையும் வேதாந்தத்தையும் உபாஸிக்கும்படி எழுதி இருக்கிறார். உபநிஷத் பாஷ்யம் படித்தவர் இதனால் நல்ல பயன் பெறலாம்.

1. **ஸ்ரீ கிருஷ்ணோபதேசம்:** 32 பக்கம். தமிழ். 25 காசு. 16 விஷயம் பற்றிய கட்டுரை. ஸாரமானது. ரஸமானது.

2. **பக்தர்களின் சரிதம்;** 32 பக்கம். தமிழ். ஸ்ரீ சங்கர மத்வ ராமாநுஜ தேசிக சரிதம். மிகச் சுருக்கமானது. 25 காசு.

3. **ஸ்ரீ மகா பாரதம்:** 38 பக்கம். தமிழ். மிக மிகச் சுருக்கமானது. 25 காசு. 18 பர்வ கதையின் ஸாரஸங்க்ரஹம்.

4. **ஸ்ரீமத் ராமாயண ஸாரம்:** 24 பக்கம். தமிழ். விலை 25 காசு. முன்போலவே மிக மிகச் சுருக்கமானது. இந்நான்கும் காலஞ்சென்ற நே. ஈ. வெங்கடேச சர்மா இயற்றியது. 221, லிங்கசெட்டித் தெரு, மதுரை நூல் மன்றத்தில் கிடைக்கும். தபால் சார்ஜ் 4க்கும் சுமார் 17 பை. ஆகலாம். நம்மிடமில்லை. நமக்கு எழுதினால் வராது.

ஸ்வர்ண தானம் கோ தானம் செய்யாதவரே ஏழை

★ ★ ★

தப்ப வழி.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்திரி

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உலகத்திலே எல்லா காரியங்களும் காமினி, காஞ்சனம் என்ற இந்த இரண்டு ஆசைக்குள் அகப்பட்டுக்கொண்டிக்கிறது என்று அடிக்கடி சொல்வதுண்டு. இதை ஜயித்தவன் இந்தக் காலத்தில் மிகமிக துர்லபம். இதை வெற்றிக் கொண்டவனே உலகத்தை ஜயித்தவன். காஞ்சனம் என்ருல் பொன்ஞசையையும், காமினி என்ருல் பெண்ணுசையையும் குறிக்கும். பொன்ஞசை என்ருல் அதில் பதவி, புகழ், பணம், வீடு, வாசல், தன்னது, பிறனது என்ற எல்லா வேட்கையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். காமினி என்ருல் பெண்களிடம் காமுறுவது என்பது மாத்திரம் அல்ல. புத்தி மோகம், அதனுல் எழும் டம்பம், வெகுளி, மயக்கம், க்ரோதம், சிற்றின்பப் பித்து இவை யாவுமே இந்தக் கூட்டுறவில் பங்கு பெறுகிறவர்கள். நாம் வலையில் சிக்கிக்கொண்டிருக்கிருேமே என்ற எண்ணம் சிறிதுமே இல்லாமல் இஷ்டப்படி திரிந்துகொண்டிருப்பதே இன்றைய மேலான நாகரீகம். கூண்டில் அகப்பட்ட கிளி முதலில் பழம் தின்னுது. பழகப்பழக பிறகு எது கொடுத்தாலும் தின்று கொண்டிருக்கும். ஆனுலும் கூண்டுக் கதவு எப்பொழுது திறக்கப்படும்? எப்பொழுது பறந்தோடி வானவெளியில் விரும்பியபடி திரியலாம்? என்ற ஏக்கமே கொண்டிருக்கும். மஹான்கள் உலக பந்தம் அறிந்தவர்கள். ஆனுல் வாழ்வை வெறுத்துக்கொள்ளாதவர்கள். எல்லோரைப் போலவும் நடையிலும் உடையிலும் சாதாரணமாக வஸிப்பவர்கள்.

இன்னும் சிறிது பேசமாட்டாஞ?

ஆயினும் அவர்கள் சிந்தை எலாம் விடுதலையையே நாடிக் கிடக்கும்.

அத்தகைய மஹான்களில் ஸத்குரு ஸ்ரீ தியாகப்ரும்மமும் ஒருவர். அவர் பிழைக்கும் வழியை உறுதியுடன் சொல்லிக்கொடுப்பதை சிறிது செவியில் ஏற்போம்.

தோடி—ராகம்] பல்லவி. [ஆதி தாளம்.

தப்பி ப்ரதகி போவ தரமா
ராம கலிலோ — (த)

அனுபல்லவி.

முப்புனனு விஷய தடாக முன
முனுகக த்ருட மனஸை — (த)

சரணம்.

1. ஞ்சு மொதலு லோஹ தன
கன கமுலனு சூசி விஷ
மஞ்சு மறியு பெங்குல னுசு
எஞ்சி யண்டனி மனஸை — (த)

2. நங்க நாசுல மானகு
அங்க வஸ்த்ரமுல பாகுக
முங்குருலனு கனியந்த
ரங்கமுனனு நாஸிந்திஸக — (த)

3. ஜாஜி மல்லே மந்தாரஸ
ரோஜ முலனு மனஸார
ராஜ பதமுசே த்யாக
ராஜ நுதுனி பூஜிஞ்சக — (த)

பொருள் :—

பல்லவி — தப்பிப் பிழைத்துப் போக முடியுமா? ஸ்ரீ ராமா, இந்தக் கலியுகத்தில்.

என்று பிறர் நினைக்கும்படி பேச்சை நிறுத்து

அனுபல்லவி — மூப்பு என்ற கிழத்தனம் அடைந்த போதிலும், விஷய ஸுகங்கள் என்ற குளத்தில் மூழ்கி விடாமல், உறுதியான மனத்துடன் (தப்பிப் பிழைக்க முடியுமா?)

சரணம் —1. பித்தளை, செம்பு முதலான உலோகங்களும், காசும், தங்கமும், இவைகளாலாகிய திரவியங்களைக் கண்டு (இவைகளாவும்) விஷமென்றும், உடைந்த மண்பானைக்கு ஸமானம் என்று நினைத்து, இவைகளைப் பற்றி மனத்தில் சிறிதும் எண்ணம் ஏற்படாமல் (தப்பிப் பிழைக்க முடியுமா?)

2. நங்கைகளின் அழகான மேலாடைகளையும், நேர்த்தியான நெற்றிக் குஞ்சமான (சிகை அலங்காரத்தையும்) பார்த்து. மனத்துக்குள்ளே அந்தரங்கமாக (அதாவது திருட்டுத்தனமாக) ஆசை வைக்காமல் (தப்பிப் பிழைக்க முடியுமா?)

3. ஜாதி மல்லிகை, மந்தார புஷ்பம், தாமரை இவைகளால் அன்புகொள்ள, இந்த தியாகராஜனல் துதிக்கப்படும் என் ஸ்ரீ ராமனின் பாதாரவிந்தங்களில் அர்ப்பணம் செய்து பூஜிப்பதை விட்டுவிட்டு, மூன் சொன்னவைகளில் சிக்கிக்கொள்ளாமல் தப்பமுடியுமா? (ஸ்ரீ ராமா, நீயே காப்பாற்ற வேண்டுமப்பா!)

கருத்து:-1. தப்பிப்பிழைக்க முடியாது என்பதேபதில். நூற்றுக்கு தொன்னூற்றென்பது பேர்களும் இந்தக் காமினி காஞ்சனத்துக்கு அடங்குபவர்களே என்று பெரியோர்களின் நிச்சய முடிவைத்தான் இங்கு வற்புறுத்துகிறார்.

2. கிழத்தனத்தில், இந்திரிய பலம் குறைந்து சோர்வு அடையுமே அன்றி மனத்தின் வேட்கை குறையுமோ? இத்தனை காலம் யௌவனத்தி லிருந்து

ஊறிப்போன சிற்றின்ப வாஸனையை, இந்த மனம் வயதுவந்ததே என்று உடனே விட்டுவிடுமா ? விஷய ஸுகம் என்ற சேறு நிறைந்த குளத்தில் பலம் குன்றிப் போனவன் மூழ்க வேண்டியவனே, அன்றி கரையைக் காணமுடியாது. கரையைச் சேர நினைத்தால், மனத்தின் வேட்கையைத் துறந்து உறுதி (திடசித்தம், வைராக்யம்) என்ற ஊன்றுகோலால் பிழைத்துக்கொள்ள வேண்டும்.

3. பொன்னையும் மண்ணுங்கட்டியையும் அல்லது ஓட்டாஞ் சல்லியையும் ஒன்ருக நினைக்கும் காலம் எனக்கு வந்தால் எனக்குத் தப்ப வழி கிடைத்தது.

4. பெண்களை, அதுவும் பர ஸ்த்ரீகளைப் பார்த்து மயக்கம் கொள்ளாதவன் யார் என்று அவனவன் மனமே சொல்லும். ஆசையை வெளிக் காட்டாதவர்கள் அந்தரங்கமாகக் காமுற்றுக் கிடப்பார்கள். இந்த பயங்கர மனேவ்ருத்தியை என்னுல் ஜயித்துத் தப்ப முடியுமா ?

5. தப்புவதற்கு வழி இல்லையா? இருக்கிறது அப்பனே, ஸ்ரீ ராமா! உன் திருவடிகளில், அழகும், மணமும், மென்மையுமான புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சனை செய்து, பூஜித்து, அந்த இன்பத்திலே என் இந்திரியங்களின் வேட்கையைத் தணித்துக் கொள்வேன். அதனுல் பரிசுத்தனுவேன். ஸ்ரீ ராமா இதற்கு நீயே அருள்பாலிக்க வேண்டும். அரசைத் துறந்தவன் ஏகபத்னீ வ்ரதன், உலக அபவாதம் என்ற காரணத்தால் தேவியையும் பிரிந்து வாழ்ந்த துறவியல்லவோ! உன் வழியை எங்களால் பின்பற்ற முடியுமா ? உன் திருவடி இன்பத்தைக் கொடு. பிழைத்துக்கொள்வோம்.

நீயே துணை.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி

இந்த உலகத்தில் நாம் யாதொரு துணையும் இல்லாமல் வாழ முடிகிறதில்லை. நம்முடன் கூட வாழும் மனிதர் களின் உதவி பலவகையில் நமக்குத் தேவைப் படுகிறது. இப்படி உதவி செய்பவர்களை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரார், அரசாளுபவர், யஜமானர், ஸேவகர்கள் என்று பல பேர்கள் சூட்டி அவர்களால் நாம் பிழைத்துக்கொள்ளுகிறோம். நமக்கு உதவ மறுப்பவனை பகைவன், த்வேஷி என்று ஒதுக்குகிறோம். நம்முடைய வாழ்க்கையில் பிராணிகளும், பறவைகளும், செடி, கொடி, மரம் முதலியவையும் உதவுகின்றன. நமக்கு தேவைப்பட்ட நன்மைகளை, அவரவர்கள் தங்களுக்கு இயன்றவரை செய்கிறார்கள். பாலைக் கொடுக்கும் பசு தன் கன்றுக்கு மட்டும் அன்றி நமக்கும் கொடுக்கிறது. நாம் பசுவைக் காப்பாற்றுகிறோம். காக்கை அசுத்தத்தை உண்டு, நம்மாலும் பிழைக்கிறது. அப்படியே ஒருவருக் கொருவர் பயனை அடைந்து துணையாக இருந்து வாழ் கிறோம். நம்முடைய சரீரத்திலேயே ஓர் அங்கத்திற்கு மற்றோர் அங்கம் உதவுகிறது. முதுகில் தினவு எடுத்தால் கை இயன்ற மட்டும் சென்று உதவப்பார்க்கிறது. சிலருக்கு ஓர் அங்கம் பழுதானாலும். மற்றோர் அங்கத்தின் பலத்தால் அந்தக் குறையை நீக்கிக் கொள்ளுகிறார்கள். கண் தெரியாதவனுக்குக் காது நன்றாகக் கேட்கிறது. காதில்லாதவன் (செவிடன்) கண்ணால் குறிப்பை ஒரு நொடியில் புரிந்து கொள்ளுகிறான். ஊமையன் உடலால் உழைத்துப் பயன் பெறுகிறான். காது, கண், வாய்

மூன்றும் இல்லாதவன் தொட்டறிந்து புரிந்து கொள்ளு கிறான்.

அதனால் எப்படியும் மனிதனுக்குத் துணை எத்தனையோ விதம் பகவான் படைத்திருக்கிறார். அதனால் அவருக்கோ எந்தவித உபயோகமுமில்லை. எதிர்பார்ப்பதும் இல்லை. பின்பு ஏன் இத்தனையும் படைத்துவிட்டு ஒன்றையும் எதிர்பாராமல் இருக்கிறார்? அவருக்குத் தேவை என்பதே கிடையாதோ? அவருக்கு யாருடைய உதவியோ துணையோ வேண்டியதில்லையோ? பெரு வாழ்வு வாழ்பவன் சிறு ஏழையின் உபகாரத்தை லக்ஷியம் பண்ணுவானா? அப்படியோ? இதற்குத் தகுந்த பதிலை ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் இந்தக் கீர்த்தனத்தில் ஸ்ரீ ராமபிரானிடம் பேசிக்கொண்டே சொல்லிக் காட்டுகிறார்.

ராகம் - ஜுஜாவளி] பல்லவி. [தாளம் - ஆதி.

பராகு சேஸின நீகேமி
பலமு கலிகெரா பராத்பரா (ப)

அனுபல்லவி.

ஸுராவனி ஸுராப்த மா
வ ராஜ ராப கன நா எட (ப)

சரணம்.

மு தான நீது பதார விந்த
முலனு பட்டி ம்ரொக்க கலேதா
நி தான ரூப தரிதா புலே
து தார ஸ்ரீ த்யாக ராஜநுத (ப)

பொருள்:—

பல்லவி:—பராமுகமாக இருந்தால் உனக்கு என்ன பலன் உண்டாகும்? நீ பராத்பரனல்லவா?

அனுபல்லவி:—(ஸுர, அவனி ஸுராப்த) தேவர்கள், பிராம்மணர்கள் இவர்களுக்கு வேண்டியவன் நீ, (மாவர) ஸ்ரீ லக்ஷ்மி நாயகன், (அஜா) கிழத்தனம் இல்லாதவன், (அபகனு) அழகு நிறைந்த மேனியன். அப்பேர்ப்பட்ட உனக்கு என்னிடம் பராமுகம் ஏற்படுவதேன்?

சரணம்:— (முதான நீது) மகிழ்ச்சியுடன் உன்னுடைய பாதாரவிந்தங்களைப் பிடித்து நமஸ்கரிக்க வில்லையா? எல்லாவற்றிற்கும் முதன்மையான (நிதான ரூப) ரூப முடையவனே (தரிதாபுலேது) வேறு கதி எனக்கு இல்லை. நீயோ வாரி வழங்கும் உதாரகுணம் படைத்தவன். உன்னையே துதிக்கும் இந்த தியாகராஜனை என்னிடம் ஏன் பராமுகம்?

கருத்து:—வேத மார்க்கத்தைக் கடைபிடிக்கும் விப்ரர்களும், அவர்களுடைய கர்மாக்களால் திருப்தியடைந்து பூமியைத் தங்களுடைய பௌதிக சக்தியால் மகிழ்விக்கும் தேவர்களும், உன்னால் காப்பாற்றப்படுகிறவர்கள். உன்னுடைய ஆப்தர்கள்.

உலகில் ஸம்பத்தையும், ஸௌபாக்யத்தையும் அளிக்கும் ஸ்ரீ தேவி, உன்னை ஸேவித்து ஸேவித்து உலகுக்கு வேண்டியது அளிக்கிறாள்.

காலத்திற்கு அகப்படாத, என்றும் நீங்காத யௌவனத்துடன், அழகுடைய திருமேனியுடன் விளங்குகிறவன் நீ! உதார குணம் படைத்த பிரபு அல்லவா? மற்றொருவனை முதல்வனாக அடையாமல் நீயே எவற்றிற்கும் முதன்மையானவன்.

ஆதலின் எல்லாம் பெற்றிருக்கிற உனக்கு என்னால் ஆகவேண்டியது என்ன? நானோ பிறர் துணையில் மூச்சு விடுகிறவன். ஒன்றும் எனக்கென்றில்லாதவன். எதற்கும் பிறரை நாடுகிறவன். உன்னிடமோ எல்லாம் நிறைந்து காணப்படுகிறது. உனக்கு ஒருவரிடமிருந்து பெறவேண்டியது எதுவும் இல்லை. ஆனால் உன்னிடத்தில்

வாரிக் கொடுக்கிறதென்ற உதார குணம் இருக்கிறது! அந்த குணத்தை என்னிடம் காட்ட வேண்டியதற்குப் பதிலாக பராமுகமாக இருக்கிறுயே? நான் உனக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று என்னிடம் எதிர் பார்த்தால் எனக்கென்று என்ன இருக்கிறது? ஒன்று இருக்கிறது! சொல்லட்டுமா, ஸ்ரீ ராமா! உன்னையே கதி என்று உன் பாதாரவிந்தங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிற காரியம் இருக்கிறது! அதற்கும் அசைந்து கொடுக்காமல் பராமுகமாக இருந்தால் அதில் உனக்கென்ன லாபம்? கொடுத்துவிட்டால் உன்னுடைய நிதி குறைந்து போய்விடுமா? நான் என்ன கேட்டேன்? எல்லா காலத்திலும், எல்லா வகைகளிலும் நீங்காத உன்னுடைய துணையைத் தானே கேட்கிறேன்! எத்தனையோ துணைகளுடன் என்னைப் படைத்தாலும், எல்லாவற்றிற்கும் மூல காரணமான உன்னையேதான் ஒவ்வொன்றிற்கும் நாடி நிற்கிறேன். என்னை ரக்ஷித்தருள வேண்டும் பராத்பரனே, ஸ்ரீ ராமசந்த்ரா!

நூல் விமர்சனம்.

ஸப்தாஹ பொன் விழா மலர்: திருவநந்தபுரத்தில் ஸ்ரீ தேவகீ நந்தநாஶ்ரம ஸ்வாமிகளால் துவக்கப்பட்ட ஸ்ரீ பாகவத ஸப்தாஹ யாகத்தின் பொன் விழா மலர் பொன் மலராகவே மணத்துடனு மிருக்கிறது. சிறந்த பேபர்! உயர்ந்த விஷயங்கள்! கண்ணைக் கவரும் 20 படங்கள்! உள்ளத்தை உருக்கும் 50 உபநிஷத் ஸ்துதிகள்! ஸ்ரீ ஹரி லீலா என்ற ஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகளின் 115 சுலோகம் அர்த்தத்துடன் கூட நடுநாயகமாக விளங்குகிறது. 3 பாகமாகச் சேர்ந்து 214 பக்கங்கள். விலை மிகக் குறைவு. ரூ. 1—25 தான். இதன் வருமானமும் ஸப்தாஹத்திற்கே பயன்படும். ஒவ்வொரு பக்தரும் படிக்கவேண்டிய ஸாரமான நூல். தி கேரள யூனிவர்ஸிடி கோவாபரேடிவ் ஸ்டோர், திருவநந்தபுரம்-I.

அவர் எப்படியிருந்தால் நமக்கென்ன?

பரிஹாஸ வார்த்தை.

ஸத்கதாம்ருத கலாநிதி, பாலவியாஸ, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரி

தனக்கு ஸ்ரீராமனைத் தவிர வேறு பந்து யாருமில்லை என்று உறுதி கொண்ட ஸ்வாமிகள் சில ஸமயம் ஸ்ரீராம பிரானின் அனுக்ரஹம் தனக்குக் கிடைக்காமல் போய் விட்டதோ என்று கவலைப்பட்டு, அந்த உள்ளத்தின் வேதனையே கானமாக அவரிடம் எழுந்து இருக்கிறது. ஸ்ரீராமனின் அருள்தான் பூர்ணமாக இவருக்குக் கிடைத்திருக்கிறதே. அந்த ராம பக்தி எனும் செல்வமே இவருக்குப் போதிய ஐச்வர்யம் என்று நினைப்பவர் இன்னும் ஏன் கவலைப்படவேண்டும்? குழந்தை எப்படி தன் தாயாரை விட்டு ஒரு கணமும் பிரிய நினையாதோ? பதிவ்ரதை தன் கணவன் நினைவிலிருந்து ஒரு நிமிஷமும் நீங்காதவளோ? ஏதேனும் சூழ்நிலையில் தாய் குழந்தையைப் பிரிந்தாலும், குழந்தை வாடும் அன்றோ! அதன் ஏக்கம் பிறர் அறிய முடியுமா? அதேபோல் கணவன் வெளியூர் சென்றால், மனைவி அவனையே நினைத்து அன்னம், அலங்காரம் விரும்பாதவாறே போல், தனது கணவன் வேறு கவனமாக இருந்தாலும், மனைவி தன்னை கணவன் மறந்து விட்டாரோ என்று வீண் மனக்கவலை படுவதேபோல், ஏதாயிலும் ஓர் சூழ்நிலையில் ஸ்ரீராமபிரான் தன்னை மறந்து விட்டாரோ என்று சஞ்சலம் இயற்கையாக உதித்து அதை தன் கானவாயிலாக வெளிப்படுத்துகிறார். அப்படி வெளிவந்துள்ள அநேக கீர்த்தனங்களில் கீழ் வருவதும் ஒன்று.

ராகம்–நாடகப்ரியா] பல்லவி. [தாளம்–ரூபகம்.

பரிஹாஸ கமா மாட
பதிகுரிலோ பொகடினதி (பரி)

அனுபல்லவி

வெரபுன னனு மானமுன
வெஸனம்புன நே கோரி
சரணுகத ரக்ஷக நினு
ஸந்ததமுனு சரணண்டே (பரி)

சரணம்.

ஒகமுனிகை த்ரௌபதி
த்வாரக நிலயா சரணனக
ஒகமாடகு விபீஷணுடு
ஓர் வலேக சரணனக
ஸகலேச்வர ப்ரஹ்லாதுடு
ஜாலிசே சரணனக
ஹிதகருடை ப்ரோசிதிவே
த்யாகராஜுனி மாட (பரி)

பதவுரை:—

பல்லவி:—

மாட பரிஹாஸகமா	— (என் சொல் உனக்கு) பரிஹாஸமாகத்தோன்றுகிறதா
பதிகுரிலோ	— பல (பத்து) பேர் முன்பு
பொகடினதி	— நான் சொன்னது (பரிஹாஸமா)

அனுபல்லவி:—

வெரபுனனு	— பயப்பட்டும்
அனுமானமுன	— ஊகித்தும்
வெஸனம் புன	— துயரப்பட்டும்
சரணுகத ரக்ஷக நினு	— சரணுகதரக்ஷகனை உன்னை
நே கோரி	— நான் வேண்டி
ஸந்ததமுனு	— எப்பொழுதும்
சரணண்டே	— சரணமென்று வேண்டிக்கொண்டேனே! அது பரிஹாசவார்த்தையாகத் தோன்றுகிறதா

சரணம்:—

ஒகமுனிகைத்ரௌபதி	—	தூர்வாஸர் என்ற ஒரு முனிவருக்காக அன்று த்ரௌபதி
த்வாரக நிலயசரணனக	—	த்வாரகையில் வஸிப்பவனே உன்னை சரணடைந்தேனென்று அழைத்தது (பரிஹாஸமாகத் தோன்றவில்லையா ?)
ஒகமாடகு விபீஷணுடு ஓர்வலேக	—	(தன் தமையன் சொன்ன) ஒரு வார்த்தைப் பொறுக்காத விபீஷணன்
சரணனக	—	உன்னைச் சரணமென்று கடல் கடந்து வந்தானே, அது பரிஹாஸமாகதோன்றவில்லையா
ப்ரஹ்லாதுடு ஜாலிசே	—	துக்கத்துடன் ப்ரஹ்லாதன்
ஸகலேச்வர	—	ஸகல வஸ்துக்களில் விளங்கும் ஈச்வரனை உன்னையழைத்து
சரணனக	—	சரணமென்றானே, அதுபரிகாஸமாகத் தோன்றவில்லையா? இத்தனைபேர் சொன்னது பரிஹாஸ வார்த்தையாக எடுத்துக்கொள்ளாமல் உண்மை என நம்பி
ஹிதகருடைப்ரோசிதிவே	-	அவரவருக்குத் தக்கபடிவந்து காப்பாற்றினையே
தியாகராஜுனிமாட	—	அப்படி இருக்க இந்த தியாகராஜன் சொன்னது மாத்திரம் சிரிப்புக்கும் அலக்ஷ்யத்திற்கும் ஆளாவதேன்?

கருத்து:—

பக்தர்களைத் தேடிச்சென்று காப்பாற்றும் கருணை வடிவான ஸ்ரீராமனின் அனுகூலத்தை, தான் அறிந்து கொண்டு அனுபவிக்கிறார்.

த்ரயம்பகம் கௌதமீ தடே

தன் அடுப்பங்கரை விஷயமான ஓர் சங்கடத்திற்கு பகவானை அழைத்தாள் த்ரௌபதி. பரமபதம் கொடுக்கும் பரமாத்மா இதை பரிஹஸிக்காமல் ஓடிவந்து அவளுக்கு உதவினான். தூர்வாஸர் பிக்ஷைக்கு வந்து விட்டார். அக்ஷய பாத்ரம் கவிழ்த்தாகி விட்டது. இனி மறு நாள் தான் ஆகாரம் உண்டாகும். இந்தக் கஷ்டத்தில் ஹா கிருஷ்ண! த்வாரகாவாஸி! என்று த்ரௌபதி கதறவே பகவான் ஓடிவந்து அந்த அக்ஷயபாத்திரத்திற்குள்ளேயிருந்த கீரையையும், சோற்றையும் தான்புஜித்து உலகமெலாம் திருப்தியடையச் செய்து தூர்வாஸரை பிக்ஷைக்கு வராமல் தடுத்து விட்டார்.

இந்த அற்பமான செய்கைக்கு த்ரௌபதி தன்னை அழைக்கிறாளே என்று அலக்ஷியம் பண்ணாமல் வந்தான் அல்லவா?

அண்ணன் 'வெளியேபோ–நீ துரோஹி' என்று சொன்ன சொல் காரணமாகக்கண்டு உயரக்கிளம்பி ஸ்ரீராமனுடைய ஸமீபம் வந்து சரணம் என்ற விபீஷணனை வேறு கவனம் இன்றி தன்னுடன் சேர்த்துக்கொண்டான். நல்ல நிலையில் வந்தாலும் பொல்லாதவனாக வந்தாலும், என் செவி கேட்க சரணம் என்றான். அதுவே அதிகம் என்று சொன்னது பெரிய சாஸ்த்ர வாக்யம் ஆகியதே?

தகப்பன் கொடுமையில் உம்மை அழைத்து "நீர் எங்கும் நிறைந்தவர்" என்றுநிரூபிக்க உம்மைத்தூணில் காட்டியதை வேடிக்கையாக நினையாமல் அதையே மெய்பிக்க, ஸ்தம்பத்தில் புதுமைத் தோற்றம் கொண்டு வந்தீரே?

ஒவ்வொருவரும் ஒரு காரணத்தைக் கொண்டு, அதுவும் வெகுசிறியதொரு காரணத்தைக்காட்டி உம்மை அழைத்தார்கள். நானோ, உம்மை ஒரு காரியத்துக்கோ, காரணம் பற்றியோ அழைக்கவில்லை. பத்து பேருடன்

கூடி (ஸத்ஸங்கத்தில் திளைத்து) உம்மை ஸதா பாடிக் கொண்டிருக்கிறேன். நான் எதிர் பார்ப்பது தங்களிடத்தில் மூன்று வித சிகிச்சை.

1 என் பயத்தைப் போக்கவேண்டும். என்னைத் தாங்கள் கைவிடும்படி நான் ஏதேனும் குற்றம் செய்து விட்டேனோ என்ற பயந்தான்.

2 அடிக்கடி ஏற்படுகிற ஸம்சயம் என்னை விட்டு ஓடச் செய்ய வேண்டும், என் ஸ்வாமி! என் அபராதங்கள் கோடியானாலும், நான் தகுதியற்றவனாயினும் என்னைக் கைவிடமாட்டான் என்ற உறுதி ஏற்படவேண்டும்.

3 என்னை வேறுகதியில் சேர்க்காமல், உன் திருவடியிலேயே பற்றுக்கொள்ள வைத்து உன்னிடமே சேர்த்துக்கொள்ள வேண்டும். இதுவே என் துயரம்.

ஆதலில் இந்த மூன்றும் உன்னைப்பற்றினதேயன்றி என்னைப்பற்றிய ஹேது எதுவும் இல்லை. நான் சரணடைந்தேன் என்பது, உண்மையாக எடுத்துக்கொள்ளத் தக்கது. பரிஹாஸம் வேண்டாம் என்னிடம் தயவுகாட்ட வேண்டும் ஸ்ரீராமா !

அகில பாரதீய தர்மபீட சமுதாய சங்கம்

வெளியீடு.

கடவுள் வழிபாடு அவசியம் ஏன் ?

இப்பொழுது எங்கும், எல்லோரும் பலவித துன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணம் கடவுள் வழிபாடு இல்லாததே. கடவுள் இருக்கிறார் என்ற உணர்வு இன்மையால் பல கெட்ட காரியங்கள் செய்ய இடம் ஏற்படுகிறது. தனிப்பட்ட மனிதன் தவறு செய்யாமல் தடுக்கப்பட மற்றொருவர் பக்கத்தில் இருப்பது அவசியமாகிறது. நம் சமீபத்தில் வேறு ஒருவரும் இல்லாவிடில், ரகஸ்யத் தப்புக்கள் செய்வது ஸ்வபாவம். ஈச்வரன் ஒருவர் இருக்கிறார் என்ற நம்பிக்கை மட்டுமில்லாமல், ஈச்வரன் நம் சமீபத்திலிருக்கிறான் என்கிற உணர்ச்சி இருந்தால், மனிதன் தவறுதல் செய்வது குறையும், உடலில் உயிர் தங்குவதற்கு உணவு கொள்வதும், நீர் பருகுவதும், மலஜலங்களைக் கழிப்பதும் அவசியம் செய்யவேண்டியிருப்பது போல, உயிர் கடைத்தேற கடவுள் வழிபாடும் அவசியம். மனித சரீரத்தை எடுத்த ஒவ்வொருவரும் தினம் தவறாமல் விட்டிலிருந்து கொண்டோ

அல்லது கோயிலுக்குச்சென்றே கடவுளை வழிபடவேண்டியது மிக மிக அவசியம். அக்காலத்திலாவது மனத்தைத் தெய்வ உருவத்தில் நிலை நிற்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் - தெய்வ வழிபாடு இல்லாவிட்டால் பிறவி வீணாகும். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற தமிழ் வேதப்படி நன்றி கொன்ற பெரும் பாவத்திற்குள்ளாவோம். இக்கருத்தை ஒட்டியே ஔவையும், "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற உலக நீதியிலேயே கூறியுள்ளார். ஆகையால் கடவுளை வழிபடவேண்டியது மிக அவசியம்.

கடவுள் என்பவர் யார் ?

உலகத்தை ஒரு சக்தி படைத்து, காத்து, அழித்து வருகிறது. இது நமக்கு அனுபவமாகத் தெரிந்த விஷயமே. பத்து மாதங்கள் தாயின் வயிற்றில் ஒருவித ஆபத்தும் இல்லாமல் குழந்தை இருக்கிறது. பிறகு பூமியில் பிறக்கிறது. உண்ணும் உணவு ஜீரணிக்கப்பட்டு உடலில் சேருகிறது. உடல் வளர்கிறது. பிறகு ஒருநாள் அவ்வுடல் அழிந்துபோகிறது. இவ்வாறு ஆவதெல்லாம் அச்சக்தியால்தான். அச்சக்திக்கே தான் கடவுள் என்று பெயர்.

கடவுளை ஏன் வணங்கவேண்டும் ?

கடவுள் எல்லா உலகங்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும் தலைவராவர். அவர் நமக்குப் பல அவயவங்களையும், கொடுத்திருக்கிறார். உணவு முதலியவைகளையும் படைத்திருக்கிறார் அன்புடன் நம்மைக் காப்பாற்றுகிறார். அவரை உண்மையுடன் வழிபட்டால் தான் நம்மீது கருணை ஏற்படும் அக்கருணையினால்தான் நாம் எல்லாவித சுக துக்கங்களினின்றும் விடுபட்டு அழியாத ஆனந்த நிலையை அடையலாம். பிறவிப் பெருங்கடலைத் தாண்டிப் பேரின்பத்தை அடையலாம்.

கடவுளுக்கு வடிவம் உண்டா ?

கடவுளுக்கு உண்மையில் வடிவம் கிடையாது. உண்டென்று கொள்வதாயினும், இன்ன வடிவம்தான் என்று சொல்லவும் முடியாது. அவரை எந்த உருவத்திலும் வழிபடலாம். விநாயகர், முருகன், சிவன், விஷ்ணு, பார்வதி, சரஸ்வதி, ராமர், கிருஷ்ணன் வழிபாடெல்லாம் அவர் வழிபாடே. நம் மனம் எப்போதும் ஒரு உருவத்தை மாறி மாறி நினைத்துக்கொண்டேயிருக்கும். ஒரு விநாடியாவது மனம் ஒன்றையும் நினையாமல் இராது. ஒவ்வொருவருக்கும் அன்பு ஏற்படவே நம்முன்னோர்கள் கடவுளுக்கு ஓர் உருவம் கொடுத்தார்கள். அந்த உருவத்தை நாம் நினைக்கக் கடவுள் ஞாபகம் உண்டாகும். நாளடைவில் பழக்கத்தால் அவர் எங்கும் எல்லா உயிர்களிடமும் இருப்பதாகக் காணலாம். இதை ஒட்டியே ஞானசம்பந்தரும் அருளியுள்ளார் :—

இன்னவுரு இன்னநிறம் என்றறிவ தேலரிது நீதி பலவும்
தன்னவுரு வாமெனமி குத்ததவன் நீதியொடு தானமர் விடம்
முன்னைவினை போய்வகையி னல்முழு துணர்ந்துமுயல்கின் றமுனிவர்
மன்னஇரு போதுமரு வித்தொழுது சேரும்வயல் வைகாவிலே.

இதன் பொருள் :— (பெருமானது வடிவம்) இன்ன வடிவம் இன்ன நிறம் என்று ஆராய்ந்தறிவதாயின் அது முடியாது. நீதிகள் பலவும் தனது வடிவமாகும் என்னும்படி மேம்பட்டவனை அப்பெருமான் முறைப்படி அமர்ந்துள்ள இடம் பழைய பாவங்கள் நீங்கப்பெற்று முறைப்படி முற்றும் அறிந்த, முயலும் தவமுனிவர்கள் இரண்டு வேளைகளிலும் மிகுதியாக வந்து சேர்ந்து வணங்கி தியானத்திற்கு இடமானதும் வயல் சூழ்ந்ததுமான திருவைகாவூரே ஆகும்.

நம்மாழ்வார் திருவாய் மொழி அருளியது :—

அவரவர் தமாவது அறிவு அறி வகை வகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவினர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின் றனரே.

இதன் பொருள் :— அவரவர் தமது தமது அறிவுகளுக்குத் தோன்றிய வகைப்படியே அந்தந்த தெய்வ வடிவங்களை இறையவர் எனப் பணிவார்கள். அவரவர் தெய்வங்கள் குறைவுடையவரே அல்லர். ஓர் இறைவரே அவரவருடைய விதிப்படியே நின்று அருள்புரிகின்றார்.

கோயில் கட்டியதின் நோக்கம் :

உலகத்தில் பரம ஏழைமுதல் பெரிய பணக்காரர்கள் வரை எல்லோருக்கும் பல தொந்தரவுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நிம்மதியே நிலைத்திருப்பதில்லை. எல்லோருக்கும் பக்தியும், நிம்மதியும் ஏற்படவே நம் முன்னோர்கள் கோயில்களைக் கட்டினார்கள். பூமியில் தண்ணீர் எங்கும் பரவியிருந்தாலும் அத் தண்ணீரை உபயோகப்படுத்த ஒரு கிணறு அவசியம். இல்லாவிட்டால் தண்ணீரைப் பருகமுடியாது. அது போல எங்கும் வியாபகமாயுள்ள கடவுளை ஒரு குறிப்பிட்ட இடமாகிய கோயிலில் இருப்பதாக அமைத்துக் கொண்டால் உண்மையில் வழிபட முடியும். கொஞ்சநாளைக்கு அம்மாதிரி செய்தால் நாளடைவில் கடவுள் எங்கும் பரவி இருப்பதாக விளங்கும். இதைத்தான் ''மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் தொடங்கினோர்கட்கு ஓர் வார்த்தை சொல்லி ஸத்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்று கூறியுள்ளார்.

---

1 திருக்கண்டியூர் பிரம்மன் தலை கிள்ளியது

விக்ரஹம் வைத்தது எதற்கு ?

கடவுளிடம் முதலில் அன்பு ஏற்பட விக்ரஹ வழிபாடு மிக அவசியம். பசுவின் உடல் முழுவதும் இரத்தம் இருந்தாலும் பால் வெளிவருவது மடியிலிருந்துதான். அதுபோலவே விக்ரஹ வழிபாட்டின் மூலமாகவே வெளி உலகத்திலேயே எப்பொழுதும் உலாவிக் கொண்டிருக்கும் நம் மனதை அடக்கி அதற்கு ஒரு உருவத்தைக் கொடுத்து வழியாகச்செய்தால் சிறிது நேரமாவது அந்த உருவத்தை நினைத்துக் கொண்டிருக்கும். கடவுளுக்கு உருவம் ஆணுகவோ, பெண்ணுகவோ கொடுக்கலாம். விக்ரஹம் கிடைக்கப்பெருதவர்கள் படங்களை வைத்து வழிபடலாம்.

கோயிலுக்குள் செல்லும் விதம் :

உடலை நன்ருக சுத்தம் செய்துக் கொண்டு நெற்றியில் அவரவர்கள் மதச் சின்னங்களை (விபூதி அல்லது திருமண்) அணிந்து பரிசுத்தமான ஆடையுடன் கோயிலின் உள்ளே போகவேண்டும். கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே போகும் போது கடவுள் துதிகளைச் சொல்லிக்கொண்டே செல்லவேண்டும். மனதினை வெளியே போகாதபடி தடுத்துச் செல்லவேண்டும். மூக்குச் சிந்துதல், வெற்றிலை போட்டுக்கொள்ளுதல், எச்சில் துப்புதல் கூடாது. உள்ளே சென்று கொடிமரத்தின் பக்கத்தில் நின்றுக்கொண்டு ஆண்களாயிருப்பின் அஷ்டாங்கமும் (தலை, 2 காதுகள், 2 கைகள், 2 தோள்கள் மோவாய்கட்டை முதலியவைகள்) பூமியில் படும்படியும், பெண்களாயின் பஞ்சாங்கமும் (தலை, 2 கைகள், 2 முழங்கால்கள்) பூமியில் படும்படியும் நமஸ்கரிக்கவேண்டும். பிறகு கோயிலைச் சுற்றி துதிகளைச் செய்துக் கொண்டு மெதுவாக வலம் வரவேண்டும்.

திருவிழாக்கள் எதற்காக ?

சிலர் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடச் சக்தியற்றவர்களாக இருக்கிருர்கள். சிலர் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டு வர முடியாதவர்களாக இருக்கிருர்கள். இவர்கள் எல்லோரும் கடவுளை வழிபடுவதற்காகவே பிரதோஷம், கிருத்திகை, ஏகாதசி முதலிய விசேஷ நாட்களில் உத்ஸவ மூர்த்தியின் புறப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் சிறு கிராமங்களிலுள்ள கோயில்களில் உத்ஸவங்களைக் கொண்டாடுவதற்காக பக்கத்திலுள்ள பாடல்பெற்ற ஸ்தலங்களில் திருவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் கடவுள் வழிப்பாட்டைப் பற்றிய சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சத்காலக்ஷேபங்களும் இன்னிசைக் கச்சேரிகளும் நிகழ்த்தப்படுகின்றன. இவைகளைக் கேட்பதற்காக ஜனங்கள் திரண்டு வருகின்றனர். அப்பொழுது, கடவுளின் உத்ஸவமூர்த்தியையும் கண்டு பக்தி கொள்வார்கள்.

ஆகையால், யாவரும் மனம், வாக்கு காயம் இம்மூன்றினுலும் கடவுள் வழிபாட்டைச் செய்து பேரின்பத்தை அடைய முயலவேண்டும்

---

2 திருக்கோவலூர் அந்தாசுரவதம்

ஸங்கீத ஞானம்.

ஹரிகதா ரத்னாகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்திரிகள்.

ஸங்கீதம், ஞானத்தை அடைவற்கு உதவும் ஓர் ஸாதனம். ஞானம் முக்தி என்ற ஜீவனுக்கு பிறப்பு இறப்பு முதலான துன்பங்களினின்றும் விடுபடச் செய்யும் நிலையை அளிக்கும். அந்த ஞானநிலை சரீரத்தோடு இந்த ஜன்மத்திலேயே பெற்றிருப்பவர்களை ஜீவன் முக்தர்கள் என்று அழைக்கிறோம். சரீரம் போனபிறகு, அடுத்த பிறவி எதுவும் தொடராமல் எங்கும் வ்யாபித்திருக்கும் பரப்ரும்மத்தினிடம் ஒன்றிப்போவதை விதேஹ முக்தி என்றும் அழைக்கிறோம். இந்த ஜன்மத்திலேயே பிறவியின் பயனைத் தெரிந்து, இன்ப துன்பங்களில் நடுநிலைமை கொண்டு, என்றும் ப்ரும்மத்தை தியானம் செய்து, எடுத்த பிறவியில் கிடைத்த கடமைகளை, தருமத்தை பற்றில்லாமல் செய்துகொண்டு, இடைவிடாது ஈச்வரனை பஜிப்பவர்கள், ஜீவன் முக்தர்களின் வழியைப் பின் பற்றுகிறார்கள். அதனால் இஹத்திலே பரத்தைக் காண்கிறார்கள்.

கானம் செவிக்கு இன்பம் தருகிறது. அதில் கேட்போர்க்குக் கிடைக்கும் இன்பத்தால் மனம் ஈடுபட்டு மயங்குகிறது. இதை 'ரக்தி' 'ராகம்' என்று பெயரிட்டு அழைத்தால், இதே 'ரக்தி' 'ராகம்' உலகில் காணும் பொருள்களிடத்தும் வைக்கும் அன்பு அல்லது ஆசை அல்லது பாசம் இவைகளுக்கும் பெயராக அமைகிறது. உயர்வான ஸங்கீதம் தன் வசப்படுத்தும் என்றதால் அதில் ஹ்ருதயத்தில் உணர்ச்சியைப் பெருக்கக் கூடும் தன்மையும் இருக்கிறது. உணர்ச்சியை தூண்டி விடுகிறது என்பதனாலேயே ஸங்கீதம் பயிலுவதை நம் வைதீக

என இவர்களது செயல் கற்பிக்கின்றது

மார்க்கத்தில் எச்சரித்து விட்டார்கள். இந்த உணர்ச்சிப் பெருக்கை ஈஸ்வரனிடம் வைக்கும் அன்பாக்கி இசையை ஆண்டவனின் ஸேவையாகச் செய்து விட்டால், உன்னுடைய உணர்ச்சி பரவசம் நல்ல இடத்தில் பயனுள்ளதாக ஆகும். மனம் லயிக்கும். தெய்வத்திடம் வைத்த பற்றுதல், மற்ற பற்றுகளை நீக்கிவிட உதவும்.

தெய்வத்தின் வடிவம் ஆகாசமயமானது என்று உபநிஷத்துக்களின் கருத்தானதால், அதாவது வடிவமற்றது என்றதால், தெய்வத்தின் நிலை எவ்வாறு ஸாமான்யமானவர்களால் அறியக்கூடும். எப்படிப் பாடுவது? எப்படி மனம் அந்த தெய்வத்தில் லயிக்கும்? நம்மை வசப்படுத்த, நம் நினைவில் எஞ்ஞான்றும் அன்பின் பல பல வகைகளால் தம் லீலைகளை நினைப்பவர்க்குப் பரவசமாக்க, பரப்ருஹ்மமான அந்த தெய்வம், உலகில் காணுவதற்கு உரிய லக்ஷணங்களுடன் ப்ரகாசமாக மானிட உருவில் ஸ்ரீ ராமபிரானாக அவதரித்தது அதன் பெரும் கருணையே யாகும்.

ஸங்கீத ஞானம் என்றால் பாடும் திறமை, பாட்டின் திறமை, அல்லது அந்த ஸங்கீத சாஸ்திரத்தின் லக்ஷணங்களை மாத்திரம் அறிந்து கொள்வது என்பதல்ல. ஸங்கீதத்தினால் அடையக்கூடிய (நாத உபாஸனையினால் பெறக்கூடிய) ஆனந்தம் என்று பொருள் செய்துகொண்டால், அந்த நாதோபாஸனை ஒரு ஜன்மத்தில் எல்லோருக்கும் கிட்டக்கூடியதல்ல. அதுவும் பல தொடர்புகளால் முதிர்ந்த (ஜன்மாந்தரங்களில் ஏற்பட்டபுண்ணிய பலன்) அனுபவம் ஒன்றாலேயே அடையக்கூடியதாகும்.

இந்த ஞானத்தைப் பெற்றவர்களே நம்முடைய பூர்வர்கள். நாரதர், தும்புரு, மதங்கர், அகஸ்தியர், சார்ங்கதேவர், பரதர், நந்திகேஸ்வரர், இப்படித்தாகிய மஹரிஷிகளில், புரந்தரதாஸர், தியாகப்ருஹ்மம் போன்றவர்களும்

நம் யுகத்தில் அவதரித்த யோகபுருஷர்கள். ஸத்குரு ஸ்ரீ தியாகப்பிரும்மத்தின் வாழ்க்கை இந்த மஹான்களின் வழியிலே வந்த ஜீவன் முக்தர் இவர் என்று அறிந்து போற்றற்குரியது. அவருக்கு 'ஸ்வரார்ணவம்' என்று ஸங்கித சாஸ்திர நூல், ஓர் யதியினுல் (நாரதமஹரிஷியினுல்) கொடுக்கப்பட்டது. அதை அறிந்து, நாதோபாஸனையின் மூலமாக, ஸ்ரீராமனைப் போற்றி ஹ்ருதயத்தில் வைத்து, வளர்த்து, ஸங்கிதத்தின் மேன்மையால், ஸ்ரீராமன் என்ற அந்த பரப்ரும்மத்தின் ஆனந்தத்தில் கலந்து விட்டார். அதனுல் அவர் அனுபவித்த இன்பத்தைக் கீழ் வரும் கீர்த்தனத்தின் மூலம் நமக்கும் அறிவிக்கிருர். ஜீவன் முக்தராகி எண்பது பிராயம் வாழ்ந்து விதேஹ முக்தியைத் தன் முயற்சியினுல், ராமன் கருணையாலும் அடைந்தவர் ஆதலால், அவருடைய வாக்குப் பொய்யா வாக்கு உபநிஷத், வேதவாக்காகும்:-

ராகம்—தேவகாந்தாரி] [தாளம்—ஆதி

பல்லவி.

ஸீதாவர ஸங்கீத ஞானமு
தாத வ்ராய வலெரா ராம— (ஸீ)

அனுபல்லவி.

கீதாத்ய கிலோ பனிஷத் ஸார
பூதஜீவன் முத்துடௌடகு— (ஸீ)

சரணம்.

ஆகாச சரீரமு ப்ரஹ்மமனே
ஆத்மா ராமுனிதா ஸரிஜுஉத்ஸுஉத்ஸு

லோகாதுலு சின்மயமனு ஸு"ஸ்வர
லோலுடௌ த்யாக ராஜ ஸன்னுத— (ஸீ)

ராம ஸீதாவர —ஸீதாபதியே, ஸ்ரீ ராமா,

ஸங்கீத ஞானமு —ஸங்கீதத்தை (சாஸ்த்ரீய ஸங்கீதத்தை) பாடியோ, கேட்டோ அடையக்கூடிய பேரின்ப அனுபவம் (ஒருவனுக்குக் கிட்டவேண்டுமானல்)

தாத —படைத்தவன், (விதி)

வ்ராயவலெரா —(தலையில்) எழுதி இருக்க வேண்டுமடா

கீதாத்யகில ஸாரபூத—கீதை முதலிய எல்லா (வேதாந்த) உபநிஷத்துக்களின் முடிவான கருத்தைத் தெரிந்து கொண்டு

ஜீவன் முத்துடௌடகு-ஜீவன் முக்தன் என்ற நிலையை அடைவதற்கு (ஸீதாவர! ஸங்கீதம் உதவக்கூடியது என்று ஞானம் பெற உன்னருள் இன்றி ஒருவனுக்கு இயலுமா ?)

ஆகாச சரீரமு —பரப்ருும்மத்திற்கு சரீரம்,

ப்ருஹ்மமனே —ரூபம், இவைகள் இல்லை, ஒன்றும் இல்லாத வெட்ட வெளியான

வழிக்கு இருவரும் ஸத்துமா பை கொணர்ந்தனர்

	ஆகாசத்தைப்ருஹ்மத்தின் சரீரம் என்று வேத, உபநிஷத்துக்கள் அழைக்கின்றன.
ஆத்மாராமுனி	—(அந்த ஆகாசத்தில் பரமாத்மா சப்தம் அல்லது நாதம் என்ற குணத்தால் அறியப்படுகிறான்) ஆகாசத்தையே சரீரமாகக் கொண்டு பரப்ருஹ்மமாக ஸ்ரீ ராமனையே, தன் ஹ்ருதய ஆகாசத்தில் நாத மயமாகக் கண்டு கொண்டு
தாஸரி ஜூத்ஸூத்ஸூ	—தன்னிடத்தில் அந்த பரமாத்ம பாவனை நன்கு ஈடுபடச்செய்து
லோகாதுலு	—காணும் உலகங்களும், உலகப் பொருள்களும்
சின்மயமு அன	—அந்த ப்ருஹ்மமே வ்யாபித்துள்ளது என்றும் தெளிந்து
ஸூஸ்வர லோலுடௌ	—சுத்த சாஸ்த்ரீய ஸங்கீதத்தில் திளைத்திருப்பவன் ப்ருஹ்மானந்தத்தைப் பெறுகிறான். அதற்கு ஆண்டவன் அருள் வேண்டுமே அன்றி இவனால் மாத்திரம் அடைந்து விடமுடியாது.

இருவரும் குளத்திலமர்ந்து பை எடுத்தனர்

கருத்து: கீதை, வேதங்கள், உபநிஷத்துக்கள், முதலியவை ஒருவனுக்கு நித்யானந்தம்பெறும் வழிகளில் ஜீவன் முக்தனுகி இருத்தலேயே மிகப் பெருமை உள்ள தாகக் கூறுகின்றன. அந்த ஜீவன்முக்தனின் நிலை ஸித்திக்க, ஸுஸ்வரமான ஸங்கீதமும், அதில் ஈடுபாடும், அந்த ஸங்கீத உபாஸனேயுமே நன்கு உதவக்கூடியது. உண்மையான ஸங்கீத ஞானம் என்பதும் எல்லோர்க்கும் கிட்டக்கூடியதல்ல. அதற்கு பூர்வ ஜன்ம புண்ணியம் வேண்டும், அல்லது ஆண்டவன் திருவருள் பெற வேண்டும்.

ஜெம்ஜெட்பூரில் ஸ்ரீ சண்டி ஹோமமும், பாராயண மும்: சென்ற அக்டோபர் மாதம் 1, 2உ வெள்ளி, சனிக் கிழமைகளில் ஜெம்ஷெட்பூர், மதராஸி ஸம்மேளனியில், சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரின் சிஷ்யரும், ஸ்ரீ N. V. கிருஷ்ணமூர்த்தி தீக்ஷிதரின் திருக்குமாரருமான ப்ரவசன பால வாகீச்வர ஸோமயாஜி ஸ்ரீ K. சுப்ரமண்ய தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ சண்டி பாராயணமும், ஸ்ரீ சண்டி ஹோமமும் வெகு ச்ரத்தையுடன் செய்ததை கண்ணுற கண்டு மகிழ்ச்சியடைந்து, பக்தர்கள் எல்லோரும் ஸ்ரீ ஜக தீச்வரியின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரமானுர்கள்.

ஸாவித்ரசயந பசுபந்தம் 31உ ஆங்கரை கிராமத்தில் ஸ்ரீ N. R. ஜம்புநாத சிரௌதிகள் (ச்ரௌத ரத்ந நெல்லிச் சேரி ராமநாதசிரௌதிகளின் ஜ்யேஷ்ட புத்ரர்) ஷை கர்மா வைச் செய்தார்.

ஸ்ரீ பக்த ஸமாஜம்: ஸ்கந்த ஷஷ்டி உபன்யாஸம் ஸ்ரீ போலகம் வைத்யநாத சாஸ்திரிகளால் மூன்று நாள் நடந்தது.

சுக ஜீவனம்.

ஹரிகதா ரத்னகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

ஜீவனோபாயம் பலவிதம். இந்தக் காலத்தில் பொருள் தேடுவதுதான் நம்முடைய ஜீவதசையின் தாத்பர்யம் என்று பொழுது நமக்குப் போகிறது. இது ஒரு கால க்ஷேபம். (காலத்தைக் கழிப்பது) "பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை. அருள் இலார்க்கு அவ்வுலகம் இல்லை" என்ற பழமொழியை நன்கு கடைபிடிக்கிறோம். நாம் பார்க்கிறது இவ்வுலகம்தானே, ஆதலின் பொருள் இல்லாது போனல் நாமே இல்லாமல் போய்விடுவோமே என்று அஞ்சி பிறந்த நாள் முதல் பொருளுக்கே நம்மை வளர்த்து விடுகிறோம். அருள் அவ்வுலகத்தில் தானே அவ்வுலகமோ மறைபொருள். ஆதலால் அருளும் நாம் மறந்திருக்கும் பொருள்தானே! எப்படியாயினும் பக்தி பண்ணு என்பதற்கு பதிலாக எப்படியாவது, எந்தத் தொழிலாவது செய்து பிழைப்பைத்தேடு என்று நாம் ஆகிவிட்டோம்.

நம்முடைய முன்னோர்கள், ஏன்? நம்முடைய ஞாபகத்தில் இருந்த நம்முடைய குலத்து மூதாதையர்களும் பொதுவாக நம்மைப்போல் இப்படிப் பொருளுக்கு அலைந்ததில்லை. அவர்கள் சிறியதிலும் கண்டது திருப்தி என்னும் செல்வம். அதிலேயே அவர்கள் நின்று விட்டார்கள். நாம் அபிவிருத்தி அடைந்துவிட்டோம். திரைகடல் பறப்பதும், திரவியம் தேடுவதும் ஒரு சாதாரணமான செயல் என்றாகிவிட்ட நிலையிலே நாம் வளர்ந்து விட்டோம். அப்படிப்பட்ட தருணத்தில் ஸத்குரு ஸ்ரீ தியாக ப்ரும்மம் போன்ற உத்யோகம் ஏதும் இல்லாத ஓர் ஏழை

சொல்லும் பிழைப்பு வழி நம் செவியில் படுமா ! இருந்தும் கேட்டுப் பார்ப்போம்.

ராகம்—நாதஸ்வராளி] [தாளம்—ஆதி

பல்லவி.

ஸ்ரீபதே நீ பத சிந்தனமே ஜீவனமு—

அனுபல்லவி.

நேபரதேசி நாகாஸி—பாபவே
ஸனுவுன தயசேஸி — (ஸ்ரீபதே)

சரணம்.

ராஜாதி ராஜ ரவிகோடி தேஜ
பூஜிஞ்சி நின்னிந்த்ராதுலு திக்
ராஜுலை வெலய லேதா
ராஜில்லு ஸ்ரீ தியாகராஜுனி கி — (ஸ்ரீபதே)

ஸ்ரீபதே	— ஸ்ரீ தேவியின் பதியான ஸ்ரீராமா
நீ பத	— உன்னுடைய பாதத்தை
சிந்தனமே ஜீவனமு	— சிந்தித்திருப்பதே என் பிழைப்பு
நே பரதேசி	— நான் பரதேசி (பரம தரித்திரன்)
நா காஸி	— என் மீது
ஸனுவுன தயசேஸி	— ஆதரவோடு தயவு வைத்து
பாபவே	— காப்பாற்றுவாய்
ராஜாதி ராஜ	— சக்கரவர்த்தியே !
ரவி கோடி தேஜ	— கோடி ஸூர்யனின் ஒளியைக் கொண்டவனே
பூஜிஞ்சி நின்னு	— உன்னைப் பூஜித்து

இந்த்ராதுலு — இந்திரன் (வருணன், யமன், வாயு, நிருருதி) முதலான தேவர்கள்

திக்ராஜுலே — திக்கின் (லோக) பாலகர்களாக

வெலய லேதா — விளங்க வில்லையா !

ராஜில்லு ஸ்ரீ தியாக ராஜுனிகி — நன்ருக (ஸௌக்யமாக) இருக்கும் இந்த தியாகராஜனுக்கு (உன் பாதத்தைச் சிந்தித்திருப்பதே பிழைப்பு)

ஸ்ரீ ஸத்குரு தன்னை ஒரு பரதேசி என்று பகவானிடம் சொல்லிக்கொண்டார். தன் தேசத்தைவிட்டு பிறதேசங்களுக்குச்சென்று, பிழைக்க விரும்புகிறவன் பரதேசி. இவனுக்குத் தன் சொந்த இடத்தில் பிழைப்பில்லை. அதனுல் வேற்றூருக்குப்போய் பிழைக்கிருன், கஷ்டம். உன் சமீபத்தை விட்டு இந்த உலகத்தில் வந்து திண்டாடுகிறேனே ! ராமா ! இதுதான் என் பரதேச நிலை.

ஆயினும் ஒரு வழி, பிழைக்கும்வழி தெரிந்து கொண்டேன். எந்த வெளி தேசங்களுக்குச் சென்ருலும், தன் சொந்த ஊரை (பிறந்த இடத்தை) நினைக்காதவனுண்டா ? அது போல இந்த உலகில் வந்தாலும் உன் பாதத்தையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். இது தான் என் ஜன்மாவில் நான் செய்யும் வேலை. இப்படி இருந்தால் எப்படிப் பிழைப்பது ? வயிறு இதனுல் நிரம்பி விடுமா என்று கேட்பீரோ, சொல்லுகிறேன்.

உலகத்தை ஆளும் சக்திக்குக் காவலர்களாக பெரிய அதிகாரம் வஹிக்கிருர்கள் திக் பாலகர்கள் என்ற

ஒருவரைப்பற்றி அறிய நாம் ஸர்வக்ஞரா ?

தேவதைகள். மழைக்கு அதிகாரி இந்திரன். நெருப்பு ஒளி பெறச் செய்பவன் அக்னி, ஜலத்தைக் கொடுப்பவன் வருணன், காற்றை அலையச் செய்கிறவன் வாயு. இப்படி இவர்கள் பெரும் அதிகாரத்தை எப்படிப் பெற்றார்கள் ? ராமா, உன்னைப் பூஜித்துத் தானே பெற்றார்கள்? அல்லது இவர்களாகவா அதை அடைந்து விட்டார்கள் ?

உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட கதைபோல உன் தயவு இல்லாவிடில், இவர்கள் தனியராகவோ அல்லது ஒன்றாகச் சேர்ந்தாலோ, ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாதே. உன்னையே ஸ்மரித்துத் தான் இந்தப் பெருமையை அடைந்தார்கள். நானோ உன்னை நினைப்பதை அன்றி, வேறொன்றை நினைப்பதை அறியவில்லையே! அதனால் தான் நான் எப்பொழுதும் (பரதேசி) ஏழையாகவே கிடக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். எனக்கு வேறு பிழைப்பு தெரியாதே ராமா! உன்னையே தான் நம்பிக்கிடக்கிறேன். உன்னிடம் வைத்த என் உறுதியான நம்பிக்கைதான் நான் பார்க்கும் உத்யோகம். நீ என்னிடம் புரியும் கிருபைதான் எனக்கு ஊதியம். இது போதுமே! இதுவே என்னை உன்னுடைய திவ்ய தேசமான பாத ஸன்னிதியில் சேர்த்து விடாதோ.

கருத்து : பகவானை நினைத்திருப்பதுதான் நாம் பெற்ற ஜன்மாவின் முக்கிய ப்ரயோஜனம். மற்றவை மற்றவை இடையிலே வந்த அவாந்தர ப்ரயோஜனம்.

ஸ்ரீராம பாத சிந்தனமே ஸுக ஜீவனம்.

நாரதகுரு.

ஹரிகதா ரத்னகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

மனித குலம் நன்கு வாழ வழிவகுத்தளித்தவர் வேத வ்யாஸ மஹாமுனிவர். இவர் அளித்த நூல்களைக் கற்றவரும் கல்லாதவரும் பெருமை பெறும் வழிகாட்டியவர் அம்மஹானே. அறிந்தவர் சிலரே. அறியாதவரோ உலகில் கோடி கோடியானவர். கடலைக் கண்டவர் கடலின் இனிய காற்றை அனுபவிக்கின்றனர். ஆனால் அக் கடலின் காற்றுதான் மழைபெய்யும் மேகமாக நாடெங்கும் செல்கிறது. கடலைக் காணுது பல காதங்களுக்கு அப்பால் வாழ்பவரும், கடல் தரும் மழையின் சிறப்பால் வாழ்கின்றனர். அதேபோல வ்யாஸ பகவானின் இதிஹாஸ புராண வாக்குகள், இந்த பரந்த உலகில் எத்தனை எத்தனை மதத்தவர்களோ, எத்தனை எத்தனை நாகரீகங்களோ, சிந்தனைகளோ, புத்தித் திறங்களோ அத்தனையும் கொண்டவை. "உலகில் உள்ள எதுவும் இந்த மஹாபாரதம் என்ற இதிஹாஸத்தில் சொல்லப்பட்டுள்ளது. அல்லது இதில் காணுத எந்த கருத்துக்களும் உலகில் எங்கும் காணமுடியாது" என்று தன் கிரந்தத்திற்கு நான்முகம் கொடுத்தவர் அவரே. அதையறிந்து, உணர்ந்து பேறுபெறும் நாமெல்லோரும், ஸமுத்திரக் கரையில் வாழும் புண்ணியசாலிகள். நம்முடைய மதத்திற்கு வைதிக மதம் என்றுதானே பெயர். அந்த வேத வழியைப் புகட்டி, நடைமுறையில் கலந்துகொள்ளத் திறனளித்தவர் வேத வியாஸர் என்ருல், அவருக்கும் வழித்தோன்றலாக விளங்கியவர், விளங்குபவர், ஸ்ரீ நாரத மஹரிஷியாவர். நாரத பகவானைக் குருவாக அடைந்த ஸ்ரீ தியாகராஜரின்

காணுமிருதத்தின் மூலமாக அந்த மஹா புருஷனின் பெருமையை நாமும் சிறிது அறிந்துகொள்வோம்.

ராகம்—தர்பார்] [தாளம்—ஆதி

பல்லவி

நாரத குரு ஸ்வாமி இகனைந நந்
நாதரிம்ப வேமீ ஈகறுவேமி— (நா)

அனுபல்லவி

ஸாரெகு ஸங்கீத யோக நைகம
பாரங்கதுடைன பரம பாவன— (நா)

சரணம்

இதிஹாஸ புராணுகம சரிதமு—லெவரி வல்ல கலிகெ
பதினி தானமிய்ய புத்தி ஸத்ய—பாம கெடுலு கலிகெ
த்யுதி ஜித சரதப்ர நினுவினுமுனி—யதுல கெவரு கலிகெ
க்ஷிதினி தியாகராஜ வினுத நம் மிதி—
சிந்த தீர்ச்சி ப்ரஹ்லாதுனி ப்ரோசின (நா)

பொருள்:

நாரத குரு ஸ்வாமியே, இகனைந நன்னு } இனிமேலாவது என்னை

ஆதரிம்ப வேமி ஈகறவேமி — ரக்ஷிக்கமாட்டீர்களா என்ன, இந்தப் பஞ்சம் ஏன்?

ஸாரெகு ஸங்கீத யோக — என்றும் ஸங்கீதத்துடன் இசைந்த

நைகம பாரங்கதுடைன — வேதவழியை நன்கு அறிந்து அதில் கலந்துவிட்டவரான

பரம பாவன — மிகவும் சுத்தமானவரன்றோ தாங்கள்—

இதிஹாஸ புராணகம சரிதமுலு	ராமாயணம், பாரதம் போன்ற இதிஹாஸங்களும் பாகவதம் போன்ற புராண சரித்திரங்களும்
எவனிவல்ல கலிகே	— யாரால் உண்டாகியது ?
பதினி தானமிய்ய புத்தி	— தன் கணவனையே தானமாகக் கொடுக்க விரும்பின புத்தி
ஸத்ய பாமகு எடுலு கலிகே	ஸத்யபாமாவுக்கு எவ்வாறு உண்டாகியது ?
த்யுதிஜித சரதப்ர	— சரத்காலத்தில் ஆகாசத்தில் விளங்கும் மேகக் கூட்டங்களின் வெண்மையும் தோற்கும், தூய வெண்ணிறம் உடையோனே !
நினுவினு முனிய துலகுன்	— நீரில்லாமல் முனிவர்களுக்கும், யதிகட்கும்
எவரு கலிகே	— யார் உதவி செய்தார்கள் ?
க்ஷிதினி த்யாகராஜவினுத	— இந்த பூமியில் இந்த தியாகராஜனும் ஏற்றித் தொழும் பெரியோனே !
நம்மிதின் சிந்த தீர்ச்சி	— நம்பினேன்-என் சிந்தாகுலம் தீர்க்க (வரவும்)
ப்ரஹ்லாதுனி ப்ரோசின	— ப்ரஹலாதனைக் காப்பாற்றிய ஸ்ரீ நாரத குருஸ்வாமியே!

கருத்து:-ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு ஒரு சமயம் நாரதருடைய தர்சனம் கிடைத்ததென்றும், அதையடுத்து அவருக்கு "ஸ்வரார்ணவம்" என்ற பழைய சங்கீத சாஸ்திர கிரந்தமும் கிடைத்ததாகவும், அவர் சரித்ரத்தில் அறிகிறோம். தியாகப்ரும்மம் தனக்குக்குருவாக அருள்செய்த

அவர் சொற்களைப் படிக்காதே.

நாரதப்ருமத்தை அந்த ராஜவித்யா பாரங்கதனை, பெரும் ஸிம்மாஸனமிட்டுத் தர்பாரில் அமர்த்தி, அன்னுருடைய மிகவும் விஸ்தாரமான பெருமைகளை ஐந்து ரத்னங் களாகக் காட்டியிருக்கிறது அதிசயம். ஒன்று வேத பாரங்கதன். இரண்டு, வேதத்தால் உலகைப் பயனடை யச்செய்ய இதிஹாஸ புராணங்களை அளித்தவர். மூன்று, ஸாமான்ய புத்திக்கும் உதவும் அதிசய வைத்தியன். நான்கு, தபஸ்விகளை வாழவைக்கும் சிந்தனையுடையோன். ஐந்து, மறைவில் இருந்தபடி யாவர்க்கும் (அதிகார பேத மின்றி) உபதேசம் செய்து அருள்பவன்.

1. **வேதபாரங்கதன்:**- வேதத்திற்கு ஶ்ருதி என்று பெயர். (கேட்கப்பட வேண்டிய தன்றி, எழுதப்படுவ தல்ல). அதற்கு சப்தமே ப்ரமாணம், இதன் உத்பத்தி ஆகாசம், ப்ரணவ ப்ரகாசமே. அதைக் கானம் செய்தவர் நாரத மஹரிஷி. மஹதி என்ற வீணையில் சுத்தமாக ஸ்வரங்களுடன் வேதத்தை இசைத்து, தன் வாக்கால் பாடி உலகை மகிழச் செய்பவர். ஆதலின் ஸங்கீதம் வேதமே, வேதத்தின் கீதமே என்று காட்டிய முதல் வழிக் குரு நாரதரே.

2. **இதிஹாஸம்:**- ராமாயணம் ஆதி காவ்யம். அதைப் பாடினவர் வால்மீகி—பாடச் செய்தவர் நாரதர். பின்பு வ்யாஸர் அளித்த பாரதம் என்ற மாபெரும் இதி ஹாஸத்தையும் அமைக்க அருள் செய்தவர் நாரதரே. இதிஹாஸங்களையும், புராணங்களையும் அளித்த வ்யாஸ முனிவருக்குச் சாந்தி கிட்டுவதற்காக ஶ்ரீ நாரத மஹ ரிஷியே பாகவத புராணம் பாடும்படி அமைத்தார். ராமாயணம் ஒரு கீதகாவ்யம். பாரதம் அப்படி அமையா விடினும், அதில் மிகவும் முக்யமானது பகவானின் கீதம். பாகவதம் முழுவதும் பக்தியில் சுவைத்த கீதங்கள்.

குருவை நிந்தித்தால் கூடவா ? பொருமை

3. ஸத்யபாமையின் கர்வம்போக, நாரதர் அவளைத் தூண்டி, ஸ்ரீ கிருஷ்ணனையே தானமாக வைத்துக் கொடுக்கச்செய்தார். இப்படியொரு பழைய கதை. ஒரு சமயம் ஸத்யபாமைத் தன் கணவனை வசப்படுத்தும் வழி என்ன என்று நாரதரைக் கேட்க, அவரும் யுக்தியொன்று சொன்னார். பதியையே தானம் கொடுத்துப் பிறகு பதிக்குச் சரி எடை தனத்தை வைத்து அளித்து மீட்கலாம் என்றார். ஸத்யபாமை ஸ்ரீ கிருஷ்ணனிடம் இதைச்சொல்ல, அவரும் இசைந்தார். ஸத்பாத்திரம் நாரதருக்கே கிருஷ்ணனைத் தானம் செய்துவிடும்படித் தீர்மானிக்கப்பட்டது. நாரதர் கிருஷ்ணனைப் பெற்றுக்கொண்டார். அவரை மீட்க வேண்டி, அடுத்தபடி, துலாபாரத்தில் சரி எடை இட்டுப் பார்க்க, தன் உடைமை எல்லாம் அளித்தாலும், கிருஷ்ண மூர்த்தியின் தட்டு கனத்துக் கீழேத் தங்கியது. இனி ஒன்றும் மிச்சமில்லை. பிறகு கிருஷ்ணபகவானை மீட்க வழி தெரியாமல் ஸத்யபாமை கலங்க, ருக்மிணி மனதால் தன் பதியை நினைத்துத் தன் பதிபக்தியையே பொருளாக வைத்து, அங்கு ஒரு துளஸீ தளத்தை இட்டு அர்ப்பணித்தாள். அந்த தட்டு கனத்துக் கீழே இறங்க, பகவானின் தட்டு மேலே சென்றது. கணவனையோ, தெய்வத்தையோ பக்தியினால்தான் (அன்பினால்தான்) வசப்படுத்த முடியும் என்று அறிவிக்க நாரதர் ஏற்பாடுசெய்த விளையாட்டு, ஸத்யபாமைக்கு மறக்கமுடியாத ஒரு பாடம். அதன் கருத்து நமக்கு ஏற்கத்தக்கது என்பதால் ஸ்வாமிகள் அதை உதாஹரணமாகச் சொல்லியுள்ளார். உலகெலாம் தேடியும் காணாத பரமபுருஷனான பகவானை, பாமை பதி என்ற நெருங்கின உறவால், மறந்து, அவரையே தானம் கொடுக்கத் துணிந்தாள். இதற்கு உடந்தையாக இருந்தவர் நாரதர். ஸத்யபாமைக்கு கிருஷ்ண பக்தியின் மேன்மையை உணர்த்துவதற்காக, அவள் வழியில் புத்தியைக் கிளறிவிட்டு வைத்தியம் பண்ணினார். இப்படி

நாரதர் வரும் கதைகள் இல்லாத புராணங்களே இல்லை. ஸாமான்ய புத்திகொண்ட ஜனங்களுக்கும் அவர் துணைவர்.

4. யோகிகள், தபஸ்விகள் இவர்கள் துயரம் எல்லாம் பகவானிடம் சென்று முறையிட்டு, ஸாது ரக்ஷணம் செய்யப் பகவானை அவதரிக்கச் செய்தவர்.

5. கர்ப்பத்தில் இருக்கும் சிசுவென்றும் நினையாமல், பகவத் குணங்களையும், அஷ்டாக்ஷரத்தையும், அதன் உட்பொருளையும் ப்ரஹ்லாதன் என்ற அஸுரன் வீட்டுக் குழந்தைக்கு உபதேசித்தவர்.

இக்கலியில் ஆதரவில்லாத இந்த தியாகராஜனை வாழ்விக்க ஸூக்ஷ்ம தரிசனம்கொடுத்து, மறைவாக வந்து, ஸ்வரார்ணவம் என்ற அரிய சாஸ்திரத்தை ஸங்கீதம், யோக நைகமவேதசாஸ்திரம் என்று காட்டியதும் அவரே. நாரதஸ்வாமி! இதுபோன்ற உயர்ந்த குணங்களால் என்னைப் பலமுறை காப்பாற்ற வேண்டும் என்று தியாகராஜஸ்வாமிகள் நாரதப்ரும்மத்தின் பெருமையைப் பாடி மகிழ்ந்தார்.

மாநஸோல்லாஸ வெளியீடு : 16-12-65 கவர்னர் தலைமையில் ஸசிவோத்தமர் ஸ்ரீ C. P. R. வெளியிட்டார். தர்ம ரக்ஷாமணியும் நமது ஆசிரியரும் உபன்யாஸம் செய்தார்கள். ஆயிரக்கணக்காக தகந்தந்த ஸ்ரீ பெரிய குளம் நாகேச்வரய்யரையும் அரும்பாடுபட்ட ஸ்ரீ பரமேச்வரரையும் போற்றுதாரில்லை. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்துதி, வார்த்திகம் இவைகள் ஜீவன் முக்த சுந்தரராஜ சர்மா தமிழில் எழுதியது.

ராமகிருஷ்ணபுரம் பஜனை மண்டலி : வடபழனியில் பால்குட அபிஷேகம், வைகுண்ட ஏகாதசியில் மூன்று வேதபாராயணம், லக்ஷார்ச்சனை, ராதாகல்யாணம் வித்வத் ஸபை முதலியவைகளை நடத்திற்று.

பொறுமைக்கு ஒரு பெருமை உண்டு

அன்பெனும் கோபம்.

ஹரிகதா ரத்னுகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

அன்பு எங்கு அளவின்றி இருக்கிறதோ, அங்கே சில சமயம் அளவு கடந்த கோபமும் உண்டாகும். ஆனல் இந்தக் கோபம் அன்பின் வகையே. இதனல் அன்பு இன்னும் அதிகரிக்கும். தான் வைத்திருக்கும் அன்புக்குப் பாத்திரமானவர் தன்னை மறந்தவர்போல் சில சமயம் தோன்றுவதற்கும் அன்பின் அதிகமே காரணம். தான் முழு அன்பை அவரிடம் செலுத்துவதுபோல், தன்னையன்றி வேருெருவரை நினைத்தலோ, பேசுதலோ வேறெதிலும் ஈடுபடுவதோ கூடாது என்ற மனப்ராந்தியில் கோபம் த்வனிக்கிறது. அதனல் தன் அன்புக்குகந்தவரை பலவாறு நிந்தித்துப் பேசுவதும் அவர் தன்னை நிராகரித்து விட்டார் என்று ஏங்கிக்கிடப்பதும் உண்மை அன்பின் சின்னங்களே.

தன்னுள் எழுந்த கோபத்தால் அவரை ஏசினலும், என்ருவது அவருடைய இன்முகம் காணின், இந்தக் கோபமெனும் மூடுபனி சூரியனைக் கண்டதுபோல் மறைந்து, இருமனமும் ஒன்ருகி சொல்லற்கரிய இன்ப நுகர்ச்சியில் சிக்கிக்களிக்கின்றது.

இதை ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீ ராகவன், ஸீதையை நினைத்திருப்பதும், தேவி, ஸ்ரீ ராகவனை நினைத்து உருகுவதும், தன்னிலையை ஸ்ரீ ஜானகித் தாயார் அனுமானிடம் தனது உள்ளத்தின் ஆருத்துயரத்தைக் கொட்டிக் கொட்டிக் கதறி ஆறுதல் பெறுவதையும் காண்கிருேம்.

அடக்கம் அமரர் குணம்

ஸ்ரீ ராமனே ஏகபத்னி வ்ரதன். அவரிடம் அதிசய ப்ரேமை கொண்ட ஸீதாதேவி பிரிந்து புலம்பினது எந்த நெஞ்சையும் உருக்கும்.

அந்தத் தேவியாரின் இடம் வேறு யாருக்கும் பகவான் அளிக்கவில்லை. ஸ்ரீ ராமாவதாரத்தில் தேவி ஒருவளுக்கே இந்த ப்ரேமை ரஸம் அளிக்கப்பட்டது. ஸ்ரீ தியாக ப்ரும்மம் ஸ்ரீ ராமனிடத்தில் தான் கொண்ட ப்ரேமை, தாயார் ஸீதாதேவியார் ஸ்ரீ ராமபிரானிடம் வைத்த ப்ரேமைக்கு எவ்விதத்திலும் குறைந்ததில்லை. ஆனல் ஸ்ரீ ராமமூர்த்தி தேவிக்குத் தன் அன்பை வாரிச் சொரிந்தார். தனக்கு அது கிட்டினதே இல்லை என்று பலதரம் கதறியிருக்கிருர். நான் ரொம்பப் பேராசை கொண்டவன் ராமா! என்றும் வெட்கம் விட்டுப் பேசி ராமனைத் தன்னிடம் அழைத்திருக்கிருர். "மரகதமணி வர்ணு" என்ற வராளிராக கீர்த்தனத்தில் "தரணீதனய குன்ன ப்ரேம ரஸமு தியாகராஜுகீயன்ன" என்று "பூமியின் பெண்ணன ஸீதா பிராட்டிக்கு அளித்த ப்ரேமை இன்பத்தை இந்த தியாகராஜனுக்கு அளித்திடுவாய்" எனக்குழைந்து குழைந்து கதறியுள்ளார்.

அந்த நெருக்கமும், பகவானிடம் கொண்ட சலுகையும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ஒரு சமயம் கோபத்தை உண்டாக்கியது. அதன் விளைவே கீழ்த்தரும் கீர்த்தனம். அதன் ராகம் ஹமீர் கல்யாணி. கோபத்தில் வரும் தெய்வீகச் சொற்களின் கம்பீரத்தையும் அதிகாரத்தையும், இந்த ராக நடை சித்தரிக்கிறது. பாடப் பாடத் திகட்டாது. அதன் உள்ளுணர்வையும் சொல்லின் நயத்தையும் நினைக்க நினைக்க எவர் மனமும் உருகும்.

ராகம் — அமீர் கல்யாணி] [தாளம் — ஆதி

பல்லவி.

நீ தாஸானு தாஸுடனனி
பேரே ஏமி பலமு — (நீ)

அனுபல்லவி.

பேத ஸாதலந்து நீகு ப்ரேமலேக போயே (நீ)

சரணம்.

ஸரிவாரிலோ நன்னு த்ஸௌக சேஸிதிவிகானி
கருணிம்பலேக நீது கர்மமருனதவுகானி (நீ)
ரோஸமுலே தாயே ருசிரவாக்குலு போயே
தாஸுல ப்ரோசிதிவட த்யாகராஜு இலலோ (நீ)

பொருள்:— ஸ்ரீ ராமா! நீ உன்னுடைய தாஸனுக்கும் தாஸன் என்று பேர்பெற்று என்ன பலன்?

தீனர்களிடத்தில் உனக்கு (நிஜமாக) அன்பில்லாமல் போய் விட்டதே!

எனக்கு ஸரிஸமானமானவர்களிடத்தில் என்னை அவமானமடையச் செய்து விட்டாயே! " உன்னிடம் கருணை காட்டமுடியவில்லை. உன்னுடைய கர்மா அப்படிப் பட்டது '' என்று என்னைச் சொல்லுகிருயோ?

உனக்கு ரோஷம் இல்லையா! இனிக்கும் வார்த்தைகள் (ஒன்றும் இனி) எனக்கு இல்லாமல் போய்விட்டதே! தன்னடியார்களைக் காப்பாற்றுகிறவன் என்று உன்னைச் சொல்லுகிறுர்களே? அது உன் தாஸானுதாஸனை தியாகராஜனிடம் இல்லையா! இதெல்லாம் பயனில்லாத வெறும் புகழ்ச் சொற்கள்தானு!

கருத்து :— இப்படி ஸ்வாமிகள் புலம்ப, பகவான் இவரை என்ன செய்து விட்டார்? இவர் பகவானிடத்தில் என்ன எதிர்பார்த்து ஏமாந்து விட்டார்? அல்லது அவர் சொல்வதே போல் இவை எல்லாம் வெறும் கவியின் சொற்கள் தானு! நிந்தா ஸ்துதி என்ற ரஸத்தோடு அமைத்த ஸாஹித்ய கர்த்தாவா இவர்?

உணவிலும் ஆடம்பரம் வேண்டாம்

ஸத்குரு வெறும் கவியல்ல, காயகர் அல்ல, அல்லது மற்றவரைப்போல பக்தியும் பூஜையும் செய்துகொண்டிருப்பவரும் அல்ல. மற்றவர்கள் இம் மஹானைப் புரிந்துகொள்ளாமல் இவர் ஒரு பாடகர், பஜனைக்கார பக்தர் என்றெல்லாம் பேசுவது இவருக்கு அவ்வளவு வேதனை தருகிறது. என்னை எல்லோருடன் சமமாக எண்ணும்படியாகி விட்டதே? நான் உன்னிடத்தில் கலந்து விட்டவன் என்பதை நீ அறிந்தும், நீ பார்த்துக் கொண்டிருக்க, மற்றவர்கள் என்னை இவ்வாறெல்லாம் பேசும்படியாக விட்டு விட்டாயே! என்னை மற்றவர் ஏசினல் உனக்கு அது ரோஷமாக இல்லையா? அவர்கள் ஏசினலும், உன்னுடைய தரிசனம், ஸம்பாஷணம் கூட, என் கலங்கிக் குழம்பிக்கிடக்கிற உள்ளத்திற்கு இப்பொழுதெல்லாம் கிட்டுகிறது கிடையாது. அதற்குக்காரணம் என் கர்ம வினைதான். அதற்கு நான் என்ன செய்யக் கூடும் என்று சொல்லி விடுகிருயே? இப்படியிருக்க உனக்குப் பல பட்டப் பெயர்கள், பக்த வத்ஸலன், தீன பந்து, பக்த பராதீனன், தாஸானுதாஸன் இப்படி எல்லாம் குறைவில்லாமல் சூட்டி விட்டார்கள். இதெல்லாம் பெயரளவே அன்றி, ஒன்றும் உன்னிடம் செயலில் காணவில்லை.

ஸ்ரீ ஸ்வாமிகள் பகவானுடைய சிந்தனையில் திகழ்ந்தவர். அவருடைய உலகம், நடை, பாஷை, ஹ்ருதயம் வேறு? அதை ஸ்ரீ ராமனே அறிவார். அவர்தான் அந்தரங்க நாயகன். இந்த நாயக நாயகிகளின் தனி உலகத்தில் நாம் ப்ரவேசிக்க முடியுமா? அதை நினைத்து நினைத்து உருகி அந்தப்பரம்பொருளையே நமக்கும் நாயகனுக வரவழைத்துக் கொள்வோம். அதுதான் அந்த மஹனீயர் சென்று காட்டின அன்பு வழி.

உண்டி சுருங்கல் உடலுக்கு உறுதி

நாம அபராதம்.

ஹரிகதா ரத்னுகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

பகவானை நினைப்பது ஜன்மாவின் அவசியமான பயன். அதில் அவன் நினைவு எப்பொழுது தவறி, உலக காரியங்களில் புத்தியும் மனமும் அலைபடுகிறதோ, அதுவே மஹா பாதகம் என்றும் கலங்கி, ஸ்ரீ தியாக பிரும்மம் பகவான் ஸ்ரீராமனிடத்தில் தன்னுடைய ஜன்மாவில் நேர்ந்த பல தீங்குகளைச் சொல்லி பகவானுடைய மன்னிப்பை வேண்டுகிருர். தான் சுத்தரான நித்ய முக்தராஞலும், தனக்கும் தன்னை அறியாமல் பல துஷ்ட காரியங்கள் வந்து புகுந்துகொள்ளுகிறது. அதை எல்லாம் ராமா உன்னிடம் சொல்லுகிறேன்! என்னைக் காப்பாற்றும் விஷயத்தில் உன் தயவுக்கு எல்லைதான் இல்லையே!

இந்த கீர்த்தனம் ஸ்ரீ ஸ்வாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகளில் ஒன்று. ரக்தியும் குழைவும் கனிவும்கொண்ட கௌளை ராகத்தில் ஸங்கீத கானரஸ புஷ்டியுடன் அமைந்திருப்பதைப் பல ஸங்கீத வித்வான்கள் பாடிக் கேட்டிருக்கிறோம். அத்துடன் அதில் அமைந்திருக்கும் அர்த்த புஷ்டியும், உள்ளுருக்கமும் இங்கு கவனிக்கலாம்.

ராகம்—கௌளை] பல்லவி [தாளம்—ஆதி

துடுகு கல நன் னே தொரகொடுகு
பரோசுரா — எங்தோ— (து)

பொருள் :— எத்தனையோ (துடுகு) துஷ்டத்தனம் கொண்ட என்னை, எந்தச் சீமான் மகன் காப்பாற்றுவான்?

அனுபல்லவி

கடுதுர் விஷயா க்ருஷ்டுடை
கடிய கடியகு நிண்டாரு (து)

பொருள் :— ரொம்பவும் கெட்டதனம் கொண்ட செயல்களில் ஈடுபட்டவன், க்ஷணத்துக்கு க்ஷணம் மிகவும் துஷ்டத்தனங்கள் கொண்டவன் (எந்த துரை மகன் காப்பாற்றுவான்) ?

சரணம்

1. ஸ்ரீ வனிதா ஹ்ருத் குமுதாப்ஜா
வாங்மானஸ கோசர — (து)

பொருள் :— ஸ்ரீ தேவியின் ஹ்ருதயமாகிற குமுத மெனும் அல்லி மலருக்கு ஸமுத்திரத்தில் தோன்றும் சந்திரன் போன்றவனே ! (அல்லி சந்திரனைக் கண்டு மலரும். ஸ்ரீ தேவியான லக்ஷ்மிபிராட்டியின் ஹ்ருதயம் உன்னைக் கண்டு எப்பொழுதும் களிக்கின்றது) மனம், வாக்குக்கு எட்டாதவனே !

2. ஸகல பூத முலயந்து நீவை யுண்டக
மதிலேக போயின — (து

பொருள் :— எல்லா ஜீவன்களிடத்தும், (அசையும் அசையாப் பொருள்களிடத்திலும்) நீயே விளங்குகிறாய் என்று புத்திவைக்காத, (துஷ்டத்தனம் கொண்ட என்னை எந்ததுரை மகன் காப்பான் ?)

3. சிருத ப்ராயமுனடே பஜனும்ருத
ரஸ விஹீன குதர்க் குடைன — (து)

பொருள் :-என்னுடைய சின்ன வயதுமுதல்கொண்டு, உன்னுடைய பஜனை எனும் அமுத ரஸத்தில் ஈடுபடாமல் வீணான விபரீதப் பேச்சுக்களைப் பேசி, காலம் கழிக்கும் (என்னை எவன் காப்பாற்றுவான் ?)

---

4. பர தனமுல கொரகு நொருல மதினி
கரக பலிகி கடுபு நிம்ப திரிகினட்டி — (து)

பொருள் :— பிறர் பொருளில் ஆசைவைத்து, அந்தப் பிறன் புத்தி வசப்படும்படிப் பேசி, என் வயிற்றை நிரப்பித் திரியும் (என்னை).

5. தன மதினி புவுனி ஸௌக்யபு ஜீவன மே
அனுத்ஸ¨ ஸதா தினமுலு கடிபே — (து)

பொருள் :— இந்த உலகில், சுகமாக ஜீவனம் செய்வதாகத்தான் நினைத்துக் கொண்டு. எப்பொழுதும் (வீண் பொழுது போக்கிக்) காலத்தைப் போக்கும் — (என்னை).

6. தெலியனி நடவிட சூத்ருலு வனிதலு
ஸ்வவச மௌட குபதே சிஞ்சி
ஸந்த ஸில்லி ஸ்வரலயம்பு லெறுங்ககனு
சிலாத்முலை ஸுபக்துலகு ஸமானமனு. — (து)

பொருள் :— பகவானை நன்கு தெரிந்துகொள்ளாமல் (அல்லது அவனிடம் உண்மையான பக்தி இல்லாமல், நடன் (வேஷக்காரன்) விடன் (காமியான ஸ்த்ரீலோலன்) சூத்ருலு (நற்குண மில்லாதவன்) வனிதலு (பெண்கள்) இவர்கள் தன்னைக் கொண்டாடி வசமாகும்படி, அவர்களுக்கு உபதேசம் செய்து, அதில் இன்பம்கொண்டு, ஸ்வர, லயம், இந்த ஞானத்தை (அது வெறும் ரஸத்திற்கு அல்ல, பரமனின் கருணையைப் பெறுவதற்கு என்ற உண்மையை) அறியாத, உள்ளம் உருகாத கல் நெஞ்சனாகி, ஆனால் தன்னை உயர்ந்த பக்தன்போல் எண்ணிக் கொண்டு திரியும்,

7. திருஷ்டிகி ஸாரம்பகு லலனா ஸதனார்பக
ஸேனாமித தனாதுலனு
தேவாதி தேவ நெர நம்மிதினி காகனு
பதாப்ஜ பஜனம்பு மறசின — (து)

பொருள்:— பார்வைக்கு ருசிக்கும் லலனு (மாதர்) ஸதன (வீடு) அர்பக (பிள்ளை குட்டிகள்) ஸேனு (இந்த பரிவாரங்கள்) அதிகமான பணம் காசு இவைகளை, ஹே தேவாதி தேவ! நன்ருக நம்பிக்கைகொண்டிருக்கிறேனே அன்றி, உன் பாதகமல பக்தி ஸேவையை மறந்து விட்ட (என்னை)

8. சக்கனி முக கமலம்புனு ஸதா நா மதிலோ
ஸ்மரண லேகனே
துர்மதாந்த ஜனுலகோரி பரிதாப முலசே தகிலி
நொகிலி துர்விஷய
துராஸலனு ரோயலேக ஸததம பராதினை
சபல சித்துடைனன — (து)

பொருள்:-நன்ருக, உன் திருமுக கமலத்தை என்றும் என் புத்தியில் நினைவுகொள்ளாமல், துஷ்ட மதம்பிடித்த ஜனங்களை விரும்பி யடைந்து, அவர்களுடைய (துஸ்ஸஹ வாஸத்தால் ஏற்படும் பல கஷ்டங்களை) அடைந்து, நொந்து, தீயகாரியங்களைத் தள்ளவும் முடியாமல் ஸததம் அபராதம் செய்துகொண்டு, சபல புத்தியுடன் கூடின — (என்னை),

9. மானவ தனு துர்லப மனுத்ஸு நெஞ்சி
பரமானந்த மொந்தலேக
மத மத்ஸர காமலோப மோஹுலகு
தாஸுடை மோஸ போதிகாக
மொதடிகுல ஜூட குத்ஸு புவினி சூத்ருலபனுலு
ஸல்புத் சுனுண்டினிகாக
நராத முலனு கோரி ஸாரஹீன மதமுலனு
ஸாதிம்ப தாருமாரு — (து)

பொருள்:—மனித சரீரம் அரியது என்று நினைத்து, பரமானந்தம் அடைய எண்ணமின்றி, மதம், மாத்ஸர்யம், காமம், லோபம், மோஹம் இவைகளுக்கு அடிமையாகி,

மோசம் போனேனே அன்றி, உயர்ந்த முதல் குலமான பிராம்மண ஜாதியில் பிறந்து, இந்த பூமியில் நான்காம் வர்ணத்தவர்களின் பிழைப்பைக் கொண்டிருக்கிறேனே அன்றி, மனிதர்களில் கடையர்களின் (கூட்டத்தில்) கலந்து, ஸாரம் இல்லாததை ஸாதித்துக்கொள்வதில் தாறுமாறாகத் திரியும். — (என்னை)

10. ஸதுலகை கொன்னாள் ளாஸ்திகை
ஸுதுலகை கொன்னாள்ளு தன
ததுலகை திரிகிதினய்ய தியாகராஜாப்த
இடுவண்டி — (து)

பொருள்:—ஸ்த்ரீகளுக்காக சில நாள், சொத்துக்காக சிலநாள், பிள்ளைகளுக்காக சில நாள், பணம் சம்பாதிப்பதற்காக சிலநாள் திரிந்தேனய்யா, இந்த தியாகராஜனை எனக்கு ஆப்தன் நீயே ராமா! இப்படிப்பட்ட துஷ்டத்தனம் பல கொண்ட என்னைக் காப்பாற்ற, உன்னையன்றி வேறு எந்தத் துரைமகன் காப்பாற்றுவான்?

கருத்து:—மேற்சொன்ன வாக்குகளில், ஸத்குருவின் ஜீவியத்தில் எந்தக் குற்றமும் செய்தவரில்லை என்று நாம் நன்கு அறிவோம். இருப்பினும் இவைகள் தன்னுடைய குற்றங்கள் என்று அந்தரங்கமான தனது ராமனிடம் முறையிட்டுத் தனக்குத் தீங்குவராமலிருக்கப் பிரார்த்திக்கிறார். மனிதனின் ஜன்மா குறைவுள்ளதாயினும், அதில் எத்தனை நிமிஷங்கள், விநாடிகள் அடங்கியுள்ளன. ஜன்மா முழுவதும் தவறு செய்ய வேண்டும் என்பதில்லை. ஒரு நிமிஷத்திலும், ஒரு விநாடியிலும் தவறு பண்ணினாலும், மனதினால் பாபம்செய்தாலும், அதற்குத் தண்டனை ஏற்படும். ராமபக்தனான தனக்கு உலகில் ஏற்படக்கூடிய மோஹங்கள், அறிந்தோ அறியாமலோ பாபம் செய்யத் தூண்டிவிடும். அவைகளுக்கு, வேறுவிதமான

பிராயச்சித்தங்களை விரும்பாத மஹா பாகவதப் பெரியார் அன்ரூே ! நாம் செய்த தவறுகள் அன்றன்று செய்பவை, முன்பு செய்தவை, பூர்வ ஜன்மங்களில் செய்தவை, இவைகளுக்கெல்லாம் சாஸ்திரங்கள், பிராயச்சித்தாதி கர்மாக்களை விதித்திருக்கின்றன. எவ்வளவு தூய்மைக் குணம் கொண்டவனுயினும், அவனை அறியாமல் ஏற்படக்கூடியவையே இந்த தோஷங்கள். அவைக்கு சாஸ்திரம் விதித்த பிராயச்சித்தங்களைச் செய்தால், அதனுல் வரும் தண்டனையிலிருந்து தப்பிவிடலாம். ஆனுலதன் விளைவான ஜன்ம வாஸனை போய்விடாதே !

மேற்சொன்னவை அத்தனையும், தான் செய்ததாக ஸத்குரு முறையிடுகிருர். அத்தனையும், பகவத்பக்தியை மறந்த தோஷம் என்ற பாபத்திற்குள்ளே அடங்கும். பகவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டிருப்பவனுக்கும் அபராதம் செய்யும்படி நேருகிறது. பகவன்நாம வைபவத்தில் பூர்த்தியான விச்வாஸம் இல்லாமல், வெறும் வாயளவுக்குச் சொல்லிக்கொண்டு, மற்ற உலக காரியங்களில் ஈடுபடுகிறதே அந்த அபராதம். அதையேதான் இங்கு அடுக்கு அடுக்காகச் சொல்லிக்கொண்டார்.

நாம ஸங்கீர்த்தனம் செய்பவனுக்கு வேறென்றும் தேவையில்லை. வேறு தேவைகளை நினைத்தால் அது அபராதம். நாம அபராதம். அதற்குப் பிராயச்சித்தம் அந்த பகவன் நாமத்தை மறுபடியும் விச்வாஸத்துடன் ஜபிப்பதேயாகும். ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரத்திலும், ஸ்ரீ சுகரின் திருவருள் வாக்கான ஸ்ரீமத் பாகவதத்திலும் சொல்லப்பட்ட ஸூக்திகளைத் தன் அனுபவத்தில் கைக்கொண்ட ஸ்ரீ ஸத்குரு மஹாராஜனை வணங்குவோம் ! நம்முடைய கணக்கில் அடங்கா அபராதங்களுக்கு அதுவே பிராயச்சித்தமாகும்.

பக்தியும்–விரக்தியும்.

ஹரிகதா ரத்னகர. ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

பக்திவழி ஸுலபமானது என்று நினைப்பவர் பக்தியின் ரஹஸ்யத்தை அறியாதவர். பக்தி செய்வது எளிதாகத் தோன்றினும், அது அவனருள் இன்றிக் கிடைக்காது. மற்ற வழிகள் கஷ்டமானது. ஸாத்தியமில்லாதது. ஆனால் பக்திக்கு அந்த ஊறுகள் இல்லை. யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எப்பொழுது ஆகினும். எந்த முறையைப் பற்றியாவது பக்தியுடனிருந்தால், அவர்களுக்கு மோக்ஷம் உண்டு. இவ்வாறெல்லாம் சொன்ன பல சான்றுகள் நம்மை ஒரு பொழுதாயினும் உயர்த்திவிடாது. அவை யாவும் பக்தி மார்க்கத்தின் பெருமையைக் காட்ட வந்தவையே. உண்மை பக்தி வழியில் இருப்பவன், மற்ற எல்லா வழிகளையும் மேற்கொண்டவனே யாவான். அவன் நோக்கம் இறைவனின் திருநோக்கத்திற்குத்தான் காத்திருக்கும். வேறு நினைவு காணாத நெஞ்சம் அவனுடையது.

மஹாபக்தர்களான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் தன்னுடைய பக்திவழி சீர்மையுள்ளது. மற்றதைத் தள்ளி பக்தியைப்பற்றினது என்பதல்ல. மற்றதைக்கொண்டே ஸ்ரீ ராமா! உன்னைப் பற்றி நிற்கிறேன் என்ற முடிவு காண்பது என்று பகவானிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதைக் காண்கிறோம். எதுவும் அந்த ப்ரபுவின் ஆணை. கொடுப்பதும் கொடுக்காததும் அவனைச் சேர்ந்தது. நாம் யார் அவனைக் கேட்க? கேட்டால்

நம்மிஷ்டப்படி அவன் கொடுத்துவிடுவாஞ ? நமக்கு வேண்டியது இதுதான் என்பதை அறிந்துதான் நம்மால் கேட்க இயலுமா ? ஒரு பிள்ளையைப் பட்டினிபோட்டு, ஒரு பிள்ளைக்குப் பக்ஷணம் கொடுக்கும் தாயாரின் இயல்பு அல்லவோ அவனிடம் நிறைந்திருக்கிறது. அல்லது அந்ததெய்வ தெய்வம் கொடுத்துள்ளதை நாம் அறிந்து பயன் படுத்திக்கொண்டோமா ?

ராகம்–ஸஹாஞ] பல்லவி [தாளம்–ரூபகம்

ஏமான திச் செதவோ ஏ மெஞ்சிஞவோ—

அனுபல்லவி

நா மாடல வினவோ ராம
நா தல வ்ராலேமோ— (ஏ)

சரணம்

யச மாயுவு ஸத்பக்தியு
ஏகாந்த சித்தமு
ஸுசரீர மொஸங்கு பாஸுர
தியாக ராஜ வினுத— (ஏ)

பல்லவி :– ஏமி ஆன திச் செதவோ — என்ன (கட்டளை) ஆணைகள் ஏற்படுத்தி விட்டாயோ ?

ஏமி எஞ்சிஞவோ — என்ன நினைத்துக்கொண்டு இருக்கிஞயோ ?

அனுபல்லவி :– நா மாடல வினவோ ராம — என் வேண்டுகோளைக் கேட்கமாட்டாயோ ?

நா தல வ்ராலேமோ — என் தலை எழுத்து எப்படியோ ?

ஆந்நிகத்தில் முதல் காரியம் இதே.

சரணம் :-யமமு ஆயுவு — புகழும், ஆயுளும்

ஸத் பக்தியு — உண்மையான (ஸாத்விக) பக்தியும்

ஏகாந்த சித்தமு — தனிமையில் உன்னை நினைக்கும் (உறுதிகொண்ட) சித்தமும்

ஸுசரீரமு — நல்ல தேக நிலையும்

ஒஸங்கு — கொடுத்து

பாஸுர — (இவைகளால்) மேன்மையுறும்

தியாகராஜ வினுத — இந்த தியாகராஜனால் துதிக்கப்பட்டவனே! என்ன நினைத்திருக்கிறாயோ? என்ன உத்தரவோ?

கருத்து:- நல்ல தேகமும், புத்தியும். அதனால் கிடைக்கும் புகழும். உன்னை என்றும் நினைக்கக் காரணமாகும். இவைகள் நீ கொடுத்த அழியாச் செல்வங்கள். இவைகளைக்கொண்டு, உன்னை நினைக்காமல், ஸாத்விகமான பக்தியில் ஈடுபடாமல் இருந்தால், உன்னுடைய அருள் மாத்திரம் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு துராசை கிடைத்த பிறவியின் பயனை வீணாக்குகிறவர்களுக்கு என்ன உத்தரவு பிறப்பித்திருக்கிறாயோ? அவனவன் தலை எழுத்துப்போல் நடந்து போகட்டும் என்று வீணாக விட்டுவிடுவாயோ?

நான் அப்படிப்பட்டவனா? எனக்கு நீ திருவருள் புரிந்த பிறவியின் பயனைத் தெரிந்துகொள்ளவில்லையோ? என்னிடத்திலுமா இந்தப் பராமுகம்? என் தலை எழுத்துப்படி நடக்கட்டும் என்ற எண்ணம் என்னிடத்தில் ஏன்? நான் எதை விரும்பினேன்? எதில் மயக்கம் கொண்டேன்? உன் திருவடி நினைவே என் ஏகாந்த ஸௌக்யம். அதுவே எனக்குக் கீர்த்தியும் பெருமையுமாகும்.

இது சுலோகமாக அமைந்தது

புத்தாண்டு விக்ஞாபநம்.

1 சந்தா பாக்கி உள்ளவர் தயை செய்து உடன் அனுப்ப வேண்டுகிறோம்.

2 விலாஸ மாறுதலை மறவாமல் உடனே கார்யாலயத்திற்கே எழுதவும்.

3 11உ பத்ரிகை வரும். 20உ வரை வராவிடில் உடனே காரியாலயத்திற்கே எழுதவும்.

4 கடிதமெழுதும்போது சந்தா நம்பரைக் குறித்து எழுதவும்.

5 புதியசந்தாதாரரானால் புதிய சந்தா என எழுதவும்.

6 17, 18 ஆண்டு மலர்கள் சில காபிகள் கிடைக்கும். தபால் சார்ஜுடன் 6 ரூ, முன்னதாக அனுப்பி எழுதவும்.

7 பதில் வேண்டுமானால் ரிப்ளே கார்டனுப்பவும்.

8 அட்ரஸ் தெளிவாக எழுதுக.

ஆசிரியர் & மானேஜர்.

தார்மிகச் செய்திகள்.

வாஸந்த நவராத்ரி: ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் தாம்பரத்திலும் மௌந ஸ்வாமிகள் அம்பத்தூரிலும் பூர்ணாநந்த வித்யாபீடம் ஸபையிலும் நடத்திற்று. லோக க்ஷேமத்திற்காக ஒரு சில இடங்களில்தானிது நடக்கிறது.

புவநேஸ்வரி பீடத்தில் ஸ்ரீ சக்ரமேரு ப்ரதிஷ்டை பரமஹம்ஸ சாந்தாநந்த ஸ்வாமிகள். பராபவ வருஷம் வைகாசி 17உ ஷை ப்ரதிஷ்டை செய்யப் போகின்றனர். இவ் வாண்டும் கோடி தில ஹோமாதிகள் விமர்சையாக நடத்துகிறார்கள்.

குர்வந்து ஸர்வேமம ஸுப்ரபாதம்

எது பஜனை.

ஹரிகதா ரத்னாகர. ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

உண்மையான பக்தியுடன் பகவானை நினைப்பதே பஜனை. உண்மையாக நினைப்பது, மெய்யாக நினைப்பது என்று உண்டோ? வேறு நினைவில்லாமல் பகவானையே நினைப்பது உண்மை நினைவு. வேறு நினைவு ஒருவனுக்கு ஏற்படுவது ஸஹஜமே. விஷயங்களில் ஈடுபடும் இழுபடும் வாஸனுபலம் எப்பேற்பட்டவர்களையும் குற்றமுள்ளவர்களாக்கிவிடுவதால் நினைவில் பல வந்து கலந்து கிடக்கின்றது. அவைகளில் தள்ளமுடியாதது தற்பெருமை. எதிலும் தான் பெருமையடைந்து பிறர் மெச்சும்படியாக விளங்குவதையே மனம் நினைக்கிறது. பொருளைப்பற்றியோ, போகக்தைப் பற்றியோ எண்ணுத மனம் இந்த தற்பெருமை என்ற அற்ப ஆசையை நாடி நிற்கிறது. அந்தப் பெருமைகூடத் தன்னைக் குற்றமுள்ளவனுக்கிவிடும் என்று ஸத்குரு ஸ்ரீ தியாக பிரும்மம் நினைத்தார். ஆயிரக்கணக்கான கீர்த்தனங்களால் பகவான் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்குப் பாமாலை சூட்டியவர், இந்த கீர்த்தனங்களில் காணும் ஒவ்வொரு நயமும், குணமும், எனக்கு வினயத்தையே அளிக்கவேண்டும் அன்றி பிறர் மெச்சுவதற்காக மாத்திரம் அமையக் கூடாது. உலகம் போற்றுகிறது. என் வாக்கு ஈடில்லாதது என் ராக ஸ்வர லய கதிகளின் அமைப்பு அதிசயமானது என்பன போன்ற எண்ணமெல்லாம் ஏற்படாமல் என் மனம் சுத்தமாக இருக்க வேண்டும் என்று தன் மனதுக்குள் எச்சரித்துக் கொள்ளுகிருர். அவரைப்போல் பெருமையையும் புகழும் அடையாதவர்கள் இவரைவிட நூறு பங்கு தற்பெருமையில்

சிக்கி பகவானிடம் அணுகுவது விநோதமானது. அவர்களுக்கு இந்த கீர்த்தனை ஓர் அறிய உபதேசமாகும்.

ராகம்—யதுகுல காம்போதி.] [தாளம்-ஆதி.

(பல்லவி)

அதி காது பஜன மனஸா —

(அனுபல்லவி)

எதலோனென்ஸு டொகடி
பய்யெத கல்கினதிஸோ நொகடி — (அதி)

(சரணம்)

கொப்ப தனமுகை யாஸ
குத்ஸித விஷய பிபாஸ
மெப்புலகை பஹுவேஸ மிடி
யுப்பதில் லெதரு த்யாகராஜவினுத — (அதி)

பல்லவி — அது அன்று பஜனை மனமே —

அனுபல்லவி — உள்ளத்தில் கொள்ளுவது ஒன்று. வெளியே (வஸ்த்ரம் முதலான) தானங்களைப் பெற்றதும் ஒன்று.

சரணம் — நிறைய பணத்திற்கு ஆசை, அற்பமான விஷய ஸுகங்களில் ஈடுபாடு, பிறர் மெச்சுவதற்காகப் பல வேஷங்கள் போட்டு உள்ளுக்குள் அகமகிழ்கிறார்கள். ஸ்ரீ தியாகராஜனால் போற்றப்படும் ஸ்ரீராமா இதுவா பஜனை.

———

ராமன் செய்த அநியாயம்.

ஹரிகதா ரத்னகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

ஸ்ரீ ஸத்குரு தியாகப்ரும்மம் ஸ்ரீ ராமபிரானை எல்லா வகையிலும் சரண் அடைந்தவர். ஸ்ரீ ராமச்சந்திரனைத் தவிர வேறு எவரையும் அவர் துணை நாடாதவர். தன் குடும்பத்தில் உள்ள சிறு சிறு மன க்லேசங்களுக்கும் பகவானையே தஞ்சம் என்று துயரம் தீரப் பிரார்த்தனை செய்துகொண்டார்.

தனக்குத் தேவை எதையும் அவர் பொருட்படுத்த வில்லை. தனகனகம், வஸ்து, வாகனம், கிருஹம் இவைக ளெதையும் அவர் நினைத்தாரில்லை. தன் வாழ்வு பலம் அடையவோ, அந்தஸ்து உயரவோ, பதவி, பெருமை, புகழ் இவைகள் தனக்குக் கிடைக்க வேண்டுமென்றோ அவர் எண்ணினதில்லை. அல்லது மஹான்களுக்கும் கர்ம வேகத்தால் உண்டாகும் தீராத சரீர உபாதைகள் அவரைப் பிடித்ததில்லை. எண்பது வயதுக்குமேல் சுக சரீரமுடன், திவ்ய சாரீர சம்பத்துடன் வாழ்ந்தவர். ஆயி னும் அவர் கீர்த்தனங்களில் ஸ்ரீ ராமனிடம் தன் துன் பத்தைப் பலமுறை எடுத்துக் கூறுவதைப் பார்த்தால், அவருக்கு என்னவிதமாக மனக்லேசம் ஏற்பட்டிருக்கலாம் என்று நினைக்க முடியவில்லை. எதையும் விரும்பாதவர் எதைக் கண்டு மனம் வாடினர்? ஸ்ரீ ராமனுடைய பரிபூர்ண கிருபை அவர் பெற்றுள்ளார். ஸ்ரீ ராமனுடைய தரிசனம் பலமுறை பெற்றுள்ளார். ஜன்மா ஸபலமாகும் நித்திய நைமித்திக அனுஷ்டானங்கள் சிறிதும் வழுவாதவர். வெளிப்படையாகக் குறை ஏதும் அவருக்கு நினைவில் வருத்தக் காரணம் தெரியவில்லை.

அம் மகாத்மாவின் நெஞ்சம் வெண்ணெய்போன்றது. தனது பக்தி சிந்தனைக்கும், பக்திமார்க்கத்திற்கும் இம்மியளவு இடையூறு வந்தாலும் நெஞ்சு பொறுக்காதவர். தூய வெள்ளைத்துணி உடுத்திக்கொண்டிருப்பவன் அதை தூய்மையாக வைத்துக்கொள்ள எவ்வளவு கவனம் செலுத்துவானோ! துளி கரையோ தூசியோ படிந்து விட்டாலும் அவன் மனம் எவ்வாறு அதையே நினைத்துக் கொண்டு கவலைப்படுமோ? அப்படியே இவருடைய புத்தி பாவம், தன்மீதோ, தன் நியமவழிபாட்டின் மீதோ பிறர் குற்றம் சொல்லப் பொறுக்காதவர். தான்செய்யும் ராம பூஜை, ராம பஜனை இவைகள் குறைவற்றது, கிடைத்தற்கரியது என்ற மனநிறைவில், யாரேனும், சிறிது அவச்சொல் சொன்னாலும் மனம் உடைந்து, அந்த ராமபிரானிடம் அதைச் சொல்லிப் பாடி, மனச்சாந்தியைத் தேடிக் கொள்வார். அதற்கு இங்கு ஓர் கிர்த்தனம் நல்ல திருஷ்டாந்தம் அவர் மனத்தைத் தெள்ளெனக் காட்டுவதாகும்.

ராகம்—காபி] பல்லவி [தாளம்—ஆதி

அங்யாயமு ஸேயகுரா ராமா
நன்னு
அன்யுனிகா சூடகுரா ராமா —
நாயெட — — — — (அ)

பொருள்;—ராமா அன்யாயம் பண்ணாதே!—என்னை அன்னியன் என்று பார்க்காதே! என்னிடம் இந்த அநீதியைச் செய்யக் கூடாதடா ராமா!—

அனுபல்லவி

என்னோ தப்புலு கலவாரினி
ராஜன்ய நீவு ப்ரோசினவு கனுகனு (அ)

பொருள்:—எத்தனையோ தப்புகள் (குற்றங்கள் உள்ளவர்களையும்) செய்தவர்களையும், ராஜாதிராஜனான நீ

காப்பாற்றிஞய் என்பதனல் (உன்ஊ நம்பியிருக்கிறேன்)
அநியாயம் என்னிடத்தில் செய்யக்கூடாதடா !—

சரணம்

ஜடபரதுடு ஜிங்க சிசுவு நெத்தி
படலிக தீர்ச்சக லேதா—
கடலினி முனுகின கிரிஞெக
கூர்மமு காபாடக லேதா— (அ)

பொருள்:— ஜடபரதர் என்ற ரிஷி மான் குட்டியை வளர்த்து அதன் துன்பத்தைத் திர்க்கவில்லையா ?—

முன்பு ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் ரிஷபர் என்பவருக்குத் தோன்றின பரதர் என்ற புத்திரர் இந்த தேசத்தை அரசாண்டார். (அதனல் நம்முடைய தேசத்திற்குப் பூர்வகல்பத்திலேயே பாரத தேசம் என்ற பெயர் உண்டாயிற்று). அவர் தன் ராஜ்யத்தைத் தன் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டு, வைராக்ய நெறியுடன் வனம் சென்ருர். அங்கு ஆசிரமத்தில் நியம பூஜைசெய்துகொண்டு, நதியில் ஸ்ஞனம் செய்துகொண்டிருக்கையில், காட்டாறு பெருகியது. வெகுதூரத்தில் சிம்மம் ஒன்று கர்ஜனை செய்தது. கர்ப்பமாயிருந்த மான் நடுநடுங்கி, தன் வயிற்றின் சிசுவை ஈன்றுவிட்டு, ப்ராணனை விட்டு மரித்தது. அந்த சிசு ஆற்றங்கரையில் துள்ளிவிழுந்தது. காட்டாறு பெருக்கெடுத்ததால், அந்தக் குட்டி ஆற்று ஜலத்தில் இழுத்துச் செல்லப்பட்டது. இத்தனையும் கரையில் பார்த்துக்கொண்டு ஜபம் செய்த பரதர், ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டார். அது முதல் அந்தக் குட்டியைக் கண்ணும் கருத்துமாக வளர்க்க ஆரம்பித்தார். அதனிடம் வைத்த பாசத்தில் தன் தவநெறியைக் கைநழுவவிட்டார்

மான்குட்டி ஒருநாள் வெளியே சென்றது திரும்பி வரவில்லை. அதையே நினைத்து, தேடி அலைந்து மனமுருகி, அதன் நினைவிலே தன் பிராணனை விட்டார். அவரும் அடுத்த பிறவியில் தானே ஒரு மானாகப் பிறந்து விட்டார். அவருக்கு ஜடபரதர் என்று பெயர் பிறகு ஏற்பட்டது.

தவநெறியையும் மறந்து பரதர் அந்த மான் குட்டியைக் காப்பாற்றினார். அதற்குக் காரணம் அவர் மனம் அன்பும், இரக்கமும், பிறர் துயரத்தை நீக்கும் வேகமும் கொண்டது. ஸ்ரீ ராமா! இந்தக் குணம் பரதர் உன்னிடத்தில் இல்லாமலா போய்விட்டது. மறுபிறவி வருமே என்ற பயம் கூட இல்லாமல் அன்பால் ஓடிவந்து காப்பாற்றினார். உனக்கு அந்தப் பிறவி பயம் உண்டா என்ன?

பாற்கடலில் மந்தரமலையை மத்தாக வைத்து அமுதம் கடைந்தனர் தேவர்களும், அஸுரர்களும். அப்பொழுது மந்தரம் என்ற கிரி கடைந்த வேகத்தால் கவிழ்ந்து கடலில் மூழ்கி விட்டது. அதை எடுத்து நிறுத்த யாருக்கும் வழி தோன்றவில்லை. அப்பொழுது ஸ்ரீமந் நாராயணனே ஓர் பெரிய ஆமை வடிவம் தாங்கி, தன் முதுகைக் கொடுத்து, மந்தரகிரியைத் தூக்கி நிறுத்தி, அவர்கள் கடையும்வரை முதுகைக் கொடுத்தார். அந்த நாராயணன் தாங்கள் அன்றோ ராமா! என் கலக்கத்திற்குக் கரைகாணாத என்னைக் கைதூக்கி விடாமல் இருப்பது ஏனோ? ஆமை என்ற அற்பப் பிராணியின் கேவலமான ரூபத்தையும் பொருட்படுத்தாமல் தாங்கியும், தங்கள் கஷ்டத்தைச் சொல்லவும் வழி அறியாது இருப்பவர்களைக் கைதூக்கி விடுவதே உன் பெருநோக்கன்றோ! அது என்னிடம் இல்லாதது அநியாயம்!

சரணம்

புடமினி பாண்டவ த்ரோஹினி
தர்ம புத்ருடு ப்ரோவ லேதா—
நடிமி ப்ராயமுன த்யாக ராஜனுத
நா பூர்வஜு பாத தீர்ப்ப லேதா— (அ)

பொருள்:—பாண்டவர்கள் வனவாசம் செய்தசமயம், துர்யோதனுதிகள் அவர்களைப் பரிஹஸிக்க, ஆடை அலங்காரங்களுடன், மேளதாளங்களுடன், மனைவி பரிவாரங்களுடன் கோஷயாத்ரை என்ற பெயருடன், பாண்டவர்கள் இருப்பிடம் வந்து அட்டஹாஸம் செய்தனர். இதைப் பார்த்த கந்தர்வன் ஒருவன் அந்தக் கௌரவர்களை சண்டைக்கிழுத்து, நையப் புடைத்து, துரியோதனனை அவன் மனைவி, சஹோதரர்களுடன் தேரில் கட்டிச் சென்றான். அப்பொழுது துர்யோதனன் தருமபுத்திரரைச் சரணம் அடைய வேண்டியதாயிற்று. பீமனும், அர்ஜுனனும் தயங்கியும், தருமர், உடனே கந்தர்வனிடமிருந்து கௌரவர்களை விடுவிக்கவேண்டும் என்றுப் பதறித் துடித்துத் தம்பிகளை அனுப்பினர். அவ்வாறே பீமார்ஜுனர்கள் கந்தர்வனைத் தோற்கச் செய்து, கௌரவர்களைக் காப்பாற்றினர்.

இந்த தருமனின் செய்கை, அபராதிகளைக் காக்கும் தெய்வ குணமான தங்களுடையதன்றோ! தஞ்சம் என்று வந்தவன் யாராயினும், தன் பகைவனேயாயினும் அவனைக் காப்பாற்றுவது தன் கடமை என உணர்ந்தார்.

இத்தனையும் ராமா நான் ஏன் உனக்குச் சொல்லுகிறேன்? இந்த என்னுடைய நடுவயதில் என் முன்னே பிறந்த என் தமையன் எனக்கு இழைத்துவரும் மனக்லேசங்களை என்னல் பொறுக்கமுடியவில்லை. என் பக்திக்கு

விரோதமான செயல்கள் இவைகள். உன்னையே நினைத்திருப்பதைப் பொறுக்காமல் நான் உலகில் மற்றவரைப் போல் பொருள் தேடி, பாடி சம்பாதிக்கவேண்டும் என்பது என் அண்ணுவின் விருப்பம். இது அவருக்கு என் மீது எல்லையற்ற கோபத்தை உண்டு பண்ணுகிறது. அதனால் என்னை ஏசவும் பேசவும் செய்கிறார். ஆனால் நான் உன்னைச்சேர்ந்தவன் என்பதை அவர் உணரவில்லை. அதை அவருக்கு உணர்த்தி விட்டால் அவருக்கும் அந்த உண்மையான பக்தி வழிகாட்டி விட்டால் என் மனம் க்லேசமற்று கிடக்கும். அது நீ அறியாததல்ல. இதை அருள் செய்வது உனக்கு பாரமும் அல்ல! பரம கிருபா நிதியான நீ, அதைச் செய்யாது, என்னை இத்தனைகாலம் மனத்துயரில் வாடச் செய்கிறாயே, அது ஏனோ! இந்த அநியாயம் கூடாதடா ராமா.

சந்தாதாரர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

இதுவரை 19-வது ஆண்டிற்கு சந்தா தொகை செலுத்தாத அன்பர்கள் தயவு செய்து சந்தா தொகையை அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்.

நற்கருமத்தில் துணிவு வேண்டும்

ராமனை காண்பவர் ஆதலால் எவ்விதத்திலும் தனது உபாஸனைக்கு இதர தெய்வங்களின் மேன்மை இவரைக் குறைபடுத்தாது. ஸ்ரீ ராமபிரானது திரு உருவமே அவர் சிந்தையிலே இருப்பதால் அதிலே சொக்கிப்போய் அதில் மயக்கம் கொண்டுள்ளார்.

ராகம் - சாயாதரங்கிணி] [தாளம் - ரூபகம்

பல்லவி

இதர தெய்வமுல வல்ல இலனு சௌக்யமா ராம (இதர)

அனுபல்லவி

மதபேதமுலேக ஸதா மதினி மருலுகொன்ன தன (இதர)

சரணம்

மனஸு தெலிஸி ப்ரோசினனு
மறசிநனு நீவே ராமா —
தனவாடந தருணமிதே
தியாக ராஜ ஸன்னுத — (இதர)

இதர தெய்வமுல வல்ல — மற்ற தெய்வங்களால்
இலனு ஸௌக்யமா — இந்த ஜன்மாவில் ஆனந்தம் கிடைக்குமா — ராமா
மதபேதமு லேக — மதங்களில் பேதபுத்தியை நீக்கி
ஸதா மதினி — என்றும் புத்தியில்
மருலுகொன்ன தனகு — (உன்னுடைய) மோகம் கொண்ட எனக்கு (இதர)
மனஸு தெலிஸி — என் மனத்தின் கோரிக்கைகளை அறிந்து

ஆனல், பரம லோபியா யிருக்காதே

ப்ரோசினனு — காப்பாற்றினாலும்

மறசினனு நீவே — மறந்தாலும் நீயே ராமா —

தனவாடன தருணமுஇதே- உன்னைச் சேர்ந்தவன் என்று என்னை ஏற்க இதுவே சமய

தியாகராஜனுத — ராமா

கருத்து :— ராம பக்தியில் சிக்கிவிட்டவன் நான் ஒருக்காலும் அதை மறக்க முடியவில்லை. ராம பக்தியி எனக்கு ஏற்படும் ஆத்மானந்தம் ஸௌக்யம் இன்னு மொரு சுகத்தால் தேடவேண்டியதில்லை. என் ராமன் என்னைக் கைவிட்டான் என்று இன்னொரு தெய்வத்தை நான் நினைக்கவும் முடியுமா? கைவிட்டாலும், காப்பா றினாலும் ராமனிடம் பைத்தியம்கொண்ட என் மன அவனையே நாடியிருப்பதால், அதுவே எனக்கு அத்யந் சுகமாகும். இதைக்கண்டுகொண்ட நான் உலகில் காணு எத்தனை எத்தனை மத சித்தாந்தங்களில் புகுந்து திரிந் அலைந்து ஓய்வானேன்.

இஷ்டதெய்வபக்தி என்பதில் ஒரு பதிவ்ரதை காட்டு நெறியைக் கடைபிடித்தார் ஸ்ரீ தியாகப்ரும்மம். தன் நாயகனிடம் மோஹமும் ப்ரேமையும் கொண்டு, அவன் பார்வை, பேச்சு, தயவுக்கு ஏங்கும் ஒரு யுவதிக்கு வேறு எதுவும் களிப்பூட்டுமா? அவனுக்கு உலகமே தன் நாயகனுகவே தோன்றும். எங்கு சென்றாலும் எங்கு நினைத்தாலும், தன் நாயகனை அங்கு வைத்துக் காண்பவள். அந்த யுவதியின் மனத்தைக் கொண்டு ராமனிடம் பித்துக்கொண்டு, அந்த ராமபக்தியே தன் னுடைய மேலான மதம் எனப் போற்றும் ஸ்ரீ தியாக ராஜருக்கு இதர மதங்களைப்பற்றி என்ன கவலை?

நீரில்தான் பிராண ஶக்தி இருக்கிறது

2. प्राज्ञः शास्त्राणां तत्वं बोधति ।
அறிவாளி சாஸ்திரங்களின் உட்கருத்தை அறிகிறான்.

3. ऋषीणां वचनं प्रमाणं मन्यते ।
முனிவர்களது சொல் அத்தாட்சியாகக் கருதப்படுகிறது.

4. हरेः पुत्रस्य चरितं प्रशंसनीयं वर्तते ।
ஹரியினுடைய மகனது நடத்தை புகழத்தக்கதாக இருக்கிறது.

5. अस्माकं ज्ञानं अध्ययनेन वर्धते ।
நமது அறிவானது கல்வி கற்பதனால் விருத்தி யடைகிறது.

इकारान्तः नपुंसकलिङ्गः शुचिशब्दः (சுத்தமான)

	एक व.	द्वि. व.	बहु व.
प्र. वि.	शुचि	शुचिनी	शुचीनि
द्वि. वि.	शुचि	शुचीनि	शुचीनि
तृ. वि.	शुचिना	शुचिभ्याम्	शुचिभिः
च. वि.	शुचिने / शुचये	शुचिभ्याम्	शुचिभ्यः
प. वि.	शुचिनः / शुचेः	शुचिभ्याम्	शुचिभ्यः
ष. वि.	शुचिनः / शुचेः	शुचिनोः / शुच्योः	शुचीनाम्
स. वि.	शुचिनि / शुचौ	शुचिनोः / शुच्योः	शुचिषु
सं. प्र. वि.	हे शुचे / हे शुचि	हे शुचिनी	हे शुचीनि

ஓராண்டில் ஒரு விஷயம் முடிவதில்லை

ஸ்ரீவரதராஜர்.

ஹரிகதா ரத்னகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

ஸ்ரீ காஞ்சி மாநகரில், காமகோடி நிவாஸினி, உலகெலாம் தனது கடைக்கண்ணால் காத்து அளிக்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அருள்பெருகும், காமாக்ஷி அம்பிகையின் புண்ணிய க்ஷேத்திரத்தில் சுற்றி விளங்கும் விஷ்ணு ஸ்தலங்களும், சிவஸ்தலங்களும் அமைந்த தத்வம் அதிரஹஸ்யமாகும். அந்த புண்ணிய க்ஷேத்திரத்திற்கு ஸ்ரீ ஸத்குரு தியாக ப்ரும்மம் தனது புண்ணிய யாத்திரை மார்க்கத்தில் விஜயம் செய்தார். அங்கு அந்த சமயம் உபனிஷத் ப்ரும்மம் என்ற பெரியவர்களைத் தர்சனம் பண்ணிக்கொள்ளவே அந்த க்ஷேத்திரம் அடைந்தார்கள். உபனிஷத் ப்ரும்மமும், ஸத்குருவைப் பார்க்கவேண்டும் என்று விரும்பியிருந்தார்கள்.

உபனிஷத் ப்ரும்மத்தைத் தரிசனம் செய்துகொண்டு, அந்த க்ஷேத்திரத்தில் சில காலம் தங்கி, அங்கு எழுந்தருளிய, ஸ்ரீ வரதராஜப் பெருமானையும், காமாக்ஷியம்பிகையையும் தரிசனம் செய்துகொண்டு பரவசமடைந்தார்கள். அப்பொழுது உதயமான கீர்த்தனங்களுள் அபூர்வமான ஒரு ஸம்ஸ்க்ருத கீர்த்தனம் கீழ்வருமாறு.

ராகம்—மோகனம்] [தாளம்—ரூபகம்

பல்லவி

வரத ராஜ பாஹி மாம்
ஸதா முதம் தேஹி — (வ)

ஆம்! பக்கம் போதாததே காரணம்

அனுபல்லவி

கரி கிரீச சிவ ஸுரபதி

ஸரஸிஜ பவாதி வினுத — (வ)

சரணம்

தேவ தேவாந்யதா கதிர் நாஸ்தி ஸ்ரீபெருந்

தேவி ஸஹித கருணாகர ஸ்ரீ தியாக ராஜ வினுத (வ)

பொருள்: பல்லவி:-

வரதராஜப் பெருமாளே! என்னைக் காக்கவேண்டும். எப்பொழுதும் என்னைக் களிக்க (பகவத் பக்தி அனுபவத்தில் ஈடுபடச்) செய்யவேண்டும்.

அனுபல்லவி:-

கரிகிரீஶ — யானைவடிவில் அமைந்த சிறு குன்றின்மேல் விளங்குபவரே (ஹஸ்திகிரீச)

சிவ ஸுரபதி — சிவன், தேவேந்திரன்

ஸரஸீஜ பவாதி வினுத — ப்ரும்மாதிகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவனே!

சரணம்:-

தேவதேவனே, அன்யதா கதிர் நாஸ்தி—எனக்கு உன்னைத் தவிர வேறு கதியில்லை. ஸ்ரீ பெருந்தேவி பிராட்டியுடன் விளங்குபவனே! கருணாமூர்த்தியே! இந்த தியாகராஜன் உன்னைக் கொண்டாடப் பெற்றேனே!

அதிக பக்கம் போட அறிக சந்தா தேவை

சிறு கீர்த்தனம், அழகான, எளியதான பதங்கள், பாடப்பாட இனிக்கும் வர்ணமெட்டு, பரமபாகவதர்களும் விஷ்ணு பக்தர்களும், நித்தியம் நித்தியம் ஸேவிக்கும் வரதராஜப் பெருமானுடைய ஸந்நிதியில், தன்னையும் அவர்களுடன் சேர்த்துக்கொண்டார். அனன்ய சரணம் என்று பகவானை வேண்டி, பெருந்தேவி என்ற தமிழ்ப் பெயரையே ஸம்ஸ்க்ருதத்துடன் மணி ப்ரவாஹமாகச் சேர்த்துப் பாடினர். ப்ருஹதம்பா, ப்ருஹன்னாயகி என்ற பெயரை இங்கு சொல்லாமல், அந்த ஸ்தலத்தில் எழுந்தருளின தாயாரின் திவ்ய திருநாமமான பெருந்தேவி என்ற பதத்தை அவ்வாறே உபயோகித்துள்ளார். இவ்வாறு தமிழ்ப் பெயர்களைப் பல கீர்த்தனங்களிலும் சேர்த்துள்ளார்கள்.

---

* * * * * * * * * * * * * * * * *

கோகுலாஷ்டமி ஸ்ரீ ஜயந்தி.

த்வாபரயுகத்தில் மதுராபுரியில் வஸுதேவ தேவகியினிடம் ஸ்ரீமந் நாராயணன் அவதரித்த தினமிது. இரவில் அஷ்டமியுடன் ரோஹிணீ நக்ஷத்ரம் கூடினுல் அதுவே ஸ்ரீ ஜயந்தீ எனப்படும். அன்று உபவாஸமிருந்து இரவில் வஸுதேவ தேவகிகளுடன் கூடிய கிருஷ்ணனைப் பூஜித்து அன்றிரவு ஸ்ரீ பாகவத கதாச்ரவணம் அல்லது பஜனை, நாமகீர்த்தனத்தால் கண் விழிக்கவேண்டும், இதனுல் ஸகல பாபங்களும் விலகி, பரம ச்ரேயஸ்ஸும் உண்டாகும், இந்த வ்ரதம் நித்யமானதால் கட்டாயம் செய்தே ஆகவேண்டும். செய்யாவிடில் பாபம். புண்ய பாபங்கள் ஒருவாறிருக்க, துஷ்டர்களைக் கொன்று சிஷ்டர்களைக் காத்து, கீதை எனும் அரும் பெரும் உபதேசத்தை உலகிற்களித்த ஒரு உத்தமனது பிறந்தநாளை அவருக்கேற்ற வகையில் கொண்டாடுவது அறிஞர் கடமையன்றோ!

ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகளின்

கோவூர் பஞ்ச ரத்னக்கீர்த்தனைகள்.

—————— **** ——————

ஹரிகதா ரத்னாகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

ஸ்ரீ ஸத்குரு தியாக பிரும்மத்தின் இஷ்ட தெய்வம் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி. ஸ்ரீ ராமனை அன்றி தனக்கு வேறு எவருமிலர். ராமபிரானை நினைத்த தன் சித்தம் வேறொருவரையும் நினையாது, என உறுதி கொண்டு இறுதிவரை ராமா ஸாக்ஷத்கார பஜனையில் ஈடுபட்டவர். அவ்வாறிருக்க, இதர தெய்வங்களைக் குறித்து அவர் பாடியுள்ள கீர்த்தனைகளில், முக்கியமாக சிவ கீர்த்தனைகளில், சிவனை அன்றி வேறு நினைவு உண்டாகலாமா? சிவனை அன்றி வேறு தெய்வம் தனக்கு உண்டா? சிவபெருமானைக் கண்ட கண்கள், இன்னுமொரு தேவதையைக் காணுமா? என இவ்வாறு பாடியுள்ளார்.

உண்மையான ராம பக்தர் தன் சித்தத்தில் சிவ பெருமானையும் பூரணமாக ஏற்றுக்கொண்டு பாடினார் என்று கொள்ளலாம். அதுபோன்றே சிவனும், ராமனும் ஏக மூர்த்தியே என்ற அபேதமான பக்தி கொண்டிருந்தார் என்றும் நினைக்கத்தகும். ஆயினும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் ராமபக்தி எல்லையற்றது. 'ராம' மந்திர ஜப மேன்மை பெற்றவர். சிவனும் ராமனையும் ராம மந்திரத்தையும் கொண்டாடிப் போற்றுகிறார் என்று பல சிருதிகளில் உணர்த்தியுள்ளார். அவ்வாறிருக்க, சிவனின் பெருமையை நன்கு அறிந்து சிவ ராம தத்துவம் ஒன்றெனக் கருத்தில் கொண்டு, சிவபெருமானை தரிசிக்கும் தோறும், ராமபிரானும், ராமபிரானை

தரிசிக்கும் தோறும் சிவபெருமானும், அவருடைய நினைவில் தோன்றி அன்பின் வசப்படுத்தி, உள்ளம் கனிந்த உண்மை பக்தியின் வடிவமான கிருதிகளை உலகுக்கு அளிக்கச் செய்தனர் என்று நினைப்பது மிகையாகாது. சிவ மாதவ பேதத்தை அறவே கண்டனம் செய்பவர் ஆதலில், சிறந்த ராமபக்தரான தியாகராஜ ஸ்வாமிகள் சிவ பக்தி கொண்டிருந்ததில் வியப்பில்லை.



கோவூர் கோயில்.

சென்னைக்கு அருகே விளங்கும் கோவூர் என்ற கிராமத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் ஒரு சமயம் விஜயம் செய்தார். திருப்பதி, காஞ்சி முதலான க்ஷேத்திரங்களை தரிசனம் செய்து கொண்டு, ஸ்ரீ சுந்தரேச முதலியார் என்ற ஒரு பக்தரின் அழைப்புக்கிணங்கி, அவரது கிராமமான கோவூரில் தங்கினார். ஸுந்தரேச முதலியார் அளித்த உபசாரமும், ஸ்வாமிகளிடமும் காட்டின பக்தியும் கண்டு, அவரிடம் உள்ள ப்ரீதியினால், அவ்வூரில் எழுந்தருளியுள்ள, ஸ்ரீ சௌந்தர்ய நாயகி ஸமேதரான ஸ்ரீ ஸுந்தரேச்வரர் மீது ஐந்து ரத்னம் போன்ற கீர்த்தனைகளைப் பாடினார். தார்மீகரும், தனிகரும்

ஸ்ரீ ஸ்வாமிகளிடம் எல்லையற்ற பக்திகொண்ட முதலியார் அவர்கள், ஸ்ரீ சுவாமிகளின் சென்னை விஜயத்தையும் ஏற்பாடுசெய்ய, திருவொற்றியூரில் அவ்வாறே ஸ்ரீ திரிபுர ஸுந்தரி அம்பாள் மீது பஞ்ச ரத்ன கீர்த்தனைகள் பாடி சென்னைக்கு ஸ்ரீ சுவாமிகள் விஜயம் செய்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் கோவூர் ஸ்தல கீர்த்தனைகள் ஐந்தையும் கவனிப்போம். அவைகள், பக்தியும், ரக்தியும் கொண்டு விளங்குபவை என அவைகளைப் பாடக் கேட்டு அறிந்துள்ளோம்.

சம்போ மஹா தேவ—ஸம்ஸ்கிருத கீர்த்தனை.

ராகம்—பந்துவராளி] [தாளம்—ரூபகம்.

பல்லவி.

சம்போ மஹாதேவ சங்கர கிரிஜா ரமண [ச]

அனுபல்லவி.

சம்போ மஹா தேவ சரணாகத ஜன ரக்ஷக
அம்போருஹலோசன, பதாம்புஜ பக்திம் தேஹி [ச]

சரணம்.

பரம தயாகர ம்ருகதர ஹர கங்காதர தரணீ
தரபூஷண த்யாகராஜ வர ஹ்ருதய நிவேச
ஸுர ப்ருந்த கிரீட மணி வர நீராஜித பத கோ
புரவாஸ ஸுந்தரேச கிரீச பராத்பர பவஹர — [ச]

பொருள் :

சப்தங்களாலும், ஸ்வரத்தாலும், அக்ஷரங்களுடைய ப்ராஸங்களாலும், (அணிகளாலும்) மிருது வென்ற (மென்மை) ரஸம் த்வனிக்கிறது. அதே சமயம் ஹ்ருதய அந்தரங்கத்தில் இருந்து எழும் ஹரன் நாமம், ராகத்தின் அமைப்பால் "சம்போ" என்ற கம்பீர

த்வனியில் லயிக்கிறது. சம்போ, மஹாதேவ, சங்கர கிரிஜா ரமண, சரணாகத ஜனரக்ஷக, அம்போருஹலோசன, பரம தயாகர, மிருகதர (மான் ஏந்தியவனே), ஹர கங்காதர தரணீதர பூஷண (பூமியைத்தாங்கும் பாம்பை ஆபரணமாகக் கொண்டவனே), த்யாகராஜ வரஹ்ருதய நிவேஶ, (த்யாகராஜ ஸ்வாமிகளின் உயர்ந்த ராம பக்தி நிறைந்த ஹ்ருதயத்தில் புகுந்தவனே) ஸுரப்ருந்த கிரீட மணிவர நீராஜித பத (தேவர்களின் கூட்டத்தின் கிரீடங்கள் உனது பாதத்தில் பட்டு, அந்த மணிகள் சிதறி, அதனுல் ஒளிக்கும் பாதங் கொண்டவனே). கோபுர வாஸ (கோபுரத்தில் விளங்குபவனே, கோபுரமே சிவமயம், கோபுர தரிசனமே, சிவதரிசனம் என்ற ஆகம நியதியின்படி கோபுர ஸ்வரூபமானவனே), ஸுந்தரேச, கிரீச, பராத்பர, பவஹர என்று சிவ நாமாவளிகள் நிறைந்த இந்த கீர்த்தனம் பாடப்பாட நம்மை பரிசுத்தப் படுத்தக் கூடியது.

ராகம்—கரஹரப்ரியா.] [தாளம்—ஆதி.

பல்லவி.

கோரிஸே விம்பராரே
கோர்கே லீடேர— (கோ)

அனுபல்லவி.

ஶ்ரீ ரமணீ கரமௌ கோவூரி ஸுந்தர மூர்த்தினி (கோ)

சரணம்.

ஸுருலு வெயி வன்னே பங்காரு
விருலசே பூஜிஞ்சக ஹ௫
ஸுருலு ஸனகாதி மௌனி
வருலு நுதிம்பக

சிருலித்துநநி கொலுவையுண்டு
ஶ்ரீ ஸௌந்தர்ய நாயிகா
வருனி ஶ்ரீ தியாகராஜ
வரதுனி பரமாத்முனி ஹருனி— கா)

பொருள் :

பல்லவி:- நமது விருப்பங்கள் ஈடேற, (ஸுந்தரேச்வரனை) விருப்பமுடன் (சிரத்தையுடன்) ஸேவிப்போம் வாருங்கள்

அனுபல்லவி :- ஸ்ரீ ரமணிகரமௌ—லக்ஷ்மீகரமான—மங்களகரமான கோவூரில் சுந்தரேச்வர மூர்த்தியை (சேவிப்போம் வாருங்கள்).

சரணம் :- தேவர்கள் ஆயிரக்கணக்கான தங்கமலர்களைக் கொண்டு பூஜிக்க, ஸநகாதி முனிவர்களும், பிராம்மணோத்தமர்களும் (ருத்ர நமக சமகங்களால்) ஸ்தோத்திரம் செய்ய, ஸர்வ ஸம்பத்துக்களையும் கொடுக்க சித்தமாக (கொலுவை) எழுந்தருளியிருக்கும், ஸ்ரீ ஸௌந்தர்ய நாயகியின் பதியை, ஸ்ரீதியாக ராஜனுக்கு வேண்டியவை அளித்தவனை, பரமாத்மாவான ஹரனை (சிரத்தையுடன் சேவிப்போம் வாருங்கள்).

ராகம்—சங்கராபரணம்] [தாளம்—ஆதி.

பல்லவி.

ஸுந்தரேச்வருனி ஜூசி ஸுகுல ஜூடமனஸு வச்சுனு (ஸு)

அனுபல்லவி.

அந்தமு கல வர கௌசிகி ஸமான
மைன கோபுரமந்து வெலயுமா— (ஸு)

சரணம்.

சரணமுலனு பங்காரு நூபுரமுலு
கரமுல ரவ கங்கண யுகமுலு
ஸ்ரீ கர கர முகமுன கஸ்தூரி திலகமு
மெரயுசுனுண்டு லாவண்யமு கல— (ஸு)

ஒகசோ ப்ரும்மாதி ஸுருலு
ஒகசோ நிர்ஜர வர தருணுலு
ஒகசோ தும்புரு நாரதாதுலு
ஒகசோ பக்துலெல்ல பாடு — [ஸு]
ராஜராஜுனிகி செலிகாடயின
ராஜசேகருனி கோபுர நிலயுனி
ராஜஸ குண ரஹிதுனி ஸ்ரீ த்யாக
ராஜ பூஜிதுனி ரஜித கிரீசுனி— [ஸு]

பொருள் :

பல்லவி:- ஸுந்தரேச்வரனை தரிசித்த கண்களால் இன்னொரு தேவதையை தரிசிக்க மனம் வருமா.

அனுபல்லவி:- அழகுடன் உயர்ந்து கம்பீரமாகத் தோற்றமளிக்கும் கோபுரத்துள் விளங்கும் (ஸுந்தரேச்வரன்)

சரணம்:- (1) பாதங்களில் பொன்மயமான சதங்கைகள், கைகளில் மணிகள் வைத்து இழைத்த கங்கணங்கள், ஸ்ரீகரமான முகத்தில் துலங்கும் கஸ்தூரி திலகம், இவைகளுடன் சேவை சாதிக்கும் (ஸுந்தரேச்வரனை)

(2) ஓரிடத்தில் பிரும்மாதி தேவர்களும், ஓரிடத்தில் தேவ ஸ்திரீகளும், ஓரிடத்தில் தும்புரு நாரதாதிகளும், ஓரிடத்தில் பக்தர்கள் எல்லோராலும்பாடப்பெறும் ஸுந்தரேச்வரனை

(3) ராஜாதிராஜன் குபேரன் நண்பனுக விளங்கும் ராஜசேகரனுன கோபுரம் கொண்ட பெருங் கோயிலைத் தனக்குறைவிடமாகக் கொண்டவனும், ராஜஸகுணங்கள் அற்றவரான வெள்ளிமலை ஈசனை, ஸ்ரீ தியாகராஜனல் பூஜிக்கப்படும் (ஸுந்தரேச்வரனை

ராகம்—கல்யாணி] [தாளம்—ரூபகம்.

பல்லவி.

நம்மி வச்சி ந நன்னு—நயமுக ப்ரோவவே (ந)

அனுபல்லவி.

கொம்மனி வரமுல நொஸகு
கோவூரி ஸுந்தரேச— (ந)

சரணம்.

வேதபுராணுகம சாஸ்த்ராதுலு குமிகூடி
பாதமுலனு கன ஜாலக பதிமாலிவேட
நாதரூப ஸ்ரீ ஸௌந்தர்ய நாயகீபதே பேத
வாத ரஹித ஸ்ரீத்யாகராஜ வரத ஸுந்தரேச்வர நினு(ந)

பொருள் :

பல்லவி:- உம்மையே நம்பி இருக்கும் என்னை நயமுடன் காக்கவேண்டும்.

அனுபல்லவி:- மேன்மைபெறும் வரங்கள் அளிக்கும் கோவூரில் ஸுந்தரேச மூர்த்தியே—

சரணம்:- வேத, புராணம், சாஸ்திரம், ஆகமங்கள் ஒன்று சேர்ந்தும் நினது திருப்பாதங்களைக்காண இயலாது ஸ்தோத்திரம் செய்ய, சிவன், விஷ்ணு, ப்ரும்மா என்ற குணபேதங்கள் அற்ற (நிர்க்குண நிஷ்கள) நாத ஸ்வரூபனே, ஸ்ரீ ஸௌந்தர்ய நாயகியின் பதியே, ஸ்ரீ தியாகராஜனுக்கு அருள் பவனே—ஸுந்தரேச்வரா.

ராகம்—ஸஹாணு] [தாளம் — ஆதி.

பல்லவி.

ஈவஸுதா நீ வண்டி தைவமு
நெந்து கானரா [ஈ]

அனுபல்லவி.

பாவுகமு கல்கி வர்த்தில்லு
கோவூரி ஸுந்தரேச கிரீச— (ஈ)

சரணம்.

ஆஸசே அரநிமிஷமு நீபுர-வாஸ மொநரசேயுவாரிமதி
வேஸடலெல்லனு தொலகிஞ்சி தன ராஸுல நாயுவுலு
பூஸுர பக்தியு தேஜமுன நொஸகி
புவனமமந்து கீர்த்தி கல்கசேயு
தாஸ வரத த்யாகராஜ ஹ்ருதய நி
வாஸ சித் விலாஸ ஸுந்தரேச— (ஈ)

பொருள் :

பல்லவி:- இந்த பூமியில் உன்னைப் போன்ற தெய்வம் வேறு எவரையும் நான் காணவில்லை.

அனுபல்லவி:- சீரும் சிறப்பும் கொண்டு வளர்ந்தோங்கும் கோவூர் சுந்தரேச, கிரீசா—

சரணம்:- அன்பு கொண்டு அரை நிமிஷமாயினும் உனது திவ்ய ஸ்தலத்தில் தங்குபவரை, அவர்களது துயரனைத்தையும் நீக்கி, தனம், நீண்ட ஆயுள், பிராம்மணபக்தி, தேஜஸ் இவைகளை அளித்து, இந்த பூமியில் கீர்த்தி பெறச் செய்யும் ஹ்ருதய நிவாஸனான, சித்விலாஸ ஸுந்தரேசனே.

இவ்வைந்து கீர்த்தனங்களிலும், சிவ ஆராதனையின் சிறப்பையும், சிவாலய வழிபாட்டின் சிறப்பையும் நன்கு புலப்படுத்தியுள்ளார். தியாகராஜஸ்வாமிகள் திருவையாற்றில் ஒரு நாளாயினும், பஞ்சநதீச்வரருடைய தரிசனம் மறந்தவரல்ல. ராம நாமத்தை சிவாலயத்தில்

Contn. in (Article compiled)

முறையிடும் முறை.

ஹரிகதா ரத்னுகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரிகள்.

பகவானை நோக்கிப் பலமுறை வந்தனம், ஸ்துதி இவைகளைச் செய்யச் செய்ய நம்மையே நாம் உயர்த்திக்கொள்ளுகிறேம். பகவான் அபார தயாபர மூர்த்தி. நம்மைக் காப்பதில் மிகுந்த அக்கறையும் கவனமும் அவன் கொண்டதுபோல் நம்மிடம் பிறர் எவர்க்குமில்லை. வெகு துரிதமாக நம்மை நாடி வந்து காக்கும் கருணை அவனிடம் இருந்தாலும், நமது சஞ்சலங்கள் நமக்கு அதற்கும் மிகையாக நம்மைப் பொறுக்கமுடியாத வண்ணம் செய்கின்றன. நம்முடைய நினைவு அவனைப் பற்றி நின்ற போதும் நம்மைச்சிதறவொண்ணுது அவனையே நினைக்கச் செய்யவேண்டும் என்ற உள்ளக்கிடக்கையே பெரிதாய்க் கொண்டு, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஸ்ரீ ராமபிரானிடம் நித்யமும் முறையிட்டுக் கொள்ளுகிருர். தினமும் முறையிடுவானேன்! ஒரு முறை சொன்னுல் போதாதோ எனின் அதன் காரணத்தை அவர் அருள் வாக்கிலே நமக்கு உணர்த்துகிருர்.

ராகம்—காம்போதி] [தாளம்—ஆதி.

பல்லவி.

மரிமரி நின்னே மொரலிட நீ
மனஸுன தயராது— (ம)

அனுபல்லவி.

கரிமொரவினி ஸரகுண சன நீகு
காரண மேமி ஸர்வாந்தர்யாமி— (ம)

சரணம்.

கருணதோ த்ருவுனி கெதுட நில்சின
கதவின்னுனய்யா
ஸுராரிபு தனயுனிகை நரமிருகமௌ
ஸுசனலே மையா
மரசியுன்னவன சருனி ப்ரோசின
மஹிம தெலுபவய்யா
தரனு வெலயு (ஸ்ரீ) த்யாக ராஜஸன்னுத
தரமுகாதிகனே வினனய்யா--- (ம)

பொருள் :

பல்லவி :

அடிக்கடி அடிக்கடி உன்னை நமஸ்காரம் செய்தாலும் உன் மனஸில் (என்னிடம்) தயவு வரவில்லை.

அனுபல்லவி :

யானை முறையிட்டதென்று கேட்டு வெகு வேகமாய்ச் சென்ற காரணம் என்னவய்யா?

சரணம் :

1 *கருணையுடன் துருவன் என்ற சிறுபிள்ளையின் முன்பு (தோன்றி) நின்ற கதையைக் கேட்டிருக்கிறேன்.*

2 *தேவேந்திரனின் பகைவனை ஹிரண்ய கசிபுவின் புதல்வனை பிரஹ்லாதனுக்காக நரஸிம்மமாக மாறினதின் ரஹஸ்யம் என்ன ஐயா?*

3 *நன்றி மறந்து விட்ட வனத்தில் திரியும் குரங்கைக் (தண்டிக்காமல்) காப்பாற்றின மகிமை தெரிவிக்க வேண்டுமய்யா.*

---

4 பூமியில் பிறந்த இந்த தியாகராஜன் எப்பொழுதும் கொண்டாடினலும் (என்னிடம் நினது தயவு வராதது) நல்லதல்ல என்று தெரிந்து கொள்ளுமய்யா.

பகவானிடம் அதிவாத்ஸல்ய கோபத்தால் எழுந்த நிரந்தர முகமான ஸ்துதி இது. ஒரு யானையைக் காப்பாற்றினய். அது மதோன்மத்தமாய்த் திரிந்து கொண்டு, முதலையிடம் சிக்கி, கடைசியில் தன் உயிரைக் காத்துக்கொள்ள வேறுவழியின்றி உன்னை அழைத்து விட்டது. அதற்குத்தான் என்னவேகம், என்ன பரிவு ஓடி வந்தனையே. இந்த தியாகராஜன் நியம விரதங்களுடன், ஆசை, பாசங்களை அகற்றி மன, மெய், மொழிகளால் உன்னையே எப்பொழுதும் முறைதவருது பூஜை செய்தவன். இவனிடம் என்ன பாரபக்ஷம். யானையிடம் உனக்கு விசேஷப் பரிவு ஏற்பட அந்த யானை தான் என்ன செய்து விட்டது ?

பதவுரை :

தகப்பன் மடியில் உட்கார நினைத்து, அது கிட்டாமல் கோபத்தால் தவத்திற்கு வந்த சிறுவனைக் காணத் தாங்களே எதிரே நின்று கொண்ட பெருங்கருணையைக் கேட்டிருக்கிறேன்.

ஹிரண்யகசிபு உன்னைவெறுத்துப் பகைத்தவன். அவனுடைய பிள்ளை பிரஹ்லாதன் உன்னை நினைத்தான் என்பதற்காக, உன் திவ்ய ரூபத்தையே மறைத்துக்கொண்டு, அவனைக் காக்க, அவனுடைய எதிரிலே தனி அவதாரம் நரஸிம்மனுகத் தோன்றினீரே ! என்னைப்போலவே அந்த பிரஹ்லாதனும் அல்லது அவனைப்போலவே நானும் அன்றும், இன்றும், என்றும், கதறிய வண்ணம் இருக்கிறேன். அவனே பகைவன் பிள்ளை. நானே ஸத்குலத் துதித்த,

பரம ராம பக்த குலோத்துங்கரான ராம பிரம்மத்தின் புதல்வன். பிரஹ்லாதனுக்கென்று காட்டியருளின தனிப் பெருங்கருணையின் காரணம் தான் என்னவோ ?

வாலியைக்கொன்று கிஷ்கிந்தைக்கு அரசனாக்கி, தான் இழந்த போகங்களை அனுபவித்துப் பிறகு தன்னிடம் வர வேண்டும் என்ற ஸ்ரீ ராமபிரான் சொன்ன மொழிகளை மறந்து, காமகேளியில் சிக்கி விட்ட சுக்ரீவனைத் தண் டிக்க வேண்டும் என்று சீறி எழுந்த தாங்கள் அவன் லக்ஷ்மணனால் தெளிவடைந்து தங்களை நாடி வந்ததும், அவனிடம் என்ன பரிவு காட்டினீர்கள். அவனைக்கட்டி அணைத்துக் கொண்டீர்களே ! இந்த தியாகராஜன் என்ன விதமாகத் தங்களை மறந்திருந்தேன். ஏன் என்னிடம் தாங்கள் தயவு காட்டவில்லை.

ஆதலின் எவ்விதத்திலும் என்னை மறந்திருப்பது பொருந்தாது. இது தங்கள் ஸுசீல குணத்திற்குப் பொருத்தமாகயில்லை. என் முறையீடுகளில் நான் முறை தவறினவனாயினும் என்னைக் காக்கவேண்டிய கருணையும் பெருந்தன்மையும் தங்களிடம் இல்லாமலா போய்விட் டது. கஜேந்திரனுக்குக் கஷ்டமும், துருவனுக்கு மனத் துயரமும், ப்ரஹ்லாதனுக்குத் தந்தையின் ஹிம்ஸையும், ஸுக்ரீவனுக்குக் காம மயக்கமும், தோஷங்களாயினும், அவைகளை நொடியில்வந்து தங்கள் தரிசனத்தால்போக்க வில்லையா ! தங்கள் தரிசனம் ஒன்றே விரும்பி அனவரத மும் பஜிக்கும் என்னிடம் என்ன காரணத்தால் தயவு கிடைக்காமல் போய்விட்டது.

ஆயினும், என் நினைவு விடாது இன்னமும் தங் களையே பற்றி நிற்கும், அதுவே எனக்குப் பேரின்பம்.

பஞ்சநத புரவாஸி ஸ்ரீ ராமன்.

ஹரிகதா ரத்னுகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

ராகம்-முகாரி] [-தாளம் ஆதி

பல்லவி

முரிபெமு கலிகே கதா ராம ஸன்
முனினுத கரிவரத ஸ்ரீராம — (மு)

அனுபல்லவி

பரமபுருஷ ஜகதீச வரம்ருதுபாஷ
ஸுகுண மணிகோச நீகு — (மு)

சரணங்கள்

1 ஈடுலேனி மலயமாருதமுசே கூடின காவேரி தடமந்து
மேடல மெத்தலதோ ச்ருங்காரமு
மிந்த்ஸு ஸதன முலலோ
வேடுசு பூஸுகுலகினி ஹோத்ருலை
வேத கோஷமுலசே நுதியிம்ப
ஜடை சிவுடு கோரு யோகிய மைன
ஸுந்தரமகு புரமு தொரிகெனனுத்ஸு—(மு)

பகவானுக்கு பக்தர்களுடைய வாஸஸ்தலமே உயர்ந்த திருக்கோவில். க்ஷேத்திரங்களும், தீர்த்தங்களும் அங்கு எழுந்தருளியுள்ள மூர்த்தியால் கீர்த்தி பெறுகின்றன. அந்த மூர்த்தியோ தன்னை ஸேவிக்கவரும் பக்தர்கள் கூட்டத்தைக்கண்டு, பொங்கி மகிழ்ச்சி யடைகின்றார். அதனுல் அவருடைய ஸாந்நித்தியம் மிகுந்து அனுக்ரஹம் பக்தர்களுக்கு நிறைந்து கிடைக்கப்பெறுகின்றது.

குருவிற்கு அபசாரம் செய்பவன்

சிவபெருமான் அவ்வாறு கோயில்கொண்ட க்ஷேத்திரங்களுள் திருவையாறு மிகவும் முக்கியமானது. அப்பர் ஸ்வாமிகளால் கைலாஸத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்திய பெருமைகொண்டது. தர்மஸம்வர்த்தனி ஸமேதரான ப்ரணதார்த்திஹரனுடைய, காவிரியின் ஐந்துகிளைகள் பிரிந்து சுற்றிச் சுற்றிப் பாயும் க்ஷேத்திரமதில் ஸ்ரீ ராமபிரான் ஆனந்தமாகத் திருக்கோயில்கொண்டுள்ளார் என்ற புதுமையை ஸ்ரீதியாகப்ரும்மம் உலகுக்கு அறிவிக்கிறார். ஸ்ரீ ராமபிரானுடைய ஸன்னிதி எங்கே உளது? எப்பொழுது அமைந்தது? என்றெல்லாம் நமக்குச் சொல்வதுபோல, ஸ்ரீ ராமனிடம் பூரண மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார். இந்த கீர்த்தனத்தால், ஸ்ரீ தியாகப்ரும்மம் வாழ்ந்த காலத்தில் விளங்கின திருவையாற்றின் மகிமையை ஒருவாறு உணர்கிறோம்.

பல்லவி, பொருள்:— ராம, ஸன்முனி நுத -- பெரிய மஹரிஷிகளால் ஸ்துதிக்கப்பெற்றவனே, கரிவரத — யானைக்கு அருள்செய்தவனே, முரிபெமு கலிகே கதா— உனக்குத் திருப்தி (மகிழ்ச்சி) ஏற்பட்டுவிட்டதல்லவா?

அனுபல்லவி, பொருள்:–பரமபுருஷனே, ஜகதீசனே, இனிமை பேசும் இறைவனே, எல்லா நற்குணங்களும் அலங்காரமாகி உன்னிடம் வஸிக்கப் பெற்றவனே! உனக்குத் திருப்திதானே?

சரணம் (1) பொருள்:– (ஈடுலேனி) இணையற்ற, மலய மாருதம் வீச, காவேரி தடத்தில், மேடைகள், மெத்தை (மாடி) வீடுகள், அழகுடன் மின்னும் மாளிகைகள், அங்கு பிரும்மணோத்தமர்கள், அக்னி ஹோத்ரிகள், வேதகோஷங்களுடன், ஸ்தோத்திரங்கள் நிறைந்து விளங்க, உன்னைப் பார்க்க விரும்பும் பரமசிவனும் சேர்ந்து, அழகுள்ள இந்தப் பட்டணம் உனக்கு வாசஸ்தலமாக அமைந்துவிட்டதே! உனக்குத் திருப்திதானே?

சரணங்கள்

2 ஸகல ஸுகந்த ராஜ ஸுமமுலு
ஸலலித மகு கோகில நாதமுலு
சுகமுக ஸனகாதுல நுதமைன
ஸுர தருவுலு கலிகி
நிகடமந்து வாணி கொலுவ ஸுரபதி
நீலமணி நிபசரீர நேடு
ப்ரகடமைன நவரத்ன கசித ஹாடக
மண்டப வாஸமு கலிகெளனுத் ஸு— (மு)

சரணம் (2) பொருள்:— நறுமணம் நிறைந்த எல்லா உயர்ந்த புஷ்பங்களும், (குலுங்க) இன்பமுடன் குயில் போன்ற பக்ஷிஜாலங்கள் கூவி. சுகர், ஸனகாதிகள் கூட கண்டு வியக்கும், தேவவிருக்ஷங்கள் போன்ற அநேக விருக்ஷங்கள் கொண்ட இந்தத் திருவையாறு க்ஷேத்திரத்தில், உன்னுடைய ஸன்னிதியில் ஸரஸ்வதி (தன்னுடைய கலைகளால் ப்ரகாசிக்கச் செய்து) உனக்குத் தொண்டுசெய்ய, இந்திர நீலக் கல்போன்ற திவ்ய திருமேனிகொண்ட ஸ்ரீ ராமா! உனக்கு விசேஷமான நவரத்னங்கள் இழைத்த ஸ்வர்ணமயமான மண்டபத்தில் உன்னை அமரவைத்து, இங்கே வஸிக்கச்செய்தது உனக்குத் திருப்திதானே?

சரணங்கள்.

3 ஈமஹிலோ ஸொகஸைன சோள
ஸீமயந்து வரமைன பஞ்சநத புர
தாமுனி செந்தனு வஸியிந்த் ஸுடகை
நீமதி நெந்த் ஸக
காமஜனக தியாகராஜ ஸன்னுத
நாம பவன தனய வித்ருத சரண
க்ஷேமமுக வர்த்தில்லு நட்டி
புரமுன நீகு — (மு)

அதிதிக்கு அன்னமிடாதவன்

சரணம் (3) பொருள்:— இந்த பூமியில், ஸொகஸான சோழசீமையில் பெருமைகொண்ட பஞ்சநதபுரதாமனுன, ப்ரணதார்த்திஹரனுடைய (செந்தனு) ஸமீபத்தில் வசிப்ப தற்கு நீ (மதினெந்த்ஸக) மனமிசைந்து, க்ஷேமமாகப் பல காலம் வாழவிரும்பி, இங்கு இந்த க்ஷேத்திரத்தில் வஸிக்க இடம் பெற்றனேயே! உனக்குத் திருப்திதானே? ஆஞ்ஜ நேயனுக்குத் திருவடி ஸேவையைத் தந்தவனே ராமா!

கருத்து:— தான் பூஜிக்கும் ஸ்ரீ ராமன் ஸகல கல் யாண குணங்களுக்கும் இருப்பிடமானவன். அவ்வெம் பெருமானுக்கு இருப்பிடம் வெகு நேர்த்தியாகவே அமைந்துவிட்டது. அவன் பரிசுத்தன், காவேரீ தீரவாஸி. இந்த திருவையாறு வேத வித்பன்னர்கள் நிறைந்த புனிதஸ்தலம். என் ஸ்ரீ ராமனே வேதபுருஷன். அக்னி ஹோத்ரம் முதலிய வைதீக கர்மாக்களை நெறி வழுவாமல் செய்யும் ஸதாசார சீலர்கள் விளங்கும் இப் பூமியில், வேத தர்ம பரிபாலகனை ஸ்ரீராமன் குடிபுகுந்துவிட்டான். காவேரீ தீரம் ரமணீயமான இயற்கை அன்னை அழகு பெறச்செய்யும் வளம்மிகுந்தது. அங்கு நீலமணி நிகர் திருமேனியான் கோயில்கொண்டுள்ளான். ஸகல கலை களும் சோபிதம் அடையத் திருஅவதாரம் செய்த ரகு வீரன், தன் ஸன்னிதியில் ஸங்கீத வாத்யங்கள் இசைக்க, கலைமகள் நிலவி வரப்பெற்றுன். அத்தனைக்கும் மேலாக ராமனை இணைபிரியா அன்பன் கைலயங்கிரியான் அருகில் இருந்து, தன் ஆசைதீர ராமனின் அழகை நோக்கி, நோக் கிப் பருகுகின்றுன். என் வீட்டில் நவரத்ன மண்டபத்தில் ஸ்வர்ண பீடத்தில் அமர்ந்து இத்தனைப் பெரும் பாக்ய முள்ள ஸேவையை அனைவர்க்கும் நல்கத் திருவுளம் கொண்டுத் திருப்தியுடன் இங்கேயே தங்கிவிட்டான். இது என் பாக்யம்.

பித்ரு தர்ப்பணம் செய்யாதவன்

க்ஷீர ஸாகர சயனன்.

ஹரிகதா ரத்னகர ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

எல்லாப் பொருள்களும், எல்லா உயிர்களும் அடையும் கதி நற்கதியேயாகும். அவைகளின் முடிவு ஈசனிடத்தில் என்பது யாவரும் அறிந்துள்ளதே. அவ்விசனிடம் சேர்ந்துவிட்ட பிறகு துன்பமோ இன்பமோ எதும் சொல்லுவதில் அடங்காத நிலையால் முற்றுப் பெறும். அவ்விடத்து ஒரே தனித்த பேரனுபவம் காத்திருப்பது எல்லோரும் விரும்புவதேயாகும். அந்தப் பேரனுபவத்தில் நீங்காது கலக்காது விளங்குபவன் எவனே அவனையே பரம்பொருள் என்றும் பெருமான் என்றும் பெரியோர் அழைக்கின்றனர்.

பாற்கடல் துயில் கொள்ளும் பரமனே எல்லாமான அமுதத் தன்மைக்கு ஆதாரமாகவும், அவனே எல்லா ஜீவன்களுக்கும் சேரும் இடமாகவும் விளங்குவதைப் பழம்பெரு நூல்களாலும் புராணங்களின் உட்பொதிந்த கருத்துக்களாலும் தெரிந்து கொண்டோம்.

துன்பம் வந்தபோது நமது அலறும் குரல், எங்குவரை போய்க் கேட்கும். பாற்கடலில் சயனித்தருளும் பரந்தாமன் அதைக்கேட்டறிவானு ! அவனுக்கு எல்லாம் அறியத்தகும் என்ற நம்பிக்கையில் நாம் அவனை அழைக்கத் தயங்குவதில்லை. மடுவில் சிக்கின யானையும், தூர்த்தர் நடுவில் சிக்கின கற்பரசியும், துஷ்டன் பிடியில் சிறைசென்ற தேவியும், ஆண்டவனுக்குப் பணிபுரிந்து அல்லற்பட்ட பக்தனும் இன்னும் இவ்வாறு பலரும் எழுப்பிய கூக்குரல், பாற்கடலைச்சேர்ந்து அவன் செவியில் எட்டியதா ! அவ்வாறு அவன் எல்லாம் அறியும் ஆற்றல்

கொண்டவன் எனின், தன்னைச் சேர்ந்தவர்கள் பெரும் விபத்தில் சிக்குவதைத் தவிர்க்க முடியாமல் போன தென்னே? சிக்கவைத்து, பிறகு கதறவைத்து, பின்னே காக்க வந்தருளும் கீர்த்தி ஒரு கீர்த்தியா!

பசுவின் பால் மிகுந்த சுவையும், புஷ்டியும் உள்ளது. அதை ருசிக்கவைக்கவேறு உபகரணம் தேவை இல்லை. அது போல் பகவானின் நாமமும் ஸ்வயமாகவே ருசியும், ரக்ஷையும் தருவது. அவனுடைய நாமவைபவம் மிகப்பரந்து அளவு கடந்தது. கடல் போன்றது. பரந்த அவனது இனிமை தரும் திருநாமங்களைச் சொல்லுபவரும், நினைப்பவரும், பாலின் குணம்போல், பாதுகாப்பை நிச்சயம் பெற்றிடுவார். பாலைக்கொடுப்பது பசு. அது தெய்வம் தரும் ஸம்பத்து. பிறகாரணம் ஏதுமின்றி அனைவர்க்கும் ஒரு பசு தன் பாலைக் கொடுத்து உதவுகின்றது. அதனிடம் தயை என்ற பிறவிக்குணம் அமைந்து விட்டதே அதற்குக்காரணம். வேறு காரணம் சொல்ல முடியாது. அதே பசு தன் கன்றுக்கு அளிக்கும் பொழுதுதன் அமுதம்போன்ற பாலை அன்பெனும் பெருக்கால் கொட்டிக் கொடுக்கின்றது. அங்கு சிந்தின அன்பின் பெருவெள்ளத்தில் மற்றவரும் கரந்து உவக்கின்றனர்.

அடிக்கடி புராணங்களிலும், ஸ்தோத்திரங்களிலும் பகவானை க்ஷீர ஸாகர சயனன் என்ற சொற்றொடர் காணப்பட்டாலும், அந்த திவ்யநாமம் ஸத்குரு ஸ்ரீ தியாக ப்ரும்மத்தின் வாயிலாக அழைக்கப்படும் பொழுது, பகவானுக்கே அது ஒரு தனிப் பெருமை கொடுப்பதுபோல் த்வனிக்கிறது. பாலின் இனிய குணத்தவனே! என்று பரமனை அடியார்கள் கொண்டாடுகின்றனர். அந்த இனிய குணத்தைத் தான் கண்டவாறு ஒவ்வொரு சரணங்களிலும் பாடி அழைக்கின்றார்.

ாகம்-தேவகாந்தாரி] [தாளம்-ஆதி

பல்லவி

க்ஷீர ஸாகர சயனு நன்னு
சிந்தல பெட்ட வலெனு ராம — (க்ஷீ)

அனுபல்லவி

வாரண ராஜுனி ப்ரோவனு வேகமே
வச்சி னதி வின்னனுரா ராம — (க்ஷீ)

சரணம்

நாரீமணிகி சீரலிச் சனதி
நாடே வின்னனுரா
தீருடௌ ராமதாஸுனி பந்தமு
தீர்ச்சினதி வின்னனுரா —
நீரஜாக்ஷிகை நீரதி தாடின
நீ கீர்த்தினி வின்னனுரா
தாரக நாம தியாக ராஜனுத
தயதோனேலு கோரா ராமா — (க்ஷீ)

பல்லவி: க்ஷீர ஸாகர சயனு - திருப்பாற் கடலில் சயனிக்கும் ராமா என்னை சிந்தனைகளுக்கு உள்ளாக்க வேண்டுமா?

அனுபல்லவி: வாரண ராஜனுன கஜேந்த்ரனைக் காப்பாற்ற வேகமாக வந்ததைக் கேட்டிருக்கிறேன்.

சரணம்: நாரீமணி திரௌபதிக்குப் புடவை சுரந்ததை முன்பே கேட்டுள்ளேன். தீரனை (பத்ராசலத்தில் உனக்கு ஆலயம் கட்டி, நவாப்பால் தண்டிக்கப்பட்ட) ராமதாஸனைப் பந்தத்திலிருந்து விடுதலை பெறச்செய்து (ஆலயம் கட்டின நவாப்பின் பணத்தை நீயே திருப்பிக் கொண்டுவந்து கொடுத்துக்) காப்பாற்றினதையும் கேட்டேன். நீரஜாக்ஷி (ஸீதாதேவிக்) காக, ஸமுத்ரத்தின் பாலம் கட்டிச் சென்றதையும் கேட்டேன். இத்தனையும்

உன் தாரகநாமத்தின் தயாப்ரவாஹம் என்பதையுமறிந்த இந்த தியாகராஜனை அதே தயவால் காப்பாற்றி, என் சிந்தைத் துயரம் போக்கவேண்டும்.

விசேஷப் பொருள்: இங்கு ஸ்ரீ ராமனே, க்ஷீர ஸாகர சயனன், தாரக நாமன். அந்த நாம வைபவத்தால் பெருகும் தயவே அவனுடைய கீர்த்தி. அந்த நாம கீர்த்தனம் செய்பவர்க்கு அதுவே இனிமை! அந்த இனிமைக்கு ஈடு எதுவும் இல்லை! அதை அறிந்தவரே திரு அருட் பயன் பெற்றவராவார்.

* * * * * * * * * * *

பராபவ உத்தராயண ஹேமந்தரிது மகரமாஸம்

தை மாஸ விசேஷம்.

1௳ சனி: சதுர்த்தி ஶதபிஷக் $11\frac{1}{2}$-மணிக்கு மேல் உத்தராயண தர்ப்பணம். பொங்கல் பானை வைப்பதும் அப்போதுதான்.
2௳ ஞாயிறு: கோ பூஜை. மாட்டுப் பொங்கல்.
8௳ சனி: கிருத்திகை உபவாசம்.
9௳ ஞாயிறு: சுக்ல ஏகாதசி. 23௳ ஞாயிறு கிருஷ்ண [ஏகாதசி.
10௳ திங்கள்: 24௳ திங்கள் பிரதோஷம்.
27௳ வியாழன்: அமாவாசை, சிரஸாக்ரவிஷ்டா.
28௳ வெள்ளி: மாக ஸ்நாந ஆரம்பம்.

மாகமாஸே ரடந்த்யாப: கிஞ்சிதப்யுதிதே ரவௌ ।
ப்ரும்மக்னம் ஸுராபம் வா கம்பதந்தம் புனீமஹே ॥

இது போன்ற மற்ற 3 சுலோகங்களும் —

ஸவித்ரே ப்ரஸவித்ரேச பரந்தாம்நே நமோஸ்து தே ।
த்வத்தேஜஸா பரிப்ரஷ்டம் பாபம்யாது ஸஹஸ்ரதா ॥
ஸவித்ரே நம: இதமர்க்யம், 3 முறை.

இத்துடன் சில சுலோகங்களும் ஸமீபத்தில் வெளியான மாக புராண மஹிமையில் கதைகளுடனும் தானம் செய்யவேண்டியதுடனுமிருக்கிறது. தபால் சார்ஜுடன் ரூ. 1 - 25. குருகுலம், மேலமாம்பலம், 2-ஸ்டேஷன் ரோட், சென்னையில் கிடைக்கும்.

பக்த லக்ஷணம்.

ஹரிகதா ரத்னகர ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்.

உண்மையாகவே ஹரிபக்தி பண்ணுகிறவர் எப்படி இருப்பார்கள்? அவர்களுடைய லக்ஷணம் என்ன? என்று கீதாசாரியரான பகவான் அர்ஜுனனுக்கு விவரமாகப் பக்தியோகம் என்று உபதேசம் செய்திருக்கிறார். அதற்கு எடுத்துக்காட்டாக உத்தம பக்தி லக்ஷணத்தோடு உணர்ந்து, வாழ்ந்து வழிகாட்டியவர் தியாகப்ரும்மம் அவர்களே! இப்பொழுது அவர் வாயிலாக பக்தனுடைய லக்ஷணத்தைச் சொல்லக் கேட்போம்.

ராகம்—ப்யாகடை] [தாளம்—ஆதி

பல்லவி

பக்துனி சாரித்ரமு வினவே
மனஸா ஸீதா ராம (பக்)

அனுபல்லவி

ஆ ஸக்தி கேல தாகோருசுஜீ
வன்முக்துடை யாநந்தமு நொந்து — (பக்)

சரணங்கள்

ஜபதபமுலுதா ஜேஸிதி நநராது அதிகாகமரி
கபடாத் முடு மநமை பல்கராது
உபமதநகு லேகயுண்ட வலெ் நநி
ஊரயூர திருக கராது
சபல சித்துடை யாலுஸு துலபை
ஸாரெகு ப்ரம காராத நேஹரி — (பக்)

பவவிப வமுநிஜ மநியெம்ச கராது அதிகாகமரி
ஶிவ மாதவபேத முசேயக ராது
புவநமந்து தாநே யோக் யுடநநி

பொம்கி பொட்ட ஸாக கராது
பவநாத் மஜத்ருதமௌ ஸீதாபதி
பாத முலநுயே மராாதநு ஹரி — (பக்)

ராஜஸ தாமஸ குணமுலு காராது அதிகாகநுசு
வ்யாஜ முநநு ராலேத நகாராது
ராஜயோக மார்கமுநீ சித்தமு
ராஜரேசுட விட வகராது
ராஜஶிகா மணியை நத்யாக
ராஜ ஸகுநி மரவராத நேஹரி — (பக்)

பொருள்:—ஸீதாராம பக்தனுடைய (வாழ்க்கைக் குறிப்பு) சாரித்ரம். (பக்தனின் இயல்பு, குணம்) இவைகளை மனமே கேள்.

தன்னால் இயன்றவரைத் தருமங்களைச் செய்து அல்லது தனக்குக் கிடைத்ததைக் கொண்டுத் திருப்தியடைந்து, ஒரு ஜீவன் முக்தனுடைய நிறைவுள்ள ஆனந்தத்தை அடைகிருன்.

ஜபம், தபம் இவைகளைத் தாம் முறையே செய்தும் அவைகளை மற்றவர்கள் அறிய வெளியே சொல்லமாட்டார். அதுவுமன்றி மனத்தில் கபடம் ஏதுமில்லாமல் இருப்பார். தனக்கு நிகர் யாருமில்லை என்று ஊர் ஊராகச் சொல்லிக்கொண்டு திரியமாட்டார். அற்ப ஆசை கொண்ட மனத்துடன் வீடு, பொருள் இவைகளில் அதிகப் பற்றுதல் வைக்கமாட்டான். இவ்வுலகில் அடைபவைகளை உண்மை என நம்பியிருக்கமாட்டான். அதுவுமன்றி சிவன், விஷ்ணு என்ற பேதம் செய்யமாட்டான் இந்த புவனத்தில் தான் ஒருவனே யோக்யன் என்று பெருமை பேசிக்கொண்டு காலம் கழிக்க மாட்டான். ஆஞ்ஜனேயன் பற்றும் திருவடிகளையுடைய சீதாபதியின்

பாதாரவிந்தங்களில் பக்தி மறக்க மாட்டான். ராஜஸ தாமஸ குணங்களை அடையாமல் எல்லாம் கர்ம வசப்படியே வரும் என்று ராஜயோக மார்க்கத்தைச் சித்தத்தில் நிலைபெறச்செய்து, ராஜசிகாமணியான திருவாரூர் தியாகேசப்பெருமான் தோழராய் விளங்கும் ஸ்ரீ ராமனை மறவாமல் இருப்பான்.

PRESS & REGISTRATION OF BOOKS ACT.

Registration of Newspapers (Central) Rules 1956

FORM IV (SEE RULE 8)

Statement about ownership & other particulars about "VAIDHIKA DHARMA VARDHINI"

1.	*Place of Publication*	... Kadavasal, Kadavasal (Post), (Via) Sirkali, Tanjore Dt.
2.	*Periodicity of its Publication*	... Monthly
3.	*Printer's Name*	... A. Venkataraman
	Nationality	.. Indian
	Address	... Kadavasal, Kadavasal (Post), (Via) Sirkali, Tanjore Dt.
4.	*Publisher's Name*	... A. Venkataraman
	Nationality	... Indian
	Address	... Kadavasal, Kadavasal (Post). (Via) Sirkali, Tanjore Dt.
5.	*Editor's Name*	... Sri V. Somadeva Sarma
	Nationality	.. Indian
	Address	... No. 2, Station Road, West Mambalam, Madras-33.
6.	*Names & addresses of individuals who own the news paper and partners or shareholders holding more than one present of the total capital*	Partners: Sri V. Somadeva Sarma No. 2, Station Road, West Mambalam, Madras- 33. A. Venkataraman, Kadavasal, Kadavasal (Po.) (Via) Sirkali, Tanjore Dt.

I, A. VENKATARAMAN, *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated, 1-3-67. Signature of Publisher : (*Sd.*) A. VENKATARAMAN.

மதிப்புரை.

பிலவங்கவருஷம் பாரத் கணித பஞ்சாங்கம்: ஆசிரியர்கள், L. S. கணேசன், E. K. S. மணி. மேற்பார்வை விவேகானந்தா கல்லூரி கணித ஆசிரியர், ப்ரொபஸர், L. V. S. மணி, B. A. (Hons) பிரசுரகர்த்தர்கள்: திருக்கணித ப்ரசார ஸமிதி, c/o ஸ்ரீ ராமப்ரஸாத் பிரஸ், 56 பிராட்வே, சென்னை—1. விலை 80 காசு. தபால் செலவு தனி.

ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் பீடாரோஹண ஷஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்டது திருக்கணித பிரசார ஸமிதி. ஸ்ரீ பெரியவாள் ஸ்ரீ முகத்துடன், ஸ்ரீ பெரியவாள் அனுஷ்டித்து வரும் இப்பஞ்சாங்கம் பல விசேஷ அம்சங்களைக் கொண்டிருக்கிறது. ஜோதிஷர்களைத் தேடாமலேயே நல்ல வேளைகளை அறிய மிக உபயோகமான சுபஹோரை பட்டியலும் விவாஹப்பொருத்த பதக்கமும் முக்யமாக குறிப்பிடத்தக்கன. ஷண்ணவதி முதலிய அரிய விஷயங்கள் உள.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா.

மேலேறுவது கடினம்

மனத்திற்கொண்ட அன்புணர்ச்சியை ஒரு கீர்த்தனத்தினல் வெளிப்படுத்துகிருர். அக்கிர்த்தனத்தின் ராக அமைப்பும் அவருடைய உள்ளத்தின் இயல்பைக் காட்டுவதாகவே அமைந்துள்ளது. ஆதரவும், ஆறுதலும் காட்டிப் பேசும் ஒரு நெருங்கிய உறவினனின் இருதய வாஞ்சையை அந்த ராகபாவத்தில் அசைந்து அசைந்து வருவதைக் கேட்டு மகிழ்கிரும்.

ராகம் - ரீதிகௌள] [தாளம் - ஆதி.

பல்லவி.

பட்லிகதீர பவ்வளின்ஸவே (ப)

அனுபல்லவி

த்ஸடலனி துரிதமுனு தெக கோஸே
ஸார்வபௌம ஸாகேத ராம (ப)

சரணம்

பங்கஜாஸனுனி பரிதாபமு கனி
பங்கஜாப்தகுல பதியை வெலஸி
பங்கஜாக்ஷிதோ வனமுன கேகி
ஜிங்கனு வதிஞ்சி
மங்கு ராவணுனி மதமுனணசி நிச்
சங்குடகு விபீஷணுனிகி பங்காரு
லங்கனொஸகி ஸுகுல ப்ரோசின கிஷ்
களங்க, த்யாக ராஜனுத, ராம- (பட)

பொருள் :—

ராமா! ஸாகேத ராமா! ஸார்வபௌம ராமா! உன் கூப்புத்திர படுத்துத் தூங்கு! போகாத பாபங்களைப்

(தெககோஸே) போக்கி (அருள் செய்ய அவதரித்த சாகேத ராமா) உன் களைப்பு நீங்க துயில்கொள்ள வேண்டும். பங்கஜாஸனன பிரும்மா முதலான தேவர்கள் வேண்டிக்கொண்டதற்கு ஏற்ப பங்கஜாப்தனை ஸூர்ய னுடைய குலத்தில் பிறந்து பெருமைப்பட விளங்கின களைப்புத்தீர துயில்கொள்ள வேண்டும். பங்கஜாக்ஷி ஆன ஸீதாதேவியுடன் வனம் சென்ற களைப்பும், அங்கு மாயமான் மாரீசன் பின்சென்ற களைப்பும், அவனை வதம் செய்து தேவியைத் தேடி இளைத்தக் களைப்பும், (சுக்ரீவன் விபீஷணன் இவர்களுடன்) பெரும் போர் தொடுத்து ராவணனுடைய மதத்தை நீக்கி அவனுக்கு ஸ்யாயுஜ்யம் கொடுத்ததும், பிறகு இலங்கையை விபீஷணனுக்களித்து தேவர்களைக் காத்து குற்றமற்றவனாய் அரசுபுரிந்த களைப் பும் தீர எனது இல்லத்தில், எனது உள்ளத்தில் சுகமாக நித்திரைபுரிய வேண்டும்.

கருத்து :–பகவானுக்குக் களைப்பு ஏது ? அடியார்க ளுடைய பிறவித்துன்பத்தையே நினைந்து உருகி கருணை கொண்டு அவர்களைக் காக்க பலவித அவதாரங்களை எடுத்தும் அவைகளில் தான் சம்மந்தப்படாமல் நிஷ்களங் கனாக ஆண்டவன் விளங்கினாலும் அவ்வடியார்கள் ஆண்ட வன் தமக்காக எவ்வளவு வேதனைகளை ஏற்றுள்ளான்? என்று நினைக்க ஆண்டவனே! எனக்காக நீ பட்ட கஷ்டம் போதும். எமது கஷ்டம் எதுவாயினும் அவைகளை உம்மிடம் சொல்லித் தொந்தரவு செய்யாமல் பொறுத்து அனுபவிப்பதே எங்கள் கடமை. ஆதலால் தாங்கள் இனி நிம்மதியாகத் தூங்கலாம். இப்படிக் கருத்துக் கொண்ட பக்தர்கள் பகவானை எவ்வளவு நெருங்கி நினைக் கின்றார்கள். அந்த நினைவில் காணும் இன்பம் விவரிக்க முடியாத இன்பம் அன்றோ!

ஆபஸ்தப தர்ப்பணம் 75 பைசா.

முழுக்காடினூர்கள்? ஹே குருவாயூரப்பா! அக்ரூரரைப் போன்ற ஒரு பக்தரைக் காணவும் அரிது! அரிது! அரிது!

இப்படிப் பட்டத்ரி திகைக்கும் வண்ணம், அக்ரூரர் என்ன பெரிய சாதனை புரிந்துவிட்டார்? ஒன்று, கோபர்கள் மத்தியிலே, கம்சனுக்குப் பயந்தவன்போல் வாழும் ஒரு சிறுவன் க்ருஷ்ணன் என்று கொள்ளாமல், அவன் பரமாத்மா, ஸ்ரீ வைகுண்டநாதன் என்ற அறிவு அவருக்கு ஏற்பட்டது முதல் சிறப்பு. இரண்டாவதாக, அவனை பகவான் என்று அறிந்தவுடனேயே அவனிடம் அநந்யமான பக்திப் பரவசம் ஏற்பட்டு, சரணமென்று அவன் பாதங்களைப் பற்றும் மனநிலை மற்றொரு சிறப்பு. இவ்விரண்டாலும் உயர்ந்தவர் அக்ரூரர்.

பகவத் அம்சமாக, இன்றும், இக்கலியில் மஹான்களும் ஆசார்ய புருஷர்களும் நம்மிடையே வாழ்ந்து வருகிறார்கள் என்று நம்மில் சில பாலருக்குத்தான் புரிகின்றதல்லவா! அப்படிப் புரிந்துகொண்ட அச் சிலருக்கும் அம் மஹான்களைத் தேடிச்சென்று, அவர்கள் பாதங்களிலே வீழ்ந்து வணங்கும் தருணங்கள் வெகு துர்லபமாகி விடுகிறதல்லவா? எத்தனை கஷ்டங்களையும் மீறி, நம்மிலே சிறு பான்மையர்கள், ஜன்ம சாபல்யம் எனக் கருதி, வசதியில்லாத இடமானாலும்கூட, கோடை வெயில் அதிக உச்சத்தில்கொளுத்தும் விஜயவாடா, ஏலூர்என்ற இடங்களானாலும், "அங்கே எங்களை வாழ்விக்க வந்த தெய்வங்கள் நடமாடுகின்றன" என்று நமது பரமாசார்ய ஸ்வரூபங்களைத் தேடிச் செல்வார்கள் என்றால் அன்று அக்ரூரர் வழிவகுத்துத் தந்த பக்திப் பரம்பரையில் தோன்றியவர்கள் அவர்கள் என்றுதானே கொள்ள வேண்டும்.

சுத்த பக்தி.

ஹரிகதா ரத்னாகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்

ராகம்-ஹரி காம்போதி]   பல்லவி.   [தாளம்-ஆதி

நே நெந்து வெதகுதுரா—(ஹரி)—   (நே)

அனுபல்லவி

ஆனல்கு மோமுனவாரி மொர
லார கிஞ்சி ரானி—ஹரி—   (நே)

சரணம்

கலுஷாத் முடௌ துஷ்கர்ம யுதுடௌ
பலுமாரி துர்பாஷியௌ இலலோ
பக்தாக்ரே ஸருலலோ வேஷியௌ
த்யாக ராஜ பூஜித—   (நே)

ஸத்குரு ஸ்ரீ தியாகப்ரும்மம், பகவானுடைய குணங்களிலே அதி ப்ரேமைகொண்டு, தளராத பக்தி வெறியில் மூழ்கி, கான ரஸானுபவத்தில் நிகரற்ற பேரின்பம் சுவைத்து, அவ்வளவிலே தனக்கு நிகர் யாருமிலர் என்ற பகவதனுக்ரஹம் கிடைக்கப்பெற்று வரும் திவ்ய நாட்களிலே, ஒரு சமயம் அதற்கு ஊறுநேர்ந்து, பக்தி ரஸம் தடைபடும் வண்ணம், மனம் நொந்துபோன சமயம் இக்கீர்த்தனம் பாடியுள்ளார் என்று பெரியோர் கூறுவர்.

உலகம் நிந்திக்கும்படி நடக்காதே.

மனம் நொந்தபொழுது, ஆப்தனை சரணமடைந்து, அவன் ஆதரவான துணையைக் கொள்ளுதல்போல, ஹரி ஹரி என்று, தன் சிரமகாலங்களிலே சொல்லிக்கொண்டு, 'ஹரி ஹரி! என்றுன்னைச் சொல்லுவேனேயன்றி தேடிக் காண்பது எங்ஙனே,' என்று தளர்ந்து கரையும் நெஞ்சம் இக்கீர்த்தனம் வாயிலாகப் புலனுகிறது.

புராணங்களிலும், இதிஹாஸங்களிலும் சொன்ன பக்தர்களின் சரித்திரம், திரௌபதி, கஜேந்திராழ்வான் ப்ரஹ்லாதன் போன்றவர்கள் பகவானை அழைத்தார்கள். அவர்கள் பக்கலிலே பகவான் வந்தது உண்டே யல்லாது பகவான் இருப்பிடம் இவர்கள் சென்று கண்டார்களென்பது எது? பகவான் இருப்பிடம், பக்தர்களின் அபயம் எனக் கதறி அழைக்கும் இடமே யன்றோ? அக்கதறும் மனம் படைத்தவர்கள் அநேகர் எனினும், அப்பெருமான் திருநோக்கம் பெற்றவர் சிலரே என்பதைக் கருத்தில் கொண்டுத் தனது நிலையையும் தனது நெஞ்சத் துயரையும் ஒருங்கே வைத்து, ஹரியை அழைக்கும் மதுரத்வனி இக் கிருதியில் அமைந்திருப்பதையும் காண்கிறோம்.

பொருள்:–

நேநெந்து —நான் எங்கு (உன்னை)
வெதகுதுரா – தேடுவேன் (ஹரி)

ஆனல்குமோ
முனவாரிமொர
லாரகிஞ்சிரானி– } அந்த நான்முகனுன ப்ரும்மா முறையிட்டாலும் வராத உன்னை எங்கு தேடுவேன்?

கலுஷாத்முடௌ-கபட ஹ்ருதயம்கொண்டவர்களிடமும்
துஷ்கர்ம யுதுடௌ — துஷ்ட செயல் புரிபவர்கள் இடத்திலும்

அமங்களச்சொல்லைச் சொல்லாதே.

இலலோ —இங்கு (இந்த காலத்தில்)
பலுமாரி —பலவிதமான
துர்பாஷியெள —(வீண் பேச்சு) துஷ்ட பேச்சுகள் கொண்டவர்களிடத்திலும்
(இலலோ) பக்தாக்ரேஸருலலோ வேஷியெள } தானே சிறந்த பக்தன் என்று வெளி வேஷம் போடுபவர்களிடமும்
தியாகராஜ பூஜித— } இந்த தியாகராஜன் பூஜிக்கும் ஸ்ரீ ஹரி! ராமா! உன்னை நான் எங்கு தேடுவேன்?

இதில் அதி நயமான பா[3]வம் சுத்த ஸாத்வீக பக்தியின் உயர்வை ஆத்மானுபவத்துடன் சொல்லுவதேயாகும். கபடமும், வீண் பேச்சும், வீண் செயலும், வெளி வேஷமும், பகட்டுக்கான பக்தியும், ஒருக்காலும் பகவானைக் காண உதவாது. ப்ரும்மா போன்ற உயர்ந்த பிறவிகளாயினும் காண இயலாது. சுத்தமான அந்தக்கரண விருத்தியே பகவத் பக்திக்கு முக்கிய ஸாதனமாகும்.

நூல் விமர்சனம்.

ஸ்ரீ கணபதீச்வரர் சீரிய வாழ்வு பற்றி அவரது பேரன் ஸ்ரீ க்ஞானசம்பந்த சர்மா பாட்டனாரின் நினைவு மலர் தொகுத்து தமிழில் அச்சிட்டார். இருவருமே உலகிற்கு மார்க்க தர்சியாவர்.

SRI GANAPATHESWAR GURUGULAM,
93, Temple Road, Nallur,
JAFFNA (Ceylon) சிலோன்.

மாம்பலம் குருகுல வெளியீடு, 2, ஸ்டேஷன் ரோடு, W. மாம்பலம், சென்னை-33. ரிக், ஸாமவேத ஸந்த்யாவந்தன ஸமிதாதான ஔபாஸநாதிகள் (ஸம்ஸ்கிருதம், தமிழர்த்தம்) விலை: தபால் செலவுடன் ரூ. 1-25.

சோம்பேரியாகத் திரியாதே.

குடும்ப ஜீவனம்.

ஹரிகதா ரத்ளுகர, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

ஸத்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் பக்தர், காயகர், கவி. ஸங்கிதத்துடன் சேர்ந்த அவரது மதுர வாக்யங்களே, ஸங்கீதம் இல்லாது படிப்பவர்க்கும் அதன் அழகும், எளிமையும், சுவை தருகின்றது. ரத்தினச் சுருக்கமான சொற்களின் கோர்வையில், ரக்தி என்ற உள்ளூறக்கம் பெருக்கெடுக்கும் விஸ்தாரமான ராக, ஆலாப, ஸஞ்சாரங்களில், முத்துக்குளிப்பவர் கண்டு மகிழ்வது போன்ற ஆழ்ந்த கருத்துக்களின் செறிவில் நம்மை மதி மயங்கி, பரவசமடையச் செய்கின்றது. வேத சப்தங்களே உரத்துக் கோஷம்செய்தே கானம்பண்ணவேண்டும் என்ற விதிப்படி, மறைந்த தன் ஹ்ருதய பாஷையை, எவ்வளவு விஸ்தரித்தாலும், முடிவு காணுத சித்திரத்திறனுன தேவகாந்தாரி ராகத்தில் வந்துள்ள கீர்த்தனம், நம் போன்றவர் பாடினுலும், அப்பெரியார் அளித்த கீர்த்தன அமைப்பு அதில் முத்திரையிட்டிருப்பதால், அப்பெரியாரே, அதை நம் முன்பு பாடுவதாகக் காட்சிகொடுக்கும்.

தேவகாந்தாரி ராகத்தை, ஒரு சமயம் ஸத்குரு தம்முடைய க்ஷேத்ராடனத்தின் பொழுது சென்னேக்கு வந்த சமயம் பாடினுராம். கோவூர் ஸுந்தரேச முதலியார் அவர்கள் இந்த மஹானே ஆதரித்தார். சென்னேயில் பந்தர் தெருவில் தங்கியிருந்த பொழுது, பல பக்தர்களின் கோரிக்கைக்கு இணங்கி, தேவகாந்தாரி ராகத்தை ஆலாபனம் செய்ய எடுத்துக்கொண்டார். மூன்று நாட்கள் ஆலாபனம் செய்தும், முடிவு பெருததுபோலவே

தனிப்பட்டவர் செயலே

ஆசுக வசனமுலகு — கதறி அழுது உன்னிடம் வந்து சொன்ன அந்த வார்த்தைகளைவிட

நாது பலுகு லன்னி — என்னுடைய பிரார்த்தனைகள்

விபீஷணமா — பயத்தைத் தருகிறதா

(விபீஷணம் என்ற பதத்தையும் வேறு பொருளில் குறிப்பிட்டார். விபீஷணன் ஆகாசத்தில் தோன்றிய பொழுது ராமசேனையில் கலக்கம் ஏற்பட்டது)

3 பூஸலு கூர்ச்சின — பூஷணங்கள் (முத்துக்கள்) கோர்த்தாப்போல

அடுவலே பூனி — சேர்ந்து பக்தியுடன்

பஜிஞ்சக — பஜிப்பதற்கு

ஆஸலு கல — ஆசைகள் கொண்ட

த்யாகராஜு — இந்த தியாகராஜன்

தாஸுடனுத்ஸு — தாஸன் என்று

தெலிஸி — (நன்ருகத்) தெரிந்தும்

என் முறையீட்டைக் கேளாமல் இருப்பதென்ன.

கருத்தழகு :—

ஸ்ரீ ராமா, அன்று ஸுக்ரீவனையும், விபீஷணனையும் அபயம் கொடுத்து காப்பாற்றினுய். இது உலகறிந்த விஷயம். ஸுக்ரீவனுக்கும், விபீஷணனுக்கும், உன்னை அண்டிவரக் காரணமாக இருந்தது அவர்கள் தமையன்களான வாலியும், ராவணனும் அவர்களை ஹிம்ஸித்தது. அந்த ஹிம்ஸையைப் போக்கி, வாலியையும், ராவணனையும் கொன்று ஸுக்ரீவனையும், விபீஷணனையும், முறையே கிஷ்கிந்தை லங்கை இவைகளுக்கு அரசர்களாக்கி விட்டீர்.

பற்பல வழிகளைச் சீர்திருந்தக் கூறுகிருர்

என் நிலைமையைச் சொல்லுகிறேன். "என்னையும், என் தமையனார் அவமதிக்கிறார். (என் பஜனை, பக்தியை அவர் ஒப்புக்கொள்ளவில்லை) சொல்லால் என் மனத்தைப் புண்படுத்தியிருக்கிறார். அடித்தும், வைதும் இருக்கிறார். அது பொருட்டல்ல. உன்னிடம் நான் முறையிட்டுக்கொண்டது, ஸுக்ரீவன், வீபீஷணன் போல் தமையனிடத்திருந்து என்னைப் பிரித்துக்கொண்ட வாழ வந்தவன் நான் அல்ல. எனக்கு அரசோ, வேறு சுகமோ விரும்பி உன்னிடம் முறையிட்டவனும் அல்ல. ராமா! மறுபடியும் சொல்லுகிறேன் என் அண்ணாவுடன் சேர்ந்து உன்னை ஸேவிக்க வேண்டும் என்ற பேராசையொன்றே என்னை உன்னிடம் முறையிடச் சொல்லுகின்றது. எங்கள் குடும்பம் ராம பக்தர்களின் குடும்பம். எங்கள் குடும்ப ஜீவனம் ராம பக்தி. எங்கள் பதவி, அந்தஸ்து எல்லாம் ராம ஸேவையே. இப்படியுள்ள இந்த அவிபக்த குடும்பத்தில் பொருள் பிரியலாம், பக்தி பிரியலாமோ? பக்தி அவிபக்தமாகவே இருக்கவேண்டும். நான் உன்னை பஜிப்பதில் கண்ட ஆனந்தத்தை, என் அண்ணாவும் காண வேண்டும். அவர் ஆனந்தப் படுவதை நான் கண்டு நீங்காத ஆனந்தம் அடையவேண்டும். நாங்கள் பெரும் குடும்பத்தில் உதித்த மணிகள். இவைகளைச் சிதறவிடாமல் கட்டும் ஸூத்ரமாக நீ இருக்கிறாய். எங்களைச் சேர்க்க வேண்டும்" என்று ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ ராமபிரானிடம் முறையிட்டார்.

ஸ்ரீ ராமபிரானும் ஸுக்ரீவன், விபீஷணனுக்கு அருளியதுபோல், ஸ்ரீ ஸ்வாமிகளின் வேண்டுகோளை நிறைவேற்றினார். அவர் தமையனாரும் பின்பு ஸ்வாமிகளுடன் கலந்துகொண்டு ராம பக்தியில் இன்புற்றார் என அவரது சரித்திரம் கூறுகின்றது.

ஆடிமாஸ விசேஷம்.

பிலவங்க தக்ஷிணயாந க்ரீஷ்ம கடக.

1வ திங்கள்: ஏகா, 17வ புதன் ஏகா. 31வ புதன் ஏகாதசி
3வ புதன்: பிரதோஷம், 18வ வியாழன் பிரதோஷம்
5வ வெள்ளி: ஆகாமாவை ஸ்நாநம், வியாஸ பூஜை,
சாதுர்மாஸ விருதாரம்ப
15வ திங்கள்: கார்த்திகை உபவாஸம்
18வ வியாழன்: ஆடிப்பெருக்கு
20வ சனி: பூசம் ஆடி அமாவாஸ்யா
23வ செவ்வாய்; ஆடிப்பூர உற்சவம்
25வ வியாழன்: நாகபஞ்சமி
சுப முகூர்த்த நாள் :— 19வ வெள்ளி 25வ வியாழன்
ஸீமந்த நாள்.

* * * * * * * * *

ஹாஸ்யம்.

உலக்கை துளிர்விட்டது.

முஸல: கிஸலாயதே !

படிப்பில்லா மாப்பிள்ளைக்கு ஒருவர் பெண்கொடுத்து விட்டார். மாப்பிள்ளையின் மச்சினன், மாமனார் முதலிய படித்தவர்கள் இவனை முஸலம்! உலக்கை என அழைப்பர். முஸலம் என கௌரவமாக மாப்பிள்ளையை அழைக்கும் சொல் என நினைத்து வந்தான் பாவம். ஒருநாள் அவன் நண்பன் இதைக்கேட்டு அவனைத்தனியாக அழைத்துவந்து விஷயத்தைச் சொன்னான். உடனே ரோஷத்துடன் அங்கிருந்து கிளம்பி குருவையடைந்து கல்வி கற்றுவந்தான். வழக்கப்படி ஓ முஸலமே! சாப்பிட வாரும் என்றான் மைத்துனன்.

"முஸல: கிஸலாயதே" என, கருத்தும் பிராஸமும் அடங்கிய சொல்லைக் கூறினார் மாப்பிள்ளை.

ஆங்கு ஆங்கு ஸத் கதைகளும் நடக்கின்றன.

ஸங்கீதத்தைக் கொடுத்த பெரியோர்கள் எவர் எவர் என்று தெரிந்து கொண்டால் நமக்கும் அந்த சிரத்தை ஏற்படும்.

ராகம்-மாயமாளவ கௌளை] [தாளம்—ஆதி

பல்லவி.

விதுலகு ம்ரொக்கெத ஸங்கீத கோ (வி)

அனுபல்லவி.

முதமுன சங்கரக்ருத ஸாம நிகம
விதுலகு நாதாத்மக ஸப்த ஸ்வர (வி)

சரணம்.

கமலா கௌரீ வாகீச்வரீ விதி
கருடத்வஜ சிவ நாரதுலு
அமரேச பரத காச்யப சண்டீ(ஶ)
ஆஞ்ஜனேய குஹ கஜமுகுலு
ஶும்ரு கண்டுஜ கும்பஜ தும்புரு வர
ஸோமேச்வர ஶார்ங்கதேவ நந்தீ
ப்ரமுகுலகு த்யாக ராஜ வந்த்யுலகு
ப்ரும்மானந்த ஸுதாம்புதி மர்ம (வி)

பொருள்:

விதுலகு, ஸங்கீத கோவிதுலகு, } — வித்வான்களுக்கு, ஸங்கீத மகா வித்வான்களுக்கு
ம்ரொக்கெத — வணங்குகிறேன் (என் நமஸ்காரம் உரியதாகும்)
முதமுன சங்கர க்ருத — ஆநந்தத்தில் சங்கரன்கொடுத்த
ஸாம நிகம — ஸாமவேத வித்வான்கள்,
நாதாத் மக — அந்த ஸாமவேதத்தில் ஜனித்த
ஸப்தஸ்வர விதுலகு — ஸப்த ஸ்வர வித்வான்களுக்கு என் நமஸ்காரம் உரியதாகுக.
கமலா, கௌரீ, வாகீச்வரி — லக்ஷ்மி, பார்வதி ஸரஸ்வதி
விதி, கருடத்வஜ, சிவ — ப்ரும்மா, விஷ்ணு, சிவன்,

நாரதுலு — நாரதர்
அமரேச — இந்திரன்
பரத, காச்யப, சண்டீச, ஆஞ்சநேய, குஹ — பரத ரிஷி, காச்யபர், சண்டிகேசர், ஆஞ்சநேயர், ஷண்முகன்
கஜமுகுலு — கணபதி
ஸும்ருகண்டுஜ — மார்க்கண்டேயர்
கும்பஜ — அகஸ்தியர்
தும்புரு — தும்புரு
ஸோமேச்வர — ஸோமேச்வரர்
சார்ங்கதேவ நந்தீ ப்ரமுகுலகு — சார்ங்கதேவர், நந்திகேசன் முதலானோர்
தியாகராஜவந்த்யுலகு — மற்றும் தியாகராஜன் ஸேவிக்கும்
ப்ரும்மாநந்த ஸுதாம்புதி — ப்ரும்மாநந்த அமிருதக் கடலின்
மர்ம (விதுலகு) —மர்மத்தையறிந்த வித்வான் களுக்கு என் நமஸ்காரம்.

தாத்பர்யம் :—

மும்மூர்த்திகள், மும்மூர்த்திகளின் தேவிகள், இந்திரன், நாரதர், பரதர், காச்யபர், சண்டிகேசர், ஆஞ்ஜநேயர், ஷண்முகன், கணபதி இவர்கள் ஸங்கீதத்தில் வல்லவர்கள். மார்க்கண்டேயர், அகஸ்த்யர், தும்புரு, பரதர் போன்ற ரிஷிகளும் அவ்வாறே. ஸோமேச்வரர் காட்டின ஸங்கீதமுறை உத்தர தேசத்தில் வழங்கும் சாஸ்த்ரீய ஸங்கீதம். சார்ங்கதேவர் கர்நாடக ஸங்கீதத்தை வகுத்தவர். ஸங்கீத ரத்னகரம் என்ற மூல கிரந்தத்தில் காட்டியபடி சார்ங்கதேவரின் மதத்தை அனுஸரித்துத்தான் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் ஸங்கீதம் அமைந்துள்ளது. இவை ஸாமவேதலோலனன பரமேச்வரனிடத்து உண்டான நாதவித்தை வேதத்திற்கு ஸமமாகப் போற்றத்தக்கது.

2-3

மோக்ஷ வழி.

ஹரிகதா ரத்னகர ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

திருவொற்றியூர் பஞ்சரத்னம்

(1)

ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் ஸ்ரீ ராமபிரானிடம் வைத்துள்ள எல்லையற்ற ப்ரேம பக்தியின் காரணமாகத்தான் அம்பிகை, ஈச்வரன் இவர்களிடமும் உண்மையான பக்தி வெளிப்படுகிறது. இதர தெய்வங்களிடம் காட்டும் பக்தி ஒருவனுக்கு தன் இஷ்ட தெய்வத்தினிடம் வைத்திருக்கும் உண்மையான பக்தியால் மாத்திரம் அறியப்படும். ஒரு தெய்வத்தினிடம் வைத்திருக்கும் தனிப்பற்று மற்ற தெய்வங்களிடம் அலக்ஷிய புத்தியோ, குறைவோ ஏற்படச் செய்யாது. அப்படிப்பேத புத்தி ஏற்பட்டால், அவன் தனது இஷ்ட மூர்த்தியை சரிவர உபாஸிக்காதவனாகும். இது ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் கருத்தாகும்.

''பக்துனி சாரித்ரமு வினவே'' (என்ற கீர்த்தனம் காண்க.)

ஸ்ரீராம பிரான் தனக்கு இஷ்ட தெய்வம் மாத்திரம் அல்ல. மேலான பரம் பொருள். மற்ற தெய்வங்களும் அப்பரம்பொருளின் பிரகாசமே. அந்த பிரகாசத்தில் ஸ்வாமிகளுக்குத்தான் எத்தனை ஈடுபாடு.

இது கோவூர் பஞ்சரத்ன கீர்த்தனைகளின் மூலம், ஸ்ரீ ஸ்வாமிகள் தனது உயர்ந்த சிவபக்தியைத் தெரிவித்துள்ளார். அதுபோல் தனது க்ஷேத்ராடனத்தின்பொழுது விஜயம் செய்த ஸ்தலங்களுள் சென்னைக்கு அருகாமையில் உள்ள திருவொற்றியூர் புண்ணிய ஸ்தலம் ஒன்று. அந்த ஸ்தல மாஹாத்மியம் மிகவும் புராதனமானது. நாயன்மார்களால் பாடப்பெற்றது. தியாகராஜாவின்

A. N. நாராயணன், பாம்பே-22 நன்கொடை ரூ. 5

ஹம்ஸ நடனம் ஆனந்த தரிசனத்திற்கு உரியது. அங்கு பரமேச்வரன் ஸ்வயம்புவாக புற்றிடங்கொண்டு விளங்குகிறார். அம்பிகை ஸ்ரீ திரிபுரஸுந்தரி. இந்த ஸ்தலத்தில் ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதர்கள் எழுந்தருளி ஸ்ரீ சக்ர ஸ்தாபனம் பண்ணியுள்ளது அனைவரும் அறிந்ததே. அந்த அம்பிகையின் அழகையும், அலங்காரத்தையும் ஒரு வெள்ளிக்கிழமை அன்று தரிசனம் செய்துகொண்டு, ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் ஸங்கீதாமிருதமான ஸாஹித்யத்தைப் பருகுவோம்.

சுத்தசாவேரி–ராகம்] பல்லவி [ஆதி–தாளம்

❋ தாரினி தெலுஸு கொண்டி த்ரிபுரஸுந்
தரி நின்னே சரணண்டி — (தா)

பொருள்:—தாயே, த்ரிபுரஸுந்தரீ! (தாரினி) வழியை தெரிந்துகொண்டேன். அது என்னவெனில் உன்னைச் சரணம் அடைவதே.

அனுபல்லவி

மாருனி ஜனகுடைன மா தசரத கு
மாருனி ஸோதரி தயாபரி மோக்ஷ (தா)

பொருள்:-மன்மதனுடைய தந்தையான (விஷ்ணுவின் அவதாரமான) எங்கள் தசரத குமாரனுடைய ஸஹோதரியான தயை நிறைந்தவளே, மோக்ஷமடையும் வழியைத் தெரிந்துகொண்டேன்.

❋ [குறிப்பு :— இங்கு "தரினி தெலுஸு கொண்டி" என்று எடுத்துக்கொண்டு சிலர் பொருள் கூறுகிறார்கள். தரினி என்றால் எல்லை என்றாகிறது. அதுவும் சரியாக அமைகிறது. ஆனால் ஸ்வர அமைப்புகளில் "தாரினி," "ஸுந்தாரி நின்னே" எனப்பாடும் பொழுது அமைவதால் தாரினி என்று எடுப்பது உவப்பாகும்.]

K. P. கங்காதரன், தாம்பரம், நன்கொடை ரூ. 5

சரணம் (1)

அம்ப த்ரிஜகதீச்வரி முகஜித விது
பிம்ப ஆதிபுரமுன நெலகொனு கன
காம்பரி நம்மின வாரிகபீஷ்ட வரம்
புலிலாஸகு தீன லோக ரக்ஷகி
அம்புஜ பவ புருஹூத ஸநந்தன
தும்புரு நாரதுலந்தரு நீது ப
தம்புனு கோரி ஸதா நித்யானந்
தாம்பு திலோனோல லாடு சுண்டே (தா)

பொருள்: அம்பிகையே! த்ரிலோகத்திற்கு ஈச்வரியே! சந்திரபிம்பத்தை வெல்லும் அழகுள்ள முகமுள்ளவளே! ஆதிபுரமென்னும் திருவொற்றியூரில் விளங்குகின்ற கனகாம்பரி, (பொன்னுடை தரித்தவளே) நம்பினவர்களின் அபீஷ்டங்களை ஈடேற்றி வரங்கள் நல்கி அருளும் தீன லோக ரக்ஷகி, அம்புஜ, பவ, பிரும்மா, புருஹூத இந்திரன் தும்புரு நாரதர்களால் ஸதா நித்யானந்தமெனும்

"அம்புதிலோன, கடலில், ஓலலாடு சுண்டே"

மிதந்துகொண்டிருக்கும், மோக்ஷவழியைத் தெரிந்துகொண்டேன்.

சரணம் (2)

மஹைச்வரிய மொஸகி தொலிகர்ம
கஹனமுனு கொட்டி ப்ரோசுதல்லி
குஹ கஜமுக ஜனனி அருண பங்கே
ருஹ நயனே யோகி ஹ்ருத் ஸதனே
துஹினசல தனயே, நீ சக்கனி
மஹிமாதி சயம்புல சேதனு ஈ

மஹிலோமுனி கணமுலு ப்ரக்ருதி
விரஹிதுலே நித்யானந்துலேன (தா)

மஹத்தான ஐச்வர்யத்தைக் கொடுத்து, முன்புள்ள கர்மக்கூட்டங்களை அழித்து காக்கும் தாயே, குஹன், கணபதியின் தாயே, சிவந்த தாமரைக் கண்ணுடைய வளே, யோகிகளின் ஹ்ருதயத்தை வாஸமாகக் கொண்ட வளே, துஹினசலதனயே, ஹிமயமலே (பர்வதராஜனின்) பெண்ணே, பார்வதியே! உன்னுடைய உயர்ந்த மஹிமை அதிசயங்களால், இந்த புவியில் முனிவர்கள், உலகப் பற்றற்றவர்களாக நித்யானந்தத்தை அடைந்த வழியை நானும் தெரிந்துகொண்டேன்.

சரணம் (3)

ராஜித மணிகண பூஷணி மதகஜ
ராஜ கமனிலோக சங்கரி தனுஜ
ராஜகுருனி வாஸர ஸேவ தனகே
ஜன்ம பலமோ கனு கொண்டினி
ஆஜன்மமு பெத்தலு தமமதிலோ
நீ ஜபமே முக்தி மார்க்க மனு கொன
ராஜசேகருண்டகு ஸ்ரீ தியாக
ராஜ மனோஹரி கௌரி பராத்பரி (தா)

பொருள்:— பிரகாசமான நவரத்னபரணங்களைத் தரித்தவளே, மதயானை நடை கொண்டவளே, சங்கரி, "தனுஜராஜ குருனி வாஸர" அஸுரர்கள் ராஜனின் குருவான சுக்ராசாரியாரின் நாள், அதாவது வெள்ளிக் கிழமை அன்று உனது ஸேவை என் ஜன்மத்தின் அதிர்ஷ்டமோ, எனக்கண்டு கொண்டேன். பெரியோர்கள், ஜன்மா முழுவதிலும், உன்னை ஜபிப்பதே முக்திக்கு வழி என்று கொண்டனர். ராஜசேகரரான ஸ்ரீ தியாகராஜ

அலமேலு அம்மாள், கோயில்வெண்ணி, நன்கொடை ரூ. 4

மனோஹரி, கௌரி, பராத்பரி, வழி தெரிந்து கொண்டேன். நாபே த்ரிபுரஸுந்தரியே, உன்னை சரண் அடைந்தேன்.

விளக்கம் :— இக்கீர்த்தனத்தை சுருதி, லயத்துடன், கமகங்களுடன், ப்ராஸம் அனுப்ராஸம் கெடாமல் மூன்று சரணங்களையும் பாடக் கொடுத்து வைத்தவன், அதைக் கேட்கக் கொடுத்து வைத்தவன், நித்யாநந்தம் பெற்றவனே. அத்தகைய அழகுநடை கொண்ட இசைப்பா, அம்பாளுக்கு சுக்ரவார தரிசனத்தன்று ஸ்ரீ ஸ்வாமிகள் அம்பாளுக்கு அளிக்கும் நவரத்னஹாரம் போன்றது.

மூன்று சரணங்களிலும் ஸ்வாமிகள் அம்பிகையின் ஸந்நிதியில் நித்யாநந்தத்தையே பாடுகிறார். "முதல் சரணத்தில் தேவர்கள் கண்டது, இரண்டாவது சரணத்தில் மஹரிஷிகள் கண்டது, மூன்றாவது சரணத்தில் பெரியோர்களான, துறவிகள் கண்டுகொண்டது. மூன்றாவது சரணத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள், ஸ்ரீ ஆதிசங்கரரையும், பட்டினத்தடிகளையும் மனத்தில் கொண்டு சொல்லியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

அனுபல்லவியில், தன் இஷ்டமூர்த்தியும் மோக்ஷதாயகனுமான ஸ்ரீ ராமபிரானின் அழகையும் ஸ்ரீ அம்பாளின் அழகையும் ஒன்றின மனத்துடன் காணவந்தவர் போல, என் ராமபிரானின் ஸஹோதரியே என்று அழைத்துக்கொண்டு, அம்பாளின் ஸந்நிதிக்கு வருகிறார்.

குறிப்பு : இதற்கு அடுத்து மற்ற நான்கு கீர்த்தனங்களும் தொடர்ந்து வரும்.

தார்மிகச் செய்திகள்.

அரிய கைங்கர்யம்: பெண்ணைப்பெற்ருேர் புருஷ ஜாதகம் தேடுவது முதல் படலம். அந்த சிரமத்தை நீக்க, மாற்று ஜாதகமளிப்போர் 9, ராஜாஜி தெரு, மாதவரம், சென்னை-60 என்ற இடத்தில் இருபாலர் ஜாதகத்தையும் கொடுக்கலாம். வாங்கிக்கொள்ளலாம். யாதொரு சார்ஜுமில்லை. நல்லதொண்டு.

இலந்துரை ஸதாசிவ சாஸ்திரிகள்: தெய்வ பக்தி குரு பக்தி தர்மத்தொண்டுடன் நல்வாழ்வு வாழ்ந்து மனித உடலை விட்டு தேவரானர். ஆதிமுதல் இன்றளவும் நமது பத்ரிகை சந்தாதாரராக இருந்ததுடன் மற்றவரையும் படிக்கும்படிச் செய்து ஆதரித்தார். இந்த தொண்டை அவர் புத்ரர் ஸ்ரீ எஸ். வி. சர்மா தொடர்ந்து செய்து பித்ரு கடனைப் பூர்த்தி செய்வாராக.

அம்பத்தூர்: புவநேஶ்வரி பீடம் மௌனஸ்வாமிக்ளின் ஜயந்தி விழா 29உ தத்தாத்திரேய ஜயந்தியுடன், ஹோமம், பூஜை, சந்தர்ப்பணை, கச்சேரி முதலியவைகளுடன் மிக மிக விமரிசையாக நடைபெற்றது.

வேத வகுப்பு: சென்னை தண்டையார்பேட்டை தாண்டவராயமுதலித்தெரு "ஸ்ரீராமா" ஸ்ரீராமச்சந்திர அய்யர் கிருஹத்தில் ஸ்ரீயக்ஞேச்வரரை குருவாகக் கொண்டு வேதவகுப்பு நடைபெற்று வருகிறது. இதில் பலர் சேர்ந்து வேதம் சொல்லிக்கொள்ளுகிருர்கள்.

மாணவர் தேவை.

ருக் வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம், காவ்ய பாடங்கள், அத்யயனம் செய்து வைக்கப்படும். மாணவர்களுக்கு போஜனம் இதர எல்லா சௌகர்யங்களும் செய்து தரப்படும். உபநயனமும் செய்துவைக்கப்படும். விபரங்களுக்கு:- டாக்டர் V. R. லக்ஷ்மீகாந்த சர்மா, லலிதா பார்மஸி, கும்பகோணம்.

V. கல்யாணராமன், கோயம்புத்தூர்-11, நன்கொடை ரூ 3

பிரார்த்தனை.

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

मयूराधिरूढं महावाक्यगूढं
मनोहारिदेहं महच्चित्तगेहम् ।
महीदेवदेवं महावेदभावम्
महादेवबालं भजे लोकपालम् ॥ ३ ॥

மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மஹச்சித்த கேஹம் ।
மஹீதேவ தேவம் மஹா வேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபாலம் ॥

மயிலின்மீதேறியிருப்பவரும், மஹாவாக்யங்களின் ரஹஸ்யமாயிருப்பவரும், அழகான மேனி உள்ளவரும், மஹான்களின் மநதிலிருப்பவரும், வேதியருக்கு தேவனும் ஸிவனது சிந்தையும் லோக ரக்ஷகனுமான சிவகுமாரனை பஜிககிறேன்.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்.

1 தங்கள் ***நண்பர்களையும் பந்துக்களையும்*** இதில் சந்தாதாரர்களாக சேர்க்க வேண்டுகிறோம்.

2 தாங்கள், சந்தா தொகை அனுப்பும் போது மறவாமல் தயவுசெய்து *சந்தா நம்பரைக்* குறிப்பிடுங்கள். புதியவரானால் ***புதிது*** என்று எழுதுங்கள்.

3 விலாசம் மாறுதலை ***உடன்*** காரியாலயத்திற்கு எழுதுங்கள்.

4 ஆங்கிலமாதம் ***25ந்தேதிக்குப்*** பிறகு அந்த மாத காப்பி கிடைக்கவில்லை என்றால் எழுதுங்கள்.

5 தவறுதலாக இரண்டு காப்பிகள் வந்தால் ஒன்றைத் திருப்பி அனுப்பி, எதனால் வந்தது என்று தெரிவியுங்கள்.

6 சந்தாவைக் கடவாசல் காரியாலயத்திற்கே அனுப்பி வையுங்கள். அது இருவருக்கும் ஸௌகர்யம். **ஆசிரியர்.**

பாபத்தை செய்யாமலாவது இரு

அம்பாளின் சுக்ரவார தரிசனம்

தியாக கான லோல T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

திருவோற்றியூர் பஞ்சரத்னம்—2

ஸத்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் பரந்தமனம், அம்பாளுடைய ஸந்நிதியில் எப்படி பரவசப்பட்டு பக்தியில் திளைத்திருக்கிறது என்பதற்கு அவருடைய அமிருத வாக்கே நிதர்சன ஸாக்ஷியாகும். அம்பாளுடைய அழகை வர்ணிக்க தெலுங்கு பாஷையும், ஸம்ஸ்கிருத பாஷையும் அழகுடன் அவருடைய வாக்கில் பிரகாசிக்கிறது. ஸங்கீதாம்சமோ அவருடைய ஹ்ருதய பாஷை. தேனும், பாலும், முக்கனியும், கூட்டிச் சேர்த்துவிட்டது போல். தான் அடைந்த அம்பிகை திரிபுரஸுந்தரியின் தரிசன பாக்யத்தை இந்த கீர்த்தனத்தாலும் வர்ணிக்க காண்கிறோம்.

ராகம்-கல்யாணி] பல்லவி [தாளம்-ஆதி

ஸுந்தரி நீ திவ்ய ரூபமுனு சூட
தனகு தொரி கெனம்மா— (ஸு)

அனுபல்லவி

மந்த கமன நீது கடாக்ஷ பலமோ
முந்தடி பூஜாபலமோ திரிபுர (ஸு)

சரணங்கள்

1 புவிலோ வரமௌ ஸ்ரீமதாதி புரமுன
நெலகொன்ன நீ ஸொகஸுவினி
ஸுவிவேகுலைன ப்ரும்மாதி ஸுருலு கும்புகூடி
கவி வாஸரபு ஸேவகனுங்கொன
கலுகுனயனி கரகுசு மதிலோ

திவிதத்தாமு படுசு னுண்டகா
　　தீன ஜனுர்த்திஹாரிணி த்ரிபுர (ஸௌ)

2 கலிலோ தீன ரக்ஷகியனி ஸப
　　கலிகின தாவுன பொகடுதுனம்ம
ஸலலித குண கருணு ஸாகரி நீ ஸாடி எவரம்மா
அலஸி வச்சினந்து நாமனஸு
　　ஹாயி செந்துனுயனியுண்டகமரி
கலகலமனி ஸௌரஸதுலு வருஸகா
　　கொலுசு சுக்ரவாரபு முத்து த்ரிபுர (ஸௌ)

3 நனு கன்ன தல்லி நாஜன்மமு
　　நாடே ஸபல மாயெனம்மா இபுடு
கன தரித்குனிகி பைகமுவலெ
　　கனுல பண்டுவுகா
வனஜ நயனவினுமு யெண்டு பைருலகு
　　ஜலமு வலெ சுபதாயகி காம
ஜனகுனி ஸோதரி ஸ்ரீ தியாகராஜ
　　மனோஹரி கௌரி ஓ த்ரிபுர — (ஸௌ)

(பல்லவி)

பொருள் :– ஹே–(த்ரிபுர) ஸௌந்தரியே! உன்னுடைய திவ்ய ரூபத்தை தரிசிக்க எனக்குக் கிடைத்ததம்மா.

அனுபல்லவி

மந்தகமன – மெதுவான நடையழகுடைய தாயே! (எனக்குக் கிடைத்த இந்த திவ்ய தரிசனம்) உன்னுடைய கடைக்கண் திருவருளன்றோ! அல்லது முன்பு நான் செய்த பூஜா பலமோ.

அம்பிகையின் திருவருளைப் பெறுவதற்கு அம்பிகையின் திரு அருளே காரணமாகும். திவ்ய தரிசனம் இன்று எனக்குக் கிடைத்ததென்றால் அதற்கு நான் முன் ஜன்மத்தில் பூஜைகள் புண்ணியம் பல புரிந்திருக்கவேண்டும்.

சரணம்

1 புவியில் சிறப்புள்ள ஆதிபுரமெனும் பெயர் கொண்ட இந்த திருவொற்றியூரில் வீற்றிருக்கும் உன் அழகை கேட்டு, ப்ரும்மாதி தேவர்கள் நல்ல விவேகமுடன் கூட்டமாகக்கூடி, இந்த கவிவாஸரம் சுக்ரவாஸரத்தில் (கவீனும் ஆசுனுகவி: என்று சுக்ரரை கவி என்றபதத்தால் சொல்லி வெள்ளிக்கிழமையில் உன் தரிசனம் பெறக் கிடைக்குமா என்று மனத்தால் உருகி, ஆகாசத்தில் தடுமாற்றமடைந்த ஏக்கமுடன் உன் ஸந்நிதி வந்தடைந்தனர். என் போன்ற ஏழைகளின் துயரத்தைப் போக்குவாய். (ப்ரும்மாதி தேவர்களுக்கும் கிடைக்க இயலாத தரிசனம் இந்த ஏழைக்குக் கிடைத்தது)

2 கலியில் தீன ரக்ஷகி என்று ஸபைகளில் உன்னை புகழ்வேன். எளிய குணம் கொண்ட கருணுஸாகரீ! உனக்கு நிகர் யார் தாயே! களைத்து வந்த எனக்கு, ஹாயி, ஸுகம் கிடைக்குமா என்று நான் இருக்கிறேன். இந்தத் தருணம் கலகலவென்று தேவதாஸ்த்ரீகள் உனக்கு பணிவிடை வரிசையாக செய்ய வரும் இந்த சுக்ரவாரத்தில் அழகிய திரிபுரஸுந்தரியே!

3 என்னைப் பெற்றதாயே! என் ஜன்மம் இன்றே பயன் அடைந்து விட்டதம்மா! இன்று பரம ஏழைக்கு பணம் கிடைத்தாற்போல கண்களுக்கு விருந்து. தாமரைக் கண்கள் கொண்ட அன்னையே! காய்ந்த பயிருக்கு (மழை) தண்ணீர் போல சுபத்தை அளிப்பவளே! காமஜனகனை என் ராமனுடைய ஸஹோதரி, ஸ்ரீ தியாகராஜ மனோஹரி, கௌரீ, த்ரிபுரஸுந்தரீ! (உன் தரிசனம் எனக்கு பெரும் பாக்யம்மா.)

கருத்து:— திருவொற்றியூர் அம்பிகையின் வெள்ளிக்கிழமை தரிசனம் இன்றும் நாளையும் கூட தனி சிறப்புள்ளது. அன்று அதைப்பெற்ற ஸ்ரீ ஸ்வாமிகள் எப்படி தன் அதிர்ஷ்டத்தை நினைந்து நினைந்து உருகுகிறார். அம்பிகையின் தரிசனம் பெற்ற ஸ்ரீ ஸ்வாமிகள் தன் இஷ்ட தெய்வமான ராமனையும் மறக்காமல், நீ யார்? என் ராமனின் ஸஹோதரியல்லவா, இந்த வைபவம் எனக்குக் கிடைத்தது என்று பொங்கிபுளகாங்கிதமடைகிறார்.

கூடியவரை பாபம் செய்யாதே

தாயிடம் பரிவு.

தியாக கான லோல ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

திருவொற்றியூர் பஞ்சரத்னம்—3.

திருவொற்றியூர் தேவி திரிபுரஸுந்தரி அம்பாளை தரிசனம் செய்துகொண்ட ஸத்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளுடைய சிந்தனை. அந்த உலக மாதாவின் தத்வத்தை நினைந்து வியந்து கொண்டாடும் தருணம், அவ்வன்னையின் ஆதரவு எப்படி நமக்கு எளிதாகும் என்று கூடி வரும் மற்றொரு கருத்து. அடுத்து, தாயின் பரிவைத் தவிர தனக்கு வேறு ஆதரவு ஏதும் சரியானதல்ல என்ற முடிவு. இத்துணையும் கொண்டு, அந்த ஜகஜ்ஜனனியிடம் குழந்தைபோல் பரிந்து பரிந்து தன்னைப்பற்றி சலுகை வேண்டிப் பாடுகிறார்,

ராகம்—ஸாவேரி] பல்லவி [தாளம்—ஆதி

கன்ன தல்லி நீவு நாபால கலுக
காஸி ஜெந்த நேல னம்ம? — (க)

அனுபல்லவி

வென்னயுண்ட நேதி கெவ்வரைன
வ்யஸன படுதுரா த்ரிபுர ஸுந்தரி— (க)

(பல்லவி)

பொருள்:- பெற்ற தாயான நீ! என்னிடம் (அருள்) விளங்க என் பக்கம் இருக்க எனக்குமனக்கவலை ஏற்படுவானேன் அம்மா!

அனுபல்லவி

வெண்ணெய் இருக்க நெய்வேண்டி யாராவது விசனப்படுவார்களா, திரிபுரஸுந்தரி —(க)

சரணம் (1)

எல்லவாரி தனமுலச்வமுலு மரி
எக்குவைன கட்டி மித்தெலன்னியு
கல்லகானி கன்ன வாரலு
காஞ்சு ஸுகமு ஸுன்ன யனுசுனு
உல்லமுனனு பாக தெலுஸு கொண்டினி
யூரக தனிகுல ஸம்பாஷண நே
நொல்ல மாயலனி தெலிஸி ரஜ்ஜுபை
நூரக புத்தி செந்தனேல நம்ம — (க)

பொருள்:- எல்லவாரி = எல்லோருடைய தனமும், அச்வமும் (வாகனம்) மற்றும் உயர்ந்த கல்கட்டிடங்களும் கல்லகானி = பொய்யே தவிர (நிலையில்லை) அதை அடைந்தவர்களுக்கு ஏற்படும் ஸுகமும் சுன்னமே, பூஜ்யமே. இதை உள்ளத்தில் நன்ருகத் தெரிந்து கொண்டேன், பணம் படைத்தவர்களிடம் வீண் பேச்சும் பொய்யே. கயிற்றைக் கண்டு இதைப்பாம்பு என்ற புத்தியைக் கொள்வது ஏன் ?

[உலகில் காணும் எல்லாவிதமான பொருள்களும் அளிக்கும் இன்பம் சிறிது காலத்தில் குறைந்து போகும். அதனல் பின்பு விசனங்கள் ஏற்படும். ஆதலால் இதை உண்மையான சுகம்என்று எண்ணியிருப்பது பேதைமை. கயிற்றைப் பாம்பு என்று நினைத்துப் பயப்படுகிறவன் போல் பொய்யானதில் மெய் என்ற எண்ணத்தை நான் கொள்ளக்கூடாது. அதே போன்று எண்ணியிருக்கும் (மித்யாவாதிகள்) தனிகர்களுடன் நான் சேரக்கூடாது. பணமும், பொருளும், அதைக் கொண்டவனும், ஒருவனுக்கு உற்ற விசனத்தைப் போக்க உதவினும், உண்மையில் அவர்கள் விசனத்தை போக்க இயலாதவர்களே. தாயே, திரிபுரஸுந்தரீ, நீதான் என்பக்கம் இருக்கிருயே. நீயே உண்மையான துணை எனக்கு !]

சரணம் (2)

பலுகு மஞ்சி கானி பாந்தவுலு மரி
பாவ மரதுலக்கலன்னதம்
முலு கலிமி சூசுவாரு லேமினி
கனுலு கானரா ரனு சுனு
தலசு கொன்ன வெதுக வாரிமாயல
தகுல ஜாலனம்ம மரு மரீசி
கலனு சூசி நீரனுசு ப்ரமஸி
கந்துரா ஆதி புரவிஹாரிணி— (௧)

பேச்சில் நன்மை இல்லாத பந்துக்கள், மைத்துனன், மருமகன், அக்கா, அண்ணா, தம்பி, தங்கைகள், கலிமி சூசவாரு–பணம் உண்டானபோது வந்து நம்மை கவனிப்பார்கள். இல்லாதபொழுது, கானராரு அனுசுனு– காண வரமாட்டார்கள். இதை நினைத்துப்பார்த்தால் அவர்களைத் தேடமாட்டேன். அவர்கள் மாயவலையில் விழக் கூடாது அம்மா! மரு மரீசிகலனு— பாலைவனத்தில் கானலை நீர் என்று ப்ரமிக்கும் புத்தியை அடைவார்களா அம்மா! ஆதிபுரம் என்ற திருவொற்றியூரில் ஸஞ்சரிக்கும் என் தாயே!

பழுதையைப் பாம்பென்றும், கானலை நீர் என்றும் நினைக்கும் "மித்யை" என்ற ப்ரமையின் அடிப்படையை நினைத்து, இதிலிருந்து தப்புவதற்கான உபாயம் தேவியின் ஸந்நிதியே என்று தெளிகிறார். மாயையைக் கொடுப்பவளும் தாயார், அதைப் போக்குபவளும் அவளே!

சரணம் (3)

கனக பூஷணமுல பெட்டி மரியு
ஸொகஸு சேஸி பாலு போஸி
பெஞ்சின தனுவு சதமு காது நிர்மல
தனமிஞ்சுகலே தனுசுனு

அனுதின மொனரிஞ்சு ஸத்க்ரிய நீ
கனிபல்கின த்யாக ராஜ ரக்ஷகி
வினு மன்னிட நீவனி யெரிகி வேல்புல
வேறனி யெந்துர த்ரிபுரஸுந்தரி— (க)

தங்க நகைகளைப் போட்டு அலங்காரம் செய்து பால் விட்டு வளர்த்த இந்த சரீரம் அழிவுள்ளது. நிர்மலமான சித்தம் என்றும் இல்லை. தினம் தினமும் செய்யும் நல்ல காரியங்களை உனக்காக செய்கிறேன் என்று சொல்லும் இந்த தியாகராஜனை ரக்ஷிக்கிறவளே, செவிசாய்க்க வேண்டும். அன்னிடனு-மற்ற எல்லாவற்றிலும் நீயே விளங்குகிருய் என்று அறிந்து கொண்டபின் மற்ற தெய்வங்களை வேறு என்று நினைப்பார்களா — திரிபுர ஸுந்தரி!

மற்ற தெய்வங்கள், மற்ற தனக்குப்புறம்பானவைக ளில் எல்லாம் தாயே நீ என்ற நினைவு கொண்டவனுக்கு நிர்மலமான சித்தம் கிடைக்கும், எல்லாம் ப்ரும்மத்தின் பிரகாசம் என்று பார்க்கும் புத்தியில் இந்த சரீரத்தின் காணும் பொய்யான (ஸுக இச்சை) எண்ணம், அற்ப மானதாகும். நன்மை, தீமை, விஷய ஸுகங்கள், ப்ரா க்ருத (உலகியல்) புத்தி இவைகள் நீங்கிவிடும். நிகரற்ற ஆனந்தத்தில் திளைக்கும் ஆதரவு கிடைக்கும். அதுவே திரிபுர ஸுந்தரி தாயின் பரிவு. அதற்கு நாம் அன்னையின் புகழைப்பாடி அவளிடம் பரிந்து நிற்போம்.

விசேஷகுறிப்பு:— ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனையில் தேவியின் "பரா" என்றபர்வம் அழகாக விளங்குகிறது. நம்மிடத்தில் உள்ள அத்வைத நிலையே அவள் என்ற ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர்களின் உபதேசம் ஸ்ரீஸ்வாமி களின் மனத்தில் பிரதிபலிக்க அவர் வாய் மொழியாக— இந்த க்ஷேத்ரத்தில் அம்பிகையை ஸ்ரீமதாசார்யாள் உபா ஸித்து ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டை செய்ததை கருத்தில் கொண் டிருப்பதை, பிற்காலத்தவர்களான நமக்கும் புரியவைக்கி ரூர், ஸ்ரீஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகள்.

திருவொற்றியூர் பஞ்சரத்னம்.

தியாக கானலோல, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

அம்பிகையின் ஸ்தோத்ரத்தை எவன் சொல்ல நினைக்கிருனே, அவன் அம்பிகையாகவே ஆகிருன் என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் भवानित्वं என்ற ஸௌந்தர்ய லஹரி ஸ்லோகத்தில் ஒரு ரஹஸ்யத்தை வெளியிட்டுள்ளார்கள். அந்த ரஹஸ்யத்தின் ப்ரத்யக்ஷ அனுபவம், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு திருவொற்றியூர் திரிபுர ஸுந்தரி அம்பாளின் முன்பு கிடைத்துவிட்டது என்பதற்கு அவருடைய அபார ஸங்கீத ஸூக்ஷ்ம தரிசனமும், அம்பிகையின் தத்வ ரஸமான ஆனந்த பூர்த்தியும் வெளியாகி, ஐந்து கீர்த்தனங்களில் ஐந்து லக்ஷம் ரொவணைகளைக் கொட்டியிருக்கிருர். இஷ்ட தெய்வம் ராமன் என்ற நினைவில் திளைக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளும் அம்பிகை பிரஸாதத்தை அபரிமிதமாகப் பெற்று நமக்கும் வழங்கிக் கொடுத்துள்ளார்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆரபி ராகத்திற்குத் தான் என்ன கௌரவம், அழகு, அதில் எத்தனைவிதம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அசைவுகளில் பரம ஸங்கேதமான (ரஹஸ்யமான) சொந்த அனுபவ இன்பத்தைக்காட்டியிருப்பதை நாம்பாடித்தான் அனுபவிக்க இயலுமே அன்றி படித்தோ சொல்லியோ வருவதன்று. ராகங்கள் ஸ்வரங்களின் கோர்வை மாத்ரம் கொண்டதல்ல. அதில் அமைந்த ஒவ்வொரு ஸ்வர ஸப்தங்களின் சிறியதும் பெரியதுமான அசைவுகளாலேயே அன்றி ராகம் தனிப்பட்டு காணப்படுவதல்ல. இதற்கு ஸ்ரீ ஐயரவர்களின் "ஸாதிஞ்சினே" "சூதா முராரே" என்ற கிருதிகளின் ஆரபியின் ஜ்வலிப்பையும், "நாதஸுதாரஸம்" "ஓரா ஜீவாக்ஷா" என்ற கிருதிகளின் ஆரபியின் எழில் நிறைந்த நடையையும் காண்கின்ற பொழுது இந்த ராகதத்வம்

நன்றாக நிரூபிக்கப்படுகிறது. அதே போலவே, தோடி, கல்யாணி, ஹரிகாம்போதி, பைரவி என்று கனராகங்களிலும், ஜன்ய ஜனனராகங்களிலும் பொன்னால் செய்து மரகதப் பொட்டிட்டதுபோல் அமைந்துள்ளது.

அவ்வாறே இந்த ஆரபி கீர்த்தனத்தால் திரிபுர ஸுந்தரித்தாயை அவர் வர்ணிக்கிற அழகு, உண்மையான ஸங்கீதம் அப்படி இப்பொழுது பாடப் பெறுமென்றால் தேவியின் ப்ரத்யக்ஷ தரிசனம் கிடைக்கும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

ராகம் – ஆரபி] பல்லவி. [தாளம்—சாபு

சுந்தரி நினு வர்ணிம்ப
ப்ரும்மாதி ஸுருலகைன தரமா (சு)

அனுபல்லவி

குந்தரதனே ஸனந்தனுதி
வந்திதே நேநெந்த த்ரிபுர— (சு)

பொருள் :

பல்லவி : த்ரிபுரஸுந்தரி அம்மா, உன் அழகை வர்ணிக்க பிருமாதி தேவர்களாலும் முடியுமா ?

அனுபல்லவி : முல்லை மலர் போன்ற பற்களை உடைய தாயே, ஸனந்தனர் (ஸனகர், ஸனத்குமாரர், ஸனத்ஸுஜாதர்) முதலானவர் போற்றும் பெருமை உடையவளே, நான் எம்மாத்திரம் ?

சரணங்கள்.

1. கலகலமனு முக களலனு கனிகலு
வலராஜு பூமிகி ராடாயே
செலகு நீலாவண்ய முனுகனி
அலநாடே வல ராஜுகானக போயே
நிலுவரமகு நீ கம்பீரமுனு கனி

ஜலராஜு ஜட வேஷுடாயே
பலமைன தீரத்வமுனுகனி கனகா
சலுடு தாசில ரூபுடாயே த்ரிபுர— (சு)

2. கனுலனு கனி ஸிக்குபடி கண்டு மீனுலு
வன தி வாஸமு ஸேயநாயே—
ஜனனீ நீ சிறு நவ்வு காந்தி ஸோகி சிவு
டனுபமௌ சுப்ருடாயே
மினுகு ஸொம்முல சேல காந்துல மெறபுலு
கனி நிமிஷமு நிலுவதாயே
கனகாங்கி நீ ஸ்வரமுனு வினி வாணி
மகனி ஜிஹ்வனு தா பூனிகாயே திரிபுர— (சு)

3. பாவனமு ஸேயு பிருதுனி கனி பக்த
பாபமு பாரிபோ நாயே—
ஏவேன நீ தயசேத ஸத்கவுலெல்ல
காவ்ய முலனு ஸேய நாயே—
மாவருனிகி செல்லலனி ஸந்தோஷமுன
தேவி பெத்தலு பல்க நாயே
பாவுக விஞ்சிகீ பாதமுன த்யாகராஜு
பாவுக மனுகோ நாயே த்ரிபுர— (சு)

சரணம்

(1) பொருள் = கல கல வென்ற உன் முகக் களை யைக் கண்டு. கலுவல ராஜு = சந்திரன், பூமிக்கு வராமல் ஆகாசத்தில் நிற்கின்ருன். செலகுநீ = விளங்கும் உனது லாவண்யத்தைக் கண்டு அன்றைய தினமே. வல ராஜு = மன்மதன். கானக போயே = காணுமல்போய் விட்டான். நிலுவரமகு = நிலே பெற்றதான உன் கம்பீரத்தைக்கண்டு, ஜலராஜு = சமுத்ரராஜன், ஜடமாகி விட்டான். பலமுள்ள உனது தைரியத்தைக் கண்டு, கனகாசலமுன மேருமலேதான் கல்லாக நின்றுவிட்டான்.

சரணம்

(2) பொருள் — கண்களின் அழகைக்கண்டு வெட்கமடைந்த கயல் மீன்கள், வனதி வாஸமு = கடலில் மறைந்து வாழ்கின்றன. ஜனனீ, தாயே! உன்னுடைய புன்னகையின் காந்தி மேலே படப்பட சிவபெருமான் உவமையற்ற வெண்மை நிறம் பெற்ருன். மின்னுகின்ற உன் ஆபரணங்களின் ஒளியும், பொன்னுடையின் ஒளியும் காண, மின்னல் கணத்தில் மறைந்து விடுகிறது. கனகாங்கி! உன்குரலின் இனிமையைக் கேட்க ஸரஸ்வதி ப்ரும்மாவின் நாக்கில் மறைந்து விட்டாள்.

சரணம்

(3) பொருள் பாவனமாக்கும் உன் புகழைக் கேட்டு பக்தர்களின் பாவங்கள் ஓடிவிட்டது. எந்த வேளையிலும் உன்னுடைய திருவருளால் மஹாகவிகள் சிறந்த காவ்யங்களை செய்யத் தகுதி பெற்றனர். மாவருஜிகி = லக்ஷ்மிபதிக்கு த்ங்கை என்ற சந்தோஷத்தால் தேவி! உன்னைப் பெரியோர்கள் புகழ்ந்து கூறுகின்றனர். உன் பாதங்களின் நினைவு தியாகராஜனுக்கு பரமமங்களமாக ஆகியது.

கருத்து: அதிக நுட்பமான உட்கருத்துக்களைக் கொண்ட இந்த ஸாஹித்யத்தின் பெருமையை சுருக்கமாக இங்கு எழுதுவது கடினம். ஸௌந்தர்யலஹரியில் இரண்டாவது சுலோகமான—

तनीयांसं पांसुं तव चरणपङ्केरुहभवम्

विरिञ्चिः सञ्चिन्वन्विरचयति लोकानविकलम् ।

ப்ரும்மாவுக்கு ஸ்ருஷ்டிக்கும் தன்மை உன் பாததூளி ஸேவையால் ஏற்பட்டது என்றபடி ப்ரும்மாவும் அறியா உன் மஹிமையை யான் எவ்வாறு சொல்வேன் என்கிருர்.

மன்மதனுக்கு உலகை வசப்படுத்தும் சக்தி உன் கடாக்ஷத்திலிருந்து கிடைத்துள்ளது.

अपाङ्गात्ते लब्ध्वा जगदिदमनङ्गो विजयते ॥

ஸௌந்தர்யலஹரி (6வது சுலோகம்)

அதேபோல் 12 வது சுலோகத்தில் त्वदीयं सौन्दर्यं அம்பிகையின் ஸௌந்தர்யம் ஒப்புயர்வற்றது என்றபடி 'நெநெந்த' நான் எம்மாத்திரம் என்கிறார். சந்திரகலையையே தரித்து, சந்த்ர மண்டலமென்னும் அமிருத ஸ்தானத்தில் ஆதார சக்தியாக இருப்பவளை சந்திரன் காண பயப்படுகிறான். த்ரிபுரசுந்தரி மஹாமந்திரம் பதினாறு அக்ஷரங்கள் கொண்டது. அதில் பதினாறுவது அக்ஷரம் सादा परा என்று சந்திரகலா ரூபமாகக் கருதப்படுகிறது.

தேவியின் சிவந்த நிறம் அர்த்தநாரீச்வரரான சிவனுக்கு வெண்மை நீங்கி ஒரே சிவப்பாக சிவனைத் தோன்ற செய்கிறான் என்று त्वयाहृत्वा वामं என்று ஆசார்யாள் சொன்ன அலங்காரத்தை அனுஸரித்து தேவியின் புன்னகையின் வெண்மை ஒளி திருவொற்றியூர் தியாகேசனை வெண்மையாக்கி விட்டது என்று ஸ்ரீஸ்வாமிகள் போற்றுகிறார்.

ஸரஸ்வதி, திரிபுரஸுந்தரியான பராசக்தியின் மதுர வாக்கை அனுபவித்ததை 60 வது சுலோகத்திலும், 66 வது சுலோகத்திலும் ஸ்ரீ ஆசார்யாள் வர்ணிக்கிறார். இங்கு ஸ்ரீ ஸ்வாமிகள் வாணீ தன்பதியிடம் போய் நாக்கில் வெட்கி மறைந்து கொண்டாள் என்கிறார்,

கவிகள் அம்பிகையால் பெருமை அடைவதை

तवस्तन्यं मन्ये

— என்ற சுலோகத்தாலும்

कवीन्द्राणां चेतः

— என்ற 16 வது சுலோகத்திலும்

ஸ்ரீ ஆசார்யாள் உணர்த்தியதை இங்கு ஸ்வாமிகள் "ஸத்கவுலெல்ல காவ்யமுலனு ஸேய நாயே" என்றார்.

கடைசியாக உன்பாத நினைவே எனக்குப் பரம மங்களம் கொடுக்கின்றது, வேறு நான் விரும்புவது என்ன? என்று ஸமர்ப்பணம் செய்கிறார்.

त्वदी याभि र्वाग्भिस्तव जननि
वाचां स्तुतिरियम्.

ஆடி மாஸ விசேஷம்.

கீலக வருஷம் தக்ஷிணாயன க்ரீஷ்ம ருது.

ஆனிமீ 32உ திங்கள் காலை 5-45 வரை பூரட்டாதி, தக்ஷிணாயன புண்யகால தாந தர்ப்பணாதி.

1உ செவ்வாய் ; ஆடிப்பண்டிகை
4உ வெள்ளி : கிருத்திகை
6உ ஞாயிறு ; ஏகாதசி, 20உ ஞாயிறு ஏகாதசி
7உ திங்கள் : பிரதோஷம், 22உ செவ்வாய் பிரதோஷம்
9உ புதன் : போதாயன அமாவாஸை
10உ வியாழன் : புஷ்ய அமாவாஸை
14உ திங்கள் : நாக சதுர்த்தி, 15உ கருட பஞ்சமீ
18உ வெள்ளி: காவேரிப்பெருக்கு. 18உ வரலக்ஷ்மீ நோம்பு
24உ வியாழன் : ரிக், யஜுர்வேத உபாகர்மா (ஆவணி
25உ வெள்ளி : காயத்ரீ ஜபம் [அவிட்டம்)
31உ வியாழன் ; கோகுலாஷ்டமீ

17உ வியாழன், 21உ திங்கள் சுப முஹூர்த்தம்.

ஆனி இதழில் ஏற்பட்ட பிழை.

கிழங்குகளின் பெயரைத் தெரிந்துகொண்டு ச்ராத்தாதிகளில் சேர்க்க வேண்டுமென அதே போல்பத்ர புஷ்ப பழங்களின் பெயரைத் தெரிந்துக் கொண்டு விநாயகாதி பூஜை செய்ய வேண்டும் என்றும் ஸம்ஸ்கிருத பெயரும் தமிழ் அர்த்தமும் எழுதினோம்.

அணில், மூக்குச்சளி என்ற இரண்டிற்கும் ஸம்ஸ்கிருதப் பெயர், பலருக்குத் தெரியாதென தனியாக அவைகளைக் குறித்திருந்தோம். கிழங்கு வகைகளில் அவ்விரண்டும் புகுந்துக் கொண்டது வருந்த தக்கது.